# காரைநகர் களபூமி

# திக்கரை முருகன் கோபுர தரிசனம்



55·32

## கும்பாபிஷேக மலர்

## 2008

காரைநகர்
திக்கரை முருகமூர்த்தி
கோயில்

# இராஜகோபுர
# கும்பாபிஷேக விழா

## சிறப்பு மலர் - 2008

ஆசிரியர்:
தமிழ்நெறிக்கிழார்
பொன் பாலசுந்தரம்

வெளியீடு
திக்கரை முருகன் திருப்பணிச் சபை
(ஐக்கிய இராச்சியம்)
திக்கரை முருகன் கோபுரத் திருப்பணிச்சபை

27-01-2008

# முருகன் அருளாட்சி



திருப்பரங்குன்றம்



திருச்செந்தூர்




பழனி

முத்தைத் தரு பத்தித் திருநகை
    அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர          எனவோதும்
    முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
    முப்பத்துமு வர்க்கத்தமரரும்          அடிபேண
பத்துத்தலை தத்தக் கணைதொடு
    ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியில்          இரவாகப்
    பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
    பட்சத்தொடு ரட்சித்தருள்வது          ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
    நித்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு          கழுகாடத்
    திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
    சித்ரப்பவு ரிக்குத் தரிகட          எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
    குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புகை புக்குப்பிடியென          முதுகூகை
    கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
    குத்துப்பட வொத்துப் பொரவல          பெருமாளே




பழமுதிர் சோலை



திருத்தணி



சுவாமிமலை



# முருகா உன் பாதாரவிந்தங்களுக்கு. . . .

இந்து சமயம் இன்று உலகளாவப் பரந்து படர்ந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.



*தமிழ் நெறிக் கிழார்*
***பொன்பாலசுந்தரம்***
*ஆசிரியர்*

நாம் எதிர்பாராத நாடுகளில்கூட எமது சமயம் வேருன்றி வருவதைக் காண்கின்றோம்.

சில வெளிநாடுகளில் உள்ள தேவாலயங்கள் திருக்கோயில்களாக மாற்றப்பட்டுள்ளன. அங்கெல்லாம் சிவபுராணமும், விநாயகர் அகவலும், கந்தரனுபூதியும் ஒலிப்பது கேட்கிறது.

இன, மத, மொழி, கலாச்சார வேறுபாட்டின் மத்தியிலுள்ள வெளிநாடுகளில் கோடி புண்ணியம் தரும் கோபுரங்கள் எழுந்து வருகின்றன.

எமது ஆலயங்களை ஒரு காலத்தில் அழித்து சமயத்திற்கு மூடுதிரை போட்ட டச்சுக்காரர்கள் வாழும் அதே நாட்டில் விஸ்தீரணமான நிலப்பரப்பில் விநாயகருக்கு ஆலயம் அமைக்கப்பட்டுவிட்டது.

இஸ்லாம் மதத்தினரைப் பெரும்பான்மை மக்களாகக் கொண்டிருக்கும் மலேசிய நாட்டில் புதுமை நிகழ்ந்துள்ளது. அங்கு தமிழ்க் கடவுளான முருகனுக்கு 140 அடி உயரச் சிலை அமைத்திருக்கிறார்கள். இந்த முருகன் சிலை ஒரு உலகச் சாதனை எனப் பலரும் போற்றுகிறார்கள்.

நமது சமயத்தின் மூலஸ்தானம் எனப்படும் இந்திய நாட்டில் கூட இப்படியான ஒரு சிலை அமைந்ததில்லை.

சுவர்க்கத் தீவென அழைக்கப்படும் சீஷெல்ஸ் நாட்டில் இந்து சமயக் கோட்பாடுகள் வளர்வதாகச் செய்திகள் வருகின்றன. மக்கள் சமயப் பற்றாளர்களாக மாறி வருகிறார்களாம். எல்லாம் தெய்வச் செயல்.

இவை எல்லாம் நமது சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு உற்சாகத்தையும், புது உணர்வையும், மன மலர்ச்சியையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. புலம் பெயர் வாழ் மக்களின் பணிகள் சரித்திரமாவதைக் காண்கின்றோம்.

சமய வளர்ச்சிப் பணியில் ஈழ மக்கள் சாதனை படைப்பவர்களாக இருக்கின்றார்கள் என்பதற்கு இங்கு கூறப்பட்டிருப்பவைகள் தகுந்த சான்றுகளாகும்.

போர் மேகச் சூழலின் மத்தியிலும் பஞ்சதள, திரிதளக் கோபுரங்கள் திக்கரைப் பதியில் அருளாட்சி நடத்தும் முருகப் பெருமானுக்கு இன்று எழுந்திருக்கிறது என்றால் இதுவும் ஒரு அற்புதமாகவே அமைந்துள்ளது.

சைவத்தையும், தமிழையும், தொண்டையும், காருண்யத்தையும், கலாச்சார பாரம்பரியங்களையும் பேணுவதில் காரைநகர் மக்கள் முன்னிலை வகிப்பவர்கள். தமது மத்தியில் எழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைத்துச்

சாதனை படைத்த பெருமை பெறுகிறார்கள் இப்பகுதி மக்கள். இக் கோபுரம் ஈழ மக்களுக்குப் பெருமை தருவதாக அமைகிறது.

கோபுரத்தைப் போன்று உயர்ந்த உள்ளத்தோர் வாழும் தலப்பெருமைபெற்ற திக்கரைவாசனை இராஜகோபுரம் அமைத்துச் சிறப்பிக்க வேண்டுமென்ற முன்னோர்களின் கனவினை நனவாக்க வேண்டும் என்ற ஆவலுடனும் களபூமி மக்களின் ஆதரவுடனும் இப்பணியினை நிறைவேற்றுவதில் முக்கிய பங்களித்த அன்பர் சிவா மகேசன் அவர்கள் பாராட்டிற்குரியவர் இவர். அமரர் டாக்டர் திருநாவுக்கரசு அவர்களின் புத்திரராவர். இவர் தந்தையார் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்து வருவது ஆலய வளர்ச்சிக்கு அனுகூலமாகிவிட்டது.

கும்பாபிஷேக விழாப் படங்களுடன் மலர் வெளிவருவது இந்நிகழ்வை ஆவணப்படுத்துவதாகும் என்னும் கருத்தைக் கொண்டிருந்தவர். அன்பர் சிவா மகேசன். வருங்கால சந்ததியினருக்கு எமது சமயத் தொண்டுகள் பற்றியும், கோயில் தரிசன பக்தி மார்க்கத்தைப் பற்றியும் அறிந்து பெருமைப்பட இம்மலர் ஒரு வாடா மலராக இருக்க வேண்டுமென ஆசை கொண்டவர். அவ்விருப்பத்தின் முயற்சிதான் இம்மலர்.

மலர் தயாரிப்பதில் எனக்கு உடுக்கை இழந்தவன் கைபோல உதவியமைக்கு அன்பர் சிவா மகேசனுக்கு எனது நன்றி.


திக்கரை முருகன் திருப்பணியுடன் தம்மை இளம் வயதிலிருந்து இணைத்துக் கொண்டவர் அன்பர் ஐ. தி. சம்பந்தன் அவர்கள். 1974ம் ஆண்டு நிகழ்ந்த கும்பாபிஷேகத்தின்போது வெளிவந்த மலரின் ஆசிரியர். இம்மலர் தயாரிக்கும் பணியில் உரிய நேரத்தில் அரிய ஆலோசனைகளை வழங்கி உதவியவர். அன்பர் சம்பந்தனின் சேவை பாராட்டிற் குரியது.

தமிழ்க் கடவுளாய் எழுந்தருளியிருக்கும் திக்கரை முருகா! தமிழைக் காப்பாயாக!. தமிழர்களின் இன்னல்களை அகற்றி இன்புற்று வாழ வைப்பா யாக!. ஆலயங்கள் தோறும் பூசை வழிபாடுகள் குறை வின்றி நடைபெற அருள் பாலிப்பாயாக!.

திக்கரைத் தேவே! உன் பாதாரவிந்தங்களில் உனது புகழ் பாடும் இம்மலரை ஒரு பக்தி மணங்கமழும் மலராகச் சமர்ப்பித்து வணங்கு கின்றோம்.

***நாடும் மக்களும் நலம்பெற நல்லன எல்லாம் அருள்வாயாக.***

# முதலாவது படைவீடு
# திருப்பரங்குன்றம்



முதலாவது படைவீடு
திருப்பரங்குன்றம்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ?
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே

*திருப்புகழ் - அருணகிரிநாதர்*

# இரண்டாவது படைவீடு

## திருச்செந்தூர்




**இரண்டாவது படைவீடு**
**திருச்செந்தூர்**

இயலிசையி லுசிதவஞ்சிக் கயர்வாகி
    இரவுபகல் மனதுசிந்தித் துழலாதே
உயர்கருணை புரியமின்பக் கடல்மூழ்கி
    உனையெனது எறியுமன்பைத் தருவாயே
மயில்தகர்க லிடையரந்தத் திணைகாவல்
    வனசகுற மகளைவந்தித் தணைவோனே
கயிலைமலை யனையசெந்திற் பதிவாழ்வே
    கரிமுகவ னிளைங்கந்தப் பெருமாளே

*திருப்புகழ் - அருணகிரிநாதர்*

# மூன்றாவது படைவீடு
# திருவாவினன்குடி (பழனி)




மூன்றாவது படைவீடு
திருவாவினன்குடி (பழனி)

அபகார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருள் பெறுவேனோ?
இபமாமு கன்தனக் கிளையோனே!
இமவான்ம டந்தையுத் தமிபாலா!
செபமாலை தந்தசற் குருநாதா!
திருவாவினன் குடிப் பெருமாளே!

*திருப்புகழ் - அருணகிரிநாதர்*

# நான்காவது படைவீடு
# திருவேரகம் (சுவாமிமலை)



**நான்காவதுபடைவீடு**
**திருவேரகம் (சுவாமிமலை)**

காமியத் தழுந்தி யிளையாதே
காவலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஒவியத்தி லந்த மருள்வாயே!
தூமமெய்க் கணிந்த சுகலீலா!
சூரனைக் கடிந்த கதிர்வேலா!
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா!
ஏரகத் தமர்ந்த பெருமாளே!

*திருப்புகழ் - அருணகிரிநாதர்*

# ஐந்தாவது படைவீடு
# குன்றுதோறாடல் (திருத்தணி)




ஐந்தாவது படைவீடு
குன்றுதோறாடல் (திருத்தணி)

அதிருங் கழல்ப ணிந்துன் அடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து கிருபையாகி
இடர்சங் கைகள் கலங்க அருள்வாயே!
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கில் உமைபாலா!
பதியெங் கிலுமி ருந்து விளையாடி
பலகுன்றிலும் அமர்ந்த பெருமாளே!

*திருப்புகழ் - அருணகிரிநாதர்*


# ஆறாவது படைவீடு
# பழமுதிர்ச்சோலை



**ஆறாவது படைவீடு**
**பழமுதிர்ச்சோலை**

காரணம தாக வந்து புவிமீதே
காலன் அணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா!
ஆறுமுகம் ஆறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா!
சோலைமலை மேவி நின்ற பெருமாளே

*திருப்புகழ் - அருணகிரிநாதர்*



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முருகா! உன் பாதாரவிந்தங்களுக்கு - மலராசிரியருரை | 7 |
| 2. | ஆறுபடை வீடுகள் - ஒரு கண்ணோட்டம் | 9 |
| 3. | ஆசிச் செய்திகள் | 17 |
| 4. | திக்கரை முருகா போற்றி<br>- கவிஞர் (அமரர்) அதலை இராமன் | 31 |
| 5. | வரலாற்றுடன் வளரும் திக்கரை முருகன் திருத்தலம் | 35 |
| 6. | பூஷணி கல்யாணராமன் இசையில் திக்கரை முருகன் பாடல்கள் | 37 |
| 7 | கந்தக் கடவுள் நமது சொந்தக் கடவுள்<br>- டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் | 39 |
| 8. | கோபுரங்களும் விமானங்களும் தோன்றிய வரலாறு<br>- முனைவர் சொ. சாந்தலிங்கம் | 42 |
| 9. | கோபுரங்களும் சிற்பங்களும் எதற்கு?<br>- பண்டிதர் சுந்தரனார் | 47 |
| 10. | தெற்குத்திசை திரிதள இராஜகோபுரம்<br>- ச. ஆ. பாலேந்திரன் | 49 |
| 11. | திக்கரை முருகன் திருக்கேணி தோற்றமும் வரலாறும்<br>- ஐ. தி. சம்பந்தன் | 50 |
| 12. | கண்ணதாசன் பாடல்களில் முருகன்<br>- பேராசிரியர் இரா. மோகன் | 52 |
| 13. | ஆறுபடை வீடுகள் | 61 |
| 14. | திருவாசி | 62 |
| 15. | வேல் தத்துவம் | 63 |
| 16. | ஆறுமுகனும் ஆயுதங்களும்<br>- கலாநிதி எஸ். பி. சபாரத்தின சிவாச்சாரியார் | 64 |
| 17. | முருகனும் ஆற்றுப் படையும்<br>- முனைவர் கி. இராசா | 67 |
| 18. | இலக்கிய முருகன்<br>- ஆசிரியர்: தமிழ் மருதம், மதுரை. | 70 |
| 19. | திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்<br>- கலாநிதி சுப அண்ணாமலை | 74 |
| 20. | முருகனும் தமிழும் அருணகிரிநாதரும்<br>- முனைவர் சிவ மங்கையர்க்கரசி | 77 |

21. ஈழநாட்டு முருகன் ஆலயங்கள்
- க. சி. குலரத்தினம் 81

22. மயூரகிரிப் புராணம்
- ஈஸ்வரநாதபிள்ளை குமரன் 85

23. கந்தபுராணமும் - சிவஞானபோதமும்
- வே. நடராசா 90

24. திக்கரை செய்தது பெருந்தவமே
- கலாநிதி கவிஞர் வி. கந்தவனம் 92

25. முருக முத்துக்கள் அருகிப் பாருங்கள்
- சிவநெறிக் கவிஞர் இராகவன் முத்து 94

26. இந்து மதம்
- மகாவித்துவான் ஆறுமுக நாவலர் 97

27. நகரத்தாரின் கதிர்வேலாயுத சுவாமி கோயில்கள்
- முனைவர் ந. வேல்முருகு 100

28. வளம் நிறைந்த நாட்டில் வானுயர்ந்த முருகன் 102

29. திருக்கோவில்கள்
- பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் 104

30. தெய்வீக சக்தியும் தமிழ் மொழியும்
- எஸ். எஸ். இராஜராஜன் 111

31. சுவர்க்கத் தீவில் தமிழும் சைவமும்
- வி. சிவசுப்பிரமணியம் 117

32. சிதம்பரம்
- மு. ஞானப்பிரகாசம் M. Sc. 120

33. சிதம்பர இரகசியம்
- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் 124

34. தோப்புக்கரணம் போடுவது ஏன்? 125

35. உருத்திராக்க மகிமை
- வந்தவாசி அ. வே. முனுசாமி 126

36. கும்பாபிஷேக கிரியைகளும் விளக்கமும்
- க. தில்லையம்பலம் 128

37. பாரதி சுட்டும் ஆறு துணை
- முனைவர் நிர்மலா மோகன் 132

38. மனமும் இசையும்
- இசைப் பேராசிரியர் எஸ். கே. சிவபாலன் 136

39. ஐம்புலன்கள்
- சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த சுவாமிகள் 139

40. கவிஞர் இரா இரவி - இம் மலர் மலர உதவியவர் 141

41. திக்கரை முருகனின் பெருஞ்சாந்தி விழாவினொடு
பெருஞ்சாந்தி காணட்டும் 143

# கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை

யுகங்களை நான்காகப் பிரித்திருக்கிறார்கள் பெரியோர்கள். அவையாவன கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பனவாம். இப்பொழுது நிகழ்வது கலியுகமாகும். ஒவ்வொரு யுகங்களுக்கும் ஒவ்வொரு தெய்வங்கள் பூஜிக்கப்படுகிறார்கள். நான்காவதாக இருக்கும் இக் கலியுகத்திற்கு எமது சொந்தப் பெருமானாகிய கந்தப்பெருமானே பூஜிக்கப்படுகின்றார். ஆகவே இவருக்கு கலியுக வரதன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

அறிஞர்கள், வேதியர்கள், புலவர்கள், தொழில் வல்லுனர்கள் வாழ்ந்த நகரம் நமது காரை மாநகரம். அந்நகரின் கிழக்குப் புறமாக இருப்பது திவ்ய பூமியாகிய களபூமி. திக்கரை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆலயம். எங்கிருந்து பார்த்தாலும் மிகத் துல்லியமாகத் தெரியும். நெடிதுயர்ந்த ஸ்தூலலிங்கமாகிய ராஜகோபுரங்கள், ஆலயத்தினுள்ளே மூன்று சக்திகளுடன் வீற்றிருக்கின்ற முருகு என்ற அழகன், அழகு என்ற முருகன் காட்சி கண்கொள்ளாக் காட்சி, எம்பெருமானின் இக்கும்பாபிஷேக தெய்வீக கைங்கரியத்தினை தரிசித்த அனைத்து அடியார்களுக்கும் எமது மனமார்ந்த ஆசி.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

*சிவஸ்ரீ ச. சி. பாலசண்முக குருக்கள்*
*கட்டுடை, மானிப்பாய்.*

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
# அருளாசிச் செய்தி

முருகன் அடியார்களுக்கு!



காரைநகர் திக்கரைப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமானுக்கு இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

பல ஆலயங்களைக் கொண்ட காரைநகர்- திக்கரைப் பிரதேசத்தில் முருகப்பெருமான் முத்தமிழால் வைதாரை வாழவைக்கின்ற அருள் நிலை கொண்டவர்.

ஆலயத்தின் அமைப்பில் இராஜ கோபுரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தூலலிங்கமாகிய கோபுரம் வழிபடுவோர்க்கு கோடி புண்ணியம் வழங்குகின்றது. இதனை மையமாகக் கொண்டு முருகப்பெருமானுடைய ஆலயத்திற்கு பஞ்ச தளங்களைக் கொண்ட இராஜகோபுரம் அமைந்திருப்பது திக்கரைவாழ் சைவத் தமிழ் மக்களுக்கு ஆன்மீக வளர்ச்சியை மேல் இருந்து செய்வதாக அமைகிறது.

இந்த அறப்பணியைச் செய்திருக்கும் உள்ளூர், வெளியூர் வாசிகளுக்கு நன்றியோடு வாழ்த்துக் கூறுகின்றோம்.

இக்கும்பாபிஷேகத்தை நிதர்சனமாக்கும் பொருட்டு வெளிவரும் மலர் எல்லோருக்கும் பயனுள்ளதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*இரண்டாவது குருமகாசந்நிதானம்*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக*
*ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்*

அமரர் பிரதிஷ்டா பூஷணம் சிவாகம ஞானபானு
பிரதிஷ்டா கலாநிதி

# சிவாச்சார்ய சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்

**ஆதீன குரு ஶ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம் - நயினை**



குருக்கள் ஐயா அவர்கள் 23.06.2006 அன்று கீழ் வரும் ஆசியுரையினை வழங்கியிருந்தார். இதற்குச் சில மாதங்களுக்குப் பின் 2007ல் இறைவனடி சேர்ந்தார். 1974ம் ஆண்டு நடந்த திக்கரை முருகமூர்த்தி கோயில் கும்பாபிஷேகத்தைச் சைவாகம நெறிப்படி சிறந்த முறையில் நடத்திய பிரதிஷ்டா குருக்கள் ஆவர்.

பல ஆண்டுகளுக்குப் பின்னும் திக்கரை முருகன் ஆலயத்தை உள்ளத்தில் நிலைநிறுத்தும் மனநிலை உண்டாயிற்று. 'பிரசித்தி பெற்ற' என்ற தலைப்பில் காரைநகர் மனதில் தெரிகின்றது. அங்கே வாழும் மக்கள் சைவநெறியும் அனுஷ்டானம், தானதர்மம் செய்யும் நிறைவுடையவர்கள். திக்கரை என்ற சொல் திருக்கரை என்ற சொல்லில் மருவியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. திக்கரை முருகனை நினைப்பவர்களுக்கு ஒரு ஒளியாக தெரியும் என்று வரலாறு கூறுகின்றது. கலியுகத்து மெய்யான தீபமாகிய முருகனை நாம் சங்கீர்த்தனங்களால் வழிபடுதல் மரபில் சிறந்ததாகும். இத்திருத்தலம் என்பது காலத்தினால் முற்பட்டு பல ஆண்டுகள் சென்ற வரலாறு காண்கிறோம். அடியார்களின் அபிலாசைகளை நிறைவேற்ற சிறிய ஆலயமாக இருந்து இன்று வளர்ந்து பெரிதாக காட்சியளிக்கின்றது. இறைபக்தர் காசிநாதர்க்கு அருள் கொடுத்தது போல் பழமையான காலத்திலும் பல திருவிளையாடல்களைச் செய்து அடியாரையும் பக்குவநிலைக்கு ஆட்படுத்தி மக்களை அருள்நெறிக்கு அழைத்துச் செல்கின்றது. இதை நாம் புராண இதிகாசங்கள் மூலம் அறியலாம். சென்ற காலத்தின் பழதிலாச் சிறப்பும் மேன்மையும் ஆலயத்தின் நித்திய நைமித்தியம் சிறப்புடன் குறைவின்றி விளங்கவும் காரைநகர் மக்கள் உலகெலாம் சென்று சிறந்து விளங்கி ஆலயத்தினதும் நாட்டினதும் தர்மங்கள் சிறந்தோங்க நலமெலாம் பெற்று பல்லாண்டு வாழத் திக்கரை முருகன் திருவடியையும் எம் குலதெய்வமாகிய நயினை ஶ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவடியினையும் முப்போதும் எப்போதும் வாழ்த்தி வணங்கி ஆசி கூறி நிறைவு செய்கிறேன்.

அனைவரும் வாழ்க, வளர்க வளமுடன்.
'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

*சு. பரமேஸ்வரக்குருக்கள்*

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சேர்ந்த**

**க. சிவ ஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

திருக்கோயில்கள், எங்கள் மூதாதையர் எங்களுக்கு வழி வழியாக 'பாரம்பரியமாக' வழங்கிய சொத்து. எங்கள் வாழ்க்கையை வளமாக்க வந்த பெரும் நிறுவனங்கள். கலை, கலாச்சாரங்களைப் பேணிப் பாதுகாத்து வரும் நிலையங்கள், கோயில்களைப் பாதுகாத்து வளர்த்து வந்தால், நாங்களே எங்களை வளர்த்துக் கொள்பவர் ஆவோம்.

'திருக்கோயில் இல்லாத திருவிலூரும்' என்பது நாவுக்கரசர் வாக்கு. 'கோயில் இல்லாத ஊரிற் குடியிருக்க வேண்டாம்' என்றும் முன்னோர் கூறியிருக்கின்றனர்.

கோயில்கள் காலப்போக்கிற் பழுதடைந்து வருவதைக் காண்கின்றோம். எனவே, இத்தகைய கோயில்களின் இராஜகோபுரம், விமானங்கள், மண்டபங்கள் முதலியன அவ்வப்போது திருத்தப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. 'தானத்தைக் காட்டிலும் தர்ம பரிபாலனம் சிறந்தது' என்று ஸ்மிருதி கூறுகிறது. 'அறஞ்செய்தான் செய்தான், அறம் வளர்த்தான் பாதம் சென்னிமிசை' என்பது முதுமொழி.

திருக்கோயில்களைப் பழைய சிறப்புடன் இயங்கச் செய்தல் பெருஞ் சிவபுண்ணியமாகும் என்பதை மாதவச் சிவஞான சுவாமிகள்.

**'முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய**
**நெரிந்த வாகிய கோபுரம் நெடுமதில் பிறவும்**
**தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு**
**புரிந்து ளோர் பெறும் புண்ணியம் நான்மடங்கு உறுவர்'**

என்று காஞ்சிப் புராணத்திற் கூறியுள்ளார்.

**'மாதவர் மடங்க ளாதி வரதன் மந் திரங்களாதி**
**நாதமா மிலிங்க மாதி நளினபுட் கரணியாதி**
**சேதமுற் றிடின்முன் போலச் செய்கின்றோர்க் குறும்பலந்தான்**
**ஓதுமுன் செய்தோர் தம்மி லாயிரம் குணிதமோங்கும்'**

என்று சிவபுண்ணியம் என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது.

காரைநகரிலுள்ள பிரபல்லியமான கோயில்களுள் திக்கை முருகமூர்த்தி கோயிலும் ஒன்றாகும் அங்கே எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் மீது 1870ம் ஆண்டு கார்த்திகேயப் புலவர் ஓர் அந்தாதி - திக்கைத் திரிபந்தாதி - பாடியுள்ளார். பேரறிஞரும் நூல்கள் பலவற்றின் ஆசிரியருமாகிய காரை. கா. சிவசிதம்பர ஐயர் அவர்கள், முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'திக்கை நாயகர் மும்மணி மாலை' என்னும் நூலை 1885ம் ஆண்டு இயற்றியுள்ளார்.

திக்கை முருகமூர்த்தி கோயிற் கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவதற்கும், அதனைச் செய்விப்போர், செய்வோர், தரிசிப்போர் அதற்கு நிதி உதவியோர் முதலான அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நன்கு வாழ்வதற்கும், நாடு செழித்து, நல்லறம் ஓங்குவதற்கும் அருள் புரியுமாறு முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

அறிஞர்தம் ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்டு வெளிவரவிருக்கும் கும்பாபிஷேக மலர் பக்திச்சுவை நனி சொட்டும் கற்பக மலராக அமைய எமது வாழ்த்துக்கள்.

*க வைத்தீஸ்வரக்குருக்கள்*

*காரைநகர்*

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை

தலைவர்
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஜே. பி

# வாழ்த்துரை

## திக்கரை முருகன் இராஜகோபுர குடமுழுக்கு விழா



யாழ்க் குடாநாட்டின் மேற்குப் புறமாக அமைந்த காரைநகர்ப் பகுதியிலே விளங்குவது திக்கரை முருகன் திருக்கோயில் ஆகும். இவ்வாலயம் அமைந்த இடத்தைக் 'களபூமி' என்று பாராட்டிப் பேசுவார்கள். பக்தியும் பண்பாடும் நிறைந்த சைவப் பெருமக்கள் இப்பகுதியை அணி செய்கிறார்கள். இங்கு அமைந்த முருகப் பெருமானின் திருக்கோயில் அற்புதம் நிறைந்ததாகும். காலம் காலமாக ஆன்மீகத் தலைவர்களாலும் இவ்வாலயம் பேணப்பட்டு வந்துள்ளது.

கடந்த காலங்களில் இங்கு நடைபெற்ற மகோற்சவ காலங்களில் ஆண்டுதோறும் நான் சென்று சொற்பொழிவு ஆற்றியதைப் பெருமையாக நினைத்துப் பார்க்கிறேன். முருகப் பெருமானின் அருட்கடாட்சத்தினால் தூலலிங்கமாகிய இராஜகோபுரமும் இன்று திருப்பணி செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. எனவே திருப்பணியில் ஈடுபட்ட அனைத்து அருளாளர்களையும் வணங்கி வாழ்த்துகிறேன்.

மலர் ஆசிரியர் திரு. பொன் பாலசுந்தரம் அவர்களுக்கும் எனது வாழ்த்து உரித்தாகட்டும்.

வணக்கம்

*தங்கம்மா அப்பாக்குட்டி*
*தலைவர்*

கயிலைக் குருமணி திருப்பெருந்திரு

# சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

பேரூர் ஆதீனம், கோயம்புத்தூர் 10

வாழ்த்துப்பா



தொன்மைமிகு யாழ்ப்பாணம் சேர் காரைத் திக்கரையாம்
தன்னில் அருட்பொலிவாலே சாரும் அன்பர்க்குள் வழங்கி
முன்னியது முடிக்கின்ற முருகவேள் திருப்பணியைச்
சென்னிமிசை கொளுமன்பர் திருப்பணியை வாழ்த்துகிறேன்

அரிய தமிழ்தனையளித்த அறுமுகவேள் திக்கரையில்
புரியும் செந்தமிழாலே போற்றி செய்யும் திருக்கூட்டம்
உரிமையுடன் கருவறையில் ஒருமித்துப் போற்றிடவே
பரிவுடன்செய் திருக்குட நீராட்டு விழாப்பணி வாழி

கந்தபுராணம் ஓதிக் கனிவுடன் நல் விரதங்கள்
சிந்தை வளத்தால் புரியத் திக்கரையில் எழுந்தருளி
புந்தி மகிழ்ந்தேத்தடியார் பூசனையேற்றருள் முருகன்
சொந்தமெனக் கொண்டாடும் தூய மனத்தினர் வாழி

தண்ணளி சேர் தமிழ்க்கடவுள் தமைப்பணியும் திருக்கூட்டம்
எண்ணிய வெல்லாம் முடிய இனி தருளித் திக்கரையில்
புண்ணியம்சேர் பணிசெய்வோர் பூசனை செந்தமிழாலே
குண்ணியம் சேர்கருவறையில் களித்தோத வாழ்த்துகிறோம்

பொன்பால சந்தரத்தின் புனிதமிகு பணிவாழ்க
அன்புசேர் அறநெறியில் அன்பரினம் திக்கரையில்
பொன்புகழ் போகமும் பெற்றுப்பொலி குடும்பத்தினர் வாழ்க
இன்னிசைசேர் அருட்பாடல் இசைத்திடுவார் பண் வாழ்க

# செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களின்
# ஆசியுரை

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

-கந்தரனுபூதி



ஈழத்திருநாட்டில் திருநிறைந்த தெய்வீகப் பூமியாக விளங்குவது காரைநகர். கருணையுள்ளமும், கடவுள் பக்தியும் நிறைந்த இத்திருவூரில் கந்தவேள் பெருமானுக்குப் பெரும் கோவில் கட்டி காலமெல்லாம் புனர்நிர்மாணம் செய்து காத்துவருவது போற்றுதற்குரியது. திக்கரை முருகன் திருத்தலம் என்றால் அறியாதவர்களில்லை. மலர்த் தண்டிகை கட்டி மங்கல மேளங்கள் முழங்க திக்கரை முருகன் திருவீதி வரும் காட்சி ஒருகணம் மெய்மறக்கச்செய்யும். இத்திருக்கோவிலில் அன்னதானத்துக்குக் குறைவில்லை. ஆறுமுகப் பெருமான் அள்ளித் தருகிறான். அவன் திருவடிக்கு எம் உழைப்பில் காணிக்கை செலுத்துவது கடமை எனக் கூறும் கந்தன் அடியவர்களின் உளநிறைவைக் கண்டு யாமும் ஆனந்தம் கொள்வோம். இத்திருக்கோவிலில் வானுயர்ந்த இருவாயில் கோபுரம் அமைக்கப்பட்டு, அன்னம்பாலிப்பதற்கு பெருமடம் கட்டப்பெற்று திருக்கோவில் பெரும் பொலிவு பெற்று மிளிர்வது பெருமை தரும் செய்தியாகும்..

இத்திருக்கோவிலில் பல தடவை ஆன்மீக அருள் உரையாற்றும் பேறு அடியேனுக்குக் கிடைத்தது. என்னை ஆற்றுப்படுத்தும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இத்திருத்தலத்தில் பலதடவைகள் தெய்வீக உரையாற்றிய சிறப்பைச் சொல்லி மகிழ்வார்கள். தீது அகன்ற உலகம் உள்ள திக்கரை முருகனின் திருவருள் மேன்மை போற்றுதல் எம் கடமையாகும். அவ்வகையில் திக்கரை முருகனின் திருவருள் மேன்மையை எடுத்துரைப்பதற்கு அறிஞர்கள் கூடி அழகான மலர் வெளியிடுவது பாராட்டுக்குரியது. எல்லாம் வல்ல முருகப் பெருமான் நல்லருள் பாலிக்கப் பிரார்த்தித்து அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைக் கூறி அமைகிறேன்.

'யாவர்க்குமாம் இன்னுரைதானே'

ஆறு திருமுருகன்

ஆலய அரங்காவலர், திருப்பணிச் சபைத் தலைவர்

திரு. சி. க. பொன்னம்பலம் விடுத்த

# ஆசிச்செய்தி



கந்தன் பாத கமலங்களில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வந்த காசிநாதர் இழந்த கண் பார்வையை மீண்டும் பெற்றதும், முருகன் கருணையை வியந்து கோயில் அமைத்து வந்தமையும் வரலாறு.

அந்த ஆலயமே இன்று புனருத்தாரணம் செய்யப் பெற்று புத்தம் புதிய ஐந்து தள இராஜகோபுரத்துடன், நிமிர்ந்து, மிளிர்ந்து அடியார்களை வரவேற்று நிற்கின்றது.

காசிநாதர் பரம்பரையில் உதித்த சிதம்பரப்பிள்ளை கனகசபை, அவர் மகன் டாக்டர் திருநாவுக்கரசு, அவரின் பின் கனகசபையின் சகோதரரான கந்தையா, பின் கந்தையாவின் புதல்வர் நடராசா ஆகியோரின் காலங்களில் முருகனுக்கு முறைப்படி திருப்பணிகள் சிறப்பாகச் செய்யப்பட்டு காலாகாலங்களில் பல முறைகள் குடமுழுக்கு விழாக்களும் நடந்தேறின.

மேலும் திருச்செந்தூர் முருகனின் அமைப்பில் வார்க்கப்பட்ட ஆறுமுகசாமி விக்கிரகம் சட்டத்தரணி திரு. எஸ். கே. பொன்னம்பலம் அவர்களால் தருவிக்கப்பட்டு அதற்கு 1975ம் ஆண்டு கும்பாபிசேகம் நடந்தேறியது.

டாக்டர் திருநாவுக்கரசு அவர்களின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திருக்கோபுரத் திருப்பணியை நிறைவேற்றிவிட வேண்டுமென்ற ஆர்வத்தினால் புலம் பெயர்ந்து வாழும் எம்மூர் மக்கள் இலண்டனில் ஒரு திருப்பணிச் சபையை உருவாக்கி அதற்கு டாக்டர் திருநாவுக்கரசு அவர்களின் புதல்வரையே தலைவராக நியமித்து இங்கு அனுப்பினர். அவர் இங்கு ஒரு திருப்பணிச் சபையை நிறுவித் திருப்பணிக்கு வேண்டிய நிதியை உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளிலும் திரட்டுவதற்கான பணியில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்.

அவர் அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் இராஜகோபுரம் திறமையாக அமைக்கப்பட வேண்டுமென்ற ஆர்வத்தினால் நல்லூரில் அமைந்திருக்கும் உருத்திரா பொறியியல் கட்டடக்கலை மதியுரை அகத்தின் திட்ட முகாமைத்துவ மதியுரைஞர் திரு. உருத்திரலிங்கம் அவர்களின் ஆலோசனையையும் பெறுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டார்.

கோயில் வேலைகளில் அனுபவமும் நிபுணத்துவமும் பெற்ற அருட்கலைத் திலகம் அராலியூர் S. S. மகேஸ்வரன் அவர்களிடம் பஞ்ச தள இராஜகோபுர நிர்மாணப் பணி ஒப்படைக்கப்பட்டது.

தாம் பொறுப்பேற்ற பணியை திறம்படச் செய்து முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்ட திரு. மகேஸ்வரன் அவர்கள் இந்தியாவிலிருந்து சிற்பிகளை வரவழைத்து அவர்களின் நிபுணத்தவத்துடன் இராஜகோபுரத்தைச் செவ்வனே செய்து முடித்தார்.

சிற்பங்களும் இந்தியச் சிற்பி திரு. புருஷோத்தமன் அவர்களால் சிறப்புற அமைக்கப்பட்டன.

இத்திருப்பணிக்கு அடியார்கள் பலரும் ஊக்கமும், பெருமளவு நிதி உதவியும் வழங்கினர் என்றால் மிகையாகாது.

இக்காலப் பகுதியிலேயே ஆறுமுகசாமி தெற்கு வாசல் கோபுரம், வசந்த மண்டபம், கேணி, கிணறு ஆகியவற்றை அமைக்கத் தாமாகவே முன் வந்த அடியார்கள் அவையனைத்துப் பணிகளையும் செவ்வனே செய்து முடித்துள்ளார்கள். அத்தோடு ஆலயத்தின் ஈசான மூலையில் அமர்ந்துள்ள வைரவப் பெருமானுக்கு உகந்த கட்டடம் அமைக்கப்படாமல் நீண்டகாலமாக இருந்த குறையைக் குறிப்பிட்ட சில அன்பர்களினது பேரார்வத்தினால் ஒரு சிறிய, ஆனால், அழகான சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஆலயம் மிகவும் சிறப்பாகச் சிற்பி மகேஸ்வரனின் கைவண்ணத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாலயத்திற்கு வருகைதரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கேற்ற உகந்த இடம் இல்லாத குறையை உணர்ந்த களபூமி இந்து வாலிபர்கள், பல பரோபகாரிகளின் உதவியுடன் அவர்களது முயற்சியால் ஒரு சிறந்த மண்டபத்தை உருவாக்கி ஆலயத்திற்கு இருந்த பெருங்குறையை நிவர்த்தி செய்துள்ளனர் என்றால் அவர்கள் பணி போற்றப் பாராட்டப் பட வேண்டிய ஒன்றாகும்.

மண்டப நிர்மாணப் பணிக்கு இந்து இளைஞர்களுக்கு ஊக்கத்தையும் தம்மாலான உதவிகளையும் பல வழிகளிலும் அளித்த முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் திரு. தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் பணி மகத்தானது.

கோபுரத் திருப்பணிக்குத் தேவையான நிதியைச் சேகரிப்பதில் முக்கிய பங்கு வகித்த திரு. சிவா மகேசன் அவர்களுடன் சளைக்காமல் அவர் சென்ற இடமெல்லாம் சென்று நிதியைச் சேகரிக்க உதவிய அன்பர்களை இங்கு நினைவு கூறாமல் இருக்க முடியாது.

மேலும் தேர் முட்டிக்கு அருகாமையில் செல்லும் பாதையை அகலமாக்க வேண்டுமென விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று மிகவும் பரோபகாரத் தன்மையுடன் தமது காணியில் பெரிய அளவிலான பங்கைப் பொது வீதியுடன் இணைக்க ஒப்புதல் வழங்கிய பிரம்மஸ்ரீ குகனேச சர்மா அவர்களின் மனப்பாங்கு போற்றுதற்குரியது.

நன்றி நவிலல் வெறும் வாயுபசாரமாகவே அமையுமென எண்ணி வாளா இருப்போமெனத் தோன்றினாலும் அவ்வாறு கூறும் சம்பிரதாயம் தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்து எல்லா விதத்திலும் இத் திருப்பணியைப் பூர்த்தி செய்ய உதவிய அடியார்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

திருப்பணி வேலைகளைத் திருப்திகரமாகச் செயற்படுத்த ஆக்கபூர்வமான ஆலோசனைகளைப் பொருத்தமான சந்தர்பங்களில் வழங்கி, எல்லா வகைகளிலும் அனுசரணையாக இருந்து செயற்பட்ட கோபுரத் திருப்பணிச் சபையாருக்கும் விசேடமாகத் தம் சொந்தக் கருமமாக எண்ணிச் செயற்பட்ட கோபுரத் திருப்பணிச் சபைப் பொருளாளர் திரு. இராமலிங்கம் திருநாவுக்கரசு அவர்களுக்கும் திக்கரை முருகன் திருவருள் நிச்சயமாகக் கிட்டும்.

கும்பாபிஷேகப் பெருவிழாவை அடுத்து இனிதே நடந்து நிறைவு பெற்ற மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவிலன்று அறிஞர்களின் அரிய கருத்துக்கள் அடங்கிய ஆக்கங்களுடன் வெளியிட்டு வைக்கப்படும் இச்சிறப்பு மலரை ஆக்கி அடியார்களின் கரங்களில் மலரச் செய்த மலராசிரியருக்கும் இதை வர்ணமிகு வடிவில் வடிவமைக்க அனைத்து வழிகளிலும் உதவிய அன்பர்களுக்கும் திக்கரை முருகன் அருள் பாலிப்பாராக.

திக்கரை முருகன் திருவருள் பெற்று நலமுடன் வாழ்வோமாக

***சிதம்பரப்பிள்ளை கந்தையா பொன்னம்பலம்***

*ஆலய அறங்காவலரும், கோபுரத் திருப்பணிச்சபைத் தலைவரும்.*

### திக்கரை முருகன் திருப்பணிச்சபை (கோபுரம்) போஷகர்
### சட்டத்தரணி திரு. எஸ். கே. பொன்னம்பலம் அவர்களின்

# ஆசிச் செய்தி



இந்து சமுத்திரத்தின் முத்து எனப்படும் இலங்கைத் தீவின் வடபால் சிகரமாக விளங்கும் யாழ் நகரின் மேற்கே காரைநகர் என்று அழைக்கப்படும் புண்ணிய பூமியில் மூர்த்தி, தீர்த்தம், தலம் ஒருங்கே அமையப் பெற்ற பெருமை மிக்க புண்ணிய தலமான ஈழத்து சிதம்பரம் அமைந்துள்ளது. இவ்வாறு எல்லாச் சிறப்புகளும் ஓங்கி வளர்ந்துள்ள அந்தப் பூமியில் திக்கரை முருகன் ஆலயம் அமைந்துள்ளது. எமது குலதெய்வமாகிய இம்முருகனை வழிபட்டு வரும் அடியார்கள் எல்லோரும் அன்றும் இன்றும் செல்வச் செழிப்பாகவே இருக்கிறார்கள். இந்தப் பழமை வாய்ந்த முருகனை மனமுருகி வழிபடும் அடியார்கள் இம்மைப் பலனையும் மறுமைப் பயனையும் அடைவார்கள் என்பதில் மிகையாகாது.

இக்கோயிலில் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக எழுந்தரளி இல்லாத குறையை நன்கு உணர்ந்த (அன்றைய) தர்மகர்த்தா திருநாவுக்கரசு எனது குடும்பத்தை நாடிய பொழுது நாம் தென்னிந்தியாவில் ஆறுபடை வீடுகளில் ஒன்றாய திருச்செந்தூரில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமான் அமைப்பில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட திருவுருவங்களை இங்கு கொண்டு வந்து கோவிலில் வைத்து கும்பாபிஷேகம் செய்தோம்.

தந்தையின் சிவப்பணியைத் தொடர்ந்து மகன் சிவா மகேசன் அவ்வூர் மக்களின் அன்பளிப்புகளுடன், கோடிக்கணக்காக சேகரித்த பணத்திலிருந்து கோயிலில் இருக்கும் குறைபாடுகளை அதாவது இராஜ கோபுரம், எழுந்தருளி மண்டபக்கோபுரம், தீர்த்தக்கேணி, மற்றும் பழமை வாய்ந்த சந்நிதானங்கள் அனைத்தையும் புனருத்தாரணம் செய்து புதுப் பொலிவுடன் காட்சி கொடுக்கும் படியாகத் திருப்பணி வேலைகள் யாவும் திறம் பட செய்வித்துள்ளார்.

அருள் பூத்துத் திகழும் திக்கரை முருகன் அருட்பெரும் தெய்வமாகவும் தேவசேனாதிபதியாகவும் மூவுலகை ஆளுபவராக விளங்கி அருள் பாலிக்கும் கலியுக வரதனின் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

வனப்புடன் மனமகிழ்ச்சி உண்டாக்கும் வண்ணம் இத்தலம் மிளிர்கின்றது. இன்றைய சூழ் நிலையில் சகல மக்களும் சாதி, மத வேறு பாடு இன்றி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற பொன்மொழிக்கு இணங்க எல்லோரும் தவறாது இக்கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசித்து அருள் பெற்று உய்வார்களாக.

*சுபம். வணக்கம்*

ஆலய பரிபாலன முன்னாள் தலைவர்
எஸ். வி. முருகேசு அவர்களின்

# ஆசியுரை

காரைநகர் களபூமி கந்தா போற்றி!
திக்கரை பக்தர்களை காப்பாற்றும்
பரமசிவன் மகனே போற்றி!



ஈழம் என்னும் இலங்காபுரியின் வடபால் அமைந்த வீணா கானபுரம் என வியந்து அழைக்கப்படும் யாழ்ப்பாண நல் நகரின் மேற்குத் திசையில் அமைந்திருப்பது காரைநகர். இந்நகரில் சூரியன் உதிக்கும் கிழக்குத் திசையில் அமைந்திருப்பது களபூமி என்னும் கிராமம். இக்கிராமத்தில் வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் வாய்ந்த திக்கரை ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது.

இவ்வூரில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி உள்ளது. ஆதலால் கல்வி, விவசாயம், வர்த்தகம், நீதி என்ற வளங்கள் மேம்பாட்டுடன் விளங்குகின்றன. இங்கு வாழ் மக்கள் பழங்காலந் தொட்டு அதிக பற்றுள்ள முருக பக்தர்களாக சிறந்து விளங்குகின்றனர். நாட்டின் பயங்கர சூழ்நிலையிலும் முக்கால பூசைகள் ஆகம விதிப்படி காலந்தவறாது சிறப்புற நடைபெற்று வந்துள்ளது. அதனால் இங்கு வாழ் மக்கள் சகல துறைகளிலும் முந்நிலையில் சிறப்புற வாழ்ந்து வருகின்றார்கள். இரண்டு சகாப்த காலமாக மஹாகும்பாபிஷேகங்கள் சிறப்புற நடைபெற்று முடிந்து மூன்றாவது கால மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா சர்வமங்கள சர்வஜித் வருடம் தை மாதம் 13ம்நாள் (2008) சிறப்புற நடைபெற்று எல்லாவகைத் துன்ப துயரங்களிலிருந்தும் விடுபட்டு அமைதியான வாழ்க்கை அமையப் பெற்று சிறப்புற வாழ எல்லாம் வல்ல சுப்பிரமணிய சுவாமியை வேண்டுகிறேன்.

*'துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம்'*
*வணக்கம்*

*S.V. முருகேசு*
*களபூமி*
*காரைநகர்*

# கோபுரமாக உயர்ந்த உள்ளங்கள்

சிவா திருநாவுக்கரசு மகேசன்



நமது முன்னோர் ஆண்டாண்டு காலமாகத் திக்கரை முருகன்பால் தொடர்ந்து கண்டுவந்த கனவொன்று இன்று களபூமி மக்களினாலும் மற்றும் சில முருகனடியார்களினாலும் நிறைவு செய்யப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவோமாக. இன்னல்களும் இடர்களும் எம்மை எதிர்நோக்கியுள்ள ஒரு சூழ்நிலையில் காரைநகர் களபூமி மக்கள் முருகப்பெருமானுக்குப் பஞ்சதளக் கோபுரத் திருப்பணியை நிறைவேற்றியிருப்பது நமது மக்களின் சமய பாரம்பரிய சரித்திர ஏட்டிற்கே பெருமைதருவதாக அமைந்துள்ளது எனலாம்.

அருள்பல புரிந்து அரவணைத்துக் கொண்டிருக்கும் எம்பெருமானின் திருவருளால் இத்திருப்பணி இன்று நிறைவேறியுள்ளது. காரைநகர் மக்கள் சமயம், தமிழ் என்றால் வாரிவழங்கும் வள்ளல்கள். வலது கரம் கொடுப்பதை இடது கரம் அறியாது. இடது கரம் கொடுப்பதை வலது கரம் அறியாது என்ற முது மொழிக்கு முன் உதாரணமாக வாழும் பெருந்தகையாளர்கள் இரு கரங்களினாலும் அள்ளி அள்ளி வழங்கி பாரி வள்ளலுக்கு நிகராகி விட்டார்கள். இவர்கள் தமது வேதனைகளை எல்லாம் அற்புதங்கள் பல புரிந்த திக்கரை முருகனின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்துவிட்டுத் திருப்பணி வேலைகளுக்குத் துணை நின்று கம்பீரமான இராஜ கோபுரத்தை அமைத்துத் தம் பணியினை நிறைவேற்றிவிட்டார்கள்.

ஆலயத்தின் திருப்பணியில் இறங்குவதற்கு எவரும் தயங்கியது இல்லை. வந்தாரை வரவேற்கும் பண்பாளர்கள் நமது அன்பாளர்கள் அகமும் முகமும் மலர்ந்து வரவேற்று இல்லை என்று சொல்லாமல் அள்ளிக் கொடுத்தார்கள் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

இராஜகோபுரத் திருப்பணிக்குப் பிள்ளையார் சுழி போட்டபோது இப்பெருங் கைங்கரியத்தினை எப்படி நிறைவேற்றுவதென்ற கேள்விக்குறி அன்பர்கள் பலரின் முகங்களில் காணப்பட்டதை மறைப்பதற்கில்லை. பலகோணங்களில் கேள்விகளும் எழுந்தன. கொடுப்பார்களா? எவ்வளவுதான் கொடுக்கப் போகின்றார்கள்? என்ற கேள்விகளுக்கும் குறைவில்லாமல் இருந்தது. இவை எல்லாம் திக்கரையான் மீது அன்பர்களும் அடியார்களும் தொண்டர்களும் கொண்டிருந்த பேரன்பின் ஆதங்கமாகும். திக்கரை முருகனே மனங்களில் இருந்து சந்தேக நிவர்த்திக்கு வழிவகுத்ததாகப் பலர் கூறியதும் திருப்பணி ஆரம்பிக்க உறுதுணையாகிவிட்டது.

நமது மக்கள் இன்று யாதும் ஊரே என்றவாறு உலகின் பல நாடுகளிலும் வசித்து வருகின்றார்கள். திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவிகோரி இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி, ஃபிரான்ஸ் உட்பட இன்னும் சில நாடுகளில் வசிக்கும் நம் உறவுகளை நாடியபோது

அவர்கள் எல்லோரும் திருப்பணி நிறைவேறியாக வேண்டும் என்ற ஆவலுடன் இருந்ததைக் கண்டு என் மனம் நெகிழ்ந்துவிட்டது. புலம் பெயர்ந்தாலும் மனம் பெயராமல் இருப்பது மகிழ்ச்சி தந்தது.

வெளிநாட்டிலுள்ள நமது மக்களுக்கு நிகராக நேசக்கரம் நீட்டிய பெருமைக்கு உரியவர்கள் இலங்கையிலுள்ள எமது மக்கள். திருப்பணி வேலைகளில் பணத் தளர்வு ஏற்பட்ட போதெல்லாம் மனத் தளர்வு இல்லாமல் தம்மாலான உதவிகளைச் செய்தமை என்றும் பசுமை கலந்த நினைவுகளாய் இருக்கும்.

திருப்பணிக்காக இரண்டு குழுக்கள் செயற்பட்டன. ஒன்று நிதி திரட்டுவதற்காகச் செயற்பட்ட இலண்டன் திருப்பணிச்சபை. மற்றது கோயில் புனருத்தாரணம் உட்பட இராஜகோபுர அமைப்பு வேலைகளைக் கவனிப்பதற்கானது. இந்த இரண்டு சபைகளும் ஒன்றிணைந்து செயற்பட்டமை வேலைகளைத் துரிதப்படுத்தச் சாதகமாய் அமைந்தது. இப்படித் தன்னலமற்ற பணியாற்றிய திருப்பணிச்சபை அங்கத்தவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இவர்களுக்கு அருட்கருணைப் பெருவள்ளலாக எழுந்தருளியிருக்கும் திக்கரை முருகனின் அருட்பார்வை என்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

திக்கரை முருகனுக்கு இந்த நூற்றாண்டில் நாம் செய்யும் முக்கியமான திருப்பணி இதுவாகும் என்பதனைப் பதிவு செய்வதில் நாம் பெருமையடைவோமாக. ஒரு நூற்றாண்டைத் தாண்டிய கனவு நிறைவேறுவது பெரிய விடயமாகும். எமது சமயத்திற்கு நாம் என்ன செய்தோம் என்பதனை வருங்கால சந்ததியினர் பார்த்துப் பெருமைப்பட இந்த இராஜ கோபுரம் வானுயர்ந்து நிற்கும். கோடி புண்ணியத்தை நமது மக்கள் பெற்றுப் பெரும் பேறடையத் திக்கரை முருகனின் இராஜகோபுரம் அருள்பாலிக்கும்.

கோபுரக் கும்பாபிஷேக விழாவுடன் திக்கரை முருகன் புகழ் பாடவும், புகழ் பரவவும் மூன்று வெளியீடுகள் மலர்ந்துள்ளன. அவையாவன:

திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை. யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ. ந. வீரமணி ஐயர் அவர்களினால் பாடப் பெற்ற நூறு அந்தாதிக் கீர்த்தனைகள் அடங்கிய தொகுப்பு.

முருகன் புகழ் பாடும் ஐயர் அவர்களின் பாடல்களில் பன்னிரண்டினைக் கொண்ட இறுவெட்டு இசைநாடாவை முன்னணிப் பாடகி கலைமாமணி பூஷணி கல்யாணராமன் தமது இனிய குரலில் பாடியுள்ளார்.

திக்கரை முருகன் கோபுர தரிசனச் சிறப்பு மலர் இது கும்பாபிஷேக மலராகும். அறிஞர்கள், ஆய்வாளர்கள், முருக பக்தர்கள், சிவாச்சாரியார்கள், சமயப் பெரியார்கள் உட்பட பலரது விடயதானங்களுடன் அறிவுக் களஞ்சியமாக வெளிவந்துள்ளது. படிக்கவும், பாதுகாத்து வைக்கவும் வேண்டிய அரிய பொக்கிஷம்.

ஐயர் அவர்களின் பாடல்களிலிருந்து:

***திக்கரை முருகன் திருவடி போற்று, அக்குருபரன் அள்ளியே தருவான்***

எனும் வரியினைச் சுட்டி என்னுரையினை முடிக்கின்றேன்.

# பைந்தமிழைச் சைவத்தைப் போற்றும் ஊராம் திக்கரை முருகா போற்றி

**கவிஞர் (அமரர்) அதலை இராமன்**

விண்முட்டும் கோபுரங்கள்வளர்ந்தே ஓங்கி
வியப்பூட்டும் ஆலயங்கள் பலவ மைந்த
பண்பட்ட சான்றோர்கள் வாழு கின்ற
பலர் போற்றும் நன்நகராம் காரை சார்ந்த
எண்ணரிய சிறப்புமிகு திக்கரையில்
எழிலோங்க முருகனுக்குக் கோயில் கட்டி
எண்திசையும் சென்றுபொருள் ஈட்டும் மக்கள்
ஏற்றமுட னொண்டாடி வருகின்றார்கள்

வணிகர்கள் உழவர்கள் வாழு கின்ற
வனப்போங்கு திக்கரைநன் மக்க ளெல்லாம்
பணிகளையே கடமையெனப் பொறுப்பாய்ச் செய்யும்
பண்பட்ட சீலமிகு சான்றோராவார்
கனிவுடனே பேசியன்பாய்ப் பழகி யென்றும்
கண்ணியத்தைக் கடைப்பிடிக்கும் மேலோ ராவார்
இனிதுறவே பிறர்வாழ எண்ணி நன்றே
ஈத்துவக்கும் ஈகைமிகு வள்ள லாவார்

கார்முகில்கள் கூடிமழை பொழிந்திட் டால்தான்
கழனியெல்லாம் உழுதுபயி ரிடவே கூடும்
யாருமிங்கே வானத்தைப் பார்த்தேங் காது
ஆழ்கிணற்றுநீராலே பயிர் செய்வார்கள்
பார்சுற்றிப் பொருளீட்டி மக்க ளெல்லாம்
பைந்தமிழைச் சைவத்தைப் போற்றும் ஊராம்
சீர்மேவு செல்வ வளம் கொழிக்கும் ஊராம்
திக்கரை யென்றுரைக்கின்ற புனித ஊரே

சைவத்தைத் தமிழ்மொழியை இருகண் ணாகச்
சரிநிகராய்க் காத்துவக்கும் மக்க ளெல்லாம்
பாவத்தை உளத்தாலும் நினைத்தி டாத

பக்குவத்தைப் பெற்றிலங்கும் தூயோ ராவார்
ஆவலுடன் ஆன்மீகம் தளைப்ப தற்கே
அள்ளிப்பொருள் வழங்குகின்ற தகையா ராவார்
மேவுபுகழ் செழித்தோங்கும் திக்க ரையில்
மிடுக்குடனே வாழும்மக்கள் பண்பே பண்பாம்

காரைநகர் களபூமி தனிலோ கோயில்
கணக்கின்றித் திகழ்கின்ற காட்சி காணீர்
காரைநகர் மக்களெலாம் சைவத் தோடே
கனித்தமிழை கண்போலே மதிக்கின் றார்கள்
யாரிடமும் குறைகாண முடியா வாறு
யாவருமே நெறிவழியில் நிற்கின் றார்கள்
ஊரெல்லாம் ஒருகுடும்பம் போலே எண்ணி
உறவுமுறை கொண்டாடித் திளைக்கின் றார்கள்

கண்பார்வை இழந்திட்ட காசி நாதர்
கசிந்துருகிக் கண்பார்வை தொழுது வேண்ட
கண்பார்வை தந்தவரைக் காண வைத்த
கலியுகத்துக் கண்கண்ட தெய்வம் நீயே
உண்ணும்சேய் அழகதனைத் தாயும் கண்டே
உவப்பெய்தி மகிழ்தல்போல் காசி நாதர்
கண்பெற்றுக் களிப்படைந்த காட்சி கண்டே
கனிவுடனே முருகாநீ! மகிழ்ந்து நின்றாய்

தகவோங்கு பத்திநெறி கொண்டு வாழ்ந்த
தகவாளர் முருகா! உன் தாள் பணிந்தே
மிகநல்ல இருகுதிரை வாகன த்தை
மிடுக்குடனே உலாவரவே உவந்த ளித்தார்
மகப்பேறே இல்லாத அன்ன வர்க்கோ
மகிழ்ந்திரட்டைக் குழந்தைபெற அருளிச் செய்தாய்
செகமதிலே உன்னைப்போல் வரம ளித்துச்
சிறப்பிக்கும் தெய்வமேதும் உண்டு கொல்லோ?

மாலவனோ போற்றுகின்ற முருகா! பக்தர்
மனங்களிலே நிறைந்துறையும் வேலா! உன்றன்
கோலவெழில் சிறப்பதனைக் கூறுதற்கோ
கொஞ்சுதமிழ் மொழியினிலே வார்த்தையில்லை
சாலமனம் மகிழ்ந்துவந்தே திக் கரையில்
சந்ததமும் கொலுவிருக்கும் அழகே அழகாம்
நீலமயில் வாகனனே! மக்களென்றும்
நெறிவழியில் நிற்பதற்கே அருள்வா யப்பா!

வேல்தந்து மகிழ்வித்த உமையாள் பாலா
வெற்றிக்கு வித்தாக விளங்கும் வேலா!
ஆல்போலே குடும்பமெலாம் தழைப்ப தற்கே
அருகிருந்தே அரவணைத்துக் காப்பா யப்பா!
பால்பழமும் பன்னீரும் படைத்தே உன்னைப்
பணிந்தேத்தித் தொழுகின்றோம் அருள்வா யப்பா!
நூலறிவும் நுண்ணறிவும் தந்தே எம்மை
நோய் பிணிகள் வராது காப்பா யப்பா!

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

திக்கரையில் உறைகின்ற முருகா! போற்றி
தீமைகளைக் காக்கின்ற குமரா! போற்றி
தக்கதுணை யாயிருந்தே ஈழமக்கள்
தழைத்தோங்கிவாழவழி செய்வோய் போற்றி
மிக்கோங்கு புகழுடைய மேலோய்! போற்றி
மேதினியைக் காக்கின்ற முருகா! போற்றி
திக்கரையை வாழவைக்கும் தேவே! போற்றி
திருமுருகா! அறுமுருகா! போற்றி! போற்றி


அதலை இராமன் அவர்கள் இறைவனடி சேர்வதற்கு முன்னர் திக்கரை முருகன்பால் பாடிய கவிதை இது. திக்கரை முருகன் நிர்வாகத்தின் சார்பில் கவிஞர் ஞாபகார்த்தமாக மதுரையில் அன்னதானம் வழங்கப்பட்டபோது அன்னாரது குடும்பத்தினரும், கவிஞர்களும், அறிஞர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



*01.06.03 அன்று நடைபெற்ற முன்னாள் திக்கரை முருகன் கோவில் இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவின் ஆரம்ப கிரியைகளில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் பா.உ. கலந்து உரையாற்றினார்.*








# வரலாற்றுடன் வளரும் திக்கரை முருகன் திருத்தலம்

1760 கொட்டில் போட்டு வேல் வழிபாட்டுடன் ஆரம்பம் எனக் கணிப்பு.

1870 கார்த்திகேயப் புலவர் முருகப் பெருமான் மீது திக்கரைத் திரிபந்தாதி பாடியுள்ளார்.

1880 கனகசபை காசிநாதர் ஆலயம் அமைத்து அறங்காவலர் பொறுப்பேற்றார்.

1885 காரை கா. சிவசிதம்பர ஐயர் அவர்கள் திக்கரை முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு "திக்கரை நாயகர் மும்மணி மாலை" என்னும் நூலை இயற்றினார்.

1902 புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1925 கனகசபை சிதம்பரப்பிள்ளை அறங்காவலர் பொறுப்பேற்றார்.

1928 கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1930 சிதம்பரப்பிள்ளை கனகசபை அறங்காவலர் பொறுப்பேற்றார்.

1948 கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1953 பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் திக்கரை முருகன் மேல் நூறு அந்தாதிக் கீர்த்தனைகள் இயற்றினார்.

1960 கனகசபை திருநாவுக்கரசு அறங்காவலர் பொறுப்பேற்றார்.

1974 அளவையூர் அருட்கவி சீ. வினாசித்தம்பி திக்கரை முருகமூர்த்தி திருப்பொன்னூஞ்சல் இயற்றினார்.

1974 புனருத்தாரணம் முடிந்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1975 திருச்செந்தூர் முருகன் வடிவில் அமைத்து இந்தியாவிலிருந்து தருவித்த ஆறுமுகசாமி விக்கிரகம் ஸ்தாபித்து கும்பாபிஷேகம் நடைபெற்றது - உபயம் சட்டத்தரணி எஸ். கே. பொன்னம்பலம்.

1979 சிதம்பரப்பிள்ளை கந்தையா அறங்காவலர் பொறுப்பேற்றார்.

1984 இராஜகோபுரம் அமைக்கும் நோக்குடன் 'திக்கரை முருகமூர்த்தி கோயில் திருப்பணிச்சபை' ஆரம்பிக்கப்பட்டது.

1985 ஆனி மாதம் 14ம் நாளன்று (28.06.1985) புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நடைபெற்றது - உபயம் C. S. ஆறுமுகம் குடும்பத்தினர்.

1990 புனரமைப்பிற்குப் பின் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1990 கந்தையா நடராஜா அறங்காவலர் பொறுப்பேற்றார்.

1990 இராஜகோபுரம் மணிமண்டபம் அமைக்கும் வேலைகளைத் தொடர்வதற்காக 'திக்கரை முருகமூர்த்தி கோயில் இராஜகோபுர திருப்பணி நிதி' என்னும் சபை உருவாக்கப்பட்டது.

2000 கந்தையா பொன்னம்பலம் அறங்காவலராகப் பொறுப்பேற்றார்.

2001 புனருத்தாரணம் / இராஜகோபுரம் அமைத்தல் போன்றவற்றினை மீண்டும் தொடங்குவதற்காக 17.12.2002 அன்று இலண்டனிலுள்ள அல்பேட்டன் என்னும் ஊரில் திக்கரை முருகன் திருப்பணிச்சபை (UK) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

2002 புனருத்தாரண / இராஜகோபுர வேலைகளை மேற்பார்வை செய்து நடத்திச் செல்வதற்காக 08.12.2002 அன்று ஆலய மண்டபத்தில் திக்கரை முருகன் திருப்பணிச்சபை (கோபுரம்) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

2003 01.06.2003 அன்று இராஜகோபுர அத்திவாரக் கல் நாட்டு விழா நடைபெற்றது.

2004 07.06.2004 அன்று பாலஸ்தாபனம் நடைபெற்றது.

2005/06 ஆறுமுகசாமிக்கு முன்னால் உள்ள தெற்கு வாசலின் மேல் மூன்று தள கோபுரமமைத்து மணிமண்டபமும் கட்டப்பட்டது.
உபயம்: திருமதி தனபாக்கியம் செல்வரத்தினம்.

2005/06 வசந்த மண்டபம் புனருத்தாரணம் செய்து மெருகேற்றப்பட்டது.
உபயம்: காசிப்பிள்ளை தேவராஜா

2005/06 ஆறுமுகசாமி வாசலுக்கு முன்பாக தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டது.
உபயம்: தம்பர் காசிப்பிள்ளை நடராஜா குடும்பத்தினர்.

2005/06 கோயில் வெளி வீதியிலுள்ள கிணறு தம்பர் காசிப்பிள்ளை முருகேசு குடும்பத்தினரால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

2008 27.01.2008 மஹா கும்பாபிஷேகம்.

பூஷணி கல்யாணராமன் இசையில்

# திக்கரை முருகன் பாடல்கள்



யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

அற்புதங்கள் பல நிகழ்ந்துள்ள ஈழத்துக் காரைநகர் திக்கரை முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயலிசை வாருதி ஐயர் 1953ம் ஆண்டு மனமுருகும் நூறு அந்தாதிக் கீர்த்தனைகள் அடங்கிய திருத்தலப் பாமாலை ஒன்றினை இயற்றியுள்ளார். பக்திமயமானதும், முருகன் கருணை நிறைந்ததாகவும், திக்கரை முருகன் எழுந்தருளி இருக்கும் திக்கரைப் பதிச்சிறப்புகள் நிறைந்த பொக்கிஷமாகவும் இப் பாமாலைப் பாடல்கள் மலர்ந்துள்ளன.


ஆலயத்தின் மகிமைக்காகவும், எமது சந்ததியினர் முருகன் புகழ்பாடி அவன் தாழ் வணங்கி மகிழ வேண்டும் என்பதற்காகவும், ஆலய வரலாறு பதியப்பட வேண்டுமென்ற நோக்குடனும் இவ்வந்தாதிக் கீர்த்தனைகளை ஈழத்துக் காரைநகர் 'திக்கரை முருகன் திருத்தலப் பாமாலை' என்னும் மகுடத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பாமாலை திக்கரை முருகன் தேவஸ்தான வெளியீடாக ஆலய இலச்சனையுடன் மூவர்ணத்தில் அழகாக வெளிவந்துள்ளது.



கலை மாமணி
பூஷணி கல்யாணராமன்

இக் கீர்த்தனைகள் 1990ம் ஆண்டு 'திக்கரை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கு விழா' சிறப்பு மலரில் வெளிவந்தன. இவைகளில் காணப் பட்ட அச்சுப் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டும், சீரமைக்கப்பட்டும் ஒரு புனிதமான பாமாலை யாக ஆக்கித் தந்தவர் தமிழ் நெறிக்கிழார் பொன் பாலசுந்தரம் அவர்கள்.




அதே சமயத்தில் இப்பாமாலையில் உள்ள பாடல்கள் சிலவற்றை இறுவெட்டிலும் இசை நாடாவிலும் வெளியிடுவது நல்லதென முடிவெடுக்கப் பட்டது. அதற்கமைய பொன் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் சுமார் இருபது பாடல்கள் தெரிவு செய்யப்பட்டன.

பாடல்களைப் பாடுவதற்காக இலண்டனிலுள்ள வைத்திய கலாநிதி எஸ் நவரத்தினம் அவர்களினதும் இலண்டன் லூயிஸம் சிவன் கோயில் அறங்காவலர் திரு. நா. சச்சிதானந்தன் அவர்களினதும் உதவியுடன் இன்று தமிழ் நாட்டில் பிரபல்யமான கர்நாடக சங்கீத பாடகியாக விளங்குபவரும் ஈழத்தில் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான கலைமாமணி பூஷணி கல்யாணராமன் அவர்களுடன் தொடர்பு கொண்டு பாடல்களைப் பாடிப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.


கலைமாமணி பூஷணி கல்யாணராமன் அவர்கள் மேற் குறிப்பிட்ட இருபது பாடல்களிலிருந்து பன்னிரண்டு பாடல்களைத் தேர்ந்தெடுத்து பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள் இயற்றிய ராகம், தாளத்திற்கு அமைய கேட்பவர் உள்ளம் உருகும் வகையில் பாடித்தந்துள்ளார்.

சென்னையில் நடைபெறும் மார்கழி மாத கர்நாடக இசை விழாவில் முக்கிய கச்சேரி செய்பவர்களில் ஒருவராகத் திகழ்வதுடன் இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா, மலேஷியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிலும் இவரது சங்கீதக் கச்சேரிகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. இவ்வளவு பெருமைக்குரிய பாடகி ஒருவர் திக்கரை முருகன் மீதான பாடல்களைப் பாடியிருப்பது முருகன் திருவருளேயாகும் எனலாம்.

***சிவா தி. மகேசன்***

# கந்தக் கடவுள் நமது சொந்தக் கடவுள்

டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
தருமையாதீனம் ஸ்ரீபஞ்சநதீஸ்வரர் தேவஸ்தானம்
திருவையாறு - தமிழ்நாடு



செந்தமிழ்க் கடவுளாம் கந்தக் கடவுள் நம் சொந்தக் கடவுள். 'சேயோன் மேவிய மைவரை' உலகு என முருகக் கடவுளை இலக்கணம் சுட்டுகிறது. முருகக் கடவுளுடைய பன்னிரண்டு கரங்களும் பன்னிரண்டு உயிர் எழுத்துக்களைக் குறிக்கின்றன. பதினெட்டுக் கண்களும் மெய்யெழுத்துக்களைக் குறிக்கின்றன. அவனது ஞானவேல் ஆயுத எழுத்தைக் குறிக்கின்றது. இவ்வாறாகத் தமிழ் எழுத்துக்களின் வடிவாக முருகப் பெருமான் திகழ்வதால் அவரைத் தமிழ்க் கடவுள் என்று கூறுவர்.

ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றின் சொருப வடிவமாக சூரபத்மன, கஜமுகாசுரன், சிங்கமுகாசுரன் ஆகியோர் திகழ்ந்தார்கள். அவர்களை அழிக்காது திருத்தி நல்வழிப்படுத்திய செய்தியைப் புராணங்கள் இயம்பும். இந்நிகழ்வு, ஆன்மாவைப் பற்றி இருக்கின்ற மலம் என்றும் அழிவில்லாதது - பதியினைப்போல் பதி, பசு, பாசம் அநாதி என்ற சாத்திர உண்மையை நிறுவியதால் கந்தக் கடவுள் நமது சொந்தக் கடவுள்.

## முருகனும் சிவனும் ஒன்று

சிவனும் முருகனும் வேறன்று. ஆறுமுகச் சிவன் என்று முருகனைப் போற்றுகிறோம்.

ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும்உணர்ந்தான் சீரும்
பேதமில் அழிவில் வீடும் போற்றினார்க் கருள் வல்லான்

எனக் கந்தபுராணம் கூறும்.

(கந்தபுராணம் - உற்பத்திக் காண்டம் - திருவிளையாட்டுப் படலம்)

தேவர்கள் வாழவும் அசுரர் குணம் மாளவும் வாழ்விக்க வந்த உரு கந்தக் கடவுள்.

உருவமில்லாத இறைவன் உருவம் கொண்டான். அநாதி தன்மையாக, ஒன்றாய் அரும்பி பலவாய் விரியக் கூடியவனாக, ஆதியும் அந்தமுமில்லாத அருட்பெருஞ் சோதியாக இருக்கக் கூடிய அவன், கருணைக் கடல், ஆறுமுகங்கள் கொண்டு தேவர்களைச் சிறை மீட்ட செம்மலாக விளங்குகின்றான்.

**அந்திக்கு நிகர்மெய் யண்ணல் அருள்புரிந் தறிஞ ராயோர்**
**சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான்**

எனக் கந்தபுராணம் காட்டும் வண்ணம், ஆறுமுகச் சிவனைப் போற்றி அவனுறையும் ஆறு திருப்பதி கண்டு, அவன் மந்திரமாய் ஆறெழுத்து ஓதி அருள் பெற்ற அடியார்கள் எண்ணில் கோடியறுவர்.

முருகப்பெருமானைப் போற்றிப் புகழ்ந்து பாடப்பட்ட நூல்கள் பல. அவற்றுள் அருணகிரிநாதரால் பாடப்பட்ட திருப்புகழும் ஒன்றாகும். முருகப் பெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டவர் அருணகிரிநாதர். முருகப் பெருமானே 'முத்தைத் தரு பத்தி' என்று அடியெடுத்துக் கொடுத்து, அருணகிரிநாதரைத் திருப்புகழ் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார்.

அத்தகு பெருமை மிக்க திருப்புகழ்ப் பாடல் ஒவ்வொன்றிலும் முதற்பகுதியில் உலகியல் மாயைகளினால் ஏற்படுகின்ற அல்லல் குறித்தும், பின் பாதியில் தாம் அந்நிலையிலிருந்தும் விடுபட்டு நற்கதி பெறவேண்டி முருகப் பெருமானை வேண்டுவதாகவும் அருணகிரிநாதர் அமைத்திருக்கின்றார்.

## முருகன் நூல்களில் திருப்புகழ்

திருப்புகழில் பல புராணக் கூறுகளும், இதிகாச நிகழ்வுகளும், திருமுறைச் சாத்திர தாக்கங்களும் காணப்படும். மரபுவழி நின்று அருணகிரிநாதர் சந்த விருத்தத்தால் திருப்புகழை யாத்துள்ளார்.

மனதைக் கொள்ளை கொள்ளும் திருப்புகழைப் படிப்பதனால் என்ன பலன் என்பதையும் அருணகிரிநாதரே சுட்டிக் காட்டுகின்றார்.

கடினத் தன்மையும் குரோதமும் செறிந்திருக்கும் மனதை, அனலிலிட்ட வெண்ணெய் போல, உருகச் செய்யும் வல்லமை படைத்த புகழ் திருப்புகழ். படிப்பதனால் நாம் வேண்டும் அனைத்தும் சித்தியாகும். அதோடு பிறவிப் பெருங்கடலை நீந்த உதவும். பிறவாப் பெருவாழ்வு கைகூடும்.

அதோடு மட்டுமல்ல, திருப்புகழ் படிக்கின்றவர்களை யாரேனும் கோபப் படுவார்களேயானால் அவர்களுடைய தலை சாயும். அவர்களுடன் பகை ஏற்படுத்திக் கொள்வார்களேயானால்

அவர்களுடைய குடியையும் ஏளனம் செய்வோரையும், பழித்துத் தூற்றுவோரையும், திருப்புகழ் என்ற நெருப்பு இவர்களுக்கெல்லாம் பாதகம் செய்யும்.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்

செகுத்தவர் உயிர்க்குஞ் சினமாகச்

சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்குந்

திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்

நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்

நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்

நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்

நிறைபுக முரைக்குஞ் செயல் தாராய் - என்பது

இத்திருப்புகழ் மனிதன் மனிதனாக வாழ்ந்து தெய்வநிலை அடைவதற்குரிய ஆற்றுப்படை நூலாக விளங்குகிறது. தனி மனித ஒழுக்க நிலையிலிருந்து சமுதாயம் வரைக்கும் பண்பாட்டு நெறி உணர்த்தும் களஞ்சியமாகத் திகழ்கிறது.

மனித வாழ்வியலைப்பற்றி இந்நூல் சிந்திப்பது: மனிதன் தீதிலாக் கல்வியைப் பெறவேண்டும். எல்லாக் காரியங்களும் இறைவன் அருளிய தவத்தினால் கிடைத்தது என்று உணர வேண்டும். மாயை உலகத்தில் அழுந்தி உழலக் கூடாது. அவ்வாறின்றித் தீய கல்வி படித்தவர்களும், தவத்தைத் தூற்றுபவர்களும், மாதர் வசத்தில் மயங்கி உழல்பவர்களும், தீ நரகத்தில் விழுவாரென்று திருப்புகழ் இயம்புகின்றது.

# கோபுரங்களும் விமானங்களும் தோன்றிய வரலாறு

முனைவர் சொ. சாந்தலிங்கம்
தொல்லியல் துறை உதவி இயக்குனர்
மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை



கோயில்களால் பொலிந்தது தமிழகம். கோயில் என்றவுடன் நமது மனக்கண்முன் தோன்றுவது விண் முட்டும் கோபுரம்தான். மேலை நாடுகளில் வான் சுரண்டிகள்(sky scrapers) என்னும் விண் முட்டும் பல மாடிக் கட்டிடங்கள் எழுவதற்குப் பலநூறு ஆண்டுகட்கு முன்பாகவே தமிழகத்தில் கோபுரங்கள் எனும் உயரமான கட்டுமானம் உருக்கொண்டிருந்தது. இந்தக் கோபுரம் என்ற அமைப்பு திடீரென்று உதித்த ஒன்றல்ல. அதன் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் என ஒரு வரலாறுள்ளது.

மண்ணும், மரமும், சுதையும், உலோகமும் கொண்டு கோயில் கட்டப்பட்டு வந்த மரபை மாற்றி முற்றிலும் கல்லால் கோயில் கட்டும் மரபை முதலில் தமிழகத்தில் அறிமுகம் செய்தவர்கள் பல்லவர்கள். குடவரைக் கோயில் ஒன்றைக் கற்கோயில், கட்டுமானக் கோயில் என்று ஒவ்வொன்றாய் அறிமுகம் செய்த பல்லவர்களின் கோயிலில் கோபுரம் எனும் வானுயர்ந்த கட்டுமானங்கள் முதலில் கட்டப்படவில்லை. கோபுரம் எனும் சொல்லாட்சியை முதலில் சம்பந்தர் (ஆலவாய்ப் பதிகம்) தேவாரமே தருகிறது.

கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை குலாவும்
கோபுரஞ் சூழ் மணிக் கோயில்

மதுரையில் ஆலவாய் அண்ணல் கோயில் கோபுரம் சூழ இருந்தது என்பதை இப்பாசுரம் நமக்குக் காட்டுகிறது. ஆனால் சம்பந்தர் காலமான கி பி 7ம் நூற்றாண்டில் கோபுரம் என்னும் அமைப்பு இருந்ததா என்பது ஐயத்திற்குரியது. விமானம் என்பதையே முதலில் கோபுரம் என்றும் கருதியுள்ளனர். ஆனால் விமானம் என்பது கருவறையின் மேல் கட்டப்படும் கட்டுமானமாகும். கருவறையின் அடித்தளத்திலிருந்து ஸ்தூபி வரைக்கும் உள்ள கட்டுமானமே விமானம் என்பதாகும். எனவேதான் சோழப் பெருமன்னன் முதலாம் இராசராசன் தனது கொடைப் பெருமைகளை எல்லாம் ஸ்ரீவிமானத்திலே கல்லிலே வெட்டுக என ஆணையிட்டான். கோபுரம் என்பது கோயில் நுழைவாயிலில் அமைக்கப்படுவது. முதலில் கோயில் நோக்கியுள்ள கிழக்குத் திசையில் மட்டும் வாயில் அமைந்ததால் கிழக்குத் திசையில் மட்டும் கோபுரம் கட்டப்பட்டது. பிற்காலத்தில் நான்கு புறமும் வாயில்கள் அமைந்ததால் நான்கு திசைகளிலும் கோபுரங்கள் அமைந்தன. திருச்சுற்றுகளின் (பிரகாரங்களின்) எண்ணிக்கை அதிகரிக்கும்போது ஒவ்வொரு

திருச்சுற்றிலும் நான்கு பக்கமும் கோபுரங்கள் கட்டப்பட்டன. அவ்வகையில்தான் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் மூன்று திருச்சுற்றுகளிலும் மொத்தம் 12 கோபுரங்கள் அமைந்துள்ளன.

**துவார சாலை**

இன்றைய தமிழகத்தின் கட்டுமானக் கோயில்களில் மிகத் தொன்மையானவை காஞ்சி கைலாசநாதர் கோயிலும், மகாபலிபுரம் கடற்கரைக் கோயிலுமாகும். இவற்றில் கோபுரம் எனும் உயர்ந்த கட்டுமான அமைப்புகள் இல்லை. ஆனால், கிழக்கு நோக்கியுள்ள இக்கோயிலின் நுழைவாயிலில் சிறிய அளவில் துவார சாலை எனும் அமைப்பு உள்ளது. சுமார் ஆறு அடி உயரமே உள்ள வாயில் நிலைக் கற்களின்மேல் சாலை வடிவ (ரயில் பெட்டி வடிவ) அமைப்பு ஒன்று கட்டப்பட்டு உள்ளது. இதுவே துவார சாலை என்பதாம். கோபுர அமைப்பின் முன்னோடி என்றே இதனைக் கூறலாம்.

தொடக்க காலத்தில் கோயில் எளிமையானதாக, ஒரு சிறிய கருவறை, அர்த்த மண்டபம், முன் மண்டபம் ஆகியவற்றுடன் ஒரே திருச்சுற்றுடன் கூடியதாகக் கட்டப்பட்டது. நுழைவாயில் கோபுரம் உயரம் குறைவானதாகவும், கருவறை விமானம் உயரம் அதிகமானதாகவும் அமைக்கப்பட்டன. கிழக்கு நோக்கி அமைந்த கோயில்களில் ஒரு கோபுரம் மட்டுமே அமைக்கப்பட்டது. இம்மரபு முதலாம் இராசராச சோழன் காலத்தில் மாறியது. ஒரே திசையில் அதாவது கிழக்குத் திசையிலேயே இரண்டு கோபுரங்கள் தஞ்சையில் கட்டப்பட்டன. அவற்றிற்கு இராசராசன் திருவாசல், கேரளாந்தகன் திருவாசல் எனப் பெயர்களும் சூட்டப்பட்டன. ஆனால் விமானத்தைவிட இக்கோபுரங்கள் உயரம் குறைவாகவே அமைந்திருந்தன. இத் தஞ்சைப் பெரிய கோயிலின் விமானம் 207 அடி உயரமானது. தமிழகத்திலேயே அதிக உயரமான விமானத்தைக் கொண்ட கோயில் இதுவே. பலரும் இதைக் கோபுரம் என்று தவறாகக் கூறுகின்றனர்.

தில்லை நடராசர் கோயிலில் திசைக்கு ஒன்றாகக் கோபுரம் அமைக்கும் பணி பிற்காலச் சோழர்களால் தொடங்கப்பட்டது. முதலில் விக்கிரம சோழனால் (கி.பி. 1118 – 1185) கோபுர வாயில் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**தன்குல நாயகன் தாண்டவம் பயிலும்**
**செம்பொன் அம்பலம் சூழ்திரு மாளிகையும்**
**கோபுர வாசல் கூட சாலைகளும்**

விக்கிரம சோழனால் கட்டப்பட்டன. முற்றிலும் கல்லாகவே கருவறை கட்டப்பட்டது. இதனைக் கல்காரம் என்றும் கூறுவர். இவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இரண்டாம் குலோத்துங்கனும் கோபுரம் கட்டும் பணியில் ஈடுபட்டான் என்பதை அறிகிறோம். இம்மன்னனுடைய அவைக்களப் புலவர் ஒட்டக்கூத்தர் தான் பாடிய மூவருலாவில் -


**கோலத்தால் கோயில் பணிகுயிற்றிச் - - குலத்தான்**
**ஆடும் திருப்பெரும்பேர் அம்பலமும் கோபுரமும்**

மாடம் பரந்தோங்கு மாளிகையும் - - கூடி
நிலையேழு கோபுரமும் நேரே நெருங்கும்
மலையேழும் என்ன வகுத்து

எனப் பாடியுள்ளார். இவன் காலத்தில் தில்லைக் கோயிலில் எழுநிலைக் கோபுரம் கட்டப்பட்டது என்பது அதன்முலம் உறுதியாகிறது. ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணியிலும் அச்செய்தி கூறப்பட்டுள்ளது.

கோயில் முன் ஏழ்நிலை கொண்டதோர் கோபுர
வாயில் வகுத்த பிரான் மகன் வாழிய

என்பது தக்கயாகப் பரணிச் செய்தி. இக்குலோத்துங்கன் காலத்தில் கிழக்குக் கோபுரம், வடக்குக் கோபுர வாயில்கள் கட்டப்பட்டன. இக்காலம் வரை விமானத்தைவிட கோபுரம் உயரம் குறைவாகவே கட்டப்பட்டது. முதன்முதலாக மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில்தான் கோபுரத்தின் உயரம் விமானத்தைவிட உயரமானதாகக் கட்டப்பட்டது.



இரண்டு விமானங்களுடன் இராஜகோபுரம் முன் தோற்றம்

இம்மன்னனால் கட்டப்பட்ட திருபுவனம் திரிபுவனவீரேச்சரம் கோயிலே இதற்கு முதல் எடுத்துக்காட்டாகும். இதன் பின்னர் விஜயநகர மன்னர்கள் மற்றும் நாயக்க மன்னர்கள் காலத்தில் நான்கு வாயில்களிலும் உயரமான கோபுரங்கள் அமைக்கும் வழக்கம் பெருகியது. குறிப்பாக கிருஷ்ணதேவராயர் காலத்தில் இத்தகைய உயரமான கோபுரங்கள் அதிகம் கட்டப்பட்டன. அவை இராஜகோபுரம் எனப் பெயர் பெற்றன.

**திருஅண்ணாமலையும் திருஅரங்கமும்**

அவ்வகையில் இதுவரை கட்டப்பட்ட கோபுரங்களிலேயே தஞ்சை நாயக்க மன்னர் கட்டிய திருவண்ணாமலைக் கோபுரமே தமிழகத்தில் அதிக உயரம் கொண்டதாகும்.

அதன் உயரம் 217 அடி. தமிழக அரசின் சின்னமாக விளங்கும் திருவில்லிபுத்தூர் கோபுரம் 192 அடி உயரமுள்ளது. ஆனால் 10 ஆண்டுகட்கு முன்னர் கட்டப்பட்ட திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) கோபுரமே தற்போது மிக உயரமானதாகக் காட்சியளிக்கிறது. இக்கோபுரத்தின் உயரம் 236 அடியாகும்.

கோபுரங்களின் கட்டிட அமைப்பு விமான அமைப்பையே பெரிதும் ஒத்திருக்கும். உயரமான உப பீடத்துடன் கூடிய அதிட்டானம் (தாங்குதளம்) அமையும். அதில் பத்மஜகதி, கண்டம், கபோதம், பட்டிகை ஆகிய சிற்றங்கங்களும் இடம் பெறும். அதிட்டானத்துக்கு மேலாக அமையும் அங்கம் சுவர். இதில் பல அரைத்தூண்களும் தேவகோட்டங்களும் இடம்பெறும். இத்தேவகோட்டங்கள் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்குத் திசைகளிலும் அமையும். இவற்றில் அவ்வவைகளுக்குரிய இறை உருவங்கள் வைக்கப்படும். பெரும்பாலும் கிழக்குப்புறக் கோட்டங்களில் வாயிற் காவலர் உருவங்களே இடம் பெறும். தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தில் அதிட்டான உப பீடத்திலேயே பல புராணக் கதைச் சிற்பங்கள் சிற்றுருவப் பலகைகளாக (miniature panels) அமைக்கப்பட்டுள்ளன. தில்லையிலும் குடந்தை சாரங்கபாணிக் கோயிலிலும் பரதநாட்டியக் கரணச் சிற்பங்கள் கோபுரங்களின் நிலைக் கற்களில் செதுக்கப் பட்டுள்ளன.

அடுத்த அங்கம் கரை அல்லது பிரஸ்தரம் எனப்படும். இது உட்புறம் பலகைக் கற்களால் பரவப்பட்டிருக்கும். வெளிப்புறம் கொடுங்கை வரியோடு அமையும். இதற்கு மேலாக அமைவது பெரும்பாலும் செங்கல் கட்டுமானம் ஆகும். ஐந்து நிலை, ஏழு நிலை, ஒன்பது நிலை, பதினொரு நிலை, பதின்மூன்று நிலை என்னும் தளங்களுடன் பெரிய அளவில் கட்டப்படும். ஒவ்வொரு தளமும் ஆட்கள் ஏறிச்சென்று பார்க்கும் வகையில் அமையும். இத்தளங்களின் சுவர்களின் உட்புறம் வண்ண ஓவியங்கள் தீட்டப்படுவதுமுண்டு. எடுத்துக்காட்டாகக் காளையர் கோயில் மருது பாண்டியர் கோபுரத்தில் பல வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

இந்நிலைகள் கீழே அகலமாகவும், மேலே செல்லச் செல்ல அகலம் குறைந்தும் ஒரு பிரமிட்டு வடிவில் அமைக்கப்படும். ஒவ்வொரு மூலையிலும் கர்ணகூடு, பஞ்சரம், சாலை என்னும் வடிவங்களையே மாலைபோல அடுக்கிப் பெரிதும் சிறிதுமாக அமைத்து இவ்வடிவம் பெறப்படும். அடுத்த வடிவம் கழுத்து அல்லது கிரீவம் எனப்படும். இதில் ஆட்கள் நின்று பணியாற்றும் வகையில் இடைவெளி அமையும். இதற்கு மேலாகச் சாலை வடிவ சிகரம் அமையும். இதில் 5, 7, 9 கலசங்கள் உலோகத்தால் அமைக்கப்படும். கலசங்களில் வரகு எனும் தானியம் நிரப்பி வைக்கப்படுவதாகக் கூறுவர். இக்கலசம் ஒருவகையில் இடிதாங்கியின் பணியைச் செய்யவல்லது.

### கோபுரங்களும் சிற்ப வேலைப்பாடுகளும்

சாலை வடிவின் இரண்டு பக்கமும் மகாநாசி என்னும் அமைப்பு இடம் பெறும். மகாநாசி என்பது கீர்த்தி மகம் என்னும் யாளி முகத்திலிருந்து மகரக்கொடிபோன்ற இரு வளைவுகள் கீழ்நோக்கி வருவதாகும். இது கோபுரத்தின் அழகையும் கம்பீரத்தையும் கூட்டுவதாக அமையும்.

கோபுரங்களின் உட்புற நிலைக் கால்கள் ஒரே கல்லால் மிகப் பெரியவையாக அமைந்திருக்கும். இந்நிலைக் கற்கள் தொடக்கத்தில் சிற்ப உருவங்கள் எதுவுமின்றி வெறுமையாக இருக்கும். ஆனால் நாயக்கர் காலத்தில் இவற்றில் கங்கை, யமுனை என்ற நீர்த் தெய்வங்களை பெண்ணுருவில் கொடிப் பெண்கள் என்னும் பெயரில் வடிப்பது வழக்கமாயிழற்று. இவை ஒயிலான தோற்றத்துடன் அதிபங்கம் என்னும் முறையில் அமைந்திருக்கும். இப்பெண்களின் இடைப்பகுதியிலிருந்து கொடி ஒன்று புறப்பட்டு தூண் முழுவதும் வளைவுகளுடன் பரவியிருக்கும். இவ்வளைவுகளில் விநாயகர், முருகன் ஆகிய தெய்வ உருவங்களைச் சிறிய அளவில் செதுக்கியிருப்பர்.

மேற்கட்டுமான சுதை வடிவத்தில் எண்ணற்ற சுதைச் சிற்பங்களை அமைப்பது நாயக்கர் காலத்தில் வழக்கமாயிற்று. பல்வேறு புராணக்கதை மாந்தர்களையும் சுதைவடிவில் அமைப்பர். இத்துடன் காமச் சிற்பங்கள், பல்வேறு சிறு தொழில்கள் செய்யும் மக்கள், ஆடல் மகளிர் சிற்பங்கள், கூத்தாடிகளின் உருவங்களையும் அமைத்து முழுக் கோபுரத்தையும் சிற்பங்களால் பொழியச் செய்வர். இவ்வகையில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் தெற்குக் கோபுரம் எண்ணற்ற சுதை உருவங்களோடு வானுயர்ந்து நிற்கின்றது.

மதுரைக் கோயிலின் கிழக்குக் கோபுரம் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் கி. பி. 13ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அவரது பெயரால் சுந்தரபாண்டியன் திருக்கோபுரம் என்றும் அவனியாளப் பிறந்தான் கோபுரம் என்றும் பெயர் பெற்றுள்ளது. மேற்குக் கோபுரம் கி. பி. 14ம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டதாகும். தெற்குக் கோபுரம் கி. பி. 15ம் நூற்றாண்டில் சிராப்பள்ளி செவ்வந்தி முதலியாரால் கட்டப்பட்டது. வடக்குக் கோபுரம் கி. பி. 16ம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பது மூத்தோர் வாக்கு. திருமூலர் மனித வாயைக் கோபுர வாசல் என்கிறார்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயமாம்**
**வள்ளல் பிரானாற்கு வாயே கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிர்ந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காணா மணிவிளக்கே**

இதன் உண்மைப் பொருளை உணர்ந்தோர் இறையுணர்வில் கலந்தாராவர்.

# கோபுரங்களும், சிற்பங்களும் எதற்கு?

**பண்டிதர் சுந்தரனார்**

கோபுரங்கள் அருள் பெற்றவைகள். சக்தி வாய்ந்தவைகள். மனித மனங்களை ஈர்க்கும் ஒரு சக்தி கோபுரங்களிடம் இருப்பதை நாம் உணரலாம். காலாதிகாலமாக இந்த உணர்வு பக்தர்களிடமும், பாமர மக்களிடமும் இருந்திருக்கிறது. அந்தக் காலத்தில் அங்கொன்றும், இங்கொன்றுமாக அமைந்திருந்த கோபுரங்கள் இடத்திற்கு இடமுள்ள கோயில்களில் எழுவதற்கு மக்களின் மனங்கள்தான் காரணமாகின.

பக்தர்கள் ஆலயங்களைத் தேடி மாட்டு வண்டில்களிலும், கால்நடையாகவும் சென்ற காலம் முன்னிருந்தது தெரிந்ததே. அப்போதெல்லாம் அப்படிச் செல்பவர்கள் கோபுரத்தைக் கண்டதும் தம்மை மறந்தும், தமது நடைப்பயணக் களைப்பை மறந்தும் 'அரோகரா அரோகரா' என்றும் 'முருகா முருகா' என்றும் ஆடிப்பாடி ஆரவாரப்படுவார்கள். பயணத்தில் ஏற்பட்ட களைப்பையும், கஷ்டங்களையும் மறந்து தெம்படைந்து விடுவார்கள்.

அந்தக் காலங்களில் எல்லாம் ஈழத்தின் கடற்கரை ஓரமாக வசித்துவந்த மக்கள் அதிகாலை வேளைகளில் இராமேஸ்வர ஆலயத்தின் கோபுரத்தைப் பார்த்துக் கும்பிட்டதாகக் கூறுவது உண்டு.

இப்படிக் கோயிலுக்கு அண்மையில் செல்ல முடியாதவர்கள் கோபுரத்தைத் தரிசித்து பிரார்த்தனை செய்வதும் கண்கூடு. இது ஆசூசம் உடையவர்கள் ஆலயத்தின் புனிதத்தை மாசு படுத்தாமல் வழிபட வாய்ப்பளித்தது எனலாம். ஆலயங்களின் புனிதம் பேணப்படும், அதே சமயத்தில் வழிபாட்டிற்கு இடையூறு விளைவிக்காமலும் இருப்பதைக் கவனிக்கலாம்.

சமய சாத்திர முறைகளின்படி கோபுரம் ஸ்தூல லிங்கமாகும். இதனால்தான் 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்றார்கள் நமது முன்னோர்கள்.

முழு விழிப்பு நிலை, உறக்க நிலை, ஆழ்மனம் தூங்காது தூங்கி விழித்திருக்கும் ஆழ்நிலை எனும் மனிதனின் இந்த மூன்று மனோ நிலைகளையும் கடந்துதான் இறைவனைத் தரிசிக்க முடியும் என்பதை உணர்த்தவே மூன்று நிலைக் கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.

மெய், வாய், கண், மூக்கு, காது எனும் ஐந்து பொறிகளுக்கிடையே உயிர் குடிகொண்டுள்ளது. ஆத்மாக்களின் உயிர் ஆகிய இறைவன் ஐந்து நிலைக் கோபுரங்களிடையே அதை விளக்கக் குடிபுகுந்துள்ளார். இதையே ஐந்து நிலைக் கோபுரங்கள் குறிகின்றன.

மேற்கண்ட ஐந்து பொறிகளுடன் மனம், புத்தி எனும் இரண்டைச் சேர்த்தால் மொத்தம் ஏழாகும். அதாவது ஐம்பொறிகளுடன் கூடிய சரீரம் மற்றும் மனம், புத்தி இவற்றைக் கடந்தால் இறைவனைக் காணலாம் என்பதை ஏழு நிலைக் கோபுரம் குறிக்கும்.

ஐம்பொறிகள் எனும் ஐந்தோடு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றையும் சேர்த்து ஒன்பதையும் கடந்தால் இறைவனைத் தரிசிக்கலாம் என்பதைக் குறிக்கும் வகையில் ஒன்பது நிலைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இனி கோபுரத்திலுள்ள பொம்மைகளையும், பதுமைகளையும், இன்னோரன்ன உருவச் சிலைகளையும் பார்ப்போம். ஆன்மீக வாழ்வு, துறவறம், சமய விளக்கம், நற்சிந்தனை விளக்கம் போன்றவைகளைத் தெரியப்படுத்தி மனத்தூய்மைக்கு அவை தூண்டு கோலாக அமைகின்றன. சமயம், இலக்கியம், பாரம்பரியம் போன்றவற்றின் பிரதிபலிப்பையும் இவைகளில் காணலாம். பல உயரிய தத்துவங்களை இவை மையமாகக் கொண்டுள்ளன.

கோபுரம் எவ்வளவு புனிதம் பெற்று மக்களின் மனங்களில் பக்திக்கு வாயிலாக அமைகிறதோ அதே போன்ற புனிதம் இந்தக் கோபுரத்தை அலங்கரிக்கும் சிற்பங்களில் உள்ளன.

இன்பமும், துன்பமும் சேர்ந்தது தான் உலகம். உயிர்கள் 84000 வகை யோனி பேதங்கள் என ஆன்றோர் கூறுவர். இப்படிப் பேதங்களோடு எல்லாம் கலந்த உலகத்தின் ஒருமாதிரி வடிவமே இராஜகோபுரமாகும். நுவராத்திரி காலங்களில் நமது வீடுகளில் கொலு வைக்கிறோமல்லவா? இராஜகோபுரம்கூட கொலு போன்றதே. அது ஊர் கூடிவைத்த கொலு.

கொலுவில், மேலே முதன்முதலாக ஒரு கலசமும், அடுத்தடுத்த படிகளில் தேவர்கள், ரிஷிகள், விலங்குகள், பறவைகள், பொம்மைகள், தாவரங்கள் போன்றவற்றை வைப்பதுண்டு.

ஒவ்வொரு உயிரும் தங்கள் செயலால் மேன்மைபெற்று, மேல் நிலை அடைந்து, இறுதியில் இறைவனோடு கலக்கவேண்டும் என்பதையே கொலு குறிக்கும். இந்தத் தத்துவத்தையே கோபுரக் கொலுவம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

மேலும் அகிலத்தை அடக்கிய இறைவனின் ரூபமாகவும் கோபுரம் காட்சி தருகிறது.

# தெற்குத் திசை திரிதள இராஜகோபுரம்

**ச. ஆ. பாலேந்திரன்**

சிவாலயங்களின் மிகப் பிரதான திசைகளான கிழக்கு, தெற்குத் திசைகளில் இராஜகோபுரங்கள் அமைக்கும் வழக்கம் பல்லவர் காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. கருவறையில் இருக்கும் மூலவர் கிழக்குத் திசை நோக்கி காட்சியளிக்கின்றார். இத்திசையில் அமைக்கப்படும் கோபுரம் பிரதான இராஜகோபுரமாகும். இக்கோபுரத்தினை 3, 5, 7, 9, 11 எனத் தளங்கள் கொண்டதாக அமைக்கின்றார்கள். திக்கரை முருகன் கோவில் பெரிய இராஜகோபுரம் ஐந்து தளங்கள் கொண்டதாகும்.

கோயில்களில் வீற்றிருக்கும் மூலவரின் மூர்த்தங்களாக உள்ள உற்சவ மூர்த்திகளை தெற்குத் திசை நோக்கிக் காட்சியளிக்கும் வண்ணம் அமைப்பர். சிவன் கோயில்களில் அவரது மூர்த்தங்களில் ஒன்றான நடராஜப் பெருமான் தெற்கு நோக்கியே எழுந்தருளுவார். ஆனால் இச்சந்நிதிக்குத் தெற்கு வாசலில் ராஜகோபுரம் அமைக்கப்படுவதில்லை. ஏனெனில் சிவசக்தியான அம்பாள் தெற்கு நோக்கிய சந்நிதியில் எழுந்தருளுவதால் அம்பாளின் சந்நிதிக்கு முன்பாகவே தெற்கு இராஜகோபுரம் அமைக்கப்படுகின்றது. ஆனால் இதற்கு விதிவிலக்காக கோவில் என்று அழைக்கப்படும் சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் சந்நிதிக்கு முன்பாக இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் சிதம்பரத்தில் மூலமூர்த்தியாக நடராஜப் பெருமானே உள்ளார். எனினும் இக்கோபுரவாசலில் நின்று மூலவரான நடராஜப் பெருமானைத் தரிசிக்க முடியாது.

இவற்றுக்கெல்லாம் விதிவிலக்காக முருகன் ஆலயங்கள் உள்ளன. முருகனின் பிரதான மூர்த்தான ஆறுமுகசுவாமி தெற்கு நோக்கியே உள்ளார். இதனால் மூலவருக்கு கிழக்குத் திசையில் இராஜகோபுரம் அமைக்கப்படுவது போல தென்திசை நோக்கியும் ஆறுமுக சுவாமிக்கு இராஜகோபுரம் அமைக்கும் வழக்கம் உள்ளது. அந்த வகையிலேயே திக்கரை முருகன் கோவிலிலும் தெற்கு வாசலில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளமைக்கு முருகனின் திருவருளே காரணமாகும்.

திக்கரையில் 1975ம் ஆண்டு ஆறுமுகசுவாமி பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. தெற்குத் திசை நோக்கி அழகிய கருவறை விமானம் அமைக்கப்பட்டு வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகசுவாமியின் உற்சவ மூர்த்தி பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இராஜகோபுரம் அமைக்கப்படவில்லை. கிழக்கு இராஜகோபுரம் அமைக்கப்பட முயற்சிகள் தொடங்கப்பட்ட வேளையில் தெற்கு இராஜகோபுரமும் அமைக்கும் திருப்பணியும் தொடங்கப்பட்டது முருகனின் திருவருளே.

இத்திருப்பணியை நிறைவேற்ற முன்னோடியாக இருந்தவர் அமரர் பாலாவோடை வே. செல்வரத்தினம் அவர்களாகும். திருமணமாகிப் பல வருடங்களாகப் பிள்ளையில்லாக் குறையை நீக்கும்படி திக்கரை முருகனை வேண்டித் தவமிருந்தார். அவ்வேண்டுதலை முருகப்பெருமான் நிறைவேற்றியமையால் பிறந்த ஆண் குழந்தைக்குச் சரவணபவன் எனப் பெயரிட்டார். தன் வேண்டுதலை ஏற்று திருவருள் புரிந்த முருகனாகிய சரவணனுக்கு திருப்பணி ஏதாவது செய்ய வேண்டும் என எண்ணி தெற்குத் திசை இராஜகோபுரம் கட்டுவதென பல ஆண்டுகளுக்கு முன்னமே சங்கற்பம் செய்துகொண்டார். நாட்டின் நிலமை காரணமாகத் திருப்பணி செய்ய முடியவில்லை. இன்று அவர் அமரரான பின்னும் அவருடைய துணைவியார் திருமதி தனபாக்கியம் தன் கணவரின் வேண்டுதலை நிறைவேற்றி முருகன் தாள் பணிந்து திருவருள் பெற்றுள்ளார். அமரர் வே. செல்வரத்தினம் தாய்க்குக் கிழக்குத்திசை இராஜகோபுரத்தைப் பஞ்சதளமாகப் பாலாவோடை அம்மன் கோவிலுக்குத் திருப்பணி ஆற்றியவர். தனயனான முருகப் பெருமானுக்குத் திக்கரையில் தெற்குத் திசையில் திரிதள இராஜகோபுரம் அமைத்து திருப்பணி ஆற்றிய பெருமை மிக்கவர்.

# திக்கரை முருகன் திருக்கேணி தோற்றமும் வரலாறும்

தகவல்: ஐ. தி. சம்பந்தன்

காரைநகர் களபூமி திக்கரைத் திருத்தலக் கேணிக்கு ஒரு வரலாறு உண்டு. நூற்றாண்டுக்கு முன்னர் ஆலயத்திற்கு முன்புறத்திலே தற்பொழுது தேர் முட்டி இருக்கும் இடத்திற்குத் தெற்காக உள்ள இடத்தில் தம்பர் என்பவரால் கேணி தோன்றப்பட்டது. இக்கேணி தோன்றப்பட்ட நிலையில் சீராக்கப்படாது காலத்திற்குக் காலம் பக்கச்சுவர்கள் இடிந்து பாழ் அடைந்த நிலையிலும் மக்கள் இக்கேணியைப் பாவித்து வந்தனர். மழைக்காலங்களில் கேணியில் நீர் நிறைந்திருக்கும். அக்காலங்களில் இளைஞர்கள் நீந்தி விளையாடிக் குதூகளிப்பர்.

இவ்வாலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் வருடாநத விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன. இந்தியாவிலிருந்து கலைஞர்களை வரவழைத்து திருவிழாக்களை விமரிசையாக நடத்துவது வழக்கமாக இருந்தது.. சென்ற நூற்றாண்டு மத்தியில் ஒரு பிரசித்தி பெற்ற கலைஞர் வரவழைக்கப்பட்டிருந்த பொழுது ஆலயத்தில் மக்கள் வெள்ளத்தில் நிரம்பி வழிந்தது. ஆயிரக்கணக்கில் துவிச்சக்கர வண்டிகள் வீதி அடங்கிலும் நிரம்பியிருந்தன. இந்த ஜன நெருக்கத்தினால் பாழ் அடைந்த நிலையில் இருந்த கேணிக்குள் துவிச் சக்கர வண்டிகளும் மக்களில் பலரும் விழுந்து உயிர் ஆபத்து ஏற்படும் முறையில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

இந்தப் பாரிய சம்பவத்தையடுத்து கேணியினை மூடுவதென்று கோயில் நிர்வாகிகளும் முருக பக்தர்களும் முடிவெடுத்தனர். அதன் பிரகாரம் கேணியினைப் பெருந்தொகையான மண்ணினைக் கொண்டு மூடுவதற்குச் சில வருடங்கள் எடுத்தன.



இக் கேணி மூடப்பட்டதும் மாற்றுக் கேணி ஒன்று தோன்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்பகுதியைச் சேர்ந்த திரு வினாசித்தம்பி ஆறுமுகம் அவர்கள் கோயிலுக்கு தென்கிழக்கில் உள்ள ஒரு காணியில் கேணி ஒன்று கட்ட முயற்சி எடுத்தார். எதிர்பாராத வகையில் இம்முயற்சி கைவிடப்பட்டது.

கேணியில்லாத குறையை நீக்கும் பொருட்டு கோயிலுக்குக் தென்கிழக்கிலுள்ள தம்பர் காசிப்பிள்ளைக்குச் சொந்தமாக இருந்த காணியிலுள்ள கிணற்றினை முருகபக்தர்கள் நீர் அருந்தவும் கைகால் கழுவவும் பாவித்தனர். தம்பர் காசிப்பிள்ளையின் வம்சாவழியினர் இக்கிணற்றினைத் திருக்கிணறாக ஆக்கி முருக பக்தர்களின் பாவனைக்காகப் பேணிவருகின்றனர்.

1960ம் ஆண்டு முதல் ஆலயம் பல வளர்ச்சிகளை அடைந்தது. இக்காலகட்டத்தில் தம்பர் காசிப்பிள்ளை நடராசா அவர்கள் தம்பர் தொடங்கிய கேணிப் பணியினைத் தான் செய்து முடிக்க வேண்டுமென்று மிகமிக ஆவலுடனிருந்தார். இறுதி மூச்சு வரையும் இந்த சிந்தனையுடனே இருந்ததோடல்லாமல் தனது மக்களையும், பெறா மகனான திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்களையும் இப்பணியினைச் செய்து முடிக்குமாறு தூண்டிக் கொண்டிருந்தார் அன்னாரின் கனவினை நனவாக்கும் வண்ணம் அவரின் மக்கள் சிரேஷ்ட மைந்தன் திரு. சிவஞானம் அவர்களின் தலைமையிலும் திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்களின் ஆதரவுடனும் ஆறுமுகசாமி வாசலுக்கு முன்புறமாகத் தீர்த்தக் கேணியொன்றினை (திருக்குளம்) அமைத்துக் கொடுத்தனர். திரு. தம்பர் காசிப்பிள்ளை நடராசா அவர்களின் மருமகன் திரு. இராமக்கிருஷ்ணராஜா அவர்கள் இத்திருப்பணியினைப் பொறுப்பேற்று மெய்வருத்தம் பாராது கருமமே கண்ணாயிருந்து நிறைவு செய்து வைத்தார்.

*எல்லாம் திக்கரை முருகனின் திருவருளே.*

# கண்ணதாசன் பாடல்களில் முருகன்

பேராசிரியர் இரா. மோகன்
ஒப்பிலக்கியத் துறைத் தலைவர்
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்



'திரை இசைக் கம்பர்', 'தாடி இல்லாத தாகூர்', 'மீசை இல்லாத பாரதி', 'வார்த்தைக்கு ருசி தந்த வரகவி', என்றெல்லாம் போற்றப்படும் கண்ணதாசன், தமிழ்க்கவிதை வானில் பாரதி, பாரதிதாசனைத் தொடர்ந்து பேரொளி வீசித் திகழும் கவிஞர். அவரது திரையிசைப் பாடல்களில் இடம் பெற்றிருக்கும் முருகனைப் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

### முருகன் என்றால் அழகன்

முருகன் என்றால் அழகு. அழகு என்றால் முருகன். 'முருகன் அல்லது அழகு' என்ற ஒரு தலைப்பில் தனி ஒரு நூலையே படைத்துள்ளார். தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவரைப்போன்று கண்ணதாசனும் முருகப் பெருமானின் அழகில் ஈடுபட்டுப் பாடியுள்ளார்.

'அழகனிவன் முருகன் எனும் இனிய பெயர் கொண்டான்'

என்பது கவிஞரின் இரத்தினச் சுருக்கமான வாக்கு.

சொல்லச் சொல்ல இனிக்குதடா - முருகா
உள்ளமெல்லாம் உன்பெயரை'

எனப் பாடி உருகும் கவிஞர்.

'முருகனென்றால் அழகனென்று தமிழ்மொழி கூறும்
அழகன் எந்தன் குமரனென்று மனமொழி கூறும்'

என்று முத்தாய்பாய்க் கூறி மகிழ்கின்றார்.

அழகுக்கு அடுத்து முருகப்பெருமானின் கருணைத் திறம் கவிஞர் கண்ணதாசனைப் பெரிதும் ஈர்க்கின்றது. 'அஞ்சல்' என்று அணைத்து உயிர்களுக்கும் ஆறுதல் கூறி நிற்கும் முருகப் பெருமானை - 'யாமிருக்கப் பயமேன்?' என்று கேட்டு அனைவர்க்கும் தைரியம் தந்து நிற்கும் முருகப் பெருமானை - கவிஞர் கண்ணதாசன் தம் திரை இசைப் பாடல்களில் பல இடங்களில் போற்றிப் பாடியுள்ளார்.

கல்லாத பேதையரும் கற்றவரும் ஒன்றாகி
கைதொழுது பாடும் முருகா!
கல்லாக நின்றாலும் கனியாகக் கனிகின்ற
கருணை வடிவான முருகா

என்று கந்தன் கருணை திரைப்படத்திற்காக எழுதிய பாடல் ஒன்றில் கண்ணதாசன் முருகப் பெருமானைக் கனியாகக் காண்கின்ற கருணை வடிவமாகவே - அருள் வடிவமாகவே - காண்கிறார். முத்தமிழ் செப்பிடும் தத்துவ சக்தியைப் பருகி உருகுகின்றார்.

கந்தனின் கருணையைக் குறித்துக் கவிஞர் முத்தாய்ப்பாகப் பாடியுள்ள ஓர் இடமுண்டு. கந்தன் தன்னைத் தொழுத கைக்குத் துணையிருந்து சுகம் வளர்ப்பான் என்பதிலே கூட அத்தனைச் சிறப்பில்லை. அடியவர்களின் நிழலைக் கூடத் தொடர்ந்து வந்து துணையிருக்கின்றான் - அருள் பாலிக்கின்றான் - என்று பாடுவதிலேதான் கவிஞர் கண்ணதாசனின் முத்திரை பதிந்துள்ளது.

தொழுத கைக்குத் துணையிருந்து
சுகம் வளர்க்கும் கந்தையா - எங்கள்
நிழலைக் கூடத் தொடர்ந்து வந்து
துணையிருக்கும் வேலைய்யா

என்பது கவிஞர், கந்தனின் கருணைத் திறத்திற்குச் சூட்டி மகிழும் புகழாரம் ஆகும்.

**ஆறுமுகங்களின் இயல்புகள்**

முருகப் பெருமானின் ஆறு முகங்களின் இயல்புகளைக் குறித்து நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் பாடியிருக்கும் பகுதி அருமையில் எளிய அழகு வாய்ந்ததாகும். அப் பகுதியை நினைவூட்டும் வகையில் கண்ணதாசன் முருகப்பெருமானுடைய ஆறுமுகங்களின் இயல்புகளைக் குறித்துத் தம் திரையிசைப் பாடல்களில் இரு இடங்களில் பாடியுள்ளார்.

தாமரையில் பூத்துவந்த தங்கமுகம் ஒன்று
தண்ணிலவின் சாறெடுத்து வார்த்த முகம் ஒன்று
பால்மணமும் பூமணமும் படிந்த முகமொன்று
பாவலர்க்குப் பாடம் தரும் பளிங்கு முகம் ஒன்று
வேல்வடிவில் கண்ணிரண்டும் விளங்குமுகம் ஒன்று
வெள்ளிரதம் போலவரும் பிள்ளைமுகம் ஒன்று

என வரும் பகுதி கந்தன் கருணை திரைப்படத்திற்காகக் கவிஞர் எழுதிய பாடல் ஒன்றில் இடம்பெறுவதாகும். இவ்வரிகளில் தங்க முகம், வார்த்த முகம், படிந்த முகம், பளிங்கு முகம், விளங்கு முகம், பிள்ளை முகம் என முருகப் பெருமானின் முகங்களில் குடிகொண்டிருக்கும் ஒளியையும், தெளிவையும், இளமையையும், எழிலையும் அழகுறப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் கவிஞர். தெய்வம் திரைப்படத்திற்காக எழுதிய பிறிதொரு புகழ் பெற்ற பாடலிலும் முருகப்பெருமானின் ஆறுமுகங்களின் இயல்புகளைக் குறித்து நயமாகப் பாடியுள்ளார். படிப்பவர்கள் நெஞ்சை அள்ளும் பகுதி இதோ

மங்கையரின் குங்குமத்தைக் காக்கும்முகம் ஒன்று
வாடுகின்ற ஏழைகளைக் காணும்முகம் ஒன்று
சஞ்சலத்தில் வந்தவரைத் தாங்கும்முகம் ஒன்று
சாதிமத பேதமின்றிப் பார்க்கும்முகம் ஒன்று
நோய் நொடிகள் தீர்த்து வைக்கும் வண்ணமுகம் ஒன்று
நூறு முகம் காட்டுதம்மா ஆறுமுகம் இங்கு

திருச்செந்தூரின் கடலோரத்தில் செந்தில்நாதன் அரசாங்கம் நடத்தி வருகின்றானாம். குழந்தைகள் பெரியவர்கள் என அனைவரையும் கவர்ந்து இழுக்கும் குமரன் அவன். ஆறுமுகம் இங்கே நூறு முகம் காட்டுகிறதாம்!

ஆறுமுகம், நூறுமுகம் எனும் சுவையான சொல் விளையாட்டு ஒன்றை முன்னைய பாடலில் நடத்திய கவிஞர் குமார சம்பவம் திரைப் படத்திற்காக ஒரு பாடலில் பிறிதொரு நயமான சொற்சிலம்பத்தினைக் கையாளுகிறார். நாம் வாழ்க்கையிலே ஏறுமுகம் காண வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் தெரியுமா? இதோ கவிஞரே கூறுகின்றார். திருச்செந்தூரில் குடிகொண்டிருக்கும் ஆறுமுகத்தினை ஒருமுறை கண்டால் போதுமாம்.

ஆறுமுகம் அன்பு கூறுமுகம் - அன்றி
வேறுமுகம் கண்டதில்லை
ஏறுமுகம் எங்கள் வாழ்க்கையிலே காண
தேடுமுகம் செந்தூர் எல்லை

என்பது கவிஞரின் திட்டவட்டமான கருத்து

### ஆறுபடை வீடு கொண்ட திருமுருகன்

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறு ஆடல், பழமுதிர் சோலை என்பன திருமுருகாற்றுப்படை காட்டும் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகள். கவிஞர் கண்ணதாசன் முருகப்பெருமானின் இவ் ஆறுபடை வீடுகளைக் குறித்துத் தனித்தனியேயும் பாடியுள்ளார். ஒன்றாகச் சேர்த்தும் பாடியுள்ளார். 'ஆறுபடை வீடுகொண்ட திருமுருகா - திருமுருகாற்றுப் படைதனிலே வரு முருகா' எனத் தொடங்கி கந்தன் கருணை திரைப்படத்திற்காகக் கவிஞர் எழுதிய பாடல் இவ்வகையில் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும். முருகப்பெருமான் ஆண்டியின் கோலத்தில் அமர்ந்திருக்கும் பழனி, ஓம் என்னும் மந்திரத்தின் பொருளைத் தந்தைக்கு உபதேசம் செய்த சுவாமிமலை, சூரன் உயிர் கிழித்துக் கோயில் கொண்டு அமர்ந்த திருச்செந்தூர், தெய்வானையுடன் திருமணக் கோலத்தில் காட்சியளிக்கும் திருப்பரங் குன்றம், வள்ளி எனும் தெள்ளு தமிழ்க் குறத்தியை மணந்து காவல் புரியும் திருத்தணிகை மலை, வள்ளி, தெய்வயானை இருவருடனும் அமர்ந்து காட்சியும் கருணையும் தரும் பழமுதிர் சோலை என்பன கவிஞர் காட்டும் முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் ஆகும்.

ஆறுபடை வீடுகளுள் நான்கினை ஒன்றிணைத்துக் கவிஞர் பாடியுள்ள ஓர் இடம் அவரது கவி வண்ணத்திற்குக் கட்டியம் கூறுவதாகும்.

திருத்தணிகை மலைத் திருநீறினை நெற்றியில்
தாங்கி வந்தோம் வேலா - அந்தத்
தகப்பன் சுவாமி மலையில் சந்தனம்
வாங்கி வந்தோம் வேலா!
செந்தூரக் குங்குமம் அள்ளி யெடுத்து
சேர்த்து வந்தோம் வேலா!
திருப் பரங் குன்றத்துச் சரவணப் பொய்கையில்
குளித்து வந்தோம் வேலா!

திருத்தணிகை மலைத் திருநீறு, தகப்பன் சுவாமி மலைச் சந்தனம், திருச்செந்தூர்க் குங்குமம், திருப்பரங்குன்றத்துச் சரவணப் பொய்கைக் குளியல் - அடடா என்ன அருமையான கூட்டு! அற்புதமான கலவை!

## காதல் கவிதைகளில் கந்தவேள்

'கண்ணதாசனே கண்ணதாசனே வந்துவிடு என் காதல் கவிதையின் வரிகளைக் கொஞ்சம் திருத்திக் கொடு' என்று பாடினார் இன்றைய திரையிசைக் கவிஞர் ஒருவர். அந்த அளவிற்குக் காதல் கவிதைகளில் கண்ணதாசன் முத்திரை அழுத்தமாகப் பதித்திருந்தது. இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

கவிஞர் கண்ணதாசன் காதல் கவிதைகளில் ஆங்காங்கே முருகப் பெருமானின் வருகை அல்லது சுட்டு இடம் பெறுவது உண்டு. இவ்வகையில் சிறப்பாகக் குறிக்கத் தக்க இடங்கள் வருமாறு'

அந்தச் சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி - நான்
சேரும் நாள் பார்க்கச் சொல்லடி!
வேறு எவரோடும் நான் பேச வார்த்தை ஏதடி?
பெண்ணெனப் பூமியில் பிறந்த பின்னாலே
வேலை வணங்காமல் வேறென்ன வேலை?

மனம் படைத்தேன் உன்னை நினைப்பதற்கு - நான்
வடிவெடுத்தேன் உன்னை மணப்பதற்கு!
செவ்வேள் எனநீ பெயர் கொண்டாய்
சொல்வேல் கொண்டுநீ தமிழ் வென்றாய்
கைவேல் கொண்டுநீ பகை வென்றாய்
கண்வேல் கொண்டுநீ எனை வென்றாய்

சரவணப் பொய்கையில் நீராடி துணை
தந்தருள் என்றேன் முருகனிடம்
இருகரம் நீட்டி வரம் கேட்டேன் - அந்த
மன்னவன் இன்னருள் மலர் தந்தான்
அவனிடம் சொன்னேன் என் அஞ்சுதலை அந்த
அண்ணலே தந்து வைச்சான் ஆறுதலை

வேலை வணங்காமல் வேறென்ன வேலை? செவ்வேள் - சொல்வேல், அஞ்சுதலை - ஆறுதலை - கவிஞர் இங்கே கையாண்டிருக்கும் சொல்லாடல்கள் சுவை மலிந்தவைகளாகும்.

## முருகனைத் தேடிவரும் காவடிகள்

திருச்செந்தூரில் போர் புரிந்து சினமெல்லாம் தீர்ந்த கந்தன், திருத்தணியில் கோயில் கொண்டானாம். அவன் பக்தர்கள் எல்லாம் காவடி தூக்கி வந்தனராம். தணிகை வேலவன் சந்நிதி தேடி வரிசை வரிசை எனப் பக்தர்களின் அழகுக் காவடிகள் வருகின்ற

காட்சி கொள்ளை இன்பம் குலவிடும் காட்சியாகும். கொட்டு மேளம் கொட்டிக்கொண்டு முன்னும் பின்னும் ஆடிக்கொண்டு, ஆணும் பெண்ணும் பாடிக்கொண்டு கதிர்வேல் முருகனின் சந்நிதியைத் தேடிவரும் பல்வேறு காவடிகளைக் குறித்துக் கவிஞர் கண்ணதாசன் தெய்வம் திரைப்படத்திற்காக எழுதிய பாடலொன்றில் நிரல்படப் பாடியுள்ளார்

பால் காவடிகள் பழக் காவடிகள்
புஷ்பக் காவடிகள் மச்சக் காவடிகள்
பன்னீர்க் காவடிகள் சேவற் காவடிகள்
சர்ப்பக் காவடிகள் தீர்த்தக் காவடிகள்

அடைவோம் கந்தன் சேவடி - என ஆசை கொண்டு - இங்ஙனம் அடியவர்கள் எடுக்கும் அழகுக் காவடிகள் தான் எத்தனை! எத்தனை!.

**வேலும் மயிலும்**

முருகப் பெருமானின் வேலையும், மயிலையும் குறித்து வேல் விருத்தமும், மயில் விருத்தமும் பாடிப் பரவசம் கொண்டார் வாக்கிற்கோர் அருணகிரி. அவரை அடியொற்றிக் கவிஞர் கண்ணதாசனும் ஒல்லும் வகையெல்லாம் தம் திரை இசைப் பாடல்களில் முருகப் பெருமானின் வேலையும் மயிலையும் குறித்துப் பாடிப் பரவியுள்ளார். சுருங்கக் கூறின் அவரது பார்வையில் தன்னை நினைப்போர்க்குத், துதிப்போர்க்குத் துணை நிற்கும் முருகப் பெருமானின் வேல்!. அவர் பாடலில் -

வெற்றிவேல்! வீரவேல்! சுற்றி வந்த பகைவர் தம்மை
தோள் நடுங்க வைத்த எங்கள் ஞானசக்திவேல்!
ஆதிசக்தி அன்னை தந்த ஞானவேல்!
அசுரர் தம்மை அஞ்சவைத்த வீரவேல்!
மோதி அந்தக் குன்றழித்த சக்திவேல்!
மூவர்தேவர் வாழ்த்த வந்த வெற்றிவேல்!
தெய்வம் உண்டு தெய்வம் உண்டு
என்று சொல்லும் வெற்றிவேல்!



கவிஞர் கண்ணதாசன்

என்று எய்த பின்பும் கையில் வந்து நிற்கும் வேலினை - தெய்வபக்தி உள்ளவர்க்குக் கைகொடுக்கும் வீரவேலினை வியந்து பாடுகிறார் கவிஞர்.

'சிங்கத்துக்கு வாலுடா, சிறுத்தைக்குக் காலுடா, ஆறுமுகன் வேலுடா, என வேலின் வீரத்தைக் குறித்துக் கவிஞர் பாடியுள்ள பிறிதோரிடமும் இங்கே நினைவு கூரத்தக்கது.

தெய்வத் திருமகள் படத்திற்காக எழுதிய பாடல் ஒன்றில் முருகப் பெருமானின் வேலையும் மயிலையும் இணைத்துப் பாடியுள்ளார் கவிஞர். 'வேலிருக்கு வினையில்லை, மயிலிருக்கு

பயமில்லை, வேலவனே நீயிருக்க ஏழைகட்குத் துயரில்லை' என்பது கவிஞரின் முடிந்த முடிவு.

**தமிழ்ப்பால் கொடுத்த தமிழ் முருகன்**

ஆதிபராசக்தி திரைப்படத்திற்காக எழுதிய பாடல் ஒன்றில் -

தாய்ப்பால் கொடுத்தாள் பராசக்தி தனிக்கருணை
தமிழ்ப்பால் கொடுத்தான் தமிழ் முருகன் - வாய்ப்பால் யான்
பாடும் பழந்தமிழில் பாடத் தொடங்குகிறேன்
ஆடும் மயில் வேலன் அருள்

எனத் தாய்ப்பால் கொடுத்தவளாகப் பராசக்தியையும், தமிழ்ப்பால் கொடுப்பவனாக முருகனையும் பாடிப் பரவுகின்றார் கவிஞர். அம்மை தந்தது ஞானப் பால் என்றால் அவளது அருமைக் குமரன் தருவது தமிழ்ப் பாலாம்! என்ன அருமை! பல் முளைக்கு முன்னே எனக்குக் கவிதை தந்தான்! என்றும், கலை ஞானக்கண் திறந்து வைத்துத் தமிழும் தந்தான்! என்றும், அந்தக் கந்தனவன் திருச்சரணம் தந்தான்! என்றும், கந்தன் வந்தான் கவிதை தந்தான்! என்றும் அதே பாடலில் நெக்குருகிப் பாடுகின்றார் கவிஞர்.

**ஏழு பிறப்பிலும் உன்னை எட்டுவேன்**

கோடிகள் குவிந்தாலும் கோமகனை மறவேன்
நாடிஎன் வினைதீர நான்வருவேன்
அஞ்சுதல் நிலைமாறி ஆறுதல் உருவாகி
ஏழுபிறப்பிலும் உன்னை எட்டுவேன்

என்பது மருதமலை மாமணியிடம் ஒரு திரைப்பாடல் வாயிலாக கவிஞர் விடுக்கும் உருக்கமான, உறுதியான, உண்மையான வேண்டுகோள். அவ் வேண்டுகோளின் வண்ணம் நாமும் வண்ணத் தமிழ்க் குமரனை மறவாமல் நம் வினை தீர நாடிச் செல்வோம். அஞ்சுதல் நிலைமாறி ஆறுதல் உருவாகி ஏழு பிறப்பிலும் சக்தித் திருமகன் முத்துக் குமரனை எட்டுவோம், வாழ்வில் ஏற்றம் பெறுவோம்.




# MANOJ
## Express Services

***The Finest Express Service in the Field***

☆

**திக்கரை முருகா**

அல்லும் பகலும் உனை நினைத்தேன்
ஐயா, அன்றும் இன்றும்
உன் நாமம் என் நாவில்
நித்திரையிலும் வந்தாய் ஐயா!
சிந்தையிலும் உனை மறவேன் ஐயா!

☆

***67/A, Wolfendhal Street,***
***Colombo - 13,***
***Sri Lanka.***

*Tel : 2390128*
*Fax : 2399650*
*Mobile : 0777-517019*
*E-mail : manojtours@yahoo.com*



சிற்பக் கலைஞனின் கைவண்ணத்தில் உருவாகும் கோபுரச் சிலைகள்



கோபுரத் திருப்பணி வேலைகளைச் சிறப்புற நிறைவேற்றித் தந்து பிரியாவிடை பெறும் இந்தியச் சிற்பாசிரியர்கள் ஸ்தபதி அருட்கலைத் திலகம் அராலியூர் S. S. மகேஸ்வரனுடன்



கோபுரமமைக்கும் முன் இருந்த கோயில் முன்பக்கத் தோற்றம்



*01.06.2003 அன்று நடைபெற்ற இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவின் ஆரம்பக் கிரியைகளில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் கௌரவ தியாகராசா மகேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.*

# ஆறு(தல்) படை வீடுகள்

முருகனுக்குத் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத்தணி), பழமுதிர்ச்சோலை ஆகிய ஆறு தலங்கள் சிறப்புக்குரியதாக இருப்பதால் ஆறுபடை வீடுகள் என்று பெயர் வந்தது. அது மட்டுமல்ல, இத்தலங்கள் மனிதனுக்கு ஆறுதல்தரும் தலங்களாக இருப்பதாலும் இப்பெயர் ஏற்பட்டது.

ஒரு காலத்தில் இத்தலங்களுக்கு வருகை தரும்படி ஆற்றுப்படுத்த (பகை நீக்க) நக்கீரர் போன்ற புலவர்கள் முயற்சி எடுத்தனர். எனவே இத்தலங்கள் ஆற்றுப்படை வீடுகள் ஆகி பின்னர் ஆறுபடை வீடுகள் ஆனவை எனவும் கூறுவர்.

முருகன் திருச்செந்தூரில் படைகளுடன் தங்கியதால் படைவீடு எனப் பெயர் வந்ததாகவும் கூறப்பட்டு வருவதுண்டு.

# அலைவாயா? மலைவாயா?

திருச்செந்தூர் முருகன் கோயில் அலைபாயும் கடலோரம் இருந்தாலும் ஒரு காலத்தில் இங்கு மலை இருந்திருக்க வேண்டும் என்றே கருதப்படுகிறது. சந்தன மரக் காடுகள் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

இப்பகுதி அடிக்கடி கடலால் மூழ்கடிக்கப்பட்டதாகவும், அதன் பிறகு பாலமுருகனை நிறுவி கடலை அடக்கியதாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

இது ஒருபுறம் இருக்க அதிசயம் ஒன்றும் இத்தலத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. அதாவது ஆற்றுப்படைகளில் ஐந்து படைவீடுகள் மலைகளில் இருக்க, திருச்செந்தூர் மட்டும் கடலோரம் இருப்பது அதிசயம் தானே!

# திருவாசி

இந்துக் கோயில்களில் உற்சவ மூர்த்தியை திருவீதி உலா கொண்டு வருவார்கள். அவருக்குப் பின்புறம் ஓர் அழகான வளைவு இருக்கும். அது மரம் அல்லது உலோகத்தாலானது. அதில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். இதன் நடுவில் (மேல் உச்சியில்) யாளி அல்லது ராட்சஸனின் வடிவாக பயங்கர கண்களும், நீண்டு தொங்கிய நாக்குமாக ஓர் உருவம் இருக்கும். இது திருஷ்டிக்கான அடையாளம் என்று கூறப்படுகிறது.



இந்த வளைவை சைவக் கோயில்களில் திருஆட்சி என்று கூறுவர். இதுவே மருவி 'திருவாசி' என்று ஆயிற்று. திருவாசியின் இரண்டு பக்க நடுப்பகுதியில் அன்னம் அல்லது மயில் உருவம் காணப்படும்

இறைவன் தம்மை ஆள்வதை உணரவேண்டும் என்பதற்காகத்தான் விழாக் காலங்களில் திருவாசி இல்லாமல் இறைவன் வீதி உலா வருவதில்லை.

திருவாசி இல்லாமல் இறைவன் வீதி உலா வருவது, பருஷா மிருக வாகனத்திலும் பூதம் பூதகி வாகனத்திலும் மட்டும் தான்.

குமுதம்: 'பக்தி' பத்திரிகையிலிருந்து

# வேல் தத்துவம்

முருகனின் கையிலுள்ள வேல் கூர்மையாகவும், அகன்றும், ஆழ்ந்தும் இருக்கிறது. மனிதனின் அறிவு கூர்மையாக இருக்கவேண்டும், மனம் அகன்று இருக்க வேண்டும், சிந்தனை ஆழ்ந்து இருக்கவேண்டும் என்பதையே வேல் தத்துவம் சொல்கிறது. இதை ஞானவேல் என்பர். இந்த வேல் யாரையும் குத்துவதற்காக அல்ல. முருகன் சூரனைக் கொல்லவில்லை. அவர் குத்துவது போல் காண்பிக்கப்படுவது அறியாமையின் செயல்.

பத்மாசுரனின் சகோதரனான சிங்கமுகாசுரனை அடக்கி அவனைக் கொல்லாமல் தன் அன்னையான காளிக்கு வாகனமாகக் கொடுத்தவர் முருகன்.

பத்மாசுரனை மயிலாகவும், சேவலாகவும் மாற்றித் தன் வாகனமாகவும், கொடியாகவும் ஆட்கொண்டார். பகைவனை அழிக்காதே, பகைமையை மட்டும் அழி என்று உலகம் முழுமைக்கும் பொதுவான தத்துவத்தை சூரசம்காரம் போதிக்கிறது.

# அவதாரம் என்றால் என்ன?

வைகாசி விசாகம் முருகப் பெருமான் அவதரித்த திருநாளாகும். 'அவதாரம்' என்ற சொல்லிற்கு கீழே இறங்கி வருதல் என்பது பொருள். அதர்மச் செயல்கள் தலைதூக்கி தர்மம் நிலை தடுமாறும் போது இறைவன் ஏதோ ஓர் உருவில் தன் இருப்பிடத்திலிருந்து கீழே இறங்கி உலகில் பிறப்பதையே அவதாரம் என்கிறோம்.

# அஷ்ட பந்தனம்

ஆலயங்களில் வைக்கப்படும் சிலைகள் ஆடாமல் நிலையாக இருக்க பீடத்தையும், படிமத்தின் அடிப்பகுதியையும் பிரியாமல் இணைக்க உபயோகிக்கப்படும் கூட்டு மருந்துப் பொருள்களே அஷ்டபந்தனமாகும். இப்படி அஷ்டபந்தன பூஜை செய்யப்பட்டதும் சிலைகள் சக்தி பெற்ற நிலையில் அவை விக்கிரகங்கள் என அழைக்கப்படுகின்றன.

# ஆறுமுகனும் ஆயுதங்களும்

**கலாநிதி எஸ். பி. சபாரத்தின சிவாச்சாரியார்**

கருணை மேருவாகவும், கருணைக் கடலாகவும், கருணை மேகமாகவும் விளங்கும் கந்தப் பெருமான், கடுமையும், கொடுமையுமான ஆயுதங்களைக் கரங்களில் ஏந்திக் காட்சி அளிக்கலாமா?

பகுத்துப் பகுத்துப் பார்க்கும் அறிவாளிகள் இவ்வாறு கேட்ட வண்ணம் உள்ளனர்.

ஆண்டவனின் திருக்கரங்களில் உள்ள ஆயுதங்களைப் பற்றிய தத்துவ நுட்பங்களை அறிந்து கொள்வது அடியார்களின் கடமையாகும்.

ஆண்டவனின் திருக் கோயில்கள் பல. அம்பிகையின் திருக் கோயில்கள் பல. ஒவ்வொரு திருவடிவமும் சிற்சில ஆயதங்களையோ, கரும்புவில், மலர்ச்செண்டு முதலானவற்றையோ தாங்கி இருப்பதுபோல் தான் காட்சி அளிக்கும்.

இந்த ஆயுதங்களை நாம் கையாளும் ஆயுதங்களைப்போல் வெறும் சடப் பொருளாகக் கருதிவிடக் கூடாது. அவ்வாறு கருதுதல் திருக்கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் தெய்வ மூர்த்திகளைத் தெய்வங்களாகவே உணராமல் அவற்றை வெறும் சிலை மூர்த்தங்களாக – கற்பதுமைகளாக – கருதுவதற்கே ஒப்பாகும். அவ்வாறு கருதுதல் பெரும் பிழை, தெய்வக் குற்றம்.

குமரப் பெருமானுக்கு சிவபெருமான் ஆயுதங்களை அளிக்கிறார். அவ்வாறு அளிக்கப்படும் ஆயுதங்கள் சடப் பொருள்கள் அல்ல. அவை ருத்திர கணங்கள்.

அருத்திகொள் குமரன் இணையசொல் வினவி
அப்பணி புரிகுவன் என்னப்
புரத்தினை அட்ட கண்ணுதல் பின்னர்ப்
பொள்ளென உள்ள மேற் பதினோர்
உருத்திரர் தமையும் உன்னலும் அன்னோர்
உற்றிட இவன் கையிற் படையாய்
இருத்திர் என் றவரைப் பல படையாக்கி
ஈத்தனன் எம்பிரான் கரத்தில்
பொன்திகழ் சடிலத்து அண்ணல்தன் பெயரும்
பொருவிலா உருவமும் தொன்னாள்
நன்றுபெற் றுடைய உருத்திர கணத்தோர்
நவிலரும் தோமரம் கொடிவாள்
வன்திறல் குலிசம் பகழிஅங் குசமும்
மணிமலர்ப் பங்கயம் தண்டம்
வெண்திறல் மழுவும் ஆகிவீற்றிருந்தார்
விறல்மிகும் அறுமுகன் கரத்தில்

\- கந்தபுராணம்

என்று பாடுகிறார் கச்சியப்ப சிவாச்சாரியார்.

தோமரம், கொடி, வாள், குலிசம், பகழி, அங்குசம், மணி, அக்கமணி, தாமரைப்பூ, தண்டம், மழு (11) - இவைகளே ருத்திரர்களின் வடிவங்களான பதினொரு ஆயுதங்கள். பதினொரு ஆயுதங்களை அளித்த பிறகு, படைகளுக்கெல்லாம் நாயகமாகவும், சக்கரவர்த்தியாகவும் விளங்கும் வேலாயுதத்தை சிவபெருமான் வழங்குகின்றார்.

ஆயுதன் பின்னர் ஏவில் மூ தண்டத்து
ஐம்பெரும் பூதமும் அடுவது
ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது
ஏவல்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிரும் திறலும் வரங்களும் சிந்தி
முன்னுயிர் உண்பது எப் படைக்கும்
நாயகம் ஆவது ஒருதனிச் சுடர்வேல்
நல்கியே மதவை கைக்கொடுத்தான்

- கந்தபுராணம்

எப்படைக்கும் நாயகமான வேலாயுதம், உண்மையில் சுப்பிரமணியப் பெருமானின் ஆத்ம சொரூபமே.

குமார தந்திரம் வேலாயுதத்தின் தத்துவ நுட்பத்தைப் பின்வருமாறு கூறுகிறது:

ஆதி சக்தியினின்று தோன்றியதாகிய சக்தி ஆயுதமாகிய வேல் அனைத்து உலகங்களாலும் போற்றப்படுவது. அது மூன்று பத்திரங்களை (இலைகளை) உடையதாக அறியவேண்டும். மேலே உள்ள பத்திரம் - இச்சா சக்தி. நடுவில் உள்ள பத்திரம் - ஞானசக்தி. கீழே உள்ள பத்திரம் கிரியாசக்தி.

இந்த வாக்கியத்தால் புலனாவது என்ன? வேலாயுதம் உலகில் காணப்படும் அல்லது கையாளப்படும் சடப்பொருளான வேல் அன்று. இச்சை, ஞானம், கிரியை எனப்படும் மூன்று சக்திகளின் சமஷ்டி ரூபமே சண்முகப் பரமனின் வேலாயுதம் என்பது.

அது வெறும் ஆயுதமாக இருந்தால் முருகப்பெருமான் அதனோடு உரையாடுவாரா? அல்லது வேலாயுதம்தான் வீரவாகு தேவரிடம் உரையாடுமா? சமுத்திர ராஜனிடம் உரையாடுமா? இப்படி உரையாடல்கள் - உசாவல்கள் - சம்பாஷணைகள் நடந்தனவாக நாம் கந்த புராணத்தால் அறிந்து கொள்கிறோமே!

எனவே அந்த ஆயுத நாயகத்தை உலகோரின் ஆயுதம் போன்று சடப்பொருளாகக் கருதக்கூடாது. இனி ருத்திரர்களின் மாற்று வடிவங்களாகத் திகழும் தோமரம் முதலான ஆயுதங்களின் தத்துவ விளக்கத்தைக் காண்போம்.

இந்த ஆயுதங்களின் உட்பொருளைப் பற்றிப் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தமது 'செக்கர்வேள் செம்மாப்பு' என்னும் நூலில் தெளிவாக விளக்கிக் கூறுகின்றார்.

தோமரம் தூய மாயைத்
தோற்றம் உண்டாமாறு, ஆண்டு
மாமுரண் திளைக்கச் செல்வோர்
வண்மையை உணர்த்தும் வாழ்வால்

தோமரம், கொடி, வாள், குலிசம், பகழி, அங்குசம், மணி, அக்கமணி, தாமரைப்பூ, தண்டம், மழு (11) - இவைகளே ருத்திரர்களின் வடிவங்களான பதினொரு ஆயுதங்கள். பதினொரு ஆயுதங்களை அளித்த பிறகு, படைகளுக்கெல்லாம் நாயகமாகவும், சக்கரவர்த்தியாகவும் விளங்கும் வேலாயுதத்தை சிவபெருமான் வழங்குகின்றார்.

ஆயுதன் பின்னர் ஏவில் மூ தண்டத்து
ஐம்பெரும் பூதமும் அடுவது
ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது
ஏவல்மேல் விடுக்கினும் அவர்தம்
மாயிரும் திறலும் வரங்களும் சிந்தி
முன்னுயிர் உண்பது எப் படைக்கும்
நாயகம் ஆவது ஒருதனிச் சுடர்வேல்
நல்கியே மதவை கைக்கொடுத்தான்

\- கந்தபுராணம்

எப்படைக்கும் நாயகமான வேலாயுதம், உண்மையில் சுப்பிரமணியப் பெருமானின் ஆத்ம சொரூபமே.

குமார தந்திரம் வேலாயுதத்தின் தத்துவ நுட்பத்தைப் பின்வருமாறு கூறுகிறது:

ஆதி சக்தியினின்று தோன்றியதாகிய சக்தி ஆயுதமாகிய வேல் அனைத்து உலகங்களாலும் போற்றப்படுவது. அது மூன்று பத்திரங்களை (இலைகளை) உடையதாக அறியவேண்டும். மேலே உள்ள பத்திரம் - இச்சா சக்தி. நடுவில் உள்ள பத்திரம் - ஞானசக்தி. கீழே உள்ள பத்திரம் கிரியாசக்தி.

இந்த வாக்கியத்தால் புலனாவது என்ன? வேலாயுதம் உலகில் காணப்படும் அல்லது கையாளப்படும் சடப்பொருளான வேல் அன்று. இச்சை, ஞானம், கிரியை எனப்படும் மூன்று சக்திகளின் சமஷ்டி ரூபமே சண்முகப் பரமனின் வேலாயுதம் என்பது.

அது வெறும் ஆயுதமாக இருந்தால் முருகப்பெருமான் அதனோடு உரையாடுவாரா? அல்லது வேலாயுதம்தான் வீரவாகு தேவரிடம் உரையாடுமா? சமுத்திர ராஜனிடம் உரையாடுமா? இப்படி உரையாடல்கள் - உசாவல்கள் - சம்பாஷணைகள் நடந்தனவாக நாம் கந்த புராணத்தால் அறிந்து கொள்கிறோமே!

எனவே அந்த ஆயுத நாயகத்தை உலகோரின் ஆயுதம் போன்று சடப்பொருளாகக் கருதக்கூடாது. இனி ருத்திரர்களின் மாற்று வடிவங்களாகத் திகழும் தோமரம் முதலான ஆயுதங்களின் தத்துவ விளக்கத்தைக் காண்போம்.

இந்த ஆயுதங்களின் உட்பொருளைப் பற்றிப் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தமது 'செக்கர்வேள் செம்மாப்பு' என்னும் நூலில் தெளிவாக விளக்கிக் கூறுகின்றார்.

தோமரம் தூய மாயைத்
தோற்றம் உண்டாமாறு, ஆண்டு
மாமுரண் திளைக்கச் செல்வோர்
வண்மையை உணர்த்தும் வாழ்வால்

# முருகனும் ஆற்றுப் படையும்

முனைவர் கி. இராசா
பாரதிதாசன் பல்கலைக் கழகம்
தமிழியல் துறை - திருச்சி



திருமுருகாற்றுப்படை என்பது முருகப் பெருமானிடத்து அடியவர்களை

ஆற்றுப் படுத்தல் என்று பொருள்படும். அதாவது முருகப் பெருமானின் அருளைப் பெறும் வழியைக் கூறுதல். 'ஆறு' என்றால் வழி. 'ஆற்றுப் படுத்தல்' என்றால் வழி காட்டுதல்.

முருகப் பெருமானின் அருளைப் பெற்ற ஒருவன், அதனைப் பெறவிரும்பும் மற்ற ஒருவனுக்கு 'முருகப் பெருமான் இன்னின்ன இடங்களில் உறைபவன், அங்கெல்லாம் சென்று நீ இன்னின்னவாறு வழிபட்டால் நான் அருள் பெற்றதுபோல முருகப் பெருமான் உனக்கும் நீ வேண்டியதைத் தருவான்' என்று எடுத்துச் சொல்வதே திருமுருகாற்றுப் படை.

இது மதுரையிலிருந்து தமிழாய்ந்த நக்கீரர் என்ற பெரும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் தமிழ்ச்சங்கத்துத் தலைமைப் புலவர். இறைவன் இயற்றிய பாட்டிலும் குற்றம் கண்டவர். 'இறைவனேயானாலும் குற்றம் குற்றமே' என்று வாதிட்டவர். இவரது காலம் கி. மு. 2ம் நூற்றாண்டாகும்.

இந்நூலில் முருகப் பெருமானின் தோற்றப் பொலிவும், ஆற்றலும், புகழும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. முருகப் பெருமான் ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியுள்ள சிறப்பும், அங்கு அவனை வணங்கும் முறைகளும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. முருகப் பெருமானை வேதியர்கள் யாகத் தீ வளர்த்து வழிபடும் அந்நேரத்தில், மலைவாழ் மக்கள் ஆட்டுக் கடாய் பலியிட்டு அதன் இரத்தத்தில் அரிசியைக் கலந்து தூவி வழிபடும் முறையும் காட்டப்பட்டுள்ளது. இதனால் அவரவர் சடங்கு முறைகளுக்கேற்ப வழிபடும் அனைவர்க்கும் முருகப் பெருமான் வரம் தந்து அருளுவான் என்பதை நக்கீரர் உறுதி செய்கிறார். அவன் வேத வழிபாட்டிற்கும் உரியவன், நாட்டுப்புற மக்கள் வழிபாட்டிற்கும் உரியவன். எந்த முறையில் வழிபட்டாலும் அவன் அடியவர்களுக்காக மனம் இரங்கி அவர்கள் முன் தோன்றி 'அஞ்ச வேண்டாம் உங்கள் குறை நான் அறிவேன்' என்பதுவே இப்பாடலின் மையக் கருத்து.

இப்பாடலில் முருகப் பெருமானுக்கு மயில் ஊர்தியோடு அவன் திருச்செந்தூரில் யானை மீது தோற்றுவான் என்று சொல்லப்பட்டுள்ளது. அவன் சூரபன்மனை அழித்த செய்தியும், ஆறுமுகனாகச் சரவணப் பொய்கையில் தோன்றிய வரலாறும், பிரணவ மந்திரத்திற்குப் பொருள் தெரியாத பிரம்மாவைத் தலையில் குட்டி முருகப் பெருமான் சிறையில் அடைத்ததும், அவனை விடுவிப்பதற்காக முருகப் பெருமானை வேண்டி சிவன், விஷ்ணு, இந்திரன், மற்ற தேவர்கள் திருப்பரங்குன்றத்திற்கு வந்த செய்தியும் கூறப்படுகிறது.

தமது பண்டைக் கடவுளாகிய முருகப் பெருமானைத் தொல் பழங்காலத்திலேயே தமிழர் வழிபட்டனர் என்பதற்கான சான்றுகள் திருநெல்வேலிக்கு (தமிழ்நாடு) அருகிலுள்ள ஆதிச்ச நல்லூர் என்ற ஊரில் கிடைக்கப்பெற்ற அகழ்வாய்வுச் சான்றுகளிலிருந்து தெரிகிறது. அங்கு சிறிய வடிவிலான காவடிகள், வேல் அலகுகள், மயில் வடிவங்கள், பொம்மைகள் ஆகியவை கிடைத்துள்ளன.

ஆதிச்ச நல்லூரில் வாழ்ந்த தமிழர்களின் காலம் கி. மு. 8,000 ஆண்டாகும். அதாவது இன்றைக்குச் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் ஆவர். இத்தகு தொன்மை மிக்க வழிபாடு பற்றி நமக்குத் தமிழில் கிடைக்கும் மிக விரிவான தனித் தமிழ் நூல் திருமுருகாற்றுப்படையாகும்.

**முருகனை எங்கே காணலாம்?**

ஞாயிறு கடலில் தோன்றுவது போல முருகப் பெருமான் மயில்மீது அமர்ந்து காட்சி தருகின்றான். ஞாயிறு இருளைக் கெடுப்பது போல் முருகப் பெருமான் தன்னை வழிபடுபவரின் மாயையைக் கெடுப்பவன். முருகன் தன்னை அடைந்த அடியவரைக் காப்பவன். அறியாமையை நீக்குபவன். பகைவர்களை அழிப்பவன். மேகம் போன்று அடியவர்களுக்கு அருள் வழங்குபவன். தெய்வானையின் கணவன். அவன் கடம்ப மலர்கள் அசைகின்ற மாலையை உடையவன்.

தலைக்கோலத்தை மலர்க்கோலம் செய்த தெய்வ மகளிர், வெற்றியைத்தரும் சேவற்கொடியை வாழ்த்திப் பாடி ஆடுகின்றனர். இவ்வாறு தெய்வ மகளிர் ஆடுகின்ற சோலைகளுடைய மலையில் உறைபவன் முருகப் பெருமான். பேய்கள் துணைங்கக் கூத்து ஆடுமாறு கடலில் புகுந்து சூரபன்மனைக கொன்றவன் அவன். வேலால் அரக்கர்களை அழித்தவன். மாமரத்தை வெட்டியவன். அளந்தறிய முடியாத புகழையும் வெற்றியையும் உடையவன். இத்தகைய சிறப்புடைய முருகப் பெருமானை இறைஞ்சி வணங்கி வழிபட்டால் வீடுபேறு கிடைக்கும். அப்பெருமானை எங்கே காணலாம் என்றால் அவன் பின்வரும் இடங்களில் உறைகின்றான்.

போர்த்தொழில் அற்றுப்போன, திருமகள் உறைகின்ற, மாடங்கள் மலிந்த, வளம்மிக்க மதுரைக்கு மேற்கிலுள்ள சுனைப் பூக்களில் வண்டுகள் ஆரவாரம் செய்கின்ற, சுனைகள் நிறைந்த திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியுள்ளான். திருச்செந்தூரில் யானை மீது எழுந்தருளியுள்ளான். அங்கு அவன் ஆறு முகங்களுடனும் பன்னிரு கரங்களுடனும் காட்சி தருவான்.

திருவாவினன்குடி எனும் பழனியம்பதியில் முனிவர்கள் முருகப் பெருமானைத் தரிசிக்க வருவார்கள். அங்கு கந்தருவர், கந்தருவ மகளிர், இந்திரன், முப்பத்து மூன்று தேவர்கள் உட்பட தேவ கணங்களும் சென்றனர். இவர்கள் தங்கள் குறையைத் தீர்த்துக்கொள்ள ஆகாய வழியில் வந்து காணும்படி தெய்வானையுடன் முருகப் பெருமான் திருவாவினன்குடியில் வீற்றிருப்பான். அதுவுமன்றி, அந்தணர்கள் போற்றி வாழ்த்த 'நமக்குமாராய' எனும் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரிக்க திருவேரகம் எனும் மலையில் எழுந்தருள்வான்.

மேலும் முருகப் பெருமான் குன்றுதோறும் உறைதலுக்கு உரியவன். குறத்தியரோடு குறவர்கள் குரவைக் கூத்து ஆடுகின்ற களத்தில் அவர்கள் மகிழுமாறு அவர்களோடு மலைகள் தோறும் சென்று விளையாடுவான். அவர்கள் ஆட்டுக் கிடாயைப் பலி கொடுத்து சேவற் கொடியை நட்டு வழிபடும் விழாவில் தோன்றுவான். காட்டிலும், சோலையிலும், ஆற்று நடுவிலுள்ள மணல் திட்டுகளிலும், ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும், பல ஊர்களிலும், நாற்சந்தியிலும், மரங்களிலும், மன்றங்களிலும், அம்பலத்திலும், ஆடுகள் கட்டும் இடங்களிலும் அவன் உறைவான்.

இங்கு மட்டுமல்லாமல் குறமகள் செய்யும் சடங்குகளை ஏற்று, அவள் ஆட்டுக் கிடாயைப் பலியிட்டு அதன் இரத்தத்தில் தோய்ந்த அரிசியையும், செவ்வலரிப் பூவையும் தூவி, பாடி வாழ்த்தி வணங்கியபோது அவள்மீது முருகப் பெருமான் தோன்றுவான். இங்கெல்லாம் முருகப் பெருமான் உறைவான் என்றும், அவ்விடங்களில் அவனை எவ்வாறு வழிபடுவார்கள் என்றும் எனக்குத் தெரிந்த அளவில் நான் சொன்னேன்.

இந்த இடங்களிலும், நான் சொல்லாமல் விட்ட பிற இடங்களிலும் முருகப் பெருமானைக் கைதொழுது வணங்கிப் பல புகழ் மொழிகளைச் சொல்லிப் போற்றுவாயாக. இவ்வாறு போற்றி 'முருகப் பெருமானே! உன் திருவடியைப் பெற வந்தேன், அருள் புரிவாயாக!' என்று வேண்டிக் கொள்வாயாக.

உன் வேண்டுதலை நீ சொல்வதற்கு முன்னரே பெருமானின் அருள் பெற்ற கூளிகள் அவனிடம் எடுத்துச் சொல்வார்கள். அவற்றைக் கேட்ட முருகப் பெருமான் தன் பழமையான இளமை மிக்க தெய்வத் தன்மையுடைய திருவுருவுடன் உன் முன் தோன்றி 'அஞ்ச வேண்டாம். உன் வரவினை நான் அறிவேன்' என்று ஆறுதல் சொல்லி உடனே அருள் செய்வான்.

இந்த உலகில் உனக்கு ஒப்பார் யாரும் இல்லை என்று நீ மேம்பட்டு விளங்க உனக்கு வீடுபேறாகிய பரிசில் நல்குவான்.

அவன் அருவிகளும், சோலைகளும், விலங்குகளும் நிறைந்துள்ள பழமுதிர்ச் சோலையிலும் அருட்காட்சி தருவான்.



முருகன் வள்ளி தெய்வானை உடன் வீதிவலம் வரும் காட்சி

# இலக்கிய முருகன்

செந்தமிழ்ச்செல்வர், தமிழாகரர், திருக்குறள் செம்மல்
முனைவர் ச. சாம்பசிவனார்
ஆசிரியர், 'தமிழ் மாருதம்', மதுரை

**முன்னுரை**



'முருக வழிபாடு' மிகமிகத் தொன்மையானது. ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே இவ் வழிபாடு தமிழகத்தில் இருந்து வரும் சிறப்பினது. தமிழ் இலக்கியங்களில் முருகனைக் குறித்த நூல்களும் பாடல்களும் பலப்பல. ஈண்டுச் சிலமட்டும் சுட்டப்படுகின்றன.

**இலக்கிய முருகன்**

'இலக்கிய முருகன்' என்பது, 'இலக்கியங்களில் போற்றப்படும்' முருகன் என்று பொருள்படும். தொல்காப்பியம், திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கந்தபுராணம், கந்தர் கலிவெண்பா, பிள்ளைத்தமிழ், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர் சட்டிகவசம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் குமரகுருநாத சுவாமிகள், வள்ளலார் ஆகியோர் பாடல்கள் என இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகுமளவுக்கு முருகனைக் குறித்த பக்திப் பாடல்கள் எண்ணிறந்தன.

**தொல்காப்பியத்தில்:**

தொல்காப்பியர் என்னும் தமிழ்ச் சான்றோர் எழுதிய நூல் 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம்'. இஃது ஓர் அரிய இலக்கண நூல். கடல்கோளையும் தாண்டி, ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுக்கு மேலாகியும் தமிழர்க்குக் கிடைத்த ஒப்பற்ற கருவூலம்.

நிலத்தை 'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்' என நால்வகையாகப்பாகுபாடு செய்து, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய தெய்வத்தையும் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர்.

'சேயோன் மேய மைவரை உலகம்' (தொல். அகத்திணை: 5)

என்பது இவர் கூற்று. 'முருகன் விரும்பிய, வான்தங்கிய, மலை பொருந்திய உலகம்' என்பது இதன் பொருள்.

முருகனைக் குறித்த ஒன்பது பாடல்களில், முதற்கண் அமைந்திருப்பது, ஐந்தாம் பாடலாகும். இதனைப் பாடியவர் 'கடுவன் இளவெயினார்'. 'பாயிரும் பனிக்கடல்' என்று தொடங்கும் இப்பாடலுக்குப் பண்வகுத்தவர் கண்ணன் நாகனார் ஆவர். இதற்குரிய பண்: பாலை

யாழ். 81 அடி கொண்ட நெடும் பாடல் இது. இதிற் சொல்லப்படும் முருகன் பெருமைகளாவன:

'கடலில் உள்ள பாறைகள் தூளாகும்படி 'பிணிமுகம்' என்ற யானைமீது ஏறிப்போய், தன் வேற்படையினால் சூரபத்மனாகிய மாமரத்தை வேருடன் வெட்டி, நாவலந்தீவினுள் (பாரத நாட்டுக்கு நாவலந்தீவு என்பது பழம் பெயர்) வடக்குப் பகுதியில் உள்ள கிரௌஞ்சம் என்ற மலையைப் பிளந்து, அதனிடையே வழியை ஏற்படுத்தியவனே! ஆறு திருமுகங்கள் உடையவனே!

ஆறு தலையுடனும், பன்னிரண்டு தோளுடனும் கதிரவனின் எழுச்சியைப் போன்ற நிற அழகுடனும், தாமரைப் பூவில் தோன்றிய தோற்றத்தை உடையவனே! உலகத்தை அழிக்கும் இறைவனின் மகனே! சால்பு உடையவனே! தலைவா என்றெல்லாம் வேலன் பாடும் வெறிப்பாடலும் உண்டு. இவ் உலகத்துக்கெல்லாம் நீயே தலைவன்! ஆதலால் வேலன் ஏத்தும் அப் பாடல்கள் மெய்யானவை அல்ல. ஆயினும் அங்கே நீ வெளிப்பட்டு அருள் புரிதலால் பொய்யானவையும் அல்ல! அவ்வேலன் ஏத்துவனவற்றுள் ஒன்றாகிய வழி, தலைமைச் சிறப்புடைய உயர் பிறப்பினராதலும், தீவினையால் இழிந்த பிறப்பினராதலும் ஆகியவை, நின் ஆணையின் கண்பட்டது! ஆதலால் அச்சிறப்பு நினக்கு ஒருகாலும் நீங்காது!

நான்முகன் எனப்படும் பிரமதேவன் தேரைச் செலுத்த, வேதமாகிய குதிரைகளைப் பூட்டிய பூமியாகிய தேரில் ஊர்ந்து, நாகபாம்பு நாண்கயிறாகவும், மலை வில்லாகவும் கொண்டு, திரிபுரங்களை ஓர் அம்பினால் அழியும்படி எய்தவன்: தேவரின் அவிர்ப்பாகத்தை உண்டவன் பசிய கண்ணை உடையவன் ஆகிய சிவபெருமான், உமாதேவி ஆகிய இவ்விருவரின் அருளால் சரவணப் பொய்கையில் தாமரைப் பாயலில் உதித்தவன் நீ.

முருகப் பெருமானே! நின்னைப் பெற்ற அந்நாளில், இந்திரன் இகல் மிகுதியால் நின்மீது தன் வச்சிராயுதத்தைக் கொண்டு எறிய, ஆறுவேறு உருவமாயினை! பின் ஒருவன் ஆயினை!

நீ! குழவிப் பருவத்தை உடையாய்! ஆதலால் நீ விளையாடிய போரில், இந்திரன் நின் வெறுங்கைக்கே தோற்றதால், இத்தகைய ஆற்றல் கொண்ட இவனே இனி நம் படைக்குத் தலைவன் எனறு எண்ணித் தீக்கடவுள், கோழியை உனக்கு அளித்தான். அவ்வாறே, மற்ற வானவரும், படையாகத்தந்த மறியும் (ஆட்டுக்குட்டி), மயிலும், கோழியும், வில்லும், மரனும், வாளும், ஈட்டியும், கோடரியும், மழுவும், கனலியும் (நெருப்பு), மாலையும், மணியும் ஆகியவற்றைப் பன்னிரு திருக்கைகளிலும் கொண்டு, அக்காலத்திலேயே தேவசேனாபதி ஆயினாய். இவ்வாற்றால் நீ இந்த அமரர்க்கு மன்னனான இந்திரனின் புகழ் எல்லையையும் மீறினாய்!

'குறிஞ்சி', என்பது, மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். இந்நிலத்திற்கு உரிய கடவுள்இ 'சேயோன்' எனப்படும் 'முருகன்' ஆவான். எனவே, மிகமிக பழங்காலந்தொட்டே முருகவழிபாடு இருந்துவருவது என்பதற்கு இதுவே சான்று.

'முருகு' என்ற சொல்லுக்கு, 'மணம், இளமை, கடவுள்தன்மை, அழியா அழகு' என்று பொருள். 'இந்நூற்பொருள் அடங்கிய ஒரு சொல்லால் பண்டைத் தமிழர் முழுமுதற் பொருளை அழைத்தது வியக்கத்தக்கது' என்பார் திரு. வி.க. (முருகன் அல்லது அழகு, ப. 9).

மக்கள் வாழ்வு, முதன்முதல் தொடங்கப்பட்டது குறிஞ்சி ஆகிய மலையிலேயே என்பது அறிஞர் கருத்து. இன்றும் தமிழகத்தில், குன்றில் அமர்ந்து குமரன் அருள்பாலித்து வருவது கண்கூடு.

**திருமுருகாற்றுப்படையில்:**

சங்க இலக்கியம், 'எட்டுத்தொகை, பத்துப்பாட்டு' எனும் இருபிரிவினுக்குள் அடங்கும். 'பத்துப்பாட்டு' என்னும் தொகை நூல், பத்து நூல்களைக் கொண்டது. அவற்றில் முதலாவதாக அமைந்திருப்பது, 'திருமுருகாற்றுப்படை'. நக்கீரர் அருளியது. இவர்தம் முழுப்பெயர், 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்பது. இந்நூலே, பத்துப்பாட்டு நூலுக்குக் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது.

'உலகம் உவப்ப' என்று தொடங்கும் நூல் இது. தமிழ்ப் புலவர்களின் கண்களுக்கு 'உலகம்' தான் முதற்கண் தோன்றியது. இது அவர்களின் விரிந்த சிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டு. 'உலகெலாம்' என்று பெரிய புராணம் தொடங்குகின்றது. 'உலகம் யாவையும்' என்பது கம்பர் வாக்கு.

'திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானுக்கு உரிய 'திருப்பரங்குன்றம்' முதல் 'பழமுதிர்சோலை' வரையிலான ஆறு படைவீடுகள்பற்றி, நக்கீரர், தெள்ளுற்ற தீந்தமிழில் பாடியுள்ளார். முருகப்பெருமானைக் கண்டு பேறு பெற்றவன் ஒருவன், அங்ஙனம் பெறாத ஒருவனைப்பார்த்து, 'இன்னே பெறுதி நீ முன்னிய வினையே' என்று ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. சைவப் பெருமக்கள் நாளும் பாராயணம் செய்யும் அற்புத நூல் இது.

**பரிபாடலில்:**

'எட்டுத்தொகை' என்ற எட்டு நூல்களில் ஒன்று 'பரிபாடல்'. திருமுருகாற்றுப்படைபோல அத்துணைப்பயிற்சியில்லாதது. இதன்கண் மொத்தம் 22 பாடல்கள்: பாடிய சான்றோரும் பலர். 'செவ்வேள்' குறித்த பாடல்கள் ஒன்பது உள்ளன. அனைத்தும் பண்ணோடு பாடத்தகுந்தவை. ஒவ்வொரு பாடலுக்கும் பண் வகுத்தவர் பெயரும் உள்ளது.

உருளும் மலர்க் கொத்தையுடைய கடம்ப மலர் மாலை அணிந்தவனே! உயிர்களைச் செறுகின்ற தீய நெஞ்சத்தில் சினம் உடையவரும், அறத்திற் சேராத புகழ் இல்லாதவரும் கூடா ஒழுக்கத்தால் அழிந்த தவ விரதத்தினரும், 'இப்பிறப்பின் நுகர்ச்சியே உண்மை, மறுபிறவி இல்லை' என்று கூறும் மடவோருமாகிய இவர்கள் நின் தாள் நிழலை அடையார்! நின் குணத்தை ஏற்றுக்கொண்டோராகிய அறம் கொண்டோரும், வீடுபெறும் குணமுடையோராகிய மாதவரால் வணங்கப்பட்டோரும், நின் தாள் நிழல் அடைவர்! ஆதலால், நின்னை யாம் இரந்து வேண்டுவன, நுகர்பொருள்களும் அவற்றைப் பெறுவதற்குக் காரணமாகிய பொன்னும் அவ்விரண்டாலும் நுகரும் நுகர்ச்சியுமல்ல! எமக்கு வீடு பயக்கும் நின் அருளும், அதனைப் பெற நின்னிடத்தே செய்யும் அன்பும் அவ்விரண்டாலும் வரும் அறமுமாகிய இம் மூன்றையுமே வேண்டுகின்றோம் அருள்புரிவாயாக!

இந் நீண்ட பாட்டின் இறுதி அடிகள் நம் சிந்தனைக்கு உரியன:

......................யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே! (78-81)

**முடிவுரை:**

முருகப்பெருமான்பால் புலவர் வேண்டுவதுபோல, நாமும், 'எம்பெருமானே! நின்பால் வேண்டுவது, வீடு (திருவடிப்பேறு) பயக்கும் நின் அருளும், அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யும் அன்பும் அவ்விரண்டாலும் வரும் அறனும் ஆகிய இம் மூன்று மட்டுமே' என்னும் வேண்டுதலைச் செய்து பிறவிப் பெரும் பயன் எய்துவோமாக!

*——————*

***வாகனங்கள் மூன்று***

*ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் அணுகாதவன் என்பதாலேயே முருகனுக்கு மயில், யானை, ஆடு என மூன்று வாகனங்கள் அமைந்தன.*

# திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ்

**கலாநிதி சுப அண்ணாமலை**

பிள்ளைப் பெருமாள் எனும் பேராளனாக விளங்கும் திருச்செந்தில் முருகப் பெருமானைப் பள்ளமடை எனப் பாயும் அன்புப் பெருக்கினால் அழுதொழுகும் பிள்ளைத் தமிழ் பாடிப் பரவுகின்றார் பகழிக் கூத்தர். அவர் பாடும் பாமாலையில் பக்திச் சுவை நலம் சொட்டும் செய்திகளோடு, யோகம், ஞானம் பற்றிய செய்திகளும் நிரம்பி இருக்கின்றன.

பிள்ளைத் தமிழில் வருகைப் பருவம் என ஒரு பருவம் உண்டு. குழந்தைக்குப் பதின்மூன்றாம் மாதம் நடக்கும் போது அது நடக்கத் தொடங்கியிருக்கும். தளர் நடை நடந்து, தாய்மொழியைப் புரிந்து கொள்ளும் அப்பருவத்தில், தாயாரும், மற்றவர்களும் அதன் அழகைக் காண விரும்பி 'வாடா கண்ணே' என்றோ 'வா அம்மா கண்ணு' என்றோ அழைப்பர். முருகனின் தெய்வ நலஞ்சேர் மழலைப் பேரழகில் மயங்கிய மற்றத் தாய்மார்கள் அவனைச் சீராட்டித், தாலாட்டிப் பாலூட்ட விரும்பி 'முருகா என்னிடம் வா' என அழைப்பதாகப் பகழிக் கூத்தர் பாடுகின்றார். ஓர் அன்பு அன்னையின் பேச்சு, பாட்டாக மலர்கிறது.

முருகா உனக்குப் 'பிள்ளைப் பெருமாள்' என்று பெயர். ஏன் தெரியுமா? கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து அருள் செய்பவன் நீ. அவர், இவர் என்று பார்க்கமாட்டாய். 'எடுப்பார் கைப்பிள்ளை' என்பது பழமொழி அல்லவா? நீ தோற்றத்திலும், அன்பிலும் தான் பிள்ளையே தவிர பேரருளிலும் பேராற்றலிலும் இணையற்றவன். உன் திருப்பெயர்களை சதா சர்வ காலமும் முருகா போற்றி, குமரா போற்றி, கந்தா போற்றி, கடம்பா போற்றி, கார்த்திகேயா போற்றி, சரவணா போற்றி என்று அன்போடு சொல்பவரை உனது திருமலரடி அன்றி வேறு சார்பு இல்லாத அடியவர்களை - இம்மையிலே செல்வ நிறை புகழ் வாழ்வும், மறுமையிலே வீடுபேறும் கொடுத்துக் காப்பாற்ற விரைந்தோடி வருவாய். இவ்வகையில் சிவ பரம்பொருள் நீயேதான். நீ காட்சி கொடுப்பதில் எளியவன். கன வரங்கள் அருளுவதிலோ பெரியவன். ஆதலால் பிள்ளைப் பெருமாள் என்று பெயர் பெற்று விளங்குகிறாய்.

உன்னைச் சேரும் அடியார்களுக்கு அப்படி அருளும் நீ, சேராத பகைவர்களாகிய அசுரர்களை வேரோடு அழித்தாய். சேவற் கொடியை உடைய செந்தில் பெருமானே! தேவர் சிறை மீட்ட செல்வா.

இவ்வாறு அன்னை ஒருத்தி கூப்பிடவும் முருகன் 'ஊஹீம் வரமாட்டேன்' என்றான். அதைப் பக்கத்தில் இருந்து பார்த்த ஒருவர் 'முருகா பாவம். இந்த அன்னை உன் அழகு முகத்தைப் பார்த்து ஆசைப்பட்டு அழைக்கின்றாள். உன்னைப் பலவாறு போற்றி, அப்பா வா வா என்று கெஞ்சுகிறாள் நீ வராமல் பிடிவாதம் பிடிக்கின்றாயே. இது நியாயமா?' என்று கேட்பதாகப் பாடல் தொடர்கிறது.

பேரா தரிக்கும் அடியவர் தம்
பிறப்பை ஒழித்துப் பெரு வாழ்வும்
பேறும் கொடுக்க வரும் பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா

சேரா நிருதர் குலகாலா
சேவற் கொடியாய்த், திருச்செந்தூர்த்
தேவா, தேவர் சிறை மீட்ட
செல்வா, என்று உன் திருமுகத்தைப்

பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து, விருப்புடன்
அப்பா வா வா என்று எனைப் போற்றப்
புரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்

வாரா திருக்க வழக்குண்டோ?
வடிவேல் முருகா, வருகவே
வளரும் பருவக் குரும்பை முலை
வள்ளி கணவா, வருகவே

குழந்தை அழும்போது சந்திரனைக் காட்டி குழந்தை கூப்பிட்டால் குளிர் மதியும் அதனோடு குலவ வரும் என்று வேடிக்கை காட்டி அதன் அழுகையை மாற்றுவர். அந்த வகையில் பிள்ளைத் தமிழில் தோன்றிய பருவம் அம்புலிப் பருவம். சந்திரனிடம் சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கு வகை உபாயங்களைப் பயன்படுத்திப் பேசி அதனைக் குழந்தையோடு விளையாட வரும்படி அழைப்பர் கவிஞர். பகழிக் கூத்தர் தானோபாயத்தைப் பயன்படுத்தி பாடும் அழகிய பாடல் நமக்கு ஞானோபயமாகவும் விளங்குகின்றது. கவிஞர் தான் தாயாக நின்று பேசுகின்றார்.

சந்திரனே! நீ ஒளிமயமானவன் என்று இறுமாந்து இருக்காதே. ஒளியுடல் பெறுவது அவ்வளவு பெரிய காரியம் அல்ல. உன்னைச் சந்திர மண்டலம் என்று கூறுவர். யோகியர் தமது உடம்பிலே அனேக மண்டலங்களை அனுபவத்தில் கொண்டு வந்தவர்கள் என்பது தெரியுமா உனக்கு?

மனிதனின் மனதைப் பிடித்து உலுக்குவது பல விஷயங்களில் உண்டாகும் மோகம். மனமே மோகமண்டலமாகிவிடும். யோகிகள் மோக மண்டலத்தை முற்றாக வெற்றி கொண்டு அறிவு மண்டலத்தை – ஞான மண்டலத்தை – ஞான வாழ்வைத் தொடங்குகிறார்கள். ஞானத்தைப் பெறுவதற்கு மார்க்கமாக யோக சாதனையைத் தொடங்கி உடம்பின் இடுப்புப் பகுதியிலுள்ள மூலாதாரத்தில் தூங்கும் குண்டலினி சக்தியை – கனலை, மூன்றெழச் செய்து, வாசி என்ற பிராணாயமத்தால் அந்தத் தீயை மேலும் எழுப்பி, மணிபூரகம், சுவாதிட்டானம் என்ற ஆதாரச் சக்கரங்களை உடம்பில் உள்ள இடமாகிய சூரிய மண்டலத்தில் செலுத்தி, பின்னர் விசுத்தி என்ற ஆதாரத்தை அனுபவித்து, நெற்றிக்கு நடுவே புருவ மத்தியில் உள்ள ஆக்ஞை என்ற ஆதாரத்தில் குண்டலினியைச் செலுத்துவர். அங்குள்ள சந்திர மண்டலத்தில் உண்டாகும் அமுதைப் பருகுவர். இந்தச் சாதனையால் அவர்களின் உடல் உருகி ஒளி பெறும். யோகி தன்னை ஆத்மா என உணர்ந்து கொள்வதற்கு யோக சாதனையின் வழியான அடையாளம் இது. உயிர் மட்டும் அன்றி உடம்பும் நன்மை அடையும் நெறி இது.

வண்ணம் ஷண்முக சக்கரமாக அமையும் ‘சரவணபவ’ என்னும் ஆறெழுத்து மந்திரத்தை தியானத்தில் வைத்துக் கடைத்தேறுவர். பிரம்ம மண்டலத்தை அடைந்து பேரின்பப் பெருவாழ்வுபெறுவர்

தேவர் சிறைமீட்டுத் தேரில் உலாவந்து வெற்றிவிழாக் கொண்டாடிய வேலவனை, சிறு தேரை – நடைவண்டியை – உருட்டி விளையாடும்படி வேண்டுகின்றார் கவிஞர். முருகனின் தேர் செல்லும் வழி எல்லாம் செந்தமிழ் மணக்கிறதாம். பொதிகை மலை அமைந்த தென்பாண்டிச் சீமை அல்லவா?

பொதிகையிலிருந்து சில்லென வீசும் தென்றல், அந்த மலையில் வளரும் சந்தனச் சோலை, அங்கு உற்பத்தியாகும் பொருநை நதி, அந்த நதி பாய்ந்து வளர்க்கும் செஞ்சொல் நெல், செங்கரும்பு, அக்கரும்பை மெல்லும் எருமையின் வாய், அவற்றை

மேய்க்கும் சிறுவர்களின் வாய்மொழி, இவற்றுடன் தேரோடும் வழி எல்லாம் செந்தமிழ் மணக்கிறது.

முருகன் தமிழ்க் கடவுள் அல்லவா? பொதிகையில் பிறந்த தமிழ், அதன் அழகு குறையாமல் நாடெல்லாம் பரவி, தேரேறும் முருகனுக்குச் சீரேறும் வரவேற்பு அளிப்பதைப் புலவர் கற்பனை செய்கின்றார். புகழிக் கூத்தரின்

அந்தப் பாடல் -

கொந்தவிழ் தடஞ்சாரல் மலயமால் வரை நெடுங்
குடுமியில் வளர்ந்த தெய்வக்
கொழுந்தென்ற லங்கன்றும், ஆடகப் பசு நிறம்
கொண்டு விளையும் பருவரைச்

சந்தன நெடுந்தரு மலர்ப்பொதும்பரும், இயல்
தண்பொருநை மர நதியும்
அந்தண்பொருநை பாயவிளை சாலி நெல்குலையும்
அச்சாலிநெல்குலை படர்ந்து

முந்த விளையும் பருமுளிக் கரும்பும்
பருமுளிக் கரும்பைக் கறித்து
முலைநெறிக்கும் புனிற்று எருமைவாயும், சிறுவர்
மொழியும் பரந்த வழியும்

செந்தமிழ் வளர்க்கும் திருச் செந்தில் வேலனை
சிறு தேர் உருட்டி யருளே
சேவல் பதாகைக் குமார கம்பீரனே
சிறு தேர் உருட்டி யருளே



# முருகனும் தமிழும் அருணகிரிநாதரும்

**முனைவர் சிவ மங்கையர்க்கரசி M.A., M. B.L., Ph.D**
**முதல்வர், தருமபுரம் ஞானாம்பிகை அரசினர்**
**மகளிர் கல்லூரி, மயிலாடுதுறை**



முருகக் கடவுள் தமிழ்க் கடவுள். 'முருகனும் தமிழும் இரண்டல்ல, ஒன்றே' என்பர் அருணகிரிநாதர். 'செந்தமிழ் நூலோன்' என்கிறது முருககீத வேதமான திருப்புகழ். 'முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பேன்' என்று முருகனை அருணகிரியார் கந்தரலங்காரத்தில் போற்றுகிறார். அருணகிரி வாக்கின்படி தமிழ்ப் பித்தனாகிய முருகன் தன்னை தமிழில் வைதவர்களையும் வாழவைக்கிறானாம். முருகன் தமிழருள் தமிழனாகத் தோன்றுகிறான். 'தமிழுக்கு நல்ல தண்டமிழ் முருகன்' என்று பரவுகிறார் அருணகிரியார்.

முருகனின் பெருமை அளவிடமுடியாதது. 'அரிபிரமர் அளப்பரிய பதச் சமயம்' என்கிறார் அருணகிரியார். தமிழோடும், தமிழர் வாழ்வோடும் ஒன்றிவிட்ட தெய்வமாக முருகன் கருதப் படுகிறான். முருகு என்பதற்கு இளமை என்றும், அழகு என்றும், ஆற்றல் என்றும் பல்வேறு பொருள்கள் உள்ளன. சங்க நூல்களினால் முருக வழிபாட்டின் காலத் தொன்மையை உணர முடிகிறது. தொல்காப்பியத்தில் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகச் சேயோன் சுட்டப் படுகிறான். சங்க காலத்திலேயே முருகனுக்குத் தனி இலக்கியம் தோன்றியுள்ளது. சங்க காலத்தில் வளர்ந்தோங்கிய முருக வழிபாட்டின் சிகரத்தைத் திருமுருகாற்றுப்படையில் காண முடிகிறது.

சங்க நூல்களில் முருகன் - வெற்றிவேல்போர்க் கொற்றவை சிறுவ, மலைமகள் மகனே, இழையணி சிறப்பிற் பழையோள் குழவி – என்றெல்லாம் விழிக்கப்பட்டான். சங்கப் பாடல்களில் முருகன் ஆறுமுகங்கொண்ட உருவத்தவனாக விரிந்த நிலையில் காட்டப்பெறவில்லை. வேலன் அல்லது கந்தன், பிற்காலத்திலே கந்தன், கார்த்திகேயன், சுப்பிரமணியன், ஆறுமுகன் என்றெல்லாம் பெயர் பெற்றான். ஆரியரது தந்தைவழி நாகரிகம் தமிழகத்திலே கலந்து கலாச்சாரப் பிணைப்பு ஏற்பட்ட காலத்திலேயே இந்த உருமாற்றம் ஏற்பட்டுவிட்டது. இதனால் ஓரிறைவன் காலந்தோறும் பல்வேறு உருவங்களைப் பெற்றிலங்கச் சமயம் சார்ந்த தத்துவங்களே காரணமாவதைக் காணமுடிகிறது.

பழைய தமிழ் நூல்களில் ஆறுமுகமும், பன்னிரு கைகளும் முருகனுக்குக் காட்டப் பெறவில்லை. திருமுருகாற்றுப்படையிலும், பரிபாடலிலும் காணும் ஆறுமுகக் கடவுளைச் சங்க காலத்தின் முற்பகுதியில் தமிழர்கள் கண்டதில்லை என்றே கருதலாம். சங்ககாலத்து முருகன் இருசெவிகள் நிறையத் தமிழிசையையும், தமிழ்ப் பாடல்களையும் பருகி வளர்ந்தான் என்றால், திருமுருகாற்றுப்படை தோன்றிய காலத்தில் முருகன் பன்னிரண்டு செவிகளாலும் வடநாட்டுப் பண்ணும் தமிழ்ப் பண்பாடும் சங்கமித்து வளர்ந்த முத்தமிழைப் பருகி முதற்கடவுளாக வளர்ந்தோங்கினான் என்று கூறலாம்.

ஆறுமுகங்களின் செயல்களைத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் வர்ணித்ததுபோல் அருணகிரியாரும் வர்ணித்திருக்கிறார். ஆறுமுகங்கள் ஆறுவிதமாகத் தொழிற்பட்டு உலகங்களை எல்லாம் பரிபாலித்துக் கொண்டிருப்பதாக அருணகிரியார் வர்ணித்திருக்கிறார். மனிதத் தன்மையினின்றும் தெய்வத் தன்மையை வேறுபடுத்திக் காட்டுவதற்காக முருகனுக்கு ஆறு தலைகளும் பன்னிரண்டு தோள்களும் கூறப்பட்டுள்ளமை கருதத்தக்கது.

சங்க காலத்திலேயே முருகக் கடவுள் தமிழுடனும், தமிழ்ப் பாட்டுடனும் கலந்துவிட்டான். 'பாடும் பாட்டு அமர்ந்தாயே!' என்று பரிபாடலில் முருகன் அழைக்கப்படுகின்றான். முருகன் என்ற பெயரிலேயே தமிழ் மணம் வீசுகிறது. தமிழ் உணர்ச்சி பொங்குகிறது. இசைத் தமிழும், நாடகத் தமிழும் முருக வழிபாட்டைத் தழுவிச் சங்ககாலத்தில் செழித்து வளர்ந்திருக்க வேண்டும். பழங்கால முருக வழிபாட்டின் முக்கிய அம்சமாகிய 'வெறியாட்டு' கூத்துத் தமிழை, இசைத்தமிழ் வளர்த்து விட்டது என்றால் தவறாகாது. இசைத் தமிழ் வளர்ச்சிக்கு முருக வழிபாடும் வெறியாட்டும் பெருங்காரணமாக இருந்திருக்கக் கூடும். 'குழல் அகவின, யாழ் முரன்றன, முழவு அதிர்ந்தன, முரசு இயம்பின' என்று பட்டினப்பாலை முருக வெறியாட்டை வர்ணிக்கிறது. ஐங்குறுநூறில் வெறிப்பத்து என்பது ஒரு பகுதியாகும்.

'காந்தளத் துடுப்பிற் கவிகுலையன்ன, செறிதொடி முன்கை கூப்பிச் செவ்வேள் வெறியாடு மகளிரொடு செறிய' – எனப் புறநானூறு கூறுகிறது. காந்தள் மலர் போன்ற கைகளால் வெறியாடு மகளிரொடு சேர்ந்து முருகனை வழிபாடு செய்யலாம்.

சங்க காலத்திற்கும் அருணகிரியார் காலத்திற்கும் (பதினைந்தாம் நூற்றாண்டு) இடைப்பட்ட முருக வளர்ச்சி நிலையைத் திருமுருகாற்றுப்படையில் காணலாம். முருகனே பரம்பொருள் என்ற கொள்கையில் அருணகிரியாரும், நக்கீரரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள். ஆறுமுகமான பரம்பொருள் மயிலேறி விளையாடி ஞானம் பேசி (தகப்பன்சாமி), வினைதீர்த்து, அசுர சக்திகளையும், தீயசக்திகளையும் தகர்த்து, காதல்புரிந்து உலகைப் பாதுகாக்கிறது எனப் பாடுகிறார் அருணகிரியார். சரவணப் பொய்கையில் மகளிர் ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்த செய்தி 'அறுவர் பயந்த ஆறமர் செல்வ' என்னும் திருமுருகாற்றுப்படைத் தொடரால் விளக்கப்படுகின்றது. இது தமிழ் மரபு அன்று என்பதும் வடமொழிப் புராணங்களிலிருந்து எடுக்கப்பட்ட செய்தி என்பதும் மனங்கொள்ளல் வேண்டும்.

சரவணப் பொய்கையில் தாய்மார் அறுவரிடம் முருகன் பாலருந்திய செய்தி சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன் ஆலமர் செல்வனின் புதல்வன் என்ற செய்தியும் காணப்படுகிறது. முருகன் பிறப்புப் பற்றிய பரிபாடல், திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் காணப்படுகின்றன. புராணச் செய்திகள் மக்களிடையே சங்ககாலப் பிற்பகுதியில் செல்வாக்குப் பெற்றமையை இதனால் காணலாம்.

தமிழ்க் கடவுள் தாரகாரிக்குச் சேவற்கொடி என்பதைத் திருமுருகாற்றுப்படையில் கோழியோங்கிய வென்றிடு விறற்கொடி என்பர் நக்கீரர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் 'கோழிச்சேவற் கொடியோன் கோட்டமும்' என்பர். முருகனது கொடி கோழி இனத்தைச் சேர்ந்த சேவல் என்பதாகிறது. மேலும் செஞ்சேவற் செங்கையுடைய சண்முகதேவே

எனத் திருப்புகழில் அருணகிரிநாதர் சேவலைச் சண்முகன் தன் கையில் ஏந்தியுள்ளதை சிறப்பித்துப் பாடியுள்ளார். கோழியைத் தன் கையில் தாங்கிய ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும் கொண்ட சண்முகனின் அரிய வடிவம் கோவை மாவட்டம் (உடுமலைப் பேட்டையிலிருந்து பல்லடம் செல்லும் வழியில்) செஞ்சேரிமலை என்ற தலத்தில் மூலவராக உள்ளது.

முருகனைத் தவிர்த்து வேறு ஒரு தெய்வத்தின்பால் மக்கள் ஆற்றுப்படுத்தப் பட்டதாகக் காணப்படுகின்ற குறிப்பு எந்தச் சங்க இலக்கியத்திலும் காணப்படவில்லை. 'முருகாற்றுப்படுத்த' என்ற தொடர் அகநானூற்றில் காணப்படுகின்றது. முருகன்பால் ஆற்றுப்படுத்துகின்ற நிலை வழக்கில் இருந்துள்ளமையைத் திருமுருகாற்றுப்படையில் காணலாம். எண்ணியவற்றை முடிக்கின்ற ஆற்றலுள்ள முருகனின் ஆற்றலை உவமித்துள்ளமை 'முருகு ஒத்தியே முன்னியது முடிதலின்' என்ற புறநானூற்றுத் தொடரால் அறியலாம். சோழன் கரிகாலனின் சீற்றம் முருகனின் சீற்றத்தை ஒத்தது என்பதை 'முருகன் சீற்றத்து உருகெழு குரிசில்' எனப் பெருநர் ஆற்றுப்படை கூறுகிறது.

கடம்ப மலர் சூடிய முருகனைக் குறிஞ்சி மலர் சூடி வழிபாடு செய்வதை, - கார்மலக் குறிஞ்சி சூடி கடம்பின் சீர்மிகு நெடுவேட் பேணி – என்பதால் அறியலாம். கடம்ப மரத்தில் முருகனின் தெய்வத்தன்மை உண்டு என்பதை கடம்பர் நெடுவேளி என்ற தொடர் குறிக்கின்றது.

## முருகன் சிறு தெய்வமா?

மனிதர்மீது ஆவேசித்து வருதல், சிற்றுயிர்ப் பலியை ஏற்றுக்கொள்ளல், திசையைக் காக்கும் தெய்வம் (பெரிய புராணம்), சாபம் கொள்ளல் (திருவிளையாடல்) போன்ற கருத்துக்களால் முருகனைப் பெருந்தெய்வமாகக் கொள்வதில் மாறுபாடு தோன்றலாம். முருகனுக்குக் குறிஞ்சி தவிர மற்ற நிலங்களில் உரிமை இருப்பதாகக் காணோம். முருகனுக்குப் பிள்ளைத் தமிழ் உண்டு. சிவபெருமானுக்குப் பிள்ளைத் தமிழ் இல்லை. சிவபெருமான் தாய்வயிற்றில் பிறக்கவில்லை. பிறப்பும், இறப்பும் உடையவை சிறு தெய்வங்கள். பிறப்பெடுக்கின்ற யாவரும் இறப்புக்கு உரியவராவார். – பிறவாயாக்கைப் பெரியோனாக- (சிலப்பதிகாரம்) சிவபெருமான் ஒருவரே குறிப்பிடப்படுகிறார். அவரோடு ஒத்த நிலையில் இருக்கவேண்டும் என்னும் கருத்துப்பட (கந்தபுராணம்) முருகனும் யோனியாய் பிறவாதவனென்று நிறுவுவதற்காகப் புராணக் கருத்துக்கள் உருவாகியிருக்கலாம். இதனைச் செத்துப் பிழைக்கின்ற தெய்வங்கள் மணவாள – என்ற முத்துக்குமாரசாமிப் பிள்ளைத் தமிழ்த் தொடராலும் உணரலாம்.

எனவே, தேவர்களுக்கு எல்லாம் தலைவனான முருகன் சிவனுடைய நெற்றிக் கண்களிலிருந்து தோன்றியதாகப் புராணங்கள் உருவகித்துள்ளன எனக் கருதலாம். பஞ்ச பூதங்களில் பேராற்றல் வாய்ந்த தீயினின்றும் முருகன் தோன்றியவனாக அமைக்கப்பட்டிருப்பது அவனது பேராற்றலை வெளிப்படுத்தவே எனக் கருதலாம். புராணக்கூற்றுகளின் அடிப்படையில் முருகனைச் சிறு தெய்வமாகக் கொள்ள இடமில்லை. ஆனால் காஞ்சி போன்ற பெரிய சிவன் கோயில்களில் முருகனும் கணபதியும் மூலத்தானத்தை அடுத்து வரவேற்பாளர்கள் போல நிறுத்தப் பட்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

அருணகிரியார் பாடிய திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி போன்றவற்றில் முருகனைப் பற்றிப் புராணக் குறிப்புகளைக் காணலாம். அருணகிரியார் காலத்திலே வடமொழி நூல்களின் கருத்துக்களோடு வடசொற்களும் தமிழில் அதிகமாகச் சேர்ந்து கொண்டன. மத்தமிழ் விதவ, வினோதா! கீதா!, மற்றவர் ஒப்பில், ரூபா! தீபா! – என்று திருப்புகழில் ஒப்பற்ற தெய்வமாக முருகனைப் பாடுகிறார் அருணகிரியார்.

## தமிழ் மணம் வீசும் பாடல்

அருணகிரியார் பாடல்களில் தமிழ் மணமும் அருள் மணமும் ஒருங்கே வீசுகிறது. அடிமை சொலும் சொல, தமிழ்ப் பன்னீரொடு, பரிமளம் மிஞ்சக், கடம்ப மாலையும், அணிவானே! என்பது அருணகிரியார் வாக்கு.

கடம்ப மாலையும் கழுத்துமாகக் காட்சி தருகிறான் முருகன். இந்த மாலையின் மணத்தை நுகர்ந்து கொண்டே முருகன் மீது தமிழ்ப் பாடல்கள் பாடுகிறார் அருணகிரியார். தமிழ்ப் பன்னீரைக் கொண்டு அபிஷேகம் செய்கிறார். பூமாலையின் மணத்தோடு புதுமணமாய்த் தமிழ் மணமும் கலந்திருக்கிறது. அதனால் பரிமளம் மிகுந்திருக்கிறது. இந்த அனுபவத்தை நினைவிற் கொண்டுதான் சிதம்பர சுவாமிகள் - அருணகிரிநாதன் தமிழ் மணமும், குருவின் நன்மணமும் கமழ்தரு பேரூர்க் குமரனே! - என்று பாடியிருக்கிறார். முருகன் புகழ் மலர்களை வாடாத தமிழ் மலர்களாகக் காட்டுகிறது திருப்புகழ். முருகு மணக்கும் முத்தமிழ்க் கவிஞர் அருணகிரியார் என்றால் மிகையாகாது.



*(ஈசானத்தில் உள்ள பைரவர் சந்நிதி)*

தமிழை மருந்தாக – அமுதமாக அனுபவிக்கிறார் அருணகிரிநாதர். முருகன் தமிழை மக்களுக்கு மருந்தாகவும், விருந்தாகவும் ஒருங்கே அமைத்துக் காட்டுவது அருணகிரியாரின் திருப்புகழ்தான். இனிதான முத்தமிழை ஆயும் வரிசைக்கார! என்று திருப்புகழ் கூறுகிறது. தேரிதமிழை உதவுசங்கப் புலவோனே என முருகனை அழைக்கிறது திருப்புகழ். தேரிதமிழ் என்பதற்கு அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய தமிழ் என்பது பொருள்.

# ஈழநாட்டு முருகன் ஆலயங்கள்

**பல்கலைப் புலவர்**

**க. சி. குலரத்தினம்**

வடமொழியிலும் செந்தமிழிலும் நூற்றுக்கணக்கான திருநாமங்கள் உள்ள எங்கள் வழிபடு தெய்வமும் குலதெய்வமுமாய் விளங்கும் முருகப் பெருமானுக்குப் பரத்துவமும் வியாபகமும் அதிகமாகும்.

இந்த வகையில் பெருமானாருக்கு எங்கள் நாட்டிற் பலவாய் திருக்கோயில்களும், வேறு கோட்டங்களும், மடாலயங்களும் உள. எம்பெருமானார் தேவர்கள் நிவேதிக்கும் நிவேதனத்தைத் திருவமுது செய்தருளும் வகையிற் குறவர்கள், பக்தர்கள் நிவேதிக்கும் தினைமா, புட்கை முதலியவற்றையும் திருவமுது செய்து திருவருள் பாலித்தருளுபவர்.

அவரே கலியுக வரதர். கண்கண்ட தெய்வம் என்பது படிப்பறிவில்லாத மக்களும் ஒப்புக்கொண்ட உண்மை. குன்றமெறிந்த குமரவேல் அன்று இரண்டாம் தமிழ்ச் சங்கத்து நூலறிபுலவனாய்த் தலைவனாய் இருந்தார் என்பர். அந்த இடைச்சங்கம் அமைந்த இடம் கபாடபுரம் என்பர். அந்தக் கபாடபுரம் தானும் கடலிடை அமிழ்ந்த தென்னகம் என்பர். அத்தென்னகத்துப் ப·றுளியாறும், குமரி கொடுங்கடல் கொள்ள, அவ்விரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட குறையே ஆற்றிடைக்குறை எனும் நிலம் என்க.

இலங்கை என்பதன் கருத்து ஆற்றிடைக்குறை என்பதால் இந்த நிலப்பரப்பு கபாடபுரத்தின் எஞ்சிய பகுதி. ஆகவே, நாம் இடைச்சங்க காலத்து நிலப்பரப்பையே குடியிருப்பாகக் கொண்ட பழந்தமிழராவோம். நாம் எங்கிருந்தும் வந்தவரல்லோம். இங்கேயே வாழ்ந்தவராவோம்.

நாம் கபாடபுரத்தவர் மட்டும் அன்றிச் செந்தமிழ்ப் பரமாசாரியராய முருகப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமான பெரும் பக்தருமாவோம். எனவே, எங்கள் வழிபடு தெய்வமாகிய முருகப் பெருமானே எங்கள் குலதெய்வமுமாவார். எம்பெருமானில் எமக்குப் பெரு விருப்பத்தைத் தருபவரும், விருப்பத்தை நிறைவேற்றுபவருமாகவே அவரை நாம் 'வேள்' என வழங்கி வணங்கி வந்தோம். அவரும்தான் செம்மேனி எம்மான். எனவே, நாம் அவரைச் செவ்வேள் என்றே வணங்கினோம்.

மிகப் பழைய தமிழ் நூல்களில் ஓங்கு பரிபாடல் என உயர்வு பெற்ற பரிபாடலிற் செவ்வேள் என்றே வணங்கினோம். பின்னர் பத்துப் பாட்டு என்னும் தொகுதியில் முதலில் அமைந்த திருமுருகாற்றுப்படை என்னும் திருமுறையில் முருகன் என்றே வழிபட்டோம். இந்த வகையில் எம்பெருமானாருக்கு நாளடைவில் நம்மவர் பலவாய திருநாமங்களைத் தம் மனதுக்கு இனிமையாக இட்டு வணங்கினர். அழகு, இளமை, மணம், தெய்வத்தன்மை உள்ள எங்கள் இறைவனைத் 'தேவதேவ தேவாதி தேவப் பெருமானே' என்று ஆராமையோடு பாடி மகிழ்ந்தனர். எங்கள் பெருமான் எம்மவருக்கு வாழ்வும், வளமும், வரமும் அளித்தருளிய வகையில் அவரை நெடும் பண்டைக்காலமாக துன்னித் துன்னி வழிபட்டு அன்பும், அறனும், அருளும் பெற்றனர். எங்கள் பெருமான் பெறலரும் பரிசுகள் அருளுவதிற் பெரும் வரப்பிரசாதி. செந்தமிழ் வளர்த்த பைந்தமிழ்ச் சங்கங்களுள் பழையன போக மூன்றாம் சங்கம் இன்றைய கூடல் என்னும் மதுரையில் நடைபெற்றது. அதிற் கவி அரங்கேற்றிய புலவர் பெருமக்களுள் ஈழத்துப் பூதன் மகனார் தேவன் என்பாரும் ஒருவர். அவர் நற்றிணை, அகநானூறு முதலாய அகத்திணைத்

தொகுப்புகளிற் பாடல்கள் தந்துள்ளனர். அங்கெல்லாம் முருகனைப் பற்றியும் அவன் கைவேல் ஏந்திய பூசாரியைப் பற்றியும் பாடியிருக்கின்றார். முருகன் எமது பாரம்பரியத்துப் பழமையான தெய்வம். எம்மவர் முருகனை முன்னிட்டே தம் மக்களுக்குப் பெயர்கள் வைத்தழைத்தனர்.

பெண பிள்ளைகள் வள்ளி, தேவயானை தேவியர் திருநாமங்களைப் பெற்றிருந்தார்கள். எம்மவர் அவரைக் காலத்துக்குக் காலம் வரங்கொண்டு உய்தி பெற்ற பெருவாழ்வில் வாழ்த்தி வணங்கியபோது வேலன் என்றனர். சண்முகன் என்றனர். ஆறுமுகன் என்றனர்.

தமிழிடையே தோத்திர நூல்கள் எழுந்த காலத்திற் பலவிதமான பிரபந்தங்கள் செய்தனர். புராணங்கள் எழுந்த காலத்தில் பல புராணங்கள் செய்தனர். எம்பெருமான் புகழ் கூறும் புராணங்களுள் தலையாயது கந்தபுராணம். கந்தபுராணத்தை புராணநாயகம் என்று கொண்டாடுவர். கந்தபுராணத்தை எத்தனைமுறை திருப்பித் திருப்பிப் படித்தும் கேட்டும் நயந்தும் ஆறாமை பெறாத அடியவர்கள் அதனை ஆண்டு தோறும் நூற்றுக் கணக்கானோரிடை புராண படனம் செய்தும் விரிவுரைத்தும் வந்தனர். இந்த வகையில் ஆறுமுக நாவலர் அவர்கள் அதனை அதியற்புத அதிமதுர சுத்த செந்தமிழ் எனக் கண்டு கொண்டாடித் தூய வசன நடையில் எழுதி இன்பங் கண்டார். அவரின் மாணாக்கராய செந்திநாத ஐயர் அவர்கள் அந்தப் பாற்கடலைக் கடந்து வெண்ணெய் எடுத்தாற் போல 'கந்த புராண நவநீதம்' என்னும் நூலை நயந்து எழுதினார்.

கந்தபுராணத்தை அதன் பரிமளிப்புப் புறம் போகாதவாறு பட்டுத்துணியால் சுற்றி பூசையில் வைப்பாரும் இருந்தனர். மக்களை மேலவராக்கித் தூயவராக்கிய கதை கந்தபுராணக் கதையாகும்.

இங்ஙனமாய் கந்தபுராணத்தின் கதாநாயகமாய்க் கந்தவேள் எழுந்தருள் செய்வதற்கும் அடியார்கள், அன்பர்கள், முதியவர்களையும் மூத்தவர்களையும் முன்புகலிட்டுப் புகுவார். அவர்கள் பின்புகுந்து வழிபட்டு வரம் பெறுவதற்கும் மூத்த தமிழகமாய் இலங்கையிற் பலவாய திருக்கோயில்கள் ஆங்காங்கே உளவாயின. அங்கெல்லாம் அக்கினிப்பூ எனவும் வழங்கும் முருகப் பெருமானாய குறிஞ்சிக் குமரன் எழுந்தருளி மலர்ந்திருப்பர்.

அவரை வழிபடச் சென்றவர்களின் வரவை முன்னரே அறிந்தவராய் அவர், அறிவின் நின் வரவு என வரவேற்று வரமீந்தருளுவர். கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணம் போல மலைக் கவிராயரின் திருச்செந்தூர்ப் புராணமும் எங்களை வாழ்வித்து உய்தி தந்து வந்துள்ளது.

இங்ஙனமாகச் சிவபூமி என்று பெயர் பெற்ற எங்கள் திருநாட்டிற் சிவனாருக்குரிய ஈஸ்வரங்கள் என்னும் திருக்கோயில்கள் போல எங்கள் முருகப் பெருமானுக்கும் பலவாய கோயில்கள், மடாலயங்கள் எழுந்துள்ளன.

ஐம்முக சிவனாருக்கு அறிகுறியாக அருவுருவத் திருமேனியாகச் சிவலிங்கம் அமைந்திருத்தற் போல, எங்கள் முருகப் பெருமானாருக்கும் அருவுருவம் எனத்தகும் அவரின் சக்திவேல் வழிபடும் இடத்தில் எழுந்தருளியுள்ளது. இத்தகைய வேற்கோட்டங்கள் வடக்கிலும், கிழக்கிலும் பரவலாக உள்ளன. இவற்றைவிட இன்னும் தமிழர் குடியிருக்கும் பிரதேசங்கள் எங்கும் முருகப் பெருமானுக்கும், கந்தன் என்றும் சுப்பிரமணியன் என்றும் திருநாமங்கள் கொண்ட திருக்கோயில்களும் பரவலாக உள்ளன. குடாநாடு எனவுள்ள பிரதேசத்தில் நல்லூர், மாவிட்டபுரம், செல்வச் சந்நிதி, பொலிகண்டி முதலாயதலங்களிற் பெருங் கோயில்கள் உள்ளன. இன்னும் துன்னாலை கந்தசுவாமி கோயில், பண்ணாகம்

முருகமூர்த்தி கோயில், அட்டகிரி கந்தசுவாமி கோயில், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், சித்திர வேலாயுத சுவாமி கோயில் என்பனவும் பிறவும் உள்ளன.

இவை இவ்வாறாக இருக்க — தீவுப் பகுதிகளில் மண்டைதீவு, புங்குடுதீவு, சரவணை, வேலணை முதலிய பகுதிகளில் சாந்நித்தியம் நிறைந்த முருகன் கோயில்கள் உள்ளன. மேலைக் கரம்பன் முருகமூர்த்தி கோயில் மகாவித்துவான் கணேச ஐயர் முதலாய பெரியவர்கள் பிரபந்தங்கள் பெற்றது.

அப்பாற் காரைநகரிற் குறிச்சிகள் தோறும் குமரக் கடவுளுக்குத் திருக்கோயில்கள் உள்ளன. திக்கரை முருகமூர்த்தி கோயில், மணற்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், காரைநகர் கதிர்காம சுவாமி கோயில், கருங்காலி முருகமூர்த்தி கோயில் முதலியனவும் பிறவும் உள்ளன.

மிகப் பழைய ஊரான வட்டுக்கோட்டையில் அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயில் முதலாய பல முருகன் கோயில்கள் உள்ளன. சில கோயில்களில் பலவாய பரிவார தெய்வங்கள் உள்ளனர். உற்சவங்கள் உள்ளூர் மக்களை அன்றி வெளியூர் மக்களையும் பெருந்திரளாக ஈர்க்கும் தன்மை வாய்ந்தனவாய் உள்ளன. சில கோயில்களில் மூலமூர்த்தி வேலாயுதப் பெருமானாகவே இருக்க எழுந்தருளிகள் பலவாய் மூர்த்தி பேதங்களில் அமைந்துள்ளன.



*இராஜகோபுரம் - தேர்முட்டி, வைரவர் சந்நிதி*

முருகனுக்குச் சிறப்பாய் ஆறுமுகச் சிவவடிவமான ஆறுமுகசுவாமி என்னும் திருநாமத்தோடு அழகெலாம் திரண்டொன்றாகி அற்புதமாய் அமைந்துள்ளது.

இங்ஙனம் சிறியனவும், பெரியனவுமாக அமைந்த திருக்கோயிற்களிற் பொதுவாகப் பெருவிழா நடைபெறும். பக்தி மயமான விழா கந்தசஷ்டி விழாவாகும். சஷ்டியில் நடைபெறும் சூரசம்கார விழா மிகச் சிறப்பாக அமையும்

முருகனுக்குரிய படைவீடுகள் தமிழ் நாட்டிலேயே இருந்த போதிலும் குன்று தோறாடல் என்பது நிலையான நின்ற பண்பேயாதலால் இங்கெல்லாம் முருகனுக்கேயுரிய முதிய மரபு வழிபாட்டு முறைகள் குறைபாடின்றி நடைபெறுகின்றன. கலியுக வரதனென்றும், கண்கண்ட தெய்வம் எனறும் நாம் வணங்க எழுந்தருளியுள்ள முருகப் பெருமானின் பேரருள் இருந்தவாறு.

With Best Compliments from

STP CARGO

# S. T. PARAMESWARAN & CO. (PVT) LTD.

*Importers, Exporters, General Merchants & Transoprters*

STP

# S. T. Parameswaran & Co.

*Customs Clearing & Forwarding Agents & Transporters*

182, CENTRAL ROAD, COLOMBO - 12, SRI LANKA.

TEL : +94 11 2347210

+94 11 2436426

+9411 2436428

HOTLINE : +94 77 2436428

FAX : 94 11 2395472

ஈழத்தில் செல்வாக்குற்ற

# மயூரகிரிப் புராணம்

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
**விரிவுரையாளர் - தமிழ்த்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்**

வரலாற்றுச் சிறப்பும் திருவருட் பெருக்கும் மிக்க ஆலயங்கள் மீது புராணங்கள் பாடப்பட்டு வந்துள்ளன. தலத்தின் வரலாறு, அதன் சிறப்பு, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் மகிமை, திருவருட்திறன் முதலான பல விடயங்களை இப்புராணங்கள் விரிந்துரைக்கின்றன. வடமொழிப்புராணங்களில் காணப்படும் கதைகளை ஒன்று திரட்டி எழுதப்பட்ட தொகுப்பு நூல்களாகவே இவை விளங்குகின்றன. கி. பி. 12ம் நூற்றாண்டில் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் எழுதப்பட்ட திருவிளையாடற் புராணமே தமிழில் எழுந்த முதலாவது தலபுராணமாகக் கருதப்பட்டது. தலபுராணங்களை ஆராய்ந்து அரியதொரு நூலினை வெளியிட்ட டேவிட் குல்மன் என்பார் ஏறக்குறைய 2000 தலபுராணங்கள் ஏட்டுப் பிரதி வடிவில் வெளிவந்ததாகக் குறிப்பிடுவர். குறிப்பாகக் 16ம் நூற்றாண்டு தொடக்கம் 19ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியைத் தலபுராண காலமெனக் குறிப்பிடக் கூடிய வகையில் ஏராளமான தலபுராணங்கள் அக்காலப் பகுதியில் எழுதப் பட்டன. சிதம்பரபுராணம், அருணகிரிப்புராணம், அருணாசலப் புராணம், காஞ்சிப்புராணம், சேது புராணம், திருவாரூர்ப் புராணம் என்பனவற்றை வகை மாதிரியாகக் குறிப்பிடலாம்.

இங்ஙனம் தமிழில் எழுந்த தல புராண வரிசையில் மயூரகிரிப் புராணமும் ஒன்றாகும். பாண்டி நாட்டிலே தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களில் ஒன்றான திருப்புத்தூருக்குச் சமீபத்தில் குன்றக்குடி என்னும் ஊரில் அமைந்துள்ள மயூரகிரி என்னும் முருகன் ஆலயத்தின் மீது இப்புராணம் பாடப்பட்டது. 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த மதுரையைச் சேர்ந்த சிவகங்கை வித்துவான் வேதாந்த சுப்பிரமணியபிள்ளை அவர்கள் இப்புராணத்தைப் பாடியுள்ளார். காப்புச் செய்யுள் ஒன்றினையும், பாயிரச் செய்யுள் பதினொன்றினையும் மயூரகிரியின் வரலாறு உரைத்த சருக்கம் முதல், அருச்சனைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களையும் கொண்டதாக இந்நூல் விளங்குகிறது. வடமொழியில் அமைந்த மயூரகிரி மான்மியம் இதற்கு முதல் நூல் என்பர்.

முருகப் பெருமானின் வாகனமாகிய மயில் (மயூரம்) ஒருமுறை தன்னைக் கேலி செய்த பிரம்மாவின் வாகனமாகிய அன்னத்தையும், விஷ்ணுவின் வாகனமாகிய கருடனையும் விழுங்கியது. இதனால் கவலையுற்ற பிரம்மாவும், விஷ்ணுவும் முருகப் பெருமானை அண்டி அவற்றை மீட்டுத் தருமாறு வேண்டுதல் செய்தனர். அவரும் மயூரத்தினை அழைத்துக் கருடனையும், அன்னத்தையும் வெளியே உமிழும்படி பணித்தார். மயூரமும் அவற்றை வெளியே உமிழ்ந்தது. எனினும் அகங்காரத்தால் அன்னத்துக்கும், கருடனுக்கும் துன்பம் இழைத்த மயூரத்தினை திருப்புத்தூருக்கு அண்மையிலே மலையாக மாறும்படி முருகப் பெருமான் சபித்தார். மயூரம் தன் பிழையை உணர்ந்து வேண்டுதல் செய்யவே அதன் அகங்காரத்தை நீக்கி விமோசனம் தருதற் பொருட்டு அம் மயூரகிரியில் (மயில்

மலையில்) முருகன் கோயில் கொண்டார். மயூரத்திற்கும் இதனால் முத்தி கிடைத்தது. இதுவே மயூரகிரி எனும் தலத்தின் வரலாறாகும். மயூரகிரி வரலாறுரைத்த சருக்கம், மயூரம் முத்தி பெற்ற சருக்கம் என்பனவற்றில் இவ்வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது.

இவ்வரலாற்றுடன் முருகப்பெருமானின் பிறப்பு, அவர் சூரனாதியோரைக் கொன்றழித்த பராக்கிரமம், வள்ளி, தெய்வநாயகி என்னும் சக்திகளை மணம் செய்த வரலாறு என்பனவற்றை ஏனைய கந்தபுராணங்களில் நின்றும் திரட்டி மயூரகிரிப் புராணம் கூறுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றை முறையாகப் பெற்று விளங்கும் இத்தலத்திற்கு அகத்தியர், வசிட்டர், விசுவாமித்திரர், பிரமா, கருடன், இந்திரன், ஆதித்தன், மன்மதன், பாண்டவர் என்போர் வந்து முருகப் பெருமானை நமஸ்கரித்து இஷ்ட சித்திகளைப் பெற்றதாக அந்நூல் கூறுகின்றது. அகத்தியச் சருக்கம், பிரமா கருடேசன் சருக்கம், இந்திரன் கதையும், ஆதித்தன் கதையும், மன்மதன் கதையும் உரைத்த சருக்கம், பாண்டவர் சருக்கம் என்பனவற்றில் மேற்படி முனிவர்களினதும், தேவர்களினதும், வரலாறுகளும் முருகப் பெருமானின் அருட் சிறப்புகளும் விரிந்துரைக்கப்படுகின்றன.

**மயூரகிரிப் புராணச் செல்வாக்கு**

தமிழகத்திலுள்ள முருக தலத்தின் மீது பாடப்பட்ட இம் மயூரகிரிப் புராணம் ஈழத்தில் வாழ்ந்த சைவர்கள் மத்தியில் 20ம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை மிகுந்த செல்வாக்குப் பெற்று வந்துள்ளது. கந்தபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் என்பவற்றிற்கு ஒப்பாக விரத காலங்களிலும், விழாக் காலங்களிலும் பாராயணம் செய்தும், படனம் செய்தும் வந்த நூலாக இது விளங்கியது.

ஈழத்தில் இப்புராணத்திற்கு இருந்த வரவேற்பை அது இரண்டு பதிப்புக்களைப் பெற்றிருந்ததினால் புரிந்து கொள்ள முடிகின்றது. இதன் முதல் பதிப்பு 1885ம் ஆண்டு நிகழ்ந்தது. நாவலரின் மருகர் வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் இந்நூலை நாவலரின் யாழ்ப்பாண சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டார். முதற்பதிப்பு வெளியாகி ஐம்பத்திரண்டு வருடங்களின் பின் 1937ம் ஆண்டு இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் தேவை கருதி மீண்டும் இந்நூலை யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சகத்தில் பதிப்பித்தார். இந்நூலின் முதற் பிரதிகள் பலவருடங்களுக்கு முன்னரே அகப்படாமல் போனமையே இரண்டாவது பதிப்பைக் கொண்டுவரக் காரணம் என அவர் முகவுரையில் கூறுவது கவனிக்கத் தக்கது.

ஈழத்தவர்களே இப்புராணத்துக்கு உரை எழுதிப் பாதுகாத்து வந்தனர். இந்நூலை முதலில் பதிப்பித்த வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்கள் இந்நூலுக்குச் சிறந்ததோர் பொழிப்புரை வழங்கியுள்ளார்.

'இப்புராணத்திற்குச் சிறுவரும் எளிதில் உணரத்தக்க நடையுள்ள பொழிப்புரை ஒன்று எழுதி அச்சிடுவித்துத் தரல் வேண்டுமென்று காரைக்குடியைச் சார்ந்த முத்துப் பட்டணம் பெரி. நா. சொக்கலிங்கச் செட்டியாரும், மேற்படியூர் ராம. கு. ராம. சொக்கலிங்கம் செட்டியாரும் கேட்டுக் கொண்டபடி அச்சிடுவித்தேன்' என நூன் முகத்தில் பொன்னம்பலபிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார். இதனால் ஈழத்திலேயே இந்நூல் முதலில்

உரை பெற்றமை புலனாகின்றது. இந்நூலை இரண்டாவது முறையாகப் பதிப்பித்த மு. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் பொன்னம்பலபிள்ளை அவர்களின் உரையுடன் மேலதிகமாக விசேட உரை ஒன்றையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டார். பொன்னம்பலபிள்ளையின் உரையை விசேட உரை மேலும் எளிமைப்படுத்திற்று.

'வித்துவசிரோமணியின் பொழிப்புரையைப் பொன்போற் போற்றி தமிழ்க் கல்வியறிவு குறைந்தவர்களுக்கும் இலகுவில் விளங்கும் வண்ணம் விசேட உரை எழுதி ஆங்காங்கே............சேர்த்துள்ளேன்..........' எனக் குறிப்பிடுகின்றார் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை.

மயூரகிரிப் புராணத்தில் ஈழத்தவர்கள் கொண்ட ஈடுபாடு அப்புராணத்தில் புதிய சேர்க்கைகள் இடம்பெறக் காரணமாயிற்று. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை தனது காலத்தில் 'தெய்வநாயகி திருமணச் சருக்கம்' என ஒரு புதிய சருக்கம் இப்புராணத்தில் காணப்பட்டதாகக் கூறுகின்றனர். இச்சருக்கத்தை இடைச் செருகல் என உறுதியாகச் சுட்டும் அவர் இச்சருக்கம் யாழ்ப்பாணத்து அராலியில் வாழ்ந்த பிராமணர் ஒருவரால் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டதாகக் கருதுகின்றார்.

'சிலர் இப்புராணத்திலே தெய்வநாயகி திருமணச் சருக்கம் என ஒன்று ஈன்றிலுளதன்றோ. அதனை ஒழித்துவிட்டதென்னை என்பாராயின் அது வடமொழி மயூரகிரி மான்மியத்தில் இல்லாமையாலும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு பிராமணரால் புதிதாய்ப் பாடிச் சேர்க்கப் பட்டமை சந்தேகமின்றித் தெரிந்தமையாலும், வடதேசத்திலுள்ள ஏட்டுப் பிரதிகளில் தவிர்க்கப் பட்டமையாலும் …….. யானும் அச்சருக்கத்தை இதனிற் சேர்த்தல் தவறு என ஒழித்துவிட்டேன் என அறிக' என்கிறார் பொன்னம்பலபிள்ளை.

**செல்வாக்குப் பெறக் காரணம்**

மயூரகிரிப் புராணம் இங்ஙனம் ஈழத்தில் பதிப்பு உரை, சேர்க்கை என்பனவற்றைப் பெற்றுச் செல்வாக்கு அமைந்தமைக்கான காரணங்கள் யாவை என்பது நுனித்து நோக்க வேண்டியதாகும்.

அ. ஈழத்தில் முருக வழிபாடு பண்டுதொட்டு முதன்மை பெற்றிருந்தது. வரலாற்றுச் சிறப்புப் பெற்ற முருகன் ஆலயங்கள் ஈழநாட்டில் பரவலாகக் காணப்பட்டன. ஈழத்தின் தென் பகுதியில் கதிர்காமம், வடபகுதியில் மாவிட்டபுரம், நல்லூர், கதிரமலை (சுன்னாகத்திற்கு அண்மையில் அமைந்திருந்ததாக நம்பப்படுகிறது), சித்திர வேலாயுதர் கோயில் (வையாபாடல் குறிப்பிடும் இத்தலம் எங்கிருந்தது என்பதை அறிய முடியவில்லை) என்பனவும், கிழக்கு மாகாணத்தில் திருக்கோயில், சித்திர வேலாயுத சுவாமி கோயில், மண்டூர் சித்திர வேலாயுத சுவாமி கோயில், உகந்தமலை முருகன் கோயில், சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி கோயில், வெருகலம்பதி சித்திர வேலாயுத சுவாமி கோயில் என்பனவும் 17ம் நூற்றாண்டிற்கு முன்னதாகவே புகழ் பெற்ற ஆலயங்களாக விளங்கின. போர்த்துக்கேயரின் ஆட்சியைத் தொடர்ந்து நிலவிய இந்துமத எழுச்சிச் சூழலில் புதிதாக மேலும் பல முருகன் ஆலயங்கள் கட்டி எழுப்பப் பட்டன. இங்ஙனம் ஈழத்தில் காணப்பட்ட முருக வழிபாட்டுச் சூழல் அங்கு அவ்வழிபாட்டுடன் தொடர்புபட்ட புராணங்கள் அறிமுகமாவதற்குக் காரணமாக அமைந்தன.

ஆ. பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் ஈழத்தில் சைவ – கிறிஸ்தவ மத முரண்பாட்டு நிலை முனைப்பாகக் காணப்பட்டது. இச்சூழலில் இந்துமதப் பற்றுள்ளம் கொண்டோர் கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்த அதே வேளை சைவசமயத்தின் மீதான பற்றுணர்வையும், நம்பிக்கையையும் மக்கள் மத்தியில் வளர்க்க முயன்றனர். இந்து மதத்தின் மீதான பற்றுணர்வையும் நம்பிக்கையையும் வளர்க்கும் முயற்சிகளில் ஒன்றாகவே புராண படனம் அமைந்தது. இந்து மதம் பற்றியும் இந்துப் பண்பாடு பற்றியும் போதுமான அறிவைப் புராணங்கள் கொண்டிருந்ததால் அவற்றைப் படிக்கவும் படிப்பதைக் கேட்கவும் தூண்டுவதனூடாக மக்களை உண்மையான சமய நெறியில் நடாத்திச் செல்ல அவர்கள் முயன்றனர். இத்தகைய புராண படனச் சூழல் ஈழத்தில் மயூரகிரிப் புராணம் செல்வாக்குப்பெற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம்.

இ. யாழ்ப்பாணக் கலாச்சாரத்தைப் பண்டிதமணி ச. கணபதிப்பிள்ளை அவர்கள் 'கந்த புராண கலாசாரம்' எனக் குறிப்பிடுவார்கள். அந்தளவிற்குக் கந்தபுராணம் யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் இடம் பிடித்திருந்தது. கந்தபுராணப் படிப்பு (படனம்) யாழ்ப்பாணத்தில் பல ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. கந்தபுராணம் பற்றிய ஆய்வுகளும் உரையுடன் கூடிய பல பதிப்புகளும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்தன. இங்ஙனம் கந்தபுராணம் யாழ் மக்கள் வாழ்வில் பெற்றிருந்த செல்வாக்கை ஏனைய முருக புராணங்களும் ஈழத்தில் பிரபலம் பெற வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கலாம். திருச்செந்தூர்ப் புராணம், மயூரகிரிப் புராணம் என்பன ஈழத்து முருகன் கோயில்களில் படிக்கவும் பாராயணம் செய்யப்படவும் இதுவே காரணம்.

**ஈழத்து – தமிழகத்துப் பண்பாட்டுறவு**

ஈ. ஈழத்துக்கும் தமிழகத்திற்கும் இடையில் காணப்பட்ட நெருக்கமான பண்பாட்டுறவின் பின்னணியில் ஈழத்து அறிஞர்கள் தமிழகம் வருவதும், தமிழக அறிஞர்கள் ஈழம் வருவதும் வழக்கமாக இருந்தது. இத்தகைய பரஸ்பர தொடர்பின் பின்னணியில் தமிழகப் புராணங்கள் ஈழத்தில் அறிமுகமாவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டிருக்க வேண்டும். ஈழத்து அறிஞர்கள் மயூரகிரிப் புராணத்தை ஈழத்தில் அறிமுகம் செய்தமைக்கும், பதிப்பித்துப் பாதுகாத்தமைக்கும் இத்தொடர்புகள் காரணமாக இருந்திருக்கலாம்.

உ. ஈழத்தவர்கள் இந்தியத் தலங்களுக்குத் தல யாத்திரை செய்வது வழக்கமாக இருந்தது. திருச்செந்தூர், திருத்தணிகை, பழனி முதலான முருக ஸ்தலங்களுக்கு அவர்கள் தல யாத்திரை மேற்கொண்டனர். மயூரகிரி முருகனின் குன்றுதோறாடல் என்னும் தோகைத் தலத்துட் சிரதானம் சிறப்புப் பெற்று விளங்குவதால் அங்கும் தல யாத்திரையை ஈழத்தவர்கள் விரும்பி மேற்கொண்டிருக்க வேண்டும். அங்ஙனம் தல யாத்திரை செய்வோருக்கு மயூரகிரித் தலத்தின் சிறப்பினை, பெருமையினை எடுத்துக் காட்டும் பொருட்டு இப்புராணம் ஈழத்தில் அறிமுகம் செய்யப் பட்டிருக்கலாம்.

ஊ. மயூரகிரிப் புராணம் கந்த விரதங்கள் பற்றி விபரிக்கிறது. கந்தசஷ்டி, சுக்கிரவாரம், கார்த்திகை விரதம் என்பன என்ற மூன்று சருக்கங்களில் இப்புராணம் விவரித்துச் சொல்கின்றது. கந்த விரதங்களின் மகிமை, அவற்றை அனுஷ்டிக்கும் காலம்,

அனுஷ்டிக்கும் முறை, அனுஷ்டித்தோர் எய்திய பலன் என்பன பற்றிய விரிவான விளக்கங்கள் அச்சருக்கங்களில் இடம்பெற்றுள்ளன. இவ்விரதங்கள் பற்றிய அரிய தகவல்கள் முருக வழிபாட்டில் ஈடுபடுவோருக்கு அவசியம் வேண்டப்பட்டன. எனவே இத்தகவல்களை விரந்துரைக்கும் மயூரகிரிப் புராணத்தை ஈழத்தவர்கள் விரத காலங்களில் படித்துப் பயன் பெறும் பொருட்டு அறிமுகம் செய்திருக்கக் கூடும்.

'..........இத்தல புராணத்தை சைவ நன்மக்கள் இங்குள்ள சைவாலயங்கள், திருமடங்களில் கந்தசஷ்டி முதலிய விசேட புண்ணிய காலங்களில் கிரமமாகப் பக்தியுடன் படனஞ் செய்து வருவாராயினர்' என திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் தனது சமகால நிலை பற்றிய பதிப்புரையில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

இங்ஙனம் ஒரு காலத்தில் செல்வாக்குப் பெற்ற மயூரகிரிப் புராணத்தை இன்று பெயரளவில் தானும் அறிய முடியாத நிலை உள்ளது. புரான படன மரபும் இந்து சமயிகள் மத்தியில் படிப்படியாகக் குறைவடைந்து சென்று இன்று வெறும் சடங்குகள் போல ஆலயங்களில் நிகழ்வதைக் காணலாம். இந்நிலை புராணங்கள் பற்றிய அறிவு எம்மவரிடையே படிப்படியாக இல்லாமல் போவதற்குக் காரணமாக உள்ளது. இந்து மதம், இந்துப் பண்பாடு பற்றிய கருத்துக்களின் கருவூலங்களாக விளங்கும் புராணங்கள் உதாசீனப் படுத்தல் எமக்கே தீங்காகும். ஆதலால் புரான படன, பாராயண மரபை நவீன தேவைகளுக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைப்பதனூடாகப் புராணங்களுக்கு வாழ்வளிப்பதுடன் எமது மத அறிவையும், மதப்பற்றையும், நற்சிந்தனைகளையும் புடம் போட்டுக் கொள்ள முடியும்.



வசந்த மண்டபம்

# கந்தபுராணமும் - சிவஞானபோதமும்

வே. நடராசா
சைவ மேம்பாட்டுக் கழகம்,
களபூமி, காரைநகர்



செம்மலர் நோன் தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழிகி அன்பரொடு மரீகி
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே

- 12ம் சூத்திரம்

**செம்மலர் நோன் தாள்** - (அயரா அன்பின் அரன் கழலடைந்த சீவன் முத்தன்) செங்கமல மலர் போல் விரிந்து விளங்கிய முதல்வனது சீபாதத்தை, **சேரல் ஒட்டா** - அணைதற்கு உடன்படாது அயர்த்தலைச் செய்விக்கும், **அம்மலங் கழிகி** — அவ்வியல்பினையுடைய மும்மலவழுக்கை ஞான நீரால் கழுவி, **அன்பரோடு மரீகி** — (தன்னைப்போல அயராவன்பின் அரன் கழலடைந்த) மெஞ்ஞானிகளோடு கலந்து கூடி **மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்** - (அவ்வாறு கழுவப்பட்டு) மலமயக்கு நீங்க (அன்பருடன் கூடி) அன்புமிக்குடைய அவரது திருவேடத்தையும், **ஆலயம் தானும்** - சிவாலயத்தையும், **அரன் எனத் தொழுமே** — முதல்வன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வான்.

இத்தனைக்கும் அப்பாற்பட்டவனைச் சிந்தனைக்குள் அடக்கி வழிபடுதல் இச்சூத்திரத்தின் கருத்தாகும். சிவாலயத்தில் இருக்கும் திருமேனியை தொழுக என்கிறார். இவ்விடத்தில் தயிரில் வெண்ணெய் போல வெளிப்பட்டுக் கடவுள் உறைகின்றான். மற்றைய இடங்களில் பாலில் இருக்கும் வெண்ணெய் போல இறைவன் மறைந்து நிற்கின்றான். நம்போன்ற மலப் பிடிப்புள்ள மக்களுக்குச் சிவாலய வழிபாடு மல நீக்கத்திற்கு மிகவும் அவசியமாகும். இதனால் பெரியோர்கள் ஆலயம் அமைப்பதும் புதுப்பிப்பதும் பாராட்டிற்குரியது. சிவ வழிபாட்டால் நமக்குக் கிடைக்கும் பேறு கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணம் காட்டும் நெறி நோக்கத்தக்கதாகும்.

புன் நெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன் நெறியொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்க யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி

**புன் நெறி அதனிற் நெல்லும் போக்கினை விலக்கி** - கீழ் நெறியாகிய புன்புல நெறிகட்குச் செல்லும் எனது செல்லுகையைத் தடுத்து நிறுத்தி **மேலாம் நன் நெறியொழுகச் செய்து** - மேன்மை தரும் நன்னெறிக் கண் என்னை ஒழுகச் செய்து **நவையறு காட்சி நல்கி** — மாசறு காட்சியாகிய மேலுணர்வை அருள் செய்து

**என்னையும் அடியனாக்கி** – ஒன்றுக்கும் பற்றாத என்னையும் தமக்கு அடியன் ஆக்கி **இருவினை நீக்கி ஆண்ட**- நல்வினை தீவினைகளாகிய இருள்சேர் இருவினைகளையும் ஒழித்து ஆட்கொண்டருளிய **பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள்** - பன்னிரண்டு விசாலமான புயங்களையுடைய அருள் வள்ளலாகிய சுப்பிரமணியப் பெருமானின் திருவடித் தாமரைகளை **போற்றி** – யாமெல்லாம் போற்றுவோமாக.

நாம் விளக்க வேண்டியதை ஒழித்து விதித்தன செய்வதாகிய அறங்களை செய்தலாகிய கருமங்கள் கைகூடி மனசு மாசு நீங்கி, மெய்ப்பொருள் உணர்ச்சி பிறந்து, மெய்ப்பொருளுக்கு அடிமையாகி உணர்ச்சி மேலோங்க இருவினை ஒப்பு மலபரிபாகமும், சந்தினி பாதமும் தலைகூடி ஆண்டவனால் ஆன்மா ஆட்கொள்ளப்படுகின்றான். இத்தன்மையால் ஆலயங்கள் ஒவ்வொரு இடந்தோறும் அமைவது போற்றுதற்குரியதும் சைவ நீதியுமாகும்.

ஆகவே காரைநகர், களபூமி – திக்கரையில் குடிகொண்டு அருள் சுரக்கும் எம் குலதெய்வமாகிய முருகப் பெருமானுக்குப் பெரியோர்கள் கோபுரம் உட்பட இதர திருப்பணிகளை எல்லாம் தெய்வ நியதிக்கமைய சிறப்பாக நிறைவேற்றியமை பாராட்டுக்குரியதாகும். போற்றுதற்கும் உரியதாகும்.

முருகப் பெருமானின் கருணை திருப்பணித் தொண்டர்கள், அடியார்கள், அன்பர்கள் யாவருக்கும் கிட்டும்படி பிரார்த்திப்போமாக.

*——————*

**உயிரையும் மெய்யையும் காக்கும் கந்தன்.**

*சண்முக கவசத்தில் மொத்தம் முப்பது பாடல்கள். முதல் பன்னிரண்டு பாடல்களும் 'அ' முதல் 'ஔ' காரம் வரை அமைந்திருக்கும். 13 முதல் 30 வரையுள்ள 18 பாடல்களும் 'க' முதல் 'ன' வரை அமைந்துள்ளன. உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 18, ஆக மொத்தம் 30. சண்முக கவசத்தை நாள்தோறும் படிப்போரின் உயிரையும் மெய்யையும் முருகன் காப்பான் என்பது உட்கருத்து.*

# திக்கரை செய்தது பெருந்தவமே

கலாநிதி கவிஞர் வி. கந்தவனம்



பத்தியிற் சிறந்த காரைநகர்ப்
பண்பினை வளர்க்கும் திக்கரையில்
முத்தமிழ் முருகன் எழுந்தருளி
முத்திக்கு வழியைக் காட்டுகிறான்!

காட்டும் முத்தி வையகத்தில்
கடமை கட்டுப் பாட்டுடனே
நாட்டி நீதி யாவருக்கும்
நன்மைசெய் தின்பம் காண்பதுவே!

காண்பவர் முருகன் திருக்கோலம்
களைந்திடு வார்முன் வினைக்கோலம்
பூண்பவர் அவனின் திருநீறு
போக்குவர் நெஞ்சின் அழுக்காறு!

ஆணவச் சூரன் அதிகாரம்
அன்புடன் அழித்தான் அந்நாளில்
மாணுயர் செல்வத் தமிழீழம்
மலர்ந்திட அருள்வான் இந்நாளில்!

ஆற்றுப் படையின் பொருளாளன்
அருணகிரியின் புகழானான்
ஊற்றுத் தமிழின் உயிரானான்
உயிருக்கும் உற்ற துணையானான்!

அன்புக் கடவுள் ஆறுமுகன்
அழகுக் கடவுள் அறக்கடவுள்
தென்புக் கடவுள் திக்கரையில்
திகந்தருள் குமரனை வணங்கிடுவோம்!

எக்கரை செலினும் இடப்பெயர்வால்
எவ்வகை இடர்கள் எய்திடினும்
திக்கரை முருகன் காத்திடுவான்
தீங்கில்லைப் பாங்குற வாழ்த்திடுவோம்!

திக்கரை முருகன் கோயிலுக்குச்
சிற்பவி ராச கோபுரத்தை
மிக்கநல் அழகாய் அமைத்தபெரும்
விற்பனத் தொண்டர் வாழியவே!

கோபுர வாயிற் கோயிலிலே
குடிகொண் டருளும் சிவமகனைத்
தேவரும் வணங்கத் திரண்டெழுவார்
திக்கரை செய்தது பெருந்தவமே!

வாழிய காரை நகர்ப்பதிதான்
வாழிய திக்கரை முருகன் அருள்
வாழிய வள்ளி தெய்வானை
வாழிய அடியார் வாழியவே!

# முருக முத்துக்கள் அருகிப் பாருங்கள்

**சிவ நெறிக் கவிஞர் இராகவன் முத்து** B.Sc, M.A.



*சி*வபெருமானின் இளைய திருமைந்தர் முருகவேள் என்பது மரபு. 'வேள்' என்பது 'மன்மதன்' என்று பொருள் தரும் தமிழ்ச் சொல். மன்மதனுக்கும் முருகப் பெருமானுக்கும் அழகில் வித்தியாசமில்லை. ஆனால் ஒரு வேறுபாடு உண்டு. மன்மதன் கருமை நிறம். முருகவேள் செம்மை நிறம். எனவே முருகவேளைச் செவ்வேள் என்று போற்றுதல் வழக்கு.

*த*மிழ் எழுத்துக்களில் உயிர், மெய் எழுத்துக்கள் மூன்று பகுப்பாகும். வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன அவை — வல்லினம் - க, இடையினம் - ர, மெல்லினம் - ம். இனத்திற்கு ஒரு எழுத்து 'உம்' மைச் சேர்த்து முருகு என்றாயிற்று. எனவே முருகப் பெருமான் தமிழே தானாய், தானே தமிழாய் ஆகி உலகம் காப்பான். (உ - ஸ்திதி — காத்தல் குறித்த எழுத்து. ஓம் என்ற பிரணவம் அகர, உகர, மகரமாகப் பிரியும். அவற்றில் நடு எழுத்தாகிய உகரம் - ஸதிதி — காத்தலையும், மற்ற இரண்டும் படைப்பு, ஒடுக்கங்களையும் சுட்டுவனவாம்.)

*மு*ருகன் என்றால் அழகு, இனிமை, நறுமணம், விருப்பூட்டும் தெய்வத் தன்மை, இளமை நலம் யாவும் கூடிய கூட்டுக் கலவையாய் இருப்பவன் என்று பொருள். 'மணங் கமழ் தெய்வத்து இள நலம் காட்டுவான்' என்று நக்கீரரின் தமிழ் அர்ச்சனை. கூறும்.

*த*மிழில் அர்ச்சனை முறையை உலகிற்கு வழங்கியவர் நக்கீரர். திருமுருகாற்றுப்படையில்

> 'நெடும் பெறும் இமயத்து நீலப் பஞ்சுனை
> ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
> அறுவர் பயந்த ஆறமர் செல்வ' —

என்பது தொடங்கி 'போர்மிகு பொருந குரிசில்' என்பது ஈறாக 25 அடிகள் முருகப் பெருமானை விழித்துப் போற்றும் அர்ச்சனை (போற்றி) மாலையாக நக்கீரர் வழங்கியுள்ளார்.

*மு*ருகன் மயில் வாகனம், கோழிக் கொடி, வேற்படை உடைய கடவுள். சில தலங்களில் முருகனுக்கு யானை ஊர்தியும் ஆட்டுக்கிடாய் வாகனமும் உண்டு.

*மு*ருகனும் சிவபிரானும் வேறுவேறல்லர். இருவரும் ஒருவரே. 'ஈசனே அவனருள் ஆடலால் மதலை ஆயினான் காண்' என்று கந்தபுராணம் கூறும்.

*மு*ருகன் திருவவதாரம் நடந்த போது, சிவபிரான் ஆறு திருமுகம் கொண்டு அமர்ந்திருக்க, ஒவ்வொரு முகத்தின் நுதல் கண்ணில் இருந்து ஒவ்வொன்றாக ஆறு நெருப்புப் பொறிகள் தோன்றிவர, அவை குழந்தைகளாய் வடிவங் கொண்டன. பின் உமையம்மை, அவற்றைத் தமது திருக்கரங்களினால் தழுவி எடுத்தணைத்து, ஒரு திருமேனியும் ஆறுமுகங்களும் உடைய சண்முகப்பிள்ளையாக அமைத்தாள்.

முருகன் அருள்வேண்டி மேற்கொள்ளும் விரதங்கள் பல. அவற்றுள் வாரம்தோறும் வெள்ளிக்கிழமை, மாதந்தோறும் சஷ்டி திதி, கார்த்திகை நட்சத்திரம், ஆண்டு தோறும் மகா ஷஷ்டி ஆகியன இடம் பெறும். மகா ஷஷ்டித் திருநாள் ஐப்பசி மாதம் வளர்பிறையில் வரும் முதல் ஆறு நாட்களில், ஆறாம் நாள் அன்று தான் முருகன் கைவேலால் சூரபதுமன் பெருவாழ்வு பெற்றான்.

முருகனிடம் உபதேசம் பெற்று பேறு பெற்றவர்கள் மூவர் - அ. தந்தையாம் சிவபிரான் ஆ. பொதிய முனி அகத்தியர் இ. அருணகிரிநாதர்.

அருணகிரிநாதர் முருகன்மீது திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழ்ப் பாடல்கள் மொத்தம் பதினாறாயிரமாகும். ஆனால், இன்று கிடைத்திருப்பவை சுமார் பதினான்காயிரம் பாடல்கள் வரை தான்.

வால்மீகி முனிவர் அருளிய வடமொழி இராமகாதையில் முருகப் பெருமான் திருக்கதை இடம் பெற்றுள்ளது.

பகவத் கீதையில் கண்ணபிரான் 'சேனைத் தலைவர்கட்குள் நான் கந்தனாய் இருக்கிறேன்' என்று கூறுகிறார்.

சிவபிரான் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தல் இல்லை. எனவே, 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று தமிழ் நூல்கள் கொண்டாடும். ஆதலின், இப்பிரானைப் பாட்டுடைத் தலைவனாய்க் கொண்டு பிள்ளைத் தமிழ் (பிரபந்தம்) பாடுதல் மரபில்லை.

இதற்கு எதிராக, சிவபிரான் திருமகனாகிய முருகப் பெருமான் மீது தான் மிக அதிகமான பிள்ளைத் தமிழ் நூல்கள் எழுந்துள்ளன.

நான்காம் படைவீடாகிய திருஏரகத்தில் (சுவாமிமலை) முருகன் ஞானாசிரியனாகப் போற்றப்பெறுவான். முருகனிடம் பிரணவப் பெரும் பொருளைப் பரம்பொருளாம் சிவபிரான் உபதேசம் பெற்றாராம். அப்பொழுது ஆசிரியனான முருகக் குழந்தையைத் தன் மடி மீது இருத்தி, மாணவ நிலையில் பரமசிவனார் கைகட்டி, வாய்பொத்திப் பாடம் கேட்டாராம். பிரணவ மந்திரத்திற்கு முருகன் விரிவுரைப் பாடத்தைத் தமிழ் வழி (tamil medium) யாக உரைத்தானாம்.

'கொன்றைச் சடையாற்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழிற் பகர்வோனே'

எனத் திருப்புகழ் கூறும்.

முருகன் திருக்கரத்தில் உள்ள வேலாயுதம் - ஞானசக்தி. அவன் தேவியருள் தெய்வானையம்மை – வானவர் மங்கை, கிரியாசக்தி. குறமகளாம் வள்ளிநாயகி - இச்சா சக்தி ஆவர்.

திருப்பரங்குன்றம், திருவிடைக்கழி எனற இரண்டு தலங்களிலும் முருகனும் தெய்வானையுமே கோயில் கொண்டுள்ளனர். அங்கு வள்ளியம்மைக்குச் சந்நிதி இல்லை.

முருகப் பெருமானுக்குரிய திருமந்திரம் திருஆறு எழுத்து 'சரவணபவா' என்னும் மந்திரம். அதனினும் சிறந்த ஆறெழுத்து மறை (ஓம்)'குமாராயநம' என்பர் பெரியோர். சிவபிரானே

'நாதா குமரா நம' என்று ஓதினார் என கந்தரனுபூதி பேசும். குமரா நம என்று ஒரு முறை ஓதினால் மரண பயமும் மறுபிறப்பும் இல்லாமல் போகும். முருகன் திருவடிப் பேறு கிடைக்கும் எனபார் சிதம்பர சுவாமிகள் (திருப்பேரூர்ச் சந்நிதி முறை).

காஞ்சியில் உள்ள குமர கோட்டத்தில் எழுந்தருளும் முருகப் பெருமான் கந்தபுராணச் சுவடிகளை – கச்சியப்பர் பாடிய கையெழுத்து ஏட்டுப் படிகளை ஒவ்வொரு நாளும் திருத்தி வைத்தவன் என்பது மரபு.

*முருகனின் ஆறுபடை வீடுகள் ஆறு ஆதாரங்கள். ஆறு நிலைகளைக் கூறுவன அவை:-*

| | | | | |
|---|---|---|---|---|
| *திருப்பரங்குன்றம்* | - | *உல்லாசம்* | - | *மூலாதாரம்* |
| *திருச்செந்துர்ர்* | - | *நிராகுலம்* | - | *சுவாதிஷ்டானம்* |
| *திருஆவினன்குடி (பழனி)* | - | *யோகம்* | - | *மணிபூரகம்* |
| *திருஏரகம் (சுவாமிமலை)* | - | *இதம்* | - | *அநாகதம்* |
| *திருத்தணி (குன்றுதோறாடல்)* | - | *சல்லாபம்* | - | *விசுத்தி* |
| *பழமுதிர்ச்சோலை* | - | *வினோதம்* | - | *ஆக்ஞை* |

அகத்தியருக்கு முருகன் திருமணக் கோலம் காட்டிய தலமே வள்ளிசேர்ப்பாக்கம். அத்தலம்தான் பெயர் மருவி வளசரவாக்கம் என்று வழங்கி வருகிறது (இது சென்னை நகரின் ஒரு பகுதி).

சிவனடியார்கள் வரலாறு கூறும் பதிவு நுர்லாகிய பெரியபுராணம் சேக்கிழாரினால் இயற்றப்பெற்றது. சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் அது பன்னிரண்டாம் திருமுறையாகும். அதேபோல், முருகவேள் புகழ் மாலைகள் தொகுத்துப் பன்னிரு திருமுறைகளாக அடைவு செய்யப் பெற்று உள்ளன. அங்கும் 12ம் திருமுறையாக முருகன் அடியார் வரலாறு பாடும் ஒரு பதிவு நூல் உள்ளது. அதற்குச் சேய்த்தொண்டர் புராணம் என்று பெயர். அப்புராணத்தின் ஆசிரியர் வரகவி சொக்கலிங்கனார் என்பார்.

# இந்து மதம்

**மகாவித்துவான் ஆறுமுக நாவலர்**
**நாகர் கோயில்**

### மதம் என்றால் என்ன?

இவ்வுலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் துன்பத்தை வெறுத்து, இன்பத்தை அடைய விரும்புகின்றனர். அவ்வின்பமும் நீடித்து நிலைபெற்று இருக்க வேண்டுமென்பது அவர்களது விருப்பம். மக்கள் அனைவரும் தம் வாழ்நாட்களில் சிறிதுகாலம் இன்பத்தையும் சிறிது காலம் துன்பத்தையும் மாறிமாறி அனுபவித்து வருவதை நாம் காண்கிறோம்.

இவ்வாறு உலகப் பொருள்கள் வழியாக மக்கள் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பம் எனப்படும். உலகப் பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மை உடையனவாதலால் சிற்றின்பமும் என்றும் நிலைபெற்று நில்லாது அழிந்து விடுகிறது. என்றும் நிலைபெற்று நின்று இடையறாது அனுபவிக்கத்தக்க இன்பம் ஒன்று உளது. அவ்வின்பம் பேரின்பம் எனப்படும். இப்பேரின்பத்தை மக்கள் அனுபவிக்கப் பெரியோர்கள் இறைவன் அருளோடு வகுத்த வழியே மதமாகும்.

### மதப் பெயர்க் காரணம்

சில மதங்கள் அம்மதத்தினர் வழிபட்டுவரும் கடவுள் பெயரால் அமைந்துள்ளன: உதாரணம் - சைவம், வைணவம் முதலியன. வேறு சில மதங்கள் அதனை நிறுவியவர் பெயரால் அமைந்துள்ளன: உதாரணம் - பௌத்தம், ஜைனம் முதலியன. சில மதங்கள் அம்மதத்திற்குரிய தலை சிறந்த நூலின் பெயரால் அமைந்துள்ளன: உதாரணம் - வேதாந்தம், ஸ்மார்த்தம் முதலியன.

### இந்து மதம் என்பதன் பொருள்

ஆரியர்கள் சிந்து நதி தீரத்தில் வசித்து வந்தபோது அவர்களை 'சிந்துக்கள்' அல்லது 'இந்துக்கள்' எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர் என்றும், அந்தச் சிந்துக்களின் மதமே இந்து மதமென ஆயிற்று என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப் பொருள் கூறுவாருமுளர்.

ஒரு நாட்டின் பெயராலோ, ஓர் ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. ஆதலால், இதன் உண்மைப் பொருளை அறியவேண்டியது அவசியமாயிற்று. இந்து மதம் எனும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம் - து எனப் பிரிக்கலாம் (ஹிம்: ஹிம்சையில் து: - துய்க்கின்றவன்)

ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாய் எவன் ஒருவன் பணிபுரிகிறானோ அவன் இந்து ஆவான். அப்பண்பு வாய்ந்த மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும். இக்கருத்தை –

ஹிம்ஸாயாம் தூயதே ய: ஸ: ஹிந்து
இத்யபி தீயதே

என்ற சுருதி வாக்கியத்தாலும் அறியலாம். இதிலிருந்து இந்து மதம் என்பதற்கு அன்பு மதம் எனப் பொருள் கொள்ளலாம்.

'அஹிம்ஸா பரமோதர்ம' மேலான அறம் எனப்படுவது அஹிம்ஸையே. அஹிம்ஸையாகிய அரும்பு அன்பாகிய மலராக மலர்கிறது. அன்பிற்கு அடிப்படை அஹிம்ஸையே ஆகும்.

அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காது உறைகிறான். எல்லா உயிர்ப் பிராணிகளுடைய உடம்பையே அவன் கோயிலாகக் கொண்டிருக்கிறான். ஆதலால், எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடத்து அன்பு செலுத்தினால் அன்புருவாய் ஆண்டவனது அருள் பெறலாம்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

எனத் திருமந்திரம் கூறுகிறது.

இந்து மதம் என்பதற்கு 'சனாதனதர்மம்' என வேறு ஒரு பெயர் கூறுவாரும் உளர். இதற்கு அழிவிலா அறம் என்பது பொருள். அன்றியும் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்ந்நெறி, சன்மார்க்கம் என்பன போன்ற பல பெயர்களை இட்டு வணங்குவாரும் உளர். மதத்தைச் சமயம் எனவும் கூறுவர். சமயம் என்பதற்கு சமை என்பது பகுதி. உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருட்களைச் சமைப்பது போல் இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப் படுத்துவது என்பது அதன் பொருளாகும்.

சமயம் நமது கண்ணால் காணப்படும் உலகத்தையும், அனுமானத்தால் அறியத் தகுந்த ஆன்மாவினையும், இறைவனையும் இனிது காட்டும் ஞான ஒளி. மனிதனுடைய உடல் நலத்திற்கும் உளநலத்திற்கும்உதவும் அமுதம். மனிதர் அன்போடு அளவளாவி வாழ்வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்கபீடம். மனிதர்களுடைய இகபர வாழ்வுக்குரிய நலன்கள் அனைத்தையும் அருளும் கற்பக மரம்.

**இந்து மதப் பெருமைகள்**

(அ) இந்து மதம் காலத்தால் மிகவும் மிகவும் முந்தியது. அது ஒரு காலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சிமுதலியவற்றால் அறியலாம்.

(ஆ) பிற மதங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து மதத்தில் அநாதியாகவே இடம் பெற்றுள்ளன. ஆதலால், உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாயக மதம் இந்து மதம் எனக் கொள்ளலாம்.

(இ) இந்து மதம் எந்த மதத்தையும் இழிவு படுத்தாமல் குஞ்சணைக்கும் தாய்போல் அணைத்து விளங்குகின்றது. உலகில் உள்ள சில மதத்தினர் 'தங்கள் மதத்தின் வழியாகவேதான் முத்தி அமைய முடியும், வேறு மதங்களின் வழியாக முடியாது' எனக் கூறுகின்றனர். சிலர் தம் மதத்தைச் சாராதவர்களைப் பாவிகள் என்றும், அஞ்ஞானிகள் என்றும் கூறுகின்றனர். ஒரு மரத்தில் ஏறிப் படர்ந்து தழைத்துப் பூத்த படர்கொடி அம்மரத்தினிடமே தன் சிறப்பைக் கூறுவது போல இந்து மதத்தினிடமே அவை தற்பெருமை பேசுகின்றன. தூங்கும் சிங்கத்தின் மேலேறிக் குதிக்கும் சிறு பிராணிகள் போல இந்து மதமாகிய சிங்கத்தினிடம் வேறு சில மதங்கள் விளையாடுகின்றன. இவற்றை இந்து மதம் தனது பெருந் தன்மையால் பொறுத்துக் கொண்டிருக்கிறது.

(ஈ) இந்து மதம் வெறும் நம்பிக்கையோடு நின்று விடாமல் ஒவ்வொரு கொள்கைகளையும் ஆராய்ந்து, ஐயங்களை அகற்றி, அறிவினைப் புகட்டுவது.

(உ) மனிதர்களைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தாது சுதந்திரத்தோடு வாழச் செய்வது.

(ஊ) இல்லறத்தாரும், துறவறத்தாரும் முத்தி பெறலாம் எனக் கூறுவது.

(எ) உலக வாழ்க்கையோடு மத வாழ்க்கையும் இணைந்து மேற்செல்ல வழிகாட்டுவது

(ஏ) ஆண், பெண், சிறுமியர், வாலிபர், வயோதிபர், உயர்ந்த வகுப்பினர், தாழ்ந்த வகுப்பினர் என்ற பேதமின்றி யாவரும் முத்தி பெறலாமெனக் கூறுவது.

(ஐ) முத்தி பெறுவதற்கு உரிய வழிகளை மக்களின் தகுதிக்கு ஏற்ப வகுத்து வழிகாட்டுவது.

(ஒ) மக்கள் செய்த நல்வினை, தீவினைகளுக்குத் தக்கவாறு மறுபிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தி, மக்களின் இன்ப, துன்ப வாழ்வுக்குக் காரணம் அதுவே என்பதை விளக்குவது.

(ஓ) சில மதங்கள் விஞ்ஞானத்துக்குப் பொருத்தமற்ற கொள்கைகளை உடையனவாய் இருக்க, இந்து மதம் விஞ்ஞானத்தாலும் உணரமுடியாத மெய்ப் பொருள்களைத் தனது மெய்ஞ்ஞானத்தால் இனிது இயம்புவது.

(ஔ) இவ்விதப் பெருமைகளை வேற்றுநாட்டுப் பெருமக்களின் மாபெரும் கூட்டங்களில் சுவாமி விவேகானந்தர் போன்ற இந்துமத ஞானிகள் எடுத்தியம்பியுள்ளனர். அவற்றைக் கேட்ட பல மேல்நாட்டு அறிஞர்களும், பத்திரிகை ஆசிரியர்களும் இந்து மதத்தைப் பெருமைப் படுத்திப் பேசியும், எழுதியும் பாராட்டியுள்ளனர். சிலர் இந்துக்களாகி இனிது வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய இந்துமதப் பெருமைகளை நாம் இனிது நன்றாய் அறிவதோடு பிறநாட்டினருக்கும் இவற்றை விளக்கிக் கூறித் தக்க பணியாற்றுவது நமது இன்றியமையாத கடமையாகும்.

# நகரத்தாரின் கதிர்வேலாயுத சுவாமி கோயில்கள்

**முனைவர் ந. வேல்முருகு**
**பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை, இலங்கை**
**வருகைதரு பேராசிரியர், ஆசியவியல் நிறுவனம், சென்னை**

தென் இந்தியாவில் தேவகோட்டை, புதுக்கோட்டை, கள்ளல், இராமநாதபுரம், காரைக்குடி, செட்டிநாடு ஆகிய பகுதிகளிலிருந்து உலகின் பல பாகங்களுக்கும் வர்த்தகத்தின் நிமித்தம் சென்ற நகரத்தார் பல சகாப்தங்களாக இலங்கையிலும் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயினர். சிறப்பாக 1796ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் பிரித்தானியரது ஆட்சி நிலை நிறுத்தப்பட்டதன் பின்னர் நகரத்தார் இலங்கையில் தமது முதலீடுகளை அதிகரித்ததோடு பல்வேறு வகையான வர்த்தகங்களிலும் ஈடுபடலாயினர். பிரித்தானியரது ஆட்சியின்போது பல ஆண்டுகளாக இந்திய இலங்கை ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தின் மூலமும் வங்கியாளர்களின் 'இடைத் தரகர்களாக' செயல்பட்டதன் மூலமும், ஏனைய வழிகளிலும் பெரும் செல்வமீட்டினர். இவ்வாறு ஈட்டிய லாபத்தின் ஒரு பங்கினைத் தானதர்மங்களிலும், கோயிலைக் கட்டுவதிலும் செலவிட்டனர்.

நகரத்தார் இலங்கையின் பல்வேறு இந்துக் கோயில்களை நிறுவியுள்ளனர். அவற்றுள் சிறந்து விளங்குவன அவர்களால் நிறுவப்பட்ட கதிர் வேலாயுத சுவாமிக்கான (கதிரேசன்) கோயில்களாகும். கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, இரத்தினபுரி, நாவலப்பிட்டி, கம்பளை, புசல்லாவை, மாத்தளை, குருநாகல் முதலிய இடங்களில் நகரத்தார் கதிரேசன் ஆலயங்கள் என அழைக்கப்படும் ஆலயங்களை நிறுவி இன்றுவரை பராமரித்து வருகின்றனர். இலங்கையின் மிகப் பெரிய நகரமாகத் திகழும் கொழும்பில் நகரத்தாரால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படும் நான்கு கதிரேசன் ஆலயங்கள் உள்ளமை சிறப்பாக நோக்க வேண்டிய ஒன்றாகும்.

இவ்வாலயங்களில் மூலமூர்த்தி உருவாக்கப்பட்டபோது பெரும்பாலாக 'செட்டி முருகனின்' கதிர் வேலாயுதமானது வழிபடப்பட்டமையால், அக்கோயில்கள் 'கதிர் வேலாயுத சுவாமி' கோயில்கள் என அழைக்கப்பட்டன. ஆகம விதிகளின்படியே சிவன் கோயில்களை அமைக்க வேண்டியிருந்தமையால் சிவன் கோயில்களை அமைக்காது ஆகம விதிகளின்றி அமைக்கக் கூடிய வேலாயுதம் கொண்ட கதிரேசன் கோயில்களை நகரத்தார் நிறுவத்தலைப்பட்டனர். நாளடைவில் கதிரேசன் கோயில்கள் எனப்பட்ட இக்கோயில்களில் மூலமூர்த்திகளாக முருகன் சிலைகள் அல்லது பிள்ளையார் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

இக் கோயில்கள் யாவும் நகரங்களின் முக்கிய பகுதிகளில் பிரதான வீதிகளை முகப்பாகக் கொண்டு அமைந்துள்ளன. சிறு கோபுரங்களைக் கொண்ட இக் கோயில்கள் கலை அழகு மிக்கனவாக மிளிர்வதுடன், பெரும்பாலான கோயில்களில் அழகிய சிற்பங்களும், ஐம்பொன்னினால் வார்க்கப்பட்ட மிக அழகிய திருமேனிகளும், தஞ்சாவூர் ஓவியங்களும், கண்களைக் கவரும் கலையம்சங்கள் பொருந்திய அலங்கார மரச் செதுக்கு வேலைப்பாடுடைய கதவுகளும், கதவு நிலைகளும் காணப்படுகின்றன. புசல்லாவை, கம்பளை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட கதிரேசன் கோயில்கள் இவற்றிற்குத் தக்க சான்றுகளாகத் திகழ்கின்றன. இக் கதிரேசன் கோயில்களில் காவல் தெய்வமாக உள்ள இடும்பனுக்குத் தனியான சிலைகள் நிறுவப் பட்டுள்ளதோடு தனியான பூசைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சில தசாப்தங்களுக்கு முன்னர் கோயில் திருவிழா நடைபெற்று முடிந்த ஏழாம் நாளன்று நடைபெறும் இடும்பன் பூசையில் ஆடு, கோழி

என்பனவற்றைப் பலியிடும் வழக்கம் இருந்தது. ஆனால், தற்போது இதற்குப்பதிலாக நீற்றுப் பூசனிக்காய் வெட்டப்படுகிறது.

நகரத்தாரின் கதிரேசன் கோயில்கள் பலவற்றிலும் முருகன், இடும்பன் ஆகிய தெய்வங்களுடன் சிவன், அம்மன், பிள்ளையார், நாகதம்பிரான், நவக்கிரகம் ஆகிய பரிவார தெய்வங்களும் உள்ளன.

நாளாந்த பூசைகளுடன் விசேட தினங்களான தைப்பூசம், பங்குனி உத்திரம், கார்த்திகை, கந்த சஷ்டி, நவராத்திரி, திருவெம்பாவை முதலான தினங்களில் விசேட வழிபாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கொழும்பிலும், காலியிலும் ஆடிவேல் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கமாகும். கொழும்பு செட்டியார் தெருவில் அமைந்துள்ள பழைய கதிர் வேலாயுத சுவாமி கோயிலில் இருந்தும் இவ்வாலயங்களின் வேல், ஒன்றுவிட்ட ஒரு வருடத்திற்குக் கோலாகலமாக மாறிமாறி கொழும்பு மாநகரில் பவனி வரும்போது வெள்ளி ரதத்திலும், தங்க ரதத்திலும் வலம் வருவது வழக்கமாகும். கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள பழைய கதிர் வேலாயுத சுவாமி கோயிலில் இருந்து பவனியாக எடுத்து வரப்படும் வேல் பம்பலப்பிட்டியிலுள்ள 'உபய கதிர்காமம்' எனப்படும் பழைய கதிர் வேலாயுத சுவாமி கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மூன்று தினங்கள் கொலு வீற்றிருந்து அருள்பாலித்து பின் மீண்டும் செட்டியார் தெருவிலுள்ள பழைய கதிரேசன் கோயிலை வந்து சேரும். இதேபோல கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள புதிய கதிரேசன் கோயிலில் இருந்து ஒன்று விட்ட ஒரு வருடம் பம்பலப்பிட்டியிலுள்ள 'உபய கதிர்காமம்' எனப்படும் புதிய கதிரேசன் கோயிலுக்குப் பவனியாகத் தேரில் எடுத்துவரப்பட்டு மூன்று தினங்கள் கொலு வீற்றிருந்து அருள் பாலித்தபின்னர் மீண்டும் செட்டியார் வீதியிலுள்ள புதிய கதிரேசன் கோயிலை வந்து சேர்வது வழக்கமாகும்.

இந்த ஆடிவேல் விழாவின் போது கொழும்பு மாநகரம் திருவிழாக் கோலம் பூண்டு திகழும்.

புசல்லாவை நகரிலுள்ள கதிரேசன் கோயிலில் சில தசாப்தங்களுக்கு முன்னர் வருடத்தில் மூன்று தினங்களுக்கு திருவிழாக்கள் நடைபெற்றன. ஆனால் தற்போது வருடத்தில் ஒரு நாள் மட்டும் திருவிழா நடைபெறுகின்றது. இத்திருவிழாவுக்கென நகரத்து வணிகர்களிடமிருந்து தகுதிக்கேற்ப நிதி சேகரிப்பதுண்டு.

நாட்டுக்கோட்டை நகரத்தாரால் நிறுவப்பட்ட இக்கோயில்கள் வேற்றுமைகளில் ஒற்றுமையைக் காணவும், பல்வேறு மக்களிடம் உறவை ஏற்படுத்தவும் உதவுகின்றன. இதனால்தான் இலங்கையில் வன்செயல்கள் நடைபெற்ற காலங்களிலும் இவ்வாலயங்கள் பாதிப்புறவில்லை. இவ்வாலயங்களுக்குச் சொந்தமான கடைகள், கட்டிடங்கள் மூலமும், உண்டியல் வருவாய் மூலமும் இவைகள் நிர்வகிக்கப் படுவதால் சமய வாழ்வு, கலை, கலாச்சாரம் என்பன தொடர்ந்தும் பேணி வளர்க்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களின்போதும், விசேட நாட்களிலும் காவடி ஆட்டம், கரகாட்டம், இசைநிகழ்ச்சிகள் என்பன நடைபெறுகின்றன. சில ஆலயங்களில் யாத்திரீகர்கள் தங்கிச் செல்லக்கூடிய வசதிகளும் உள்ளன.

நகரத்தாரால் நிறுவப்பட்ட இக்கோயில்கள் மூலம் இந்து சமய நம்பிக்கைகளும், அநுட்டானங்களும் தொடர்ந்து பேணப்படுவதுடன் இலங்கையில் இந்துப் பண்பாட்டிற்குரிய நிலைத் தோற்றங்கள் உருவாகவும், தொடர்ந்து பேணப் படுவதற்கும் காரணமாக உள்ளன.

குறிப்பு – பழைய கதிர் வேலாயுத சுவாமி கோயில், புதிய கதிர் வேலாயுத சுவாமி கோயில் என அழைக்கப்பட்டு வருகிற போதும் இக் கோயில்களின் மூலமூர்த்தியாகப் பிள்ளையாரே உள்ளார்.

# வளம் நிறைந்த நாட்டில் வானுயர்ந்த முருகன்

**இந்து மக்களுக்கு உலகப் புகழ் தரும் 140 அடி உயர முருகன் சிலை**

வாரீர், பாரீர் என அமைக்கிறார் முருகன். காணக் கண் கோடி வேண்டும். இந்த அருட் காட்சி மலேசிய நாட்டில் நிகழ்கிறது.



தக, தகவென கண்ணைப் பறிக்கும் தங்க நிறப் பொன் மயமான மேனி. காலைக் கதிரவனின் பொற் கதிர்களுடன் போட்டியிடும் காட்சி. கையில் நீளமான வினையறுக்கும் வேல். கழுத்தையும், மார்பையும் அலங்கரிக்கும் நீண்ட பொன்னிறமான மாலை. சிற்பிக ளின் கைவண்ணத்திலும், கலைவண்ணத்திலும் வடித்தெடுக்கப்பட்ட அருள் சுரக்கும் வசீகரம்.கந்தனாக, கடம்பனாக, கந்தசுவாமியாக, கார்த்திகேயனாக, மயிலோ னாக,. சுப்பிரமணியனாக, சேயோனாக, வேலனாக - இப்படி மனதில் நினைப்பவர்க் குக் காட்சி தருபவனாக வானளாவ உயர்ந்து நிற்கிறார் எமது தமிழ்க்கடவுள்.

மலைச் சாரலில் 140 அடி உயரம். இந்துக்கள் வாழும் வேறு எந்த நாட்டிலும் இப்படியான சிலை அமைப்புக் கிடையாது. முருகனின் புதுமை நிலை இதுவாகும். உலக அதிசயங்களையும், சாதனைகளையும் வெளியிட்டு வரும் 'கின்னஸ்' புத்தகத்தில் இந்த முருகன் சிலை இடம் பெற உள்ளது.

இந்த முருகன் சிலையை உருவாக்க 1550 கன மீட்டர் சிமெந்துக் கலவை, 250 தொன் எடை இரும்புப் பாளம், தாய்லாந்திலிருந்து பெறப்பட்ட 350 தொன் தங்க முலாம் பூச்சுப் போன்றவை உபயோகிக்கப் பட்டுள்ளன. 15 இந்தியச் சிற்பிகளின் கைவண்ணக், கலைவண்ணப் படைப்பு. செலவு – 666,215 டாலர்கள்.

மலேசியத் தலைநகர், கோலாலம்பூருக்கு வடக்கே உள்ள பிரசித்தி பெற்ற பத்துக்கேவ் முருகன் (குகைக் கோயில் எனவும் அழைப்பர்) ஆலயத்தோடு அணைந்திருந்து இந்த அழகன் முருகன் காட்சி தருகிறார்.

1891ம் ஆண்டு தம்புசாமிப்பிள்ளை என்னும் இந்திய வர்த்தகர் பத்துக்கேவ் என்ற இந்தக் குகையில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் திருவுருவத்தினைப் பிரதிஷ்டை செய்து கோயிலை ஆரம்பித்து வைத்தார். இக்கோயிலில் 1892ம் ஆண்டு தொடக்கம் தைப்பூச விழா மிக விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. இன்று மலேசிய இந்துக்கள் பக்தி மயமாகக் கொண்டாடும் இவ்விழாவில் சீனர்கள், மலாய்க் காரர்கள், வெளி நாடுகளைச் சேர்ந்தவர்கள் என இன, மத வேறுபாடின்றிக் காவடிகள் சுமந்து நிவர்த்திக் கடன்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

With Best Compliments from

# Manjula Hardwares

***Dealers in Cement, Asbestos Sheets & Suppliers of Building Materials***

**No. 2, Nelson Place, Wellawatte,**
**Colombo - 06.**
**Tel: 236 1967**

# திருக்கோவில்கள்

**பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்**

**முதுநிலைப் பேராசிரியர் - வரலாற்றுத்துறை**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



நாவலர் பெருமான் நமது சைவ வாழ்வின் நோக்கம் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்.

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முக்தி இன்பம் பெறும் பொருட்டேயாகும்'

கடவுள் வழிபாட்டை இயற்றுவதற்கு இரண்டு இடங்கள் உள. ஒன்று அகம் அல்லது மனம். மற்றது புறம் (கோயில் வழிபாடு). மனத்தினாலே கோயில் கட்டி வழிபாடு செய்தவர் பூசலார் நாயனார் ஆவர். இதன் சிறப்பை அப்பர் சுவாமிகளும் பின்வரும் தேவாரத்தின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறை நீரமையாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

மற்றது மனதிற்குப் புறம்பான திருக்கோயில் வழிபாட்டைக் குறிப்பதாகும். அகவழிபாட்டை எல்லோராலும் கடைப்பிடிப்பது இலகுவன்று. இதனாற்றான் திருக்கோயில் வழிபாட்டை நம்முன்னோர் வலியுறுத்தினர். ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டே இறைவன் பல்வேறு திருமேனிகளைத் தாங்கிக் கோயில்களிலே எழுந்தருளியிருக்கின்றான். கோயில்களில் நடைபெறும் நித்திய நைமித்திய பூசை வழிபாடுகள், விழாக்கள் ஆகியன மனித சமுதாயத்தை மேம்படுத்தவே இயற்றப்படுகின்றன. இதனால் நமது வாழ்வின் உயிர் நாடியாக விளங்குபவை திருக்கோயில்களே என்பதை அப்பர் சுவாமிகள் 'திருக்கோயில் இல்லாத் திருவிலூரும் ஊரல்ல அடவி காடே' எனவும் - 'ஆக்கையாற் பயன் என் அரன் கோயில் வலம் வந்து, பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றிடா, ஆக்கையாற் பயன் என்' எனவும் கூறிப் போந்தார்.

ஆலய அமைப்பின் தத்துவம் பற்றிச் சைவ அறிஞர் கலாநிதி மு. கந்தையா அவர்கள் தமது 'சிவாலய சேவை ஏன்? எப்படி?' என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார் -

மல்லாந்து படுக்கும் ஒரு ஞானியின் உடலின் தோற்றத்துக்கும் ஒரு ஆலய அமைவின் தோற்றத்திற்கும் இடையே ஒப்புமையுண்டு. மனித உடலில் சிரசு, கண்டம், மார்பு, தொப்புள், மூலாதாரம், பாதம் என்பன பிரதான பகுதிகள். ஓர் ஆலயத்தில் கர்ப்பக் கிருகம், அந்தராளம், நந்தி, கொடிமரபீடம், கோபுரம் என்பன பிரதான பகுதிகள். முதலாவதில் உள்ள ஒவ்வொரு அம்சமும் இரண்டாவதிலுள்ள அம்சங்களுக்கு நேருக்கு நேர் அமையும் சிறப்பு அவதானிக்கத்தகும். மேலும் இதுபற்றி அவர் விவரிக்கையில் -

இவ்வாறு உடலமைப்பைப் பிரதிபலிக்கும் பாங்கில் ஆலயம் இருப்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டியவை அதிகாதிகம். உடலில் உயிருக்குயிராய் இருக்குஞ் சிவனை

ஒவ்வொருவரும் தன்னிலே தான் கண்டு அவனை அடைதலே முடிந்த முடிபாகிய வாழ்க்கைப் பயன். எனில், அதற்காக முன்னோடிச் சாதனையாய் இருக்கும் சிவ வழிபாட்டிற்குரிய இடமாகிய ஆலயமும் அவ்வாறே அமைவதில் அபாரப் பொருத்தமுண்டு. ஆலய பூசகர்களும், சிவ பூசகர்களும் (சிவ பூசையாளர்) இந்தப் பொருத்த நிலையின் அடிப்படையிலே பூசையாற்றுகின்றனர்.

திருக்கோயில்வழி ஒழுகும் பக்திக் கொள்கையே நமது சமய வாழ்க்கையின் ஆதாரமாகவுள்ளது. இதனாற்றான் திருக்கோயில் இல்லாத ஊர் அடவி காடே எனக் கூறப்பட்டது. உள்ளும் புறமும் தூய இறையுணர்வைப் பெறுதற்குரிய சாதனங்களாக சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களை நம்முன்னோர் தமது இறையனுபவத்தின் மூலம் நமக்கு எடுத்துக் காட்டிச் சென்றனர். திருக்கோயிலிலுள்ள மூர்த்தியின் காட்சியையும், வழிபாட்டு முறைகளையும் கண்டு நமது கண்கள் புனிதமடைகின்றன. பக்திப் பாடல்களையும், அந்தணப் பெருமக்களின் பிரார்த்தனைகளையும் கேட்டு நமது காதுகள் புனிதமடைகின்றன. இறைவனை வணங்கி நமது கைகள் புனிதமடைகின்றன. திருக்கோயிலை வலம் வந்து நமது கால்கள் புனிதமடைகின்றன. இவ்வாறு நமது அங்கமெல்லாம் புனிதமடையும் வழிபாட்டின் மூலம் சிவபுண்ணியத்தைத் தேடிக்கொள்ளுகிறோம். சிவபுண்ணியம் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்றவற்றைக் குறிக்கும். ஆன்ம ஈடேற்றத்திற்குச் சிவ புண்ணியமே அவசியமானது. அந்தக் கரணங்கள் அடங்கி சித்த விருத்திகள் அற்ற நிலை யோகமாகும். யோக சாதனையில் காயமே கோயிலாகிறது. சலனமற்ற உள்ளம் இறைவன் சந்நிதானமாகிறது. ஆன்மா கருவி கரணங்களினின்றும் பிரிந்து, தன்னை அறவே இழந்து, சுத்த அறிவாக இலங்குமிடத்துத்தான் சிவத்தோடு அந்நியமாய் இருப்பதை உணர்கிறது. இந்நிலை நின்றோர் ஜீவன் முத்தராவர். இதனாற்றான் மாணிக்கவாசகரும் -

பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட

என்றார். சைவத்தின் ஞானபதம் சைவசித்தாந்தம் எனப்படும். ஆன்மா பந்தத்திலிருந்து நீங்கி வீடுபேறு அடையும் நிலையை விளக்குவதே இதன் நோக்கமாகும். ஆன்மா எனும் பசு பந்தபாசங்களில் கட்டுண்டு பின்னர் அதிலிருந்து ஈசனருளால் விடுபட்டுச் சிவத்தை (பதியை) அடையும் மார்க்கத்தையே இது விளக்குகிறது. பதி, பசு, பாசக் கோட்பாடு, சிவத்தின் ஐந்தொழில் ஆகியவற்றின் உறைவிடமாக விளங்குவது ஆலயங்களே.

ஆலயம் என்ற பதங்கூட அலைகின்ற மனதைப் பக்குவப்படுத்தி லயப்படுத்தும் இடம் எனப் பொருள் தருகின்றது. மனதை ஒருவழிப்படுத்தி மெய்மறந்து தியானத்தில் மனம், வாக்கு, காயம் ஆகியவற்றை ஈடுபடுத்தி வழிபாடு இயற்றப்படும் இடமே ஆலயமாகும். ஆலயத்தின் தோற்ற அமைப்பு, அது அமைந்திருக்கும் சூழல், அங்கு நடைபெறும் நித்திய நைமித்திய கிரியைகள் யாவும் மனதை லயப்படுத்தும் கருவிகளாக அமைகின்றன. கோயில் என்ற சொல் மன்னனது அரண்மனையையும் ஆண்டவன் இருக்கும் இருக்கையையும் குறித்து நிற்கும். அரண்மனையில் அரசனுக்கு நடைபெறுகின்ற உபசாரங்கள் போன்றே திருக்கோயில்களில் ஆண்டவனுக்கும் நடைபெற்றதால் இவ்விரண்டும் ஒரே நாமத்தால் அழைக்கப்பட்டன எனலாம்.

விழாக்கள் கூட வடமொழியில் உற்சவங்கள் என அழைக்கப்படுகின்றன. உற்சவம் என்றால் சுகம் தரும் என்பது பொருளாகும். மனதிற்கு ஆறுதல், அமைதி கிட்டவே இவை நடாத்தப்படுகின்றன. பொதுவாக நடைபெறுபவை விழாக்கள் ஆகும். ஆனால் ஆலயங்களில் நடைபெறுபவை திருவிழாக்களாகும். இத்திருவிழா என்பதும் உற்சவத்தைப் போன்று சுகம் பெற நடாத்தப்படும் விழா எனப் பொருள் தந்து நிற்கிறது.

இத்தகைய பின்னணியிற்றான் நம்முன்னோர் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டனர். எங்கும் நிறைந்த பரம்பொருளை ஒரு சிறு ஆலயத்தில் வழிபடமுடியுமா? அன்றிக் காணமுடியுமா? எனச் சிலர் கேட்கலாம். வீட்டிலும் ஆண்டவனை வழிபடலாம். ஆனால் ஆலயத்தில் கிடைப்பது போன்று மனதை ஒருவழிப் படுத்துவதற்கான சூழல் வீட்டில் அமைவதில்லை. இதனாற்றான் மனிதனது வாழ்வில் ஆலய வழிபாடு முக்கிய இடத்தை வகிக்கின்றது. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது முது மொழியாகும். எவ்வாறு பசுவின் பால் அதன் மடியிலிருந்து சுரக்கின்றதோ அவ்வாறேதான் ஈசனது அருள் சுரக்கும் இடமாக ஆலயம் அமைந்து விடுகின்றது. ஆலயத்தில் வழிபாட்டிற்குரிய மூர்த்திகள் மின்சார சக்தியை வெளிப்படுத்தும் பல்புகள் போன்றவையே. மனதை லயப்படுத்துவதில் இவை பிரதான இடத்தை வகிப்பதால் இந்து சமயத்தின் அச்சாணியாக உருவ வழிபாடு விளங்குகிறது எனலாம்.

இச்சந்தர்ப்பத்தில் நமது சமயத்தின் ஐந்தாவது குரவரும், கடந்த நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயப்பரப்பல் ஏற்படுத்திய சவால்களைச் சந்தித்து மங்கியிருந்த சைவசமயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தமது வாழ்க்கையையே அர்ப்பணித்தவருமான நல்லை நகர் தந்த ஆறுமுகநாவலர் அவர்கள் எமது சமயத்தின் அச்சாணியாக விளங்கும் ஆலயங்கள், அங்கு ஆகம வழிநின்று நடைபெறும் கிரியைகள், குருமார்கள், அறங்காவலர்கள் பற்றி இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் கூறிய கருத்துக்களை இங்கே குறிப்பிடுவது அவசியமாகிறது. நமது சமய நிலை பற்றிய நாவலரின் கருத்துக்களைப் பற்றிச் சிந்திக்கும் போதுதான் நமது சமயத்தின் இன்றைய போக்கை மாற்றி அமைத்து அதனை அதன் சிறப்புக்களுடன் நாம் பேணி ஒழுக வழி பிறக்கும். நமது ஆலயங்களில் ஆகம வழி நின்று வழிபாடியற்றுவோர் பற்றிய அவரின் கருத்துக்களை முதலில் ஆராய்வோம். இது பற்றி அவர் கூறியதாவது –

'ஆலயமாவது என்றும் வியாபகராய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம். ஆலயத்திலே செயற்பாலனவாகிய பிரதிட்டை, பூசை, உற்சவம் முதலாகிய கிரயைகள் எல்லாவற்றையும் விளக்கும் நூல்கள் ஆகமங்கள். ஓதியுணர்தற்கு யோக்கியர்கள். பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களைச் செய்பவர்களாய், ஈசுர பக்தியுடன் குரு பக்தியும் அடியார் பக்தியும் உடையவர்களாய் உள்ளவர்களே தீட்சை பெறுவதற்கு யோக்கியர்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் பக்தியும் உடையவர்களாய், தீட்சை பெற்றவர்களாய், ஆகமங்களைக் குருமூலமாக ஓதி உணர்ந்தவர்களாய், ஆகமக் கிரியைகளை மந்திரத்தோடும் பாவனையோடும் விதிப்படி செய்யப் பயின்றவர்களாய் உள்ளவர்களே ஆலயக் கிரியைகளைச் செய்வதற்கு யோக்கியர்கள். தீட்சையும், ஆகம உணர்ச்சியும் உடையவர்களே ஆயினும் நல்லொழுக்கமும், பக்தியும் இல்லாதவர்களாயின் அவர்களால் செய்யப்படும் கிரியைகளினாலே சாந்நிதியாகார் என்பது ஆகம நூற்றுணிவு'.

மேலும் திருக்கோயில்களில் சமய அறிவு புகட்டப் படல் வேண்டும் என்பதன் அவசியம் பற்றியும் அவ்வறிவுடையோரே சமயக் கிரியைகளை மேற்கொள்வதற்குத் தகுதியானவர்கள்

என்றும், அவர்களை நாம் எவ்வாறு போஷித்தல் வேண்டும் என்பது பற்றியும் நாவலர் வலியுறுத்தினார். இச்சிந்தனையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆலயங்கள் தோறும் அறிவைப் புகட்டுவதற்காகச் சமய போதகர்கள் செயற்பட வேண்டும் என்பதன் அவசியத்தையும் வற்புறுத்தியுள்ளார். ஆலயங்கள் மக்களது இறைபக்தியை ஊக்குவிக்கும் நிறுவனங்களாகவும், அதற்கான சூழலை அமைத்துக் கொடுக்கும் தளங்களாகவும் விளங்க வேண்டுமென்பதே நாவலர் அவர்களின் பேரவா என்பதைப் பின்வரும் குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

'சனங்களுக்குப் பக்தி வளர்ந்தோங்கும் பொருட்டு, ஆலயம் எங்கும் வேத ஒலியும், தமிழ் வேத ஒலியும் தழைத்தோங்கும்படி செய்தல் வேண்டும். சைவர்களுக்குத் தமிழ் வேதம், தேவார திருவாசகங்கள், வைஷ்ணவருக்குத் தமிழ் வேதம் நாலாயிரப் பிரபந்தம். சைவ மரபிற் பிறந்தவரேயாயினும் தேவார திருவாசகங்களை ஓதாதவர் சைவராகமாட்டார். வைஷ்ணவ மரபிற் பிறந்தவரேயாயினும் நாலாயிரப் பிரபந்தத்தை ஓதாவர் வைஷ்ணவராகமாட்டார். ஈசுர பக்தி வளர்தற்கு ஏதுவாகிய வாக்குகளுமேயன்றி, மற்றை வாக்குகளும் செயல்களும் ஆலயத்தில் சிறிதும் நிகழாவண்ணம் சாவதானமாகப் பாதுகாத்தல் வேண்டும்.

நாவலர் அவர்கள் ஆலயங்களில் கிரியைகள் நடாத்தும் குருமார்கள், அங்கு வழிபாடியற்றுவோர் ஆகியோரிடையே பக்குவ நிலை காணப்படல் வேண்டும் என விழைந்தது போன்று ஆலயங்களை நிருவகிக்கும் அறங்காவலர்கள் எவ்வாறு ஒழுக்க சீலர்களாய் இவற்றை நிர்வகிக்கவேண்டும் என்பதையும் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார். அத்துடன் அக்கால மக்களதும், சமயத்தினதும் அவல நிலை பற்றியும் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

'யாழ்ப்பாணத்துச் சைவசமயிகள் சிவதீட்சை பெறுகிறார்கள். சமய சின்னங்கள் தரிக்கிறார்கள். ஆலய வழிபாடு செய்கிறார்கள். தல யாத்திரை போகிறார்கள். கோயில் கட்டி திருவிழாக்கள் செய்விக்கிறார்கள். விரதம் இருந்தும், அங்கப்பிரதட்சணம் செய்தும் உடம்பை வருத்துகிறார்கள். ஆனால் சமய தத்துவக் கருத்துக்களைப் படித்தோ, கேட்டோ அறிகின்றார்கள் இல்லை. பிள்ளைகளுக்குப் படிப்பிக்கின்றார்களும் இல்லை.........'

'சைவசமயிகள் சைவ நூல்களைக் கல்லாமையினாலும் எங்கேயாயினும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது............'

'நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும், சிவபெருமானை வழிபடும் முறைமைகளையும், அதனாலே பெறப்படும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும், கேட்டாயினும் அறிகின்றீர்கள் இல்லை.......'

துரதிஷ்டவசமாக நாவலர் கூறிய கருத்துக்களை இன்றைய காலகட்டத்தில் நோக்கும்போது மனம் வேதனை அடைகிறது. அருள் சுரக்கும் நிலையங்களாகவும், அலையும் மனதை லயப்படுத்தும் கூடங்களாகவும், ஆண்டவனின் பெரிய மாளிகைகளாகவும் விளங்கிய இத்திருக்கோயில்களின் இன்றைய நிலை எமது சமயத்தின் அவல நிலையையே எடுத்துக்

காட்டுகின்றது என்றால் மிகையன்று. பெரும்பாலான திருக்கோயில்களில் நாவலர் வழி ஒழுக்கநிலை காணப்படுவதில்லை. நமது ஆணவத்தை அழிக்கும் இடங்களாகிய இவை இன்று இவற்றை நிர்வகிப்போர், வழிபடுவோர் ஆணவத்துடன் செயற்படும் இடங்களாகிவிட்டன. எல்லோருக்கும் உரியவரான ஆண்டவனின் உறைவிடமாகிய ஆலயத்தில் தத்தமது உரிமையை நிலைநாட்ட நீதிமன்றங்கள் செல்லுதல் வழக்கமாகிவிட்டது. ஆலய நிர்வாகம் வேறு, பிற நிர்வாகம் வேறு என்பதை நம்மவர் சிந்தித்துப் பார்ப்பதில்லை, உணருவதுமில்லை. தம்மை முன்னிலைப்படுத்தி மேன்மைப்படுத்தும் தளங்களாக இன்று ஆலயங்கள் பல வியாபாரத் தலங்களாகிவிட்டன. இதற்கு வழிசமைப்போராக குருமார் சமூகமும் முன்னிற்கிறது.


நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற, சிறுசிறு கோயில்கள் எல்லாம் பெரும் கோயில்களாக மாறுகின்றன. பெருங்கோயில்கள் இடிக்கப்பட்டு நவீனமயமாக்கப்படுகின்றன. சுருங்கக் கூறின் இறைபக்தியும், இறையறிவும் மேலோங்குவதற்குப்பதிலாக, வெறுங் கட்டடங்களே காட்சி தருகின்றன. மனிதனின் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நித்திய நைமித்திய கிரியைகள், விழாக்கள் ஆகியவற்றை மேற்கொள்வோரும், மேற்கொள்ளுவிப்போரும் பலன்தரும் வகையில் இவற்றை நிறைவேற்றுவதில்லை. இதற்கெல்லாம் காரணம் சமய அறிவும், சமய விளக்கமும் வாழ்க்கையோடு இணையாததேயாகும்.

ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் மனிதனால் மேற்கொள்ளப்படும் ஏனைய விழாக்களிலிருந்தும் மாறுபட்டன. இதனால்தான் ஆண்டவனின் விழாக்களைத் திருவிழாக்கள் என நம்முன்னோர் அழைத்தனர். நித்திய பூசைகளின் குறைபாட்டை நிவர்த்தி செய்யவே இவ்வாறு நைமித்திய விழாக்கள் எடுக்கப்பட்டன. துரதிஷ்டவசமாக நித்திய குறை களையும் விழாக்களாக இவை அமையாது ஆண்டவனது சிந்தனைகளையே மக்கள் மறந்து வெறும் கேளிக்கைகளில் ஈடுபடும் தெருவிழாக்களாகவே பெரும்பாலான திருக்கோயில்களில் திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன. பழிபாவங்கள் இயற்றுவோர் இவ்விழாக்களை நடாத்துவதன் மூலம் பாவமன்னிப்புத் தமக்குள் கிட்டும் என்ற நம்பிக்கையுடனும் காணப்படும் துர்ப்பாக்கிய நிலை இன்றுள்ளது. சுற்றத்தவர்க்கும், அயலவருக்கும் பகிர்ந்து கொடுத்து, அவர்களை வாழ வைப்பதன் மூலமே இறையருள் கிட்டும் என்ற நம்பிக்கையும் நம்மவர் மத்தியில் அருகியே காணப்படுகின்றது. சமயக் கல்வி, விளக்கம், ஒழுக்கம் பற்றிய போதிய அறிவு இல்லை. சமயம் வேறு வாழ்க்கை வேறு என்ற இரட்டை வேட நிலையே இன்று நமது சமூகத்தில் வேரூன்றிவிட்டது. எவரும் எதனையும் செய்து கிரியைகளையும் விழாக்களையும் மேற்கொள்ளுவதன் மூலம் நற்கதி அடையலாம் என்ற நினைப்பும் முனைப்பும் மனசாட்சியை விற்றுப் பிழைக்கும் நிலையும் இன்று நம்மவர் மத்தியில் கால் கொண்டுவிட்டன.

இதனால் இன்று பெரும்பாலான திருக்கோயில்கள் ஆண்டவனின் ஒளி, காட்சி அடியாருக்குக் கிடைக்காத வெறும் கட்டடங்களாகவே காணப்படுகின்றன. இதனால. இவற்.றை ஆண்டவனின் ஒளி படரும் இடங்களாக ஆக்குவது ஒவ்வொரு சைவனின் கடமையாகின்றது. இதற்கு முதற் தேவைப்படுவது ஒழுக்கம். எமது ஒழுக்கமான வாழ்வு, சமயம் பற்றிய விளக்கம், எமது அன்றாட வாழ்க்கையில் மட்டுமன்றி இறை உணர்வை வளர்க்கவும் வழிசமைக்கும். நாம் ஒழுங்காக ஒழுகும்போது சமூகம் ஒழுங்கைக் கடைப்பிடிக்க நமது கலாச்சாரத்தின் ஆணிவேரான திருக்கோயில்களில் ஒழுங்குகள் தாமாகவே செயலுருவம் பெறுகின்றன.

கிரியைகளில் உட்பொருளை இவற்றை இயற்றுவிப்போரும், இயற்றுவோரும் உணர்ந்து இவற்றை மேற்கொள்ளும் போது ஆத்மசாந்தி ஏற்படுவதோடு இறையருளும் நமது

ஆலயங்களில் சுரக்கின்றது. நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்கின்றன. இதனால் இற்றைக்கு ஒன்றரை நூற்றாண்டுகட்கு முன்னர் நாவலர் அவர்கள் கூறிய பல கருத்துக்கள் எம்மால் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை ஆகின்றன. இறுதியாக நாவலர் நமக்குக் கூறிய அறிவுரை இதுதான் -



*(வசந்த மண்டபத்தின் பின் தோற்றம்)*

'கோயில்களிலே சைவப் பிரசங்கம், வேதபாராயணம், தேவார திருவாசக பாராயணம் முதலியவைகளைச் செய்யுங்கள். உங்கள் குடும்பத்தோடு நியமமாகப் போய்ச் சைவப் பிரசங்கங்களைக் கேளுங்கள். கிலமாயுள்ள கோயில்களைப் புதுக்குவியுங்கள். ஒன்றுக்கொன்று சமீபத்தினதாகப் பலகோயில்களைக் கட்டுவியா தொழியுங்கள். நித்திய பூசைக்கு முதற் பொருள் சேருமுன் கோயில் கட்டத் தொடங்காதீர்கள். நித்திய பூசைப் பொருள் இல்லாத கோயில்களிலே இடாம்பீக நிமித்தத் திருவிழாவைத் தொடங்காது நித்திய பூசையைக் கிரமமாக நடத்துவியுங்கள்.'



With Best Compliments from

# MARUTHI TRADER

## මාරුති ටේටර්

## மாருதி ரேடர்

68, Old Moor Street,
Colombo - 12.
Phone: 2424013, 2424014

# தெய்வீக சக்தியும் தமிழ் மொழியும்

எஸ். எஸ். இராஜராஜன் M.A, L.L.B

**பண்ணாய், பதம் ஏழாய், பலவோசைத்
தமிழாய், விண்ணாய் இருப்பவன் இறைவன்**



*இறைவனை நம்பால் வரச் செய்யும் சக்தி தமிழ் மொழிக்கு உடையது. தெய்வத் தமிழைச் சிவனாக, அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல் ஆகிய தொழில் களைத் தெய்வத் தமிழால் செய்து வாழ்ந்தவர்கள். அதனால் மகேந்திர பல்லவன் கொடுத்த தண்டனையை முறியடித்தார் அப்பர். முதலை உண்ட பிள்ளையை மீட்டார் சுந்தரர், சாம்பலைப் பூம்பாவையாக்கினார் சம்பந்தர், ஊமையைப் பேசவைத்தார் மணிவாசகர். எல்லாம் தமிழால்தான்.*

*தமிழர்களாகிய நாம் பிறப்புமுதல் இறப்பு வரை எல்லாச் சடங்குகளையும் தமிழிலேயே செய்யவேண்டும். நமக்கு வழிகாட்டிய தமிழ் அருளாளர்கள் வழியிலே இறைவழிபாட்டில் தெய்வ மொழியிலே இறைவனை வணங்க வேண்டும். தமிழ் மொழியின் தெய்வீக ஆற்றலை அளந்தறிய முடியாது. அது தெய்வமொழி. நம் தமிழ் மொழி நமக்கு உயிராக, உடலாக, மூச்சாக, உணர்வாக எல்லாமாய் இருக்கிறது.*

நம் தமிழ் மொழியை, அதன் தொன்மையை, தெய்வத் தன்மையை, அதன் சக்தியைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போமானால் நாம் தெய்வத் தமிழால் இறைவனைப் பாடி வணங்குவதற்கும் துதிப்பதற்கும் பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்பதை உணர முடியும்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்பது சிவ நிலை அடைந்த திருமூலரின் வாக்காகும்.

உலக நாகரீகங்களை எல்லாம் ஆய்வு செய்த சேர் ஜோன் மார்ஷல் உலகில் முதலில் தோன்றிய நாடு தமிழ் நாடென்றும், முதலில் தோன்றிய மனிதன் தமிழன் என்றும், முதலில் தோன்றிய மொழி தமிழ் மொழியே என்றும் ஆராய்ந்து கூறியுள்ளார்.

உலக மொழிகளின் இலக்கணங்களை ஆய்வு செய்து உலக மொழிகளில் எல்லாம் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன என்பதைக் கால்டுவெல் என்ற அறிஞரும் கண்டறிந்துள்ளார். ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஜி. யு. போப் (இவர் போப் ஐயர் எனவும் அழைக்கப்பட்டவர்) அவர்களோ தமது கல்லறையில் தம்மை ஒரு 'தமிழ் மாணவன்' என்று பொறிக்கச் சொன்னார். உலகின் ஒப்பற்ற தெய்வத் தமிழ் நூல் திருவாசகம் என்று போற்றியும் உள்ளார்.

தேம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நிக்குருகி நிற்பவர் காண்கிலோம்
திருவாசம் இங்கொருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுனர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே

தீந்தமிழ்ப் பாடலாம் திருவாசகத்தை ஓதினால் கருங்கல் மனம் உடையோரின் கண்களில் கூட கண்ணீர் பெருகும். திருவாசகமே இவ்வுலக மக்கட்கு ஏற்றது என்று கூறுகிறார் அருளாளர் சிவப்பிரகாசர்.

தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ள பாடல்களைத் தெரிந்தால் பாடுங்கள். இல்லை என்றால் காதினால் கேளுங்கள். வினையாவும் நீங்கிவிடும். சிவலோகம் எய்துவீர்கள் என்கிறார் திருஞான சம்பந்தப் பெருமான்.

கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
 கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழால் மாலையீரைந்தும்
 உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை அடையார்
 தோன்றுவர் வானிடைப் பொலிந்தே

இதே கருத்தை வலியுறுத்தும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல்-

ஆரூரான் அருந்தமிழ் ஐந்தினொடுஐந்து
அழகால் உரைப்பார்களும் கேட்பவரும்
சீரூர் தேவர் கணங்களொடும்
கணங்கிச் சிவலோகமது எய்துவரே

மேலே கண்ட இரு அருளாளர்களும் அறிவு கொண்டு சொல்லவில்லை. ஆண்டவன் உள்நின்று அவனருளால் பாடினார்கள். என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும்.

இராமாயணத்தில் கம்பர், அகத்திய முனிவரை அறிமுகப் படுத்தும் போது 'சிவபெருமான் தனக்களித்த தமிழை நமக்களித்த குறுமுனி' என்று அறிமுகப் படுத்துகிறார். சிவபெருமான் தமிழை (குறுமுனி) அகத்திய முனிவருக்கு முதலில் அருளிச் செய்தார். அந்த தெய்வத் தமிழைப் பூவுலக மக்களுக்கு அகத்திய முனிவர் அருளினார்.

திருஞானசம்பந்தப் பெருமானுக்கு மூன்று வயதில் உலகிற்குத் தாயாய் விளங்கும் உமையம்மையார் பால் கொடுத்தார். வேறு மொழி உணர்வைக் கலந்து ஊட்டியிருந்தால் அந்த மொழியிலேயே தான் சம்பந்தரின் பாடல் முதலில் வெளிவந்திருக்கும். அம்மையார் பாலுடன் அருந்தமிழ் உணர்வைத்தான் கலந்து கொடுத்திருக்க வேண்டும். அதனால் தான் கண்ட காட்சியை 'தோடுடைய செவியன்' எனும் தமிழ்ப் பாடல் மூலம் அருளப்பட்டது. உலகைக் காக்கும் உமையம்மைக்கே தமிழ்தான் விருப்பம். திருநாவுக்கரசரோ 'சிவபெருமான் என்னைப் படைத்தார் நானாகப் பாடவில்லை' என்ற செய்தியையும் கூறுகிறார். அதற்குச்சான்று:

கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்
 கதிர் விடுமா மணியிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர் தெரிவை யொரு பாகத்தானைச்
 சராசரல்நல் தாயானை நாயேன் முன்னைப்
பத்தமறுத்து ஆளாக்கிப் பணிகொண்டு ஆங்கே
 பன்னிய நூல் தமிழ்மாலை பாடு வித்துஎன்
சிந்தைமயக் கறுத்திரு வருளினானைச்
 செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே

## சம்பந்தரின் அருள் வார்த்தை

இறைவன் அடியார்கள் இறைவனை எல்லா மொழிகளிலும் பாடித் தொழுகிறார்கள் என்பது இறைவனைக் கண்ட திருஞானசம்பந்தரின் அருள் வார்த்தை. இறைவன் முன்னே, பலமொழிகளிலும் பலரும் பாடினால் எப்படி இறைவன் கேட்டு மகிழ முடியும் என்ற மனக் கேள்விக்கு திருஞானசம்பந்தரையே தனது மானசீகக் குருவாகக் கொண்ட அருணகிரிநாதர் நமக்கு விடையளிக்கிறார். எல்லா மொழியாலும் அடியார்கள் பாடினாலும் இறைவன் திருச்செவியில் முந்திக்கொண்டு விழுவது தமிழ் மொழிதான் என்று 'முந்து தமிழ் மாலை கோடி கோடி' என்ற பாடலால் விளக்குகிறார்.

தருமபுர ஆதீனத்துப் 14வது பீடாதிபதியாக விளங்கியவர் கந்தப்ப தேசிகர் எனும் சிவஞானி. அவர் ஒருமுறை திருநெல்வேலியில் தங்கியிருந்தார். அது சமயம் மழையே இல்லாது வரண்டு கிடக்கும் திருநெல்வேலியின் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் சென்று மழையே இல்லாததால் வரியைத் தள்ளுபடி செய்யுமாறு வேண்டினார்கள். அந்த ஆங்கில ஆட்சியாளர் ஏளனமாக ஊருக்குப் புதிதாக வந்துள்ள உங்கள் சாமியாரிடம் சொல்லி மழையைக் கொண்டு வாருங்கள் எனறு கூறினார். அந்தச் செய்தி குருமகா சந்நிதானம் செவிக்கு வந்தது. அவரும் உள்ளம் உருகித் தமது தலைவனான சொக்கநாதப் பெருமானை நினைந்து ஓர் அழகிய பாடலைத் தெய்வத் தமிழில் பாடினார்.

சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில் - ஐவரை வென்று
ஆனந்த வெள்ளத் தழுந்துவது முத்தி எனில்
வானங்கள் பெய்க மழை

இப்பாடலைப் பாடிய உடனே பெருமழை பொழிந்து கிணறு, குளம், ஏரி யாவும் நிரம்பின. இதை அறிந்த ஆங்கிலேய மாவட்ட ஆட்சியரும் சந்நிதானத்திடம் வந்து வணங்கி நூறு பொற்காசுகளைக் காணிக்கையாகக் கொடுத்துச் சென்றார் என்பது வரலாற்று உண்மையாகும். தீந்தமிழ்ப் பாடலைக் கேட்ட சிவபெருமான் அடுத்த வினாடி மழையைப் பொழிவித்தார் என்றால் தமிழின் தெய்வீக ஆற்றலை யாரால் அளவிட முடியும்?.

சிதம்பரம் நடராசப் பெருமான் ஆலயத்தில் திருவிழா ஆரம்பமாகிறது. என்ன முயற்சி செய்தும் விடைக்கொடி ஏறவில்லை. உமாபதி சிவம் எனும் அருளாளர் தமிழில் 'கொடிக்கவி' ஐந்து பாடல்கள் பாடிய உடனே தானே கொடி ஏறியதை யார்தான் மறுக்க முடியும்?. இல்லை மறக்கத்தான் முடியுமா?. தமிழ் மொழிக்குள்ள மந்திர ஆற்றலுக்கு வேறு என்ன சான்று வேண்டும்?.

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியாகிய சிவபெருமானே சங்கப் புலவராய் அமர்ந்து, தமிழ் ஆய்ந்தது உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத ஒரு தனித்தன்மை தமிழ் மொழிக்கு உண்டு என்பது அறிவுடையோர்க்கு விளங்கும்.

குமரகுருபர சுவாமிகள் தாம் பாடிய 'மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ்' அரங்கேற்றம் செய்யும் பொழுது அந்தத் தீந்தமிழ்ப் பாடலுக்கு மகிழ்ந்த மீனாட்சி அம்மை தம்

கழுத்தில் இருந்த முத்து மாலையை குமரகுருபரருக்குச் சூட்டிய வரலாறும் நாம் அறிந்ததே! தெய்வீகச் சக்தியை வரவழைக்கும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உண்டு.

திருஆமத்தூர் எனும் தலம் விழுப்புரத்திற்கு அருகில் இரண்டு கல் தொலைவில் உள்ளது. இரட்டைப் புலவர்கள் (ஒருவர் குருடர், மற்றவர் முடவர்). இவர்கள் இவ்வூருக்குத் திருமாவத்தூர்க் கலம்பகம் பாடியவர்கள். ஆமத்தூரில் உள்ள இறைவன் மாதை நாதர். இக்கோயில் பம்பை ஆற்றின் கீழ்க் கரையில் உள்ளது. இதனை அறியாமலேயே இரட்டைப் புலவர்கள் தமது கலம்பகத்தில் மேற்குக் கரையில் பெருமாள் உறையும் ஆலயம் உள்ளதாகப் பாடிவிட்டார்கள்.

இந்தச் செந்தமிழ்ப் பாடல்கள் பொய்த்து விடக்கூடாது என்று திருவுளம் பற்றிய சிவபரம்பொருள் மழையைப் பொழிவித்தார். பம்பை ஆறும் வெள்ளம் மிகுதியால் திசைமாறி ஓடியது. பாடலுக்கு ஏற்றபடி ஆலயம் மேற்குக் கரைக் கோயிலாக அமைந்தது. பாடிய பாடலுக்கு ஏற்ப ஆற்றனை மாறி ஓடும்படி செய்தது தமிழ் மொழி.. இந்த அரிய செய்தியை வண்ணச்சாரம் தண்டபாணி சுவாமிகள் தாம் இயற்றிய 'தமிழ் அலங்காரத்தில்' கூறியுள்ளார்.

தமிழர் பெருமையைப் பேசி துணைக் கருவிகளுடன் இசைப் (வீணை, முழுவம், தாளம்) பாடல்களைப் பாடும் இடங்களில் எல்லாம் சிவபெருமான் எழுந்தருளுவார் என்பது உடலோடு கைலாயம் சென்ற திருஞான சம்பந்தப் பெருமானின் திருவாக்கு ஆகும்

## தெய்வத் தமிழும் அருளாளர்களும்

நால்வர் பெருமக்கள் கடவுளைக் கண்டவர்கள். பூத உடலோடு முத்தி பெற்றவர்கள். (திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்). இப்பெருமக்கள் 'தமிழே சிவம், சிவமே தமிழ்' என்று தெளிந்த சிந்தனையுடன் பாடியுள்ளதைக் கண்டின்புறுவோம்.

பண்ணும் பதம் ஏழும் பலவோசைத் தமிழ் அவையும்
விண்ணும் முழுதானான் இடம் விழிமிழலையே

பண்ணாய்ப் பதம் ஏழாய் (ச, ரி, க, ம, ப, த, நி, ச) பலவோசைத் தமிழாய் விண்ணாய் இறைவன் இருக்கின்றான் என்கிறார் கடவுளைக் கண்ட திருஞானசம்பந்தப் பெருமான். 'பண்ணார் இன் தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே' – என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு. இறைவன் பண் அமைந்த இன்தமிழ்ப் பாடலாய் இருக்கின்றார் என்று கூறுகின்றார்.

திருவாவடுதுறையில் பொருள் வேண்டுமென்று 'இடரினும் தளரினும்' எனும் இன்தமிழ்ப் பதிகம் பாடினார் ஞானசம்பந்தப் பெருமான். ஆயிரம் பசும்பொன் அடங்கிய முடிப்பையைச் சிவபெருமான் பலிபீடத்தில் வைத்தருளினார். 'இப்பதிகம்

பொன்பெற்ற பதிகம் என்று இன்றும் பலரால் பாராயணம் செய்யப்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம்.

சமணர்கள் புனல் (நீர்) வாதிடவும் அழைத்தார்கள். திருஞானசம்பந்தப் பெருமானும் பதிகம் ஒன்றினை ஓலையில் எழுதி வைகை ஆற்றினில் விட்டார் செந்தமிழ்ப் பாடல்கள்

எழுதப்பட்ட ஓலை ஆற்றின் நீரைக் கிழித்துக் கொண்டு நீரோட்டத்தை எதிர்த்து வந்து கரையை அடைந்தது. இந்த இடம் தற்காலம் திருஏடகம் (தமிழ்ப் பாடல்களை எதிர்த்துக் கரையேறிய இடம்) என்று அழைக்கப்படுகின்றது.



பல்லவ மன்னன் கோபமிக்க மதயானையை விட்டு திருநாவுக்கரசு சுவாமிகளைக் கொல்லும்படி செய்தான். அந்த நேரத்தில் 'கந்தவெண் சந்தனச் சாந்தும்' எனும் செந்தமிழ்ப் பதிகம் பாடினார். இப்பதிகத்தின் ஆற்றலால் கொல்ல வந்த மதயானை கொல்ல வேண்டியவரை (திருநாவுக்கரசு சுவாமிகளை) வலமாக வந்து நிலத்தில் வீழ்ந்து வணங்கிச் சென்றது. திருநாவுக்கரசு சுவாமிகளைக் கல்லுடன் கட்டிக் கடலில் வீழ்த்தினார்கள். 'சொற்றுணை வேதியன்' எனும் தீந்தமிழ்ப் பதிகம் பாடினார். கல்லும் மிதந்தது. கரையேறினார் சுவாமிகள். கல்லையே கரைசேர்த்த தீந்தமிழ் நம்மை முத்திக் கரையை அடையச் செய்யும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

தீந்தமிழால் பதிகம் பாடி வழிபட்ட திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு இறைவன் கைலாயத்தைப் பூவுலகிற்குக் கொண்டுவந்து காட்டினார். பிற மொழிகளில் உள்ள நூல்கள், மந்திரங்கள் யாவும் இறைவனை அடையும் வழிகளைச் சொல்லும். ஆனால் நமது தமிழ் மொழியோ இறைவனை நம்பால் வரச் செய்யும் தன்மை உடையது. தெய்வத் தமிழை, சிவனாக அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகராகிய நால்வரும் படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல் ஆகிய தொழில்களைத் தெய்வத் தமிழால் செய்து வாழ்ந்தவர்கள். ஆதலினால்தான் மகேந்திர பல்லவன் கொடுத்த பெரிய தண்டனையை முறியடித்தார் அப்பர் அடிகள். முதலை உண்ட பிள்ளையைத் தக்க வயதுள்ள பிள்ளையாக மீட்டார் சுந்தரர். மட்குடத்தில் எரிந்து சாம்பரான பொருளைப் பூம்பாவையாக்கிய ஞானசம்பந்தர், ஊமையைப் பேசவைத்த மணிவாசகப் பெருமான் போன்ற அருளாளர்கள் தெய்வத்தமிழால் சிவனருள் பெற்று அருளினார்கள்.

## சடங்குகளைத் தமிழில் செய்தல் வேண்டும்

இப்பெருமக்கள் இறைவனை நேரே கண்டவர்கள். இறைவனோடு கலந்தவர்கள். பூத உடலுடன் முத்தி பெற்றவர்கள். நம் தமிழ் மொழி தெய்வத் தன்மை வாய்ந்தது என்று இவர்கள் கூறிய பின்னர் வேறு எவர் நமக்குச் சான்றிதழ் அளித்தல் வேண்டுமா?

'தென்னாடுடைய சிவனே போற்றி, என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்பதற்கு ஏற்ப முற்பிறவிகளில் நாம் செய்த புண்ணியம் நாம் தமிழ் நாட்டிலோ, அயல் நாட்டிலோ தமிழ் மகனாகப் பிறப்பதற்குப் பேறு பெற்றிருக்கிறோம் என்பதே.

தமிழர்களாகிய நாம் பிறப்பு முதல் இறப்பு வரையில் எல்லாச் சடங்குகளையும் தமிழிலே செய்ய வேண்டும். நமக்கு வழிகாட்டிய தமிழ் அருளாளர்கள் வழியிலே இறை வழிபாட்டில்

தெய்வ மொழியிலேயே இறைவனை வணங்க வேண்டும். தமிழ் மொழியின் தெய்வீக ஆற்றலை அளந்தறிய முடியாது. அது தெய்வ மொழி. நம் தமிழ் மொழி நமக்கு உயிராக, உடலாக, மூச்சாக, உணர்வாக எல்லாமாய் இருக்கிறது என்றால் மிகையாகாது. தமிழ் என்றாலே சிவம் என்பதாகும். அந்தச் சிவத்தை, தெய்வத்தமிழை இறைவனை வணங்குவோம் இறையருள் பெறுவோம்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே".
- திருமூலர்



*(ஆறுமுக சுவாமியின் தெற்கு வாசல் தோற்றம்)*

## ஆறுமுகன்

ஈசனின் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், சத்யோஜாதம், அகோரம் என்னும் ஐந்து முகங்களும் அம்பிகையின் முகம் ஒன்றும் ஆக ஆறு முகங்களும் இணைந்த வடிவமே முருகனின் ஆறுமுகங்கள்.

# சுவர்க்கத் தீவில் தமிழும் சைவமும்

வி. சிவசுப்பிரமணியம் (முன்னாள் அதிபர்,
அளவெட்டி அருணோதயக் கல்லூரி) சீஷெல்ஸ்

தமிழர் மத்தியில் அண்மைக்கால நிகழ்வுகள் இந்நாட்டில் தமிழ்மொழி, கலாச்சாரம் சமய விழுமியங்கள் தங்கு தடையின்றி நிலை கொள்ளும் வாய்ப்பை அதிகரித்துள்ளது.



கோயில் அமைந்தபின் மக்கள் செழிப்பாக வாழ்கிறார்கள். சமய – தமிழ் உணர்வு வளர்கிறது. மற்றவர்கள் எங்கள் கலாச்சாரத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இந்து சமுத்திரத்தின் மத்தியில் சிதறிய முத்துக்கள் போன்றமைந்த 116 தீவுக் கூட்டத்தையே சீஷெல்ஸ் குறிக்கும். இவை பூமியின் நடுக்கோட்டிற்கு அண்மித்து இருப்பதால் வெட்பதட்ப நிலை, தாவர வளர்ச்சி யாவும் தமிழ்நாடு, தமிழ் ஈழம் போன்றே இருக்கும். தீவுகளில் மாகே பெரிய தீவு. 27 கிலோ மீட்டர் நீளமும் 11 கி. மீ அகலமும் கொண்டது. ஏறக்குறைய மொத்தம் 82,000 சனத் தொகையில்72,000 மக்களைக் கொண்டதாக மாகே உள்ளது.

வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத சிறப்புக்களைக் கொண்டுள்ளது 'சுவர்க்கத் தீவு' என்றழைக்கப்படும் இந்த நாடு. மாகேயின் நடுப்புறத்தே குறிஞ்சியைச் சேர்ந்த மலைப் பிரதேசம் - இயற்கையான வனப்பிரதேசத்தை அடக்கியுள்ளது. மலையைச் சுற்றியுள்ள நெடுஞ்சாலை வழியே பிரயாணம் செய்தால் ஒரு புறத்தில் ஆர்ப்பரிக்கும் நீலக்கடல் மறுபுறத்தில் இயற்கை அழகு பொதிந்த மலைச்சாரல். உல்லாசப் பயணிகளைக் கவரும் வெள்ளைநிற மணல் நிறைந்த கடற்கரை. குளித்தல், நீச்சல், உல்லாசப் படகோட்டலுக்கு ஏற்ற ஆழமற்ற அழகூட்டும் கடல். கண்கவரும் பவளப் பாறைகள், இயற்கை வனப்புடைய கொடி, செடி, மீன்வளம், வண்ண வண்ண பறவை இனங்கள் காணப்படும் இயற்கை வளம் நிறைந்த நாடு: எவ்விதமான இயற்கை அழிவுகளையும் கண்டிராத நாடு. நில நடுக்கமோ, எரிமலைத் தாக்கமோ என்றும் ஏற்பட்டதில்லை. எவ்வகையான விஷஜந்துக்களும் இங்கு இல்லை.

சிறிய நாடாக இருந்த போதிலும் மேற்கு – கிழக்கு நாடுகளுக்கு ஒரு இணைப்புப் பாலமாக அமைந்துள்ளது. அதனால் பல இன, பல சமய மக்களையும், பல்கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாக்கும் நாடாக உள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு, கிறியோல் ஆகிய மூன்றும் நாட்டின் உத்தியோக மொழிகள். கத்தோலிக்க மதம் பெரும்பான்மையினர் மதம். ஆனால் மற்றைய கிறிஸ்துவப் பிரிவுகளும், இந்துக்களும், இஸ்லாமியர்களும் தத்தம் வசதிப்படி புரிந்துணர்வோடு ஒற்றுமையாக வாழ்வது பாராட்டிற்குரிய சிறப்பம்சமாகும். எந்த விதமான அரசியல் சலசலப்போ கெடுபிடியோ இல்லாத, அமைதியான புரிந்துணர்வோடு கூடிய ஓர் அமைதிப் பூங்காவாகும்.

இந்துக்களுக்குச் சிறப்பான 'திருவோடு' இந்நாட்டில் மாத்திரமே கிடைப்பதால் பக்கமாக உள்ள பிறாளின் தீவில் ஏறக்குறைய 4000 திருவோட்டுப் பனைமரப் பண்ணை ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனத்தால் (UNESCO) பாரம்பரிய தளமாக அங்கீகரிக்கப்பட்டு அரசினால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இந்நாட்டை 'திருவோடு காய்க்கும் திருநாடு' என அழைப்பர்.

தமிழன் இல்லாத நாடு உலகில் இல்லை என்ற கூற்றுக்கு அமைவாக இக்குட்டித் தீவில் தமிழர் நிலைகொண்ட தமிழ் விழுமியங்கள் பரவி வருவது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். 1777ல் குடியேற்றம் ஆரம்பித்த நாள்முதல் தமிழர் குடியேற்றமும் ஆரம்பித்துள்ளது. அன்று குடியேறிய 27 பேர்களில் 5 தமிழரும் இருந்திருக்கிறார்கள். இராமலிங்கம் என்பவர் தேசாதிபதிக்கு ஆலோசகராக றியூனியன் (REUNION) தீவிலிருந்து வந்து பின்பு, பலநிலங்களுக்கு உரிமையாளராக ஆகி ஆரம்பித்த தமிழ்க் குடியேற்றம் பாண்டிச்சேரி, மயிலாடு துறைகளிலிருந்து 1884 முதல் பெருகியது. ஆரம்பக் குடியேற்றம் யாவும் வர்த்தக அடிப்படையில் அமைந்தன.

ஆரம்பத்தில் வந்த தமிழர் இங்கு குடியேறி, மதம் மாறி, மொழி மறந்து, தமிழ்ப் பெயர்களுக்கு மாத்திரம் உரிமையுடையோர்களாக இருந்தனர். இரண்டாவது கட்டமாக வந்தோரில் பலர் இந்தியப் பெண்களை மணம் செய்து, வழிபாட்டிற்கு ஆலயம் இல்லாத போதும் தமிழ்ச் சமய அடையாளங்களைப் பேணி வந்துள்ளனர். இறுதியாக அண்மைக் காலத்தவர் (விமானத் தொடர்பு 1971ல் ஏற்பட்டபின்) முற்று முழுதாக தமிழ்க் கலாச்சாரத் தொடர்பை இறுகப் பிடித்து வாழ்கின்றனர்.

இன்றைய நிலையில் இந்நாட்டில் நாலு சதத்தினர் - அதாவது ஏறக்குறைய 3000 – 4000 இடைப்பட்ட தமிழர் இங்குளளனர். இந்நாட்டின் வர்த்தகத் துறையில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் கேந்திர நிலையில் செழிப்பாக உள்ளனர். இலங்கைத் தமிழர் வைத்தியம், கல்வி, கணக்கியல் துறைகளில் பணியாற்றுவது கவனத்திற்குரியது.

இங்குள்ள தமிழர் மத்தியில் அண்மைக்கால நிகழ்வுகள் இநநாட்டில் தமிழ்மொழி, கலாச்சாரம், சமய விழுமியங்கள் தங்கு தடையின்றி நிலைகொள்ளும் வாய்ப்பை அதிகரித்துள்ளது. 1984ல் சீஷெல்ஸ் இந்துக்கோயில் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்நாட்டின் முதலாவது இந்துக் கோயிலாக நவசக்தி விநாயகர் ஆலயம் என்னும் பெயரில் ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு 1992ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இது தமிழ்க் கலாச்சாரத்தையும், சைவ சமய நெறிமுறைகளையும் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு ஒரு சிறந்த அடித்தளமாக அமைந்துள்ளது. வீடுகளில் சமயக் கிரியைகளைச் செய்யவும், பொதுக்கலை நிகழ்ச்சிகளை நடத்தவும் கோயில் ஒரு உகந்த தளமாக அமைந்துள்ளது எனலாம்.

தற்போது கோயிலின் இராஜகோபுரம் உட்பட புனருத்தாரண வேலைகள் முடிந்ததும் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இது ஆலயத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாகும். கோயில் அமைந்தபின் மக்கள் செழிப்பாக வாழ்வதும், சமய – தமிழ் உணர்வு வளர்வதும், பல நாட்டவர்கள் எமது கலாச்சாரச் சிறப்புக்களைப் பார்த்து

மகிழ்ந்து அங்கீகரிப்பதும், இந்நாட்டு ஒலி, ஒளிச்சேவை வாயிலாக எமது நிகழ்ச்சிகள் பரவுவதும் தமிழின் வளர்ச்சிப் பாதையைக் காட்டுகின்றது.

தமிழ் மலர்கள் உட்பட இந்நாட்டுப் பத்திரிகையில் தமிழ் விளம்பரங்கள் வெளிவருவது சிறப்பாகும்.

1993ல் ஆரம்பிக்கப்பட்ட சீஷெல்ஸ் தமிழ் மன்றம் தமிழ் முரசு என்னும் சஞ்சிகையையும் இடையிடையே சீஷெல்ஸ் மலர் என்ற இருபக்க செய்தித்தாள் ஒன்றையும் வெளியிடுவதோடு சுகி சிவம், சாலமன் பாப்பையா போன்றோரை வரவழைத்துப் பட்டிமன்றம், அரட்டை அரங்கம் போன்றவற்றை நடாத்துவது தமிழ் உணர்வையும், ஈடுபாட்டையும் வளர்க்கப் பெரிதும் உதவுகிறது.

2002ல் இருந்து செயல்பட்டுவரும் சீஷெல்ஸ் தமிழ்க் கலாச்சார வளர்ச்சி மையம் தமிழ்க்கல்வி, தமிழறிவு, கலை வளர்ச்சி ஆகியன செழித்து வளர மேலும் உரம் ஊட்டுகின்றது. ஞாயிறு தோறும் நடாத்தும் தமிழ் மொழி, நுண்கலை வகுப்புக்கள் இளம் சந்ததியினருக்குத் தாய் மொழிப் பற்றை ஊட்டுவதாக அமைந்துள்ளது.


திருவிளக்குப் பூசை

பல இன மக்களைக் கொண்ட நாடு இது. வெள்ளையர், கறுப்பர், சீனர், இந்தியர், ஈழத்தவர் என பலரும் இங்கு வாழ்கிறார்கள். அதாவது இந்தக் கலாச்சாரச் சந்திப்பு மனித நேயத்தையும், புரிந்துணர்வையும், ஒற்றுமையையும், சகிப்புத் தன்மையையும் வலுவடையச் செய்கிறது. தமிழர்களாகிய நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் புரிந்துணர்வோடும், சகிப்புத் தன்மையோடும் ஒற்றுமையாகப் பணிபுரிந்து எமது தமிழ் விழுமியங்களை ஒரு உயர்ந்த நிலைக்குச் சர்வதேச அரங்கில் கொண்டு செல்வோமாக.

# சிதம்பரம்

**பிரமன் பாட, சரஸ்வதி வீணை மீட்க, திருமால் புல்லாங்குழல் இசைக்க, லட்சுமி தாளம் போட, நந்தி மத்தளம் கொட்ட, ஆடல் நாயகனின் திருநடனத்தைக் கண்டுகளிக்கத் தேவர்களும், சிவகாமியும் அம்பலத்தைப் பொற்கூரை வேய்ந்து பொன்னம்பலமாக்கி நடராஜப் பெருமானை வழிபட்டதால் பொற்பதி, பொன்னம்பலம் என்று திருநாமம் பெற்றது.**

**மு. ஞானப்பிரகாசம் M. Sc.**
**(முன்னாள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர்)**

தமிழகத்தின் முக்கியமான சமயங்கள் இரண்டு. ஒன்று சைவம். மற்றையது வைஷ்ணவம். அவை மிகவும் தொன்மை வாய்ந்தன. சரித்திர காலங்கள் புராண இதிகாச காலங்களுக்கு மிகவும் முற்பட்டன. அவற்றுள் சைவம் சிவ வணக்கத்தையே முதன்மையாகக் கொள்வது. வைஷ்ணவம் திருமால் வணக்கத்தையே முதன்மையாகக் கொள்வது. இவை இரண்டுமே தமிழகத்தில் வேதாகம நெறியையும் பழைய தர்மத்தையும் பாதுகாத்து வந்த பெரும் நெறிகள். சைவ வைஷ்ணவக் கோயில்களே உண்மையில் பழைய தர்மத்தைப் பாதுகாத்து வந்த நிலையங்கள். இந்தக் கோயில்களுள், சைவர்களைப் பொறுத்த வரையில், மூலஸ்தானமாக விளங்கும் கோயில் சிதம்பரமாகும். சிதம்பரம் ஒரு காலத்தில் சைவ இராசதானி. அங்கு தான் இறைவனின் இயக்க நடனம் நடைபெறுகின்றது. 'தென்னாடுடைய சிவனின் நாதாந்த நடனக் காட்சியை நாங்கள் அங்கு காண்கின்றோம்' எனச் சைவ நூல்கள் கூறும்.

சிதம்பரத்தில் காட்சி தரும் மூர்த்தி ஆகம சாஸ்திர ரீதியில் தடஸ்தலமெனக் கூறப்படும். அருவ மூர்த்தி என்றோ, அருவுருவ மூர்த்தியென்றோ நாங்கள் கருதுவதில்லை. அவ்வாறு கருதுவதற்கு நமது மனம் ஒப்புவதுமில்லை. அதை ஞானானந்த அதித மூர்த்தியெனவே கருதுகிறோம்.

தமிழ் நாட்டில் தொன்றுதொட்டுச் சைவ தரிசனத்தை விளக்கிவந்த பரம்பரைகள் மூன்று: திருக் கைலாய பரம்பரையில் விளங்கி வந்த ஞான பரம்பரை ஒன்று; திருமூலர் மரபில் வந்த யோக சித்தர்கள் பரம்பரை வேறொன்று; சைவ சமயாச்சாரிகள் வழிவந்த சிவபக்த – தொண்டர்கள் பரம்பரை இன்னொன்று. இந்த மூன்று பரம்பரையிலும் வந்த சிவஞானச் செல்வர் அனைவரும் தாம் பெற்ற ஞானானந்த அனுபவத்தின் அற்புத வடிவமாகவே சிதம்பரத்திலே காட்சி தரும் ஆனந்த நடராஜ வள்ளலாரைக் கண்டு திளைத்து இன்புற்றுச் சென்றனர்.

ஞானானந்த அநுபவத்தை விளக்குவது அரிது. விளங்கினாலும் அதனைச் சொற்கள் மூலம் விளக்குவது அரிதினுமரிது.

'ந வித்ம: ந வியாநீம: யதா ஏதத் அனுஷ்யாத்' எனக் கூறி அந்த அனுபவத்தை எம்மால் விளக்கவும் முடியாது, எனக் கருதியே கைவிரித்து நிற்கிறது. அப்பேர்ப்பட்ட அதீதமான ஓர் அனுபவத்தை உயர்ந்த சிற்ப வடிவத்தில் வடித்து உலகிற்கு வழங்கிய

பெருமை தமிழ் நாட்டிற்கே உரியதாகும். மிகவும் பழைய காலத்தில் திருக்கூத்துத் தரிசனம் பெறுவதற்கென்று எத்தனையோ முனிவர்கள் வடதிசையிலிருந்து தமிழ்நாடு சென்றிருக்கின்றனர். அதனால் வடநாட்டில் ஆதி காலத்தில் இருந்த தெய்வக் கொள்கைகளும், சமய ஞானக் கருத்துக்களும் காலத்திற்குக் காலம் மாறுதலடைந்து வந்திருக்கின்றன. இப்பொழுது வடநாட்டில் நிலவும் சமயம், திருவருட் கொள்கை, பக்தமி சாதனை முதலியன பொருந்திய பெருநெறியாகக் காட்சியளிக்கிறது என ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர்.

'எல்லாம் அவன் செயல்' என்றும், 'பஞ்ச கிருத்தியம்' அவன் செயல் என்றும், 'இவை அனைத்தும் அவனிடத்தில் தோன்றி நிலை பெற்று ஒடுங்குகின்றன' என்றும், அவன் 'பரமவியோமரூபி' என்றும், அவன் 'பொன்மயமான கூடத்தில் வீற்றிருந்தருளுகின்றான்' என்றும், இவ்வாறான கருத்துக்களோடு வரும் மந்திர ஸ்லோகங்கள் எல்லாம் சிதம்பரத்திற்கு வந்து திருக்கூத்துத் தரிசனம் பெற்ற ஞான யோக ரிஷிக் கூட்டங்களின் வாக்கிலுதித்த மந்திர விசேடங்கள் எனக் கருதுவது பிழையாகமாட்டாது.

பஞ்சேந்திரிய இன்பங்களை வென்று, மனோ வியற்பங்களை ஒழித்து, மெய்ச்சார்பை உணர்ந்து பரவசப்பட்டு நிற்கும் உள்ளம் எப்பொழுதும் ஒரு சக்தி பீடமாகும். அது ஞானகாசம் என்றும், சிதம்பரம் என்றும், பொதுவென்றும், சைவ பரிபாஷையிற் சொல்லப்படும். அந்த நிலையில்தான் ஆனந்த நடராஜ வள்ளலாரின் அற்புதத் திருக்கூத்துத் தரிசனம் வாய்க்கிறது. ஆனந்த வள்ளலாரின் ஊன்றிய பாதம் மலசக்திகளை எழுப்பித் தொழிற் படுத்தி வரும் அற்புதக் காட்சியையும், அவர்தம் திருக்கரங்கள் அந்த மலசக்திகள் எழுப்பத் தொழிற்படுத்தற்குரிய தனுகரண புவனங்களைப் படைத்துக் காத்து, உபகரித்து வருவதையும், ஆட எடுத்த அவரது குஞ்சித பாதம் அந்த மலசக்திகளுக்கு ஓய்வினைத் தந்து உள்ளத்தை ஈர்த்துப் பரவசப் படுத்திப் பேராவியற்கைப் பெருவாழ்வில் நிறுத்தி அருள்வதையும் சைவ ஞானிகள் நிதர்சனமாகக் காண்கின்றனர். சைவ ஞானிகள் தமது அநுபவ நிஷ்டையில் காணும் இந்த நடனம் பரநடனம் எனப் பெயர் பெறும். ஓரறிவும், ஒரு செயலுமின்றி முழுதும் இருளிலே அழுத்திக் கிடக்கும் உள்ளத்தில் தோன்றும் நடனம், அதசூக்கும நடனம் எனப் பெயர் பெறும். பிரபஞ்ச வாழ்விலே அழுந்திச் சிற்றறிவும் சிறுதொழிலும் பொருந்தி நிற்கும் உள்ளத்தில் தோன்றும் நடனம், சூக்கும நடனம் எனப் பெயர் பெறும். நடனம் ஒன்றே. உள்ளங்கள் பலவாகலின் பல பெயர் பெற்று விளங்குகின்றது.

சிதம்பரத்திலே நடைபெறுகிற திருக்கூத்துத் தரிசனப் பேறு பெற்றவர்களே உண்மைச் சைவர்களாவர். அப்படிப்பட்ட உண்மைச் சைவர்கள் மிகவும் பழைய காலந்தொடக்கம் தமிழ் நாட்டிலே வாழையடி வாழையாய் வாழ்ந்து வந்திருக்கின்றனர். வியாகிர பரதர், பதஞ்சலி முனிவர், உபமன்ய திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேக்கிழார் சுவாமிகள், அருணகிரிநாதர், தாயுமான அடிகள், குமரகுருபர சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் ஆகிய இவர்கள் எல்லாம் திருக்கூத்துத் தரிசனப் பேறு பெற்றுச் சிதம்பர தலத்தின் மகிமையை எமக்கு உணர்த்திச் சென்ற சைவ ஞானிகளாவர்.

சென்ற 19ம் நூற்றாண்டிலே சிதம்பர தல மகத்துவத்தைத் தமிழ் நாடெங்கணும் பரப்பிய பெருமை நந்தனார் கீர்த்தனைப் பாடல்கள் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார்

அவர்களைச் சார்ந்ததாகும். அவர்கள் பக்தி நெறிக்கும் சிதம்பர தலத்திற்கும் செய்த தொண்டு அளவிடற்கரியது.

ஈழநாட்டிலே வாழும் சைவமக்களாகிய எங்கள் சரித்திரம் சிதம்பர தலத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது.

முன்னொரு காலத்தில் எங்கள் நாட்டிலிருந்து ஓரரசனும் மந்திரிமாரும் சிதம்பரஞ் சென்றார்கள் என்றும், அங்கு ஒரு பெரிய சமய வாதம் மணிவாசகப் பெருமானுடன் நடைபெற்றதென்றும், சமய வாதத்தின் பின்னர் அந்த அரசனும் அவன் குடும்பத்தினரும், மந்திரிமாரும் சைவத்தைச் சார்ந்து சிவதீட்சை பெற்று சிவவேடப் பொலிவினராய்த் திகழ்ந்தனரென்றும், அவர்களுள் பெரும்பான்மையோர் சிதம்பர தலத்தையே தமது வாசஸ்தலமாக மேற்கொண்டார்கள் என்றும் வருகின்ற பழைய வரலாறு எங்கள் ஈழநாட்டுச் சைவ சரித்திரத்தையும், சைவக்கொள்கைகளையும் உருவாக்கியிருக்கிறது. சைவ சமயிகளாய் வாழ்ந்துவந்த எங்கள் முன்னோர்கட்கும் எங்களுக்கும் கோயில் என்றால் சிதம்பரமேயாகும். சமயாசாரியர் என்றால் மாணிக்கவாசக சுவாமிகளேயாகும். வேதம் என்றால் திருவாசகமேயாகும். இந்த ஈழநாட்டில் எங்கள் மத்தியில் நிலவிவரும் திருவாசகப் பயிற்சியும், மணிவாசகர் விழாக்களுமன்றோ, எங்களை ஓரளவிலாயினும் இந்நாளைய விபரீத அரசியல் ஞானக் கருத்துக்களில் இருந்தும் பாதுகாத்து வருகின்றன.

16ம் நூற்றுாண்டிலே பறங்கியரின் கொடுங்கோலாட்சி இங்கு ஆரம்பித்த காலத்தில் இங்கிருந்து பெரியோர் பலர் சிதம்பரம் சென்றிருக்கின்றனர். அவர்களுள் முக்கியமானவர்கள் திருநெல்வேலியூர் ஞானப்பிரகாச முனிவர் அவர்களும், அளவெட்டியூர் வைத்தியநாதத் தம்பிரான் அவர்களும் ஆவர். அவர்கள் இருவருமே சிதம்பரத்திற்குச் சென்று ஞானப்பிரகாசத் திருக்குளத் திருப்பணியை ஆரம்பித்து, தமது ஆயுட் காலத்திலேயே அதனை நிறைவேற்றி வைத்த பெரியார்கள். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நூற்றுக் கணக்கானோர் இங்கிருந்து சிதம்பரம் சென்று, கோயில் தொண்டு, பாடல் தொண்டு, ஞானத் தொண்டு முதலியன செய்து கொண்டும், மடங்கள் கட்டிப் பரிபாலனஞ் செய்து கொண்டும் சிதம்பர தலத்தோடு உள்ள தொடர்பையும் உரிமையையும் வளர்த்து வந்திருக்கின்றனர். ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், மட்டுவில் வேலுப்பிள்ளை ஆசிரியர், செப்பறைச் சுவாமிகள், இலக்கணச் சுவாமிகள், தட்சிணாமூர்த்தி சுவாமிகள் முதலிய தவச் செல்வர்கள் வருடக்கணக்கில் சிதம்பரத்திலிருந்து ஆற்றிய தமிழ்ப்பணி, சமயப்பணி, ஞானப்பணி முதலியவற்றைத் தமிழ்நாட்டு அன்பர்கள் பலர் இன்றைக்கும் நினைந்து நினைந்து மனம் உருகி வருகின்றனர்.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்த ஈழநாட்டிலே வாழ்ந்து வந்த சைவ மக்களின் மனோபாவத்திற் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டன. தாயகத்தின் தொடர்பும், ஆத்மீக நெறிச் சார்பும் சிறிது சிறிதாக அவர்கள் உள்ளத்திலருந்து நழுவத் தொடங்கின. தொன்றுதொட்டு அவர்கள் சிதம்பரத்திலே சாதித்த எத்தனையோ ஆத்மீக சாதனைகள் கைவிடப்பட்டு வந்தன. சிதம்பரதல சேவையிற்கூட அவர்கள் சென்ற இரண்டு, மூன்று தலைமுறைகளாக மிகுந்த அலட்சிய புத்தியினராகவே மாறி வந்திருக்கன்றனர். அதன் காரணமாக, சிதம்பரத்திலே நம்முன்னோர் அரும் பாடுபட்டுக் கட்டிய மடங்கள் யாவும் (சிவபுரி மடம், செவ்வாய்க்கிழமை மடம் நீங்கலாக) மிகுந்த பழுதுற்று அழிந்து ஒழிந்து

போவதைக் கண்டிருந்தும், கேட்டிருந்தும் வாளா இருக்கப் பழகிக் கொண்டனர். சிதம்பர தர்மத்திற்கெனத் தம் முன்னோர் ஒதுக்கிப் பேணிவைத்த, எத்தனையோ நன்செய் நிலங்களும், புன்செய் நிலங்களும், காணி பூமிகளும் தாய்நாட்டிலும், தம் நாட்டிலும் சில சுயநலவாதிகளினால் விழுங்கப்பட்டிருப்பதைக் கண்டிருந்தும், கேட்டிருந்தும், கண்மூடிக் கிடக்கப் பழகிக் கொண்டனர்.



இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து, ஈழநாட்டிலுள்ள சைவக் கனவான்கள் சிதம்பரத்தில் ஒரு சபையை நிறுவுதல் வேண்டும். அதன்மூலம் இந்த நாட்டினர்க்குச் சிதம்பர தலத்தோடு தொன்றுதொட்டு வளர்ந்துவந்த ஆத்மீகத் தொடர்பை உருவாக்கித் தருதல் வேண்டும். அந்த ஆத்மீகத் தொடர்பினால் மட்டுமே, இந்த ஈழநாட்டுத் தமிழர்கள் மத்தியில் அறநெறி நிலவும். அரசியலில் அமைதியும் வாய்க்கும். சிதம்பரத்தலமே எங்கள் பாரம்பரியமான சக்திபீடம் என்பதையும், சேர் பொன் இராமநாதன், ஆறுமுகநாவலர் ஆகிய ஈழநாட்டுப் பெரியார் இருவரையும் உருவாக்கித் தந்த மூல நிலையம் என்பதையும் நாங்கள் மறக்கவொண்ணாது.

'தொன்றில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி'

- திருவாசகம்

# சிதம்பர இரகசியம்

### ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

கோயிலைப் பற்றிய விரிவான தத்துவம் சிதம்பரம் போன்ற ஆலயத்தில் அமைந்திருக்கிறது.

உபாசனைக்குரிய மூர்த்தியாக நடராஜர் நான்கு ஸ்தம்பங்களை உடைய ஒரு கொலு மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார். அந்த நான்கு ஸ்தம்பங்கள் நான்கு வேதங்களின் சின்னமாகும்.

அதற்குச் சற்று முன்பு ஆறு தூண்களை உடைய மண்டபம் இருக்கிறது. பதினெட்டுப் புராணங்களுக்கு அவைகள் அறிகுறியாய் அமைந்துள்ளன.

நடராஜரின் அருகில் செல்வதற்கு ஐந்து படிகளில் மேலே ஏறிச் செல்லவேண்டும். சிவனுடைய திருநாமமாகிய பஞ்சாட்சரம் அல்லது ஐந்தெழுத்தின் சின்னமாக இந்த ஐந்து படிகளும் அமைந்துள்ளன.

நடராஜருக்கு இடப்புறம் சிவகாமி அம்மையார் எழுந்தருளி உள்ளார். வலப்புறம் சிதம்பர இரகசியம் அமைந்துள்ளது.

இதிலும் மேலான கோட்பாடு புதைந்திருக்கிறது. பராசக்தியின் அருளால் சகுண பிரம்மமாகிய பிறகு நடராஜ மூர்த்தியின் தரிசனம் கிட்டுகிறது. சகுணப் பிரம்மம் பின்னர் நிர்க்குண பிரம்மத்துக்கு வழிகாட்டுகிறது. அது மனம் மொழியைக் கடந்திருப்பதால் ரகசியம் என இயம்பப் பெறுகிறது. நிர்க்குண பிரம்மத்தை அடைந்த ஜீவன் திரும்பவும் ஜீவ யோகத்திற்கு வருவானாகில் சகுண பிரம்மத்துக்கு வந்து கீழிறங்கி வருகிறான். சிதம்பரத்தில் நிகழும் தீபாராதனை இக்கோட்பாட்டை விளக்குகிறது.

# தோப்புக்கரணம் போடுவது ஏன்?

நாம் எல்லாத் தெய்வங்களையும் இரு கரங் கூப்பியும், சாஷ்டாங்கமாகவும் விழுந்து வணங்குகிறோம்.

ஆனால் விநாயகப் பெருமானை மட்டும் நமது தலையிலும், நெற்றியிலும் இரு கரங்களின் முட்டிகளினால் குட்டி, இரண்டு கரங்களினாலும் மாறு காதுகளைப் பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்குகிறோம். இதுவே விநாயகப் பெருமானுக்குப் பிடித்த வழிபடும் முறையாகும்.

தோப்புக்கரணம் போடுவதும், நெற்றியில் குட்டிக் கொள்வதும் மூலாதாரத்தில் பாம்பு போன்று சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தியைத் தட்டி எழுப்புகிறது. இதனால் சுஷும்னா நாடி திறந்து கொள்கிறது.

நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வதால் அங்கே உள்ள அமிர்த கலசம் மேலே எழும்பி, அந்த அமிர்தம் நம் உடல் முழுலதும் பரவுகிறது.

இதனால் உடம்பில் சுறுசுறுப்பும், மனதில் எழுச்சியும் தியானத்திற்கு ஏற்ற ஒருமைப்பாடும் கிடைக்கின்றன.

நெற்றிப்பொட்டில் உடலின் சகல நரம்புகளும் ஒன்று சேருகின்றன. எனவே அங்கு குட்டுவது உடலில் நல்ல விதமான பலவித மாறுதல்களை உண்டாக்கும்.

அகந்தையும், ஆணவமும் அழிந்ததைக் காட்டுவதே தோப்புக்கரணம் போடுவதாகும். கரணம் என்றால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கும் சேர்ந்ததாகும். இதை அந்தக்கரணம் (அகக்கரணம்) என்று சொல்லுவார்கள். கை, கால், கண், மூக்கு போன்றவை புறக்கரணம் எனப்படும். இந்த இரண்டு வகைக் கரணங்களை அடக்கி ஆளுவதைச் செய்வதே யோகம் ஆகும்.

அகம், புறம் என்னும் இந்த இரு கரணங்களும் செயலற்றுப் போய் இறைவனிடம் லயமடைகிறது என்று பொருள்படுவதே தோப்புக்கரணம் என்பதாகும்.

# உருத்திராக்க மகிமை

**வந்தவாசி அ. வே. முனுசாமி**

'ஐந்தெழுத்து உயிர், வெண்ணீறு உடலாம், ஆர்ந்த உடை முத்து சிவமணியாம் முன்' என்பது ஆன்றோர் வாக்கு. திருவைந்தெழுத்து, திருவெண்ணீறு, உருத்திராக்கம் என்னும் மூன்றும் சைவ சமயச் சின்னங்களாம். திரு ஐந்தெழுத்து ஓதுதலை உயிராகவும், திருவெண்ணீறு அணிதலை உடலாகவும், உருத்திராக்கம் பூண்பதை உடையாகவும் கொண்டு ஒழுகுவது சைவ சமய மரபாம்.

இறைவனை வழிபடக் கோயிலுக்குச் செல்லும்போது திருநீறணிந்து செல்வதோடு உருத்திராக்கம் அணிந்துகொண்டு செல்லவேண்டும். அது முழுப் பலனையும் தரும். உருத்திரனின் கண்ணீரிலிருந்து உண்டானது உருத்திராக்கம். இதனை அணிபவரைக் கொடிய பேய், பூதம், பிசாசு முதலிய கெட்டவைகள் அணுகமாட்டா. இதன் பொருட்டே நமது முன்னோர்கள் உருத்திராக்க மணியைக் கயிற்றில் கோர்த்து குழந்தைகளின் கழுத்தில் கட்டினர். 'இலங்கு மாமணி உருத்திராக்கம் ஒன்று அணியில் விலங்கு எயிற்று வெம்பூதங்கள் மேவா' என்பது உபதேச காண்டம்.

எனவே திருநீற்றோடு உருத்திராக்கம் அணிந்து கோயிலுக்குச் செல்வது முழுப் பலனையும் தரும். திரிபுரம் அழித்தபோது இறைவனின் கண்களிலிருந்து ஆனந்த அமிர்தம் பூமியில் விழ அதனின்றும் உண்டான மரங்களினின்றும் கிடைத்த விதைகளே உருத்திராக்கமாகும். இது பல முகங்களைக் கொண்டது. இவற்றுள் ஏகமுக (ஒருமுக) உருத்திராக்கம் சிறந்தது. உருத்திராக்கத்திற்கு அக்கமாலை, திருக் கண்மணி என்றும் பெயர்கள் உண்டு. சிவ சின்னங்களில் ஒன்றாகிய உருத்திராக்க மணிகளை 27, 54, 108 என்ற எண்ணிக்கைகளில் கோர்த்து அணிதல் நல்லது. உருத்திராக்க மாலை செப மாலையாகவும் பயன்படுகிறது.

இந்தியா, நேபாளம், ஜாவா, பாலித்தீவகள், ஆஸ்திரேலியா முதலிய இடங்களில் உருத்திராக்க மரங்கள் வளர்கின்றன. 90 வகைகளுக்கு மேல் இம்மரங்கள் உள்ளன. இந்தியாவில் மட்டும் 25 வகையான மரங்கள் உள்ளன. பீகார், வங்காளம், அஸ்ஸாம், மத்தியப் பிரதேசம், மும்பை முதலிய மாநிலங்களில் வளர்கின்றன. முதல் தரமானதும் மிகச் சிறந்ததுமான விதைகள் தருகின்ற இன மரங்கள் நேபாளத்தில் காணப்படுகின்றன. இயற்கையாகவே உருத்திராக்கத்தின் மத்தியில் துவாரங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு இல்லாதவைகளுக்குச் செயற்கைத் துளை போடுகிறார்கள்.

ஒரு முகம் முதல் பதினாறு முகம் வரையிலான உருத்திராக்கங்கள் உள்ளன என்று தவத்திரு ஆறுமுக நாவலர் அவர்கள் தமது சைவ வினாவிடை நூலில் கூறுகிறார்கள். அவற்றுள் ஒன்று, இரண்டு, மூன்று, மற்றும் பன்னிரண்டுக்கு மேற்பட்ட முகங்களை உடையவை அபூர்வமானவை.

நற்காரியங்கள் செய்யும் போது உருத்திராக்கத்தைத் தரிசிக்க நேரிடினும் அல்லது தரிசித்த பின் தொடங்கினாலும் எடுத்த காரியம் இனிது நிறைவேறும். அக்காரியத்தின் புண்ணியமும் பலனும் பெருமடங்காகும். இதனைக் கரங்களினால் தொட்டுவிட்டு நற்காரியத்தைத் தொடங்கினால் அக்காரியம் வெற்றியான அனுகூலத்தைத் தரும். உருத்திராக்கத்தை மாலையாக அணிந்து கொள்பவரை எவ்விதமான தொல்லைகளும் அணுகா. மேலும் 2000 கோதானப் பலன்கள் கிட்டும். காதுகளில் அணிந்தால் 16000 கோதானப் பலன்களும், சிகையில் அணிந்தால் எண்ணற்ற கோதானப் பலன்களையும் பெறலாம் என்று காலாக்கினி ருத்திரர் கூறியதாக ஜபாலோபநிஷத் கூறுகிறது.

'சித்தமிலரேனும் மிறைசீர் மணி தரித்தால் முத்தராவரென்று மறைமுற்றுமுரை செய்யும்' என்னும் பிரமோத்ர காண்டக் கூற்றின் மூலம் எப்படிப் பட்டவராக இருப்பினும் அக்குமாலை அணிந்தவர் சீவன் முத்தராவார் என்பதை அறிய முடிகிறது.

மீண்டும் கருவுட் புகாமல் பிறப்பறுத்து இறைவன் திருவடிப் பேற்றினை அடைய விழைவோர் அவசியம் உருத்திராக்கம் அணியவேண்டும்.

உருத்திராக்கத்தைக் குடுமியிலும், பூணூலிலும் ஒருமணி வீதமும், காது, கழுத்து, தோள், முன்கை, மார்பு, தலைமாலை ஆகிய இடங்களில் அவ்வவ் இடங்களுக்குத் தக்க அளவில் கோர்த்து அணியலாம். எனவே அர்ச்சகர் முதல் அடியார்கள் வரை, துறவி முதல் சிறுவ சிறுமியர் வரை அனைவரும் உருத்திராக்கத்தை அணிந்து சிவபுண்ணியம் பெற்று இகபர சௌபாக்கியங்களைப் பெற்றுய்வோமாக.

*——————*

**பிறைச் சந்திரன்**

*ஈசன் ஒரு பிறைச் சந்திரனைத் தான் அணிந்துள்ளார். ஆனால் ஆறுமுகன் தனது ஆறு முகங்களிலும் திருநீறு அணிந்துள்ள அழகு ஆறு பிறை நிலவுகளைத் தரித்திருப்பது போல் காட்சியளிக்கிறது என்று கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர் பாடியுள்ளார்.*

# கும்பாபிஷேக கிரியைகளும் விளக்கமும்

க. தில்லையம்பலம், ஓய்வு பெற்ற அதிபர்
களபூமி, காரைநகர்



ஆலயம் என்பது இறைவன் தங்குமிடம். இறைவனை நாம் நேர் நேராகக் காணமுடியாது. ஆகவே மேதாவிகள் உருவ வழிபாட்டிலே இறைவனை வழிபடலாமென ஆகமங்கள் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அவை கருங்கல்லினாலும், உலோகங்களினாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களை ஆதி மூலத்தில் வைத்து வழிபடலாம் என்பது ஆகம மரபு. இதிலும் கருங்கல் விக்கிரகங்களே விஷேஷமானது. ஏனெனில் சிவாச்சாரியார்கள் செய்யும் அபிஷேகங்கள் எல்லாம் கருங்கல்லிலே ஊறி விக்கிரகத்தின் அடியிலுள்ள இயந்திரத்தில் சேர்கின்றன. அத்துடன் கருங்கல்லில் ஆகர்ண சக்தியும் (ஈர்ப்புச் சக்தி) கூடுதலாக உள்ளது. அதிலிருந்து இறைவன் குளிர்ச்சி அடைந்து மக்களுக்கு வேண்டியபடி அனுக்கிரகம் செய்கின்றார்.

மேலும் சிவாச்சாரியர்கள் சொல்லுகின்ற வேத மந்திரங்களின் ஓசைகள் யாவற்றையும் கருங்கல் இழுத்துக் கிரகித்து இயந்திரத்திற்குக் கொடுக்கிறது. இதன்படி அந்த இயந்திரம் இறைவடிவாகி கருங்கல் மூலம் மக்களுக்கு அனுக்கிரகம் செய்கின்றது. ஆகவே கருங்கல் விக்கிரகத்தை ஆதிமூலத்தில் வைத்துப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்பது விதி.

உலோகங்களினால் வார்க்கப்பட்ட விக்கிரகங்களுக்கு அபிஷேக நீரை இழுக்கவோ, மந்திர ஒலியைக் கிரகிக்கவோ கூடிய சக்தி குறைவு. ஆனால் அந்த விக்கிரகங்களை வெளிப் பார்வையாகப் பார்த்து வழிபடுவதற்கு சிவாச்சாரியார்கள் மூலமூர்த்தியின் பிரதியை சொருபமாக இயந்திரங்கள் மூலம் ஆக்கிக் கொள்ளுகிறார்கள். ஆகவே அவற்றையும் வழிபடலாம் என்பது விதியாகும்.

### கும்பாபிஷேகம்

இதனைக் கும்பாபிஷேகம், குடமுழுக்கு, குடநன்னீராட்டு, அல்லது பெருஞ்சாந்தி என்று சொல்லப்படும். கும்பாபிஷேகம் ஆவர்த்தனப் பிரதிஷ்டை, அனாவர்த்தனப் பிரதிஷ்டை, புனராவர்த்தனப் பிரதிஷ்டை, அந்தரீகப் பிரதிஷ்டை என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. **ஆவர்த்தனப் பிரதிஷ்டை** – கோயில் இல்லாத ஊரில் புதிதாகக் கோயில் கட்டிப் பிரதிஷ்டிப்பது

2. **அனாவர்த்தனப் பிரதிஷ்டை** – கோயில் இருந்தும், பூசை செய்தும் அனேக நாட்களுக்குப் பூசை இல்லாமல் மூடப்பட்டிருந்து பின்னர் கோயிலைத் துப்பரவு செய்து பிரதிஷ்டிப்பது.

3. **புனராவர்த்தனப் பிரதிஷ்டை** – கோயிலில் பூசை நடந்து கொண்டிருக்கும் போது கட்டிடத்தில் வெடிப்பு, உடைவு, அஷ்டபந்தனம் பழுதடைதல் போன்றவைகள் ஏற்பட்டால் அவைகளைத் திருத்திப் பிரதிஷ்டிப்பது.

4. **அந்தரீகப் பிரதிஷ்டை** – ஆலயத்தில் மரணம் ஏற்பட்டால், ஆசூசம் உள்ளவர்கள் உட்பிரவேசித்தால், நாய் உட்சென்றால் உடனுக்குடன் செய்யவேண்டிய கிரியை இது. இதற்கு நாள் பார்க்க வேண்டியதில்லை. ஆனால், மற்றைய பிரதிஷ்டைகளுக்கு நல்ல நாள் பார்த்து செய்ய வேண்டும். இதுதான் கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதன் முறை.

இதைத் தவிர்த்துப் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தால் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்யப்படவேண்டியது ஆகமங்களில் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

அதுவும் நடைபெறாவிட்டால் விக்கிரகத்தில் இருக்கின்ற இறையருள் ஆலயத்தினுள் இருக்கும் தலவிருட்சத்திலிருந்து மக்களுக்கு மூன்று வருட காலம் அனுக்கிரகம் செய்யும். அதிலும் கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் ஆகாயத்தில் கிச்சிலிப் பட்சியாக இருந்து மக்களுக்கு அனுக்கிரகம் செய்யும். அதிலும் கும்பாபிஷேகம் நடைபெறாவிட்டால் சோதி வடிவாக ஆகாயத்திற்கு மேலாகச் சென்றுவிடும் என்று ஆகமங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. ஆகவே பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும்.

இறைவனை உருவ வழிபாட்டிலும் வணங்கலாம். உருவில்லாமலும் வணங்கலாம். ஆனால் உருவில்லாமல் வணங்குவது கிருகஸ்தர்களுக்குப் பொருந்தாது. யோகிகளுக்குத் தான் அது பொருந்தும். ஏனெனில் கிருகஸ்தர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பதங்களில் கிரியை நெறியில் நிற்பவர்கள். யோகிகள் உலகப் பற்றை வெறுத்து தியானத்தில் ஈடுபடுபவர்கள். அவர்கள் பத்மாசனத்தில் இருந்து சின் முத்திரையோடு தாங்கள் வழிபடும் தெய்வத்தின் உருவத்தை மூக்கு நுனியைப் பார்த்த வண்ணம் கண்ணுக்கு முன்னே நிலைநிறுத்தி மூலத்தைப் பார்த்தும் வழிபடுவர். இது கிருகஸ்தர்களுக்குப் பொருந்தாது. கிருகஸ்தர்கள் ஆலயத்தில் வணக்கம் செய்வதே நல்லது.

உருவ வழிபாட்டில் கும்பிடுவதானால் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்களால் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதங்களையும் அக்கினிக் குண்டத்தில் ஒன்று சேர்த்து அதைக் கும்பத்தில் ஒடுக்கிப் பின் அந்தச் சக்தியை மூலத்தில் இருக்கின்ற கல் விக்கிரகத்தில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் மூலம் கும்ப ஜலத்தைச் சொரிந்து இறையருளாக உண்டாக்க வேண்டும். இதுவே கும்பாபிஷேகமாகும்.

கும்பாபிஷேகம் அறுபத்துநான்கு அம்சங்களைக் கொண்டுள்ளது. அவைகளில் முக்கியமான அம்சங்களுக்கு விளக்கம் பின்வருமாறு:

**கர்மாரம்பம்** - கும்பாபிஷேகக் கிரியைகளைத் தொடங்குவதற்கு ஆயத்தம் செய்தல்.

**ஆசாரியாவர்ணம்** - நிர்வாகஸ்தர் கும்பாபிஷேகம் செய்வதற்குத் தகுதியான ஒரு குருவைத் தேர்ந்தெடுத்தல்

**அனுக்ஞை** – குருவானவர் உரிய தேவர்களிடம் செய்யப்போகும் கிரியைகள் குறைவின்றி நடைபெறுவதற்கு அனுக்கிரகிக்குமாறு அனுமதி பெறுவதுடன், கிராமத்திற்கும் எவ்வித இடையூறு வராவண்ணம் பாதுகாக்க வேண்டும் என்று வணங்கி வரம் பெறுதல்

**கிராம சாந்தி** – கோயிலுக்குப் பின்புறமாக உள்ள வீதியில் பந்தல் போட்டு அசுரர், இராட்சதர், பிரமாட்சதர், பசாசு ஆகியவர்களைக் கும்பாபிஷேகத்திற்கு இடையூறு விளைவிக்காமல் அகன்று நிற்கும்படி செய்தல்

**பிரவேச பலி** – ஒன்பது சந்திகளிலும் உள்ள திக்குப் பாலகரை துஷ்ட தேவதைகள் ஆலயத்திற்கு அப்புறமாக நிற்கும்படி காவல் வைத்தல்.

**கணபதி ஹோமம்** - எந்தக் காரியங்கள் செய்யும் போதும் பிள்ளையாரை வணங்கிச் செய்வது வழக்கம். அதுபோல் கும்பாபிஷேகத்திற்கு இடையூறு வராமல் பாதுகாக்கும்படி வணங்குதல்.

**ரக்ஷோக்ந ஹோமம்** - ஆலய வைரவரை முன்னிறுத்திச் செய்யப்படும் கிரியை.

**வாஸ்துசாந்தி** – அசத்பாவமுள்ள பூமியை வாஸ்து பிரம்மாவின் மூச்சினால் சத்பாவம் உண்டாகும்படி செய்தல்.

**நவக்கிரகமகம்** - நாட்டில் அதிக மழை, வைசூரி, யுத்தம் உண்டாகாமல் செய்தல்.

**திஸா ஹோமம்** - திக்குப் பாலகரை ஒன்பது திசைகளிலும் நின்று மாதக் கிரியைகளைப் பாதுகாக்கும்படி செய்தல்.

**ஸாந்தி ஹோமம்** - சிற்பாச்சாரி உட்பட இதர வேலைக்காரர்களின் குற்றம் குறைகளை நீக்கும்படி செய்தல்.

**ஸங்கிதா ஹோமம்** - ஆலய ஆதிமூலத்தைச் சுத்தம் செய்தல்.

**ஸலாதி வாசம்** - விக்கிரகங்களை நாட்டில் நல்ல மழை பெய்வதற்காக நீரில் அமிழ்த்துதல்.

**தானியாதி வாசம்** - நாட்டில் விளைவு பெருகுவதற்காகச் செய்யப்படுதல்.

**நவலோன் மீவனம்** - விக்கிரகங்களுக்குப் பளிம ரேகை தங்க ஊசியால் கீறுதல் (கண் திறத்தல்).

**கிராமப் பிரதட்சணம்** - மக்கள் விக்கிரக ரூபத்தைப் பார்த்துப் பக்தி ஏற்படச் செய்தல்.

**கலாகர்ஸணம்** - பாலஸ்தாபனம் செய்திருக்கும் மூர்த்தியிலிருந்து இறை சக்தியைக் கும்பத்தில் சேர்த்தல்.

**கடஸ்தாபனம்** - சிவகலசம் பதினாறு படி கொள்ளக்கூடிய கங்கை முதலிய புண்ணிய நதிகளிலிருந்து நீர் நிறையச் செய்து மந்திர பூர்வமாக ஆயத்தம் செய்தல்.

**யாகசாலைப் பிரவேசம்** - பிரதான கும்பங்களையும், அட்டவித்யேஸ்வர கும்பங்களையும், பரிவார மூர்த்திகள் கும்பங்களையும் யாகசாலையில் சேர்த்தல்.

**மிருத் சங்கிரகணம்** - விளைவு பூமியில் மண் எடுத்து வந்து முளைக்கக்கூடிய நவதானியங்களைப் பசுப்பாலில் கழுவி மண்ணோடு சேர்த்து முளைக்கும்படி செய்தல். இந்த முளையின்படி கும்பாபிஷேக விளைவுகளை அறியமுடியும்

**இயந்திர பூசை** – பிம்பத்தின் கீழ் வைக்கப்படும் இயந்திரத்தை அபிஷேகம் செய்து வில்வப் பத்திரத்தினால் 1008 சகஸ்ரநாமார்ச்சனை செய்தல்.

**விசேட சந்தி** – குருமார் எல்லோரும் ஒருமித்து தேவர்கள் மகிழும்படியாக சந்தியா வந்தனம் செய்தல்.

**பேரிதாடனம்** - தேவர்களை யாகசாலையில் இருக்கும் கும்பங்களில் அமரும்படி வாத்திய கோசம் எழுப்புதல்.

இவை போன்ற இன்னும் பல கிரியைகள் இருக்கின்றன. இவைகளைக் கும்பாபிஷேக காலங்களில் நேரில் சென்று அறிந்து கொள்ளுதல் நலம்.

ஓம் நமசிவாய! ஓம் நாராயண நம!


With Best Compliments from

# 3S Distributions (Private) Limited

Distributors for NESTLE LANKA LTD.
Reckitt Benckiser Lanka Ltd.

***No. 111 & 113, Old Moor Street,***
***Colombo - 12, Sri Lanka.***
***E-mail: distibutions3s@yahoo.com***
***Tel/Fax: +94-11-2436160, +94-11-2336125***

# பாரதி சுட்டும் ஆறு துணை

முனைவர் நிர்மலா மோகன்
பேராசிரியை, செந்தமிழ்க் கல்லூரி, மதுரை



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மகாகவி பாரதியார். அவரது பாடல்களில் உலகியலும் அருளியலும் கைகோர்த்துக் களிநடம் புரியும். பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி குறிப்பிடுவது போல் 'பாரதத்தின் பழமையுரிமைச் செல்வமான ஆன்மீகம், பாரதத்தின் தற்கால உரிமை நாட்டப் போரினை அவாவி நின்ற லௌகிகம்: இதுவே பாரதியாரில் இணைந்து பிணைந்த ஆளுமையாகும்' (பாரதி பாடல்கள் - ஆய்வுப் பதிப்பு, முன்னுரை, ப. xxviii). இதனைப் பாரதியின் 'ஆறு துணை' என்னும் அவரது முத்திரைப் பாடல் வழியே காண்போம்.

**சக்திதாசன்**

உலகளாவிய பார்வை படைத்த தமிழ்க்கவி பாரதியார் தம்மை 'ஷெல்லிதாசன்' என்றும், 'சக்திதாசன்' என்றும் அழைத்துக் கொண்டவர். ஐந்து வயதில் தாயை இழந்த ஏக்கம், பாட்டி அத்தை போன்ற பெண்களின் அரவணைப்பு, ஒன்பது வயதில் தாம் காதலித்த பெண் காட்டிய பரிவு, இளம் வயதில் திருமணம் ஆக, மனைவி செல்லம்மா செலுத்திய அன்பு, அரசியல் உலகில், 'தேச பக்தியே தெய்வீக பக்தி' என்பதை ஒரு நொடிப் பொழுதில் உணர்த்திய நிவேதிதை அம்மையாரின் வழிகாட்டல் ஆகிய அனைத்தும் இணைந்து, பாரதியாரை 'சக்தி தாச'னாக மாற்றியது. இதன் விளைவாய் 'மஹாசக்தி', 'பராசக்தி', 'சிவசக்தி' என்றெல்லாம் சக்தியைப் போற்றி வழிபடுகின்றார் பாரதியார். 'ஆறுதுணை' என்னும் தலைப்பில் அவர் அழகிய தோத்திரப் பாடல் ஒன்றையும் பாடியுள்ளார்

'ஓம்சக்தி ஓம்சக்திஓம் - பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்திஓம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி – ஓம்சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்'

எனத் தொடங்கும் இப்பாடலில் பாரதியார் கணபதி, பராசக்தி, முருகன், கலைமகள், கண்ணன், திருமகள் ஆகிய ஆறு கடவுளரைத் துதிக்கின்றார்

தோத்திரப் பாடல் போல் தோன்றும் இப்பாடல் மந்திர மொழிதனைத் தன்னகத்தேகொண்டு வாழ்க்கையின் முழுமையையும் எடுத்துக் காட்ட வல்லதாய் அமைந்துள்ளது.

1. **கணபதிராயன்**

எந்தச் செயலைச் செய்வதாக இருந்தாலும் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்குவது தமிழரின் மரபு. அதை அடியொற்றி,

'கணபதிராயன் அவனிரு காலைப் பிடித்திடுவோம்
குணம் உயர்ந்திடவே விடுதலை கூடி அகிழ்ந்திடவே'

எனத் தொடங்குகின்றார் பாரதியார். அவர் கணபதிராயனைப் போற்றுவதற்கான காரணம் இரண்டு. 1. குணம் உயர்ந்திட 2. விடுதலை கூடி மகிழ்ந்திட.

மனிதன் மனிதனாக வாழ – வையத்துள் வாழ்வாங்கு வாழத் தேவைப்படுவது நற்குணமே. குணம் பேசிக் குலம் பேசி, மணம் பேசி முடிப்பது நம் தமிழர் பண்பாடு.

'குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு; பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்; எம்முழை அன்பின்வந்த
அகன்அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை'

(வீடணன் அடைக்கலப் படலம், பா.143)

என்று இராமன் காட்டிய உலக சகோதரத்துவமும், 'இன்று போய் போருக்கு நாளை வா' என்று பகைவனுக்கும் அருள் செய்த குணமும் தான் இன்றைய உலகிற்குத் தேவையானவை என்பதை உணர்த்தவே 'குணம் உயர்ந்திடவே' எனப் பாடுகிறார் பாரதியார்.

'விடுதலை கூடி மகிழ்ந்திட' என்று பாரதியார் சுட்டிக் காட்டும் விடுதலை – அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்திய நாட்டின் அரசியல் விடுதலை மட்டும் அன்று; உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் சிலையை மாற்றிடும் சமூக விடுதலை; பொருளாதார விடுதலை; பெண் விடுதலை ஆகியனவும் ஆகும். நாடும் வீடும் நலம் பெறக் 'கணபதிராயன் காலைப் பிடித்திடுவோம்' எனப் பாடுகிறார் பாரதியார்.

## 2. பராசக்தி

'சொல்லுக் கடங்காவே பராசக்தி சூரத்தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் பராசக்தி வாழி என்றே துதிப்போம்'

என்பது இப்பாடலில் இரண்டாவதாக அமைந்துள்ள பராசக்தி வழிபாடு ஆகும். நன்மை ஆக்குபவளும் பெண்; தீமையை அழிப்பவளும் பெண் என்பதை உணர்த்தவே 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்னும் பழமொழி நாட்டு மக்களிடையே வழங்கி வருகிறது. 'நல்லவனாக மட்டும் வாழ்ந்தால் போதாது; வல்லவனாகவும் இருக்கவேண்டும்' என்று தம் படைப்பொன்றில் குறிப்பிடுவார் மு. வரதராசனார். அதுபோல், துஷ்டரைக் கண்டால் தூர விலகிச் செல்வது அல்ல வாழ்க்கை; துஷ்டரைக் கண்டால் தூர விரட்டும் துணிவும் வேண்டும்; இதையே 'சூரத்தனம்' எனப் பேச்சு வழக்கில் குறிப்பிடுகின்றார் பாரதியார்.

'பாதகம் செய்பவரைக் கண்டால்
பயம் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!'

எனப் பாப்பாப் பாட்டில் பாரதியார் கூறுவது மனங்கொள்ளத் தக்கது. சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கு வகையான வழிகளையும் கையாண்டு வாழ்வில் வெற்றி பெறப் பராசக்தி துணை நிற்பாள் என ஆழமாக நம்புகின்றார் பாரதியார். 'நல்லதும் தீயதுஞ் செய்திடும் சக்தி நல்லதை நமக்கிழைப்பாள்; அல்லது நீங்கும் என்றே உலகேழும் அறைந்திடுவாய்' (ஓம் சக்தி பா.48) என்று பிறிதொரு பாடலிலும் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

## 3. வடிவேலன்

'வெற்றி வடிவேலன் அவன் வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்'

என்பது பாரதியார் போற்றும் மூன்றாவது துணை. வெற்றி வடிவேலன் கையில் உள்ள வேல், அகப்பகை, புறப்பகை ஆகிய இரண்டினையும் வெல்லும் ஆற்றல் வாய்ந்தது. வடிவேலன் கையில் வைத்திருப்பது சக்திவேல்; ஞானவேல்; வீரவேல். சூரபதுமன் என்னும் பகையை அழித்தது அவ்வேல், முருகனின் வீரத்தினையும் வெற்றியையும் குறிப்பது அவன் கையில் உள்ள சக்திவேல்.

முருகன் சூரபதுமனை முற்றிலுமாக அழிக்கவில்லை; அவனிடம் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை அழித்தார். ஆணவம் கொண்ட இராவணன் போலவோ, துரியோதனன் போலவோ முற்றிலுமாக அழிந்து விடவில்லை சூரபதுமன். கடலுக்குள் சென்று மாமரமாக நின்ற அவனை முருகனது வேல் இரு கூறு ஆக்கியது. ஒன்று கோழியாகவும், மற்றொன்று மயிலாகவும் மாறியது. கோழியைக் கொடியாகவும், மயிலை ஊர்தியாகவும் கொண்டான் முருகன். புறப்பகையை வென்றது முருகன் கைவேல்.

வேல் என்பதே ஞானத்தின் குறியீடாக – அறிவை உணர்த்தும் வடிவமாக அமைவதாகும். 'ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என இறைவனைத் திருவாசகம் குறிப்பிடுவது போல, வேல் ஆழ்ந்தும், அகன்றும், நுண்மையும் கொண்டதாக விளங்குவது. மனிதன் மனத்தில் உள்ள ஆசை, கோபம், களவு முதலான அகப் பேய்களை அறிவு என்னும் ஞானவேல் அழித்துவிடும்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றினைப்
பற்றுக பற்று விடற்கு'

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க எல்லாவகைப் பற்றுக்களினின்றும் விடுபடுவதற்குத் துணையாகக் கொள்ள வேண்டுவது முருகனின் ஞானவேல் ஆகும் என்பதை இங்கே உணர்த்துகிறார் பாரதியார்.

## 4-5. கலைமகள் தாளும் கண்ணன் பாதமும்

'தாமரைப் பூவினிலே சுருதியைக் தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே கண்ணில் ஒற்றிப் புண்ணியம் எய்திடுவோம்'

என்பது நான்காவதாக அமைந்த கலைமகள் துதி.

'பாம்புத் தலைமேலே நடஞ்செய்யும் பாதத்தினைப் புகழ்வோம்
மாம்பழ வாயினிலே குழலிசை வண்மை புகழ்ந்திடுவோம்'

என்பது ஐந்தாவதாக அமைந்த கண்ணன் துதி.

கலைமகள் கையில் உள்ள வீணையின் நாதமும் கண்ணன் வாயில் உள்ள புல்லாங்குழலின் நாதமும் ஓர் உண்மையைப் புலப்படுத்துகின்றன. பகை நீங்கிய உலகில் மக்களை இசைவிப்பது - இணைப்பது இசை. இந்த ஓங்கார நாதத்தில் ஒன்றிணைந்து இருக்க வேண்டும் என்றால் அதற்கு நாம் செய்ய வேண்டுவது யாது?

'பூமணித் தாளினையும், நடஞ்செய்யும் பாதத்தினையும்' பற்றிக் கொள்ளும் சரணாகதியே நாம் பின்பற்ற வேண்டிய வழி. இதையே 'அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டான்' என்னும் பழமொழியும் எடுத்துரைக்கிறது.

'நம்பினோர் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்.'

என்று பிறிதொரு பாடலில் பாரதியார் எடுத்துக் காட்டுவது போல், அம்பிகையைச் சரண் புகுவது ஒன்றே வாழ்வில் அமைதியைப் பெறும் வழி ஆகும்.

## 6. திருமகள்

'செல்வத் திருமகளைத் திடங்கொண்டு சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல்லாம் தருவாள் நமதொளி திக்கனைத்தும் பரவும்'

என்பது பாரதியார் கூறும் ஆறாவது துணை; திருமகள் துதி 'செல்வம்' என்னும் சொல் பணத்தை மட்டும் குறிப்பது அன்று; கல்விச் செல்வம் முதலான 16 வகையான செல்வங்களையும் - பேறுகளையும் - உணர்த்துவது ஆகும். ஆதனால்தான் 'செல்வம் எல்லாம் தருவாள் நமதொளி திக்கனைத்தும் பரவும்' என்கிறார் பாரதியார். 'திடம் கொண்டு சிந்தனை செய்திடுவோம்' என்பதன் மூலம் எண்ணம், சொல், செயல் என்னும் மூன்றையும் ஒன்றிணைக்கும் மனத் திட்பத்தை அவர் உணர்த்துகிறார். 'நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தி மொணமொணவென்று சொல்லு மந்திரம் ஏதடா?' என்று சிவவாக்கியர் கேட்பது போல் மனம் ஒன்றாத வழிபாடு வழிபாடே அல்ல. கை, கண், செவி, வாய், மெய், கண்டம், தோள், மனம் என அனைத்தையும் 'சக்தி தனக்கே கருவியாக்கி' மனம் ஒன்றிச் செய்யும் வழிபாடே — தியானமே — மனிதனை நல்வழிப்படுத்தும்; கலையாத கல்வி, குறையாத வயது, கபடு வராத நட்பு, கன்றாத வளமை, குன்றாத இளமை, கழுபிணி இலாத உடல், சலியாத மனம், அன்பு அகலாத மனைவி (துணை), தவறாத சந்தானம், தளராத கீர்த்தி, மாளாத வார்த்தை, தடைகள் வராத கொடை, தொலையாத நிதியம், கோணாத கோல், துன்பமில்லாத வாழ்வு, இறைவனைப் பற்றும் அன்பு ஆகிய 16 வகையான பேறுகளையும் நல்கும் என்பது பாரதியாரின் ஆழ்ந்த நம்பிக்கை.

அரசியல், சமூக, பொருளாதார விடுதலை முற்றிலுமாக அடைந்த நாட்டில் மக்கள் யாவரும் கூடி மகிழ்ந்து, குணம் உயர்ந்து வாழ்வதற்கும், நல்லவராக மட்டமின்றி வல்லவராக வாழ்வதற்கும், அகப்பகை, புறப்பகை நீங்கி நல்லறிவு பெறுவதற்கும், திடங்கொண்டு சிந்தனை செய்து 16 வகைப் பேறுகளைப் பெறுவதற்கும், இறைவன் தாள்களைப் பற்றி முத்திநிலை அடைவதற்கும் பாரதியாரின் 'ஆறு துணை' என்னும் பாடல் நல்ல வண்ணம் வழிகாட்டுகின்றது.



*மஹாகவி சுப்பரமணிய பாரதியார்*

# மனமும் இசையும்

**இசைப் பேராசிரியர் எஸ். கே. சிவபாலன்**

நுண் கலைகளுள் முதன்மையாக விளங்குவது இசைக் கலையாகும். இக்கலை இன்னொலியுடன் (நாதத்துடன்) தொடர்புடையது. இவ் இன்னொலி மொழியோடு இணையும்போது, செவிக்கு இன்பத்தையும் தருவதோடல்லாமல், உடலுக்கு வலுவையும், உரத்தையும் தந்து, நிறைவாக மனிதனை ஆன்ம ஈடேற்றத்திற்கும் இட்டுச் செல்கின்றதெனலாம். இக்கலை எல்லா நாட்டு மக்களும், எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளும் படியான நியதிகளைக் கொண்டு வளர்ந்த கலையாகும்.

பொதுவாக இசையில் காணப்படும் ஏழிசை அமைப்பு முறை எல்லா இசை வகைகளுக்கும் பொதுவானவையாகும். இப்பரந்த உலகம் ஓர் ஒழுங்கு அமைப்பிற்கு உட்பட்டே இயங்கி வருவது கண்கூடு. இவ்வாறே இசையும் ஓர் ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டு விளங்குவதும் குறிப்படத்தக்கதாகும். இவ்வகையில் இசைக் கலையோடு தொடர்புடைய மனிதனும், ஓர் ஒழுங்கு நியதியில் கட்டுப்பட்டு வாழும்போது தான் அவனது வாழ்வும் உயர்வதோடு சிறப்பும் அடைகிறது. மேலும் படித்தவரும், பாமரரும் ஒருசேர இரசித்து மகிழும் தன்மையில் இக்கலை அமைந்து விளங்குவதும் இதன் மற்றோர் சிறப்பாகும்.

எமது நாட்டு இசை மரபானது மனிதனது தொடக்க வளர்ச்சியுடன் தொடங்கி அவனது இறுதி நிலையுடன் இரண்டறக் கலந்து விளங்குகின்றது. அதாவது, குழந்தையில் தாலாட்டுப் பாடலாகத் தொடங்கி நிறைவில் ஒப்பாரிப் பாடலாக நிறைவடைகின்றது. இதற்கிடையேயும் அவனது ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இசை ஒன்றி இருப்பதும் நம் இசையின் தனிச் சிறப்பாகும். பொதுவாகவே இசையானது மனித மனநலத்தை மேம்படுத்தும் ஒரு கருவி என்றே கூறலாம். இராவணன் இசைமீட்டி இறைவனைக் கவர்ந்ததும், அடியார்கள் இசைபாடி நோய் தீர்த்து அற்புதங்கள் செய்ததும், மற்றும் ஐந்தறிவிற்குக் குறைந்த விலங்குகளும், இசைக்கு மயங்குகின்றன என்பதும் இசையின் மேன்மைக்குக் கிடைக்கப்பெறும் அகச் சான்றுகளாகும். எனவே மனத்திற்கும், உடலிற்கும் நன்மை பயக்கும் கலை நம் இசைக்கலை என்று கூறுவோமெனில் அது மிகையன்று.

தற்கால உளவியல் அறிஞர்களில் பெரும்பான்மையினர் உளவியல் என்பது மனித நடத்தை பற்றிய அறிவியல் என்பர். எனவே மனித நடத்தையை மேம்படுத்தும் சாதனமாக இசைக்கலையையும் நாம் கருதலாம். இதில் இசை என்பது வெறும் பாடற் பொருளின் தேர்ச்சி மட்டுமல்ல. அறிவு வளர்ச்சி, மனவளர்ச்சி, ஞாபகசக்தி, செயல்திறன் வளர்ச்சி, உள ஒருமைப்பாட்டுத்திறன், பக்தி உணர்வு போன்றவற்றுடன் தொடர்படையதாகும். மேலும் இசையைக் கற்பதனால் ஒருவர்க்கு அன்பு, அடக்கம், நல்லொழுக்கம், பக்தி போன்றவை ஏற்படுவதுடன் ஒருவரின் உடலமைப்பிலும், அதாவது முகவசீகரம், கவர்ச்சி

போன்றவையும் விருத்தியாகிறது. அல்லாமலும் தூய அறிவியலோடு இசையைப் பயின்று, பாடிக்கேட்டால், உள்ளத்திற்கு மன அமைதியையும், மன அறிவையும் தருவதுடன், மூச்சுப் பைகள் வலுவடைந்து உடல் நலம் பெருகவும் வழிவகுக்கின்றதெனலாம்.

### குழந்தைகளுக்கு இசை

இயல்பாகவே குழந்தைகள் பிறக்கும் போது ஓர் இசைச் சூழல் உருவாகுவதைக் காணலாம். குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டும் போதே இயற்கையாக ஒரு தாலாட்டுப் பாடலும் தாயின் வாயிலிருந்து பிறக்கும். இப்பாடலைக் கேட்ட குழந்தை அமைதியுறுவது இயற்கையாகும். மேலும் இயல்பாகவே குழந்தை அழும்போது நாம் நல்ல இசை ஒலியை ஏற்படுத்தினால் உடனே குழந்தை அழுகைச் சத்தத்தை நிறுத்தி உற்று நோக்குவதை நாம் கவனிக்கலாம். குழந்தைகளுக்கு நல்ல இசைச் சூழ்நிலையை உருவாக்குதலே அவர்களை இசையில் நாட்டம் கொள்ளச் செய்யும். நல்ல இசையைக் கேட்கச் செய்வதன் மூலமும், கோயில் வழிபாட்டுடன் வீட்டில் பஜனை போன்றவற்றை நடத்தி அவற்றில் ஈடுபட வைப்பதும், அவர்களுக்கு இசை ஆர்வம் ஏற்பட வழிவகுக்கும்.

மேலும் விளையாட்டு மூலமும் இசை கற்பித்தல் நல்ல பலனை அளிக்கும். குழந்தைகளுக்கு மனச்சோர்வு ஏற்படாமல் இருப்பதற்கு இது ஒரு சிறந்த வழியாகும். இதனாலேதான் விளையாட்டுமூலம் இசை கற்பித்தல் முறை (PLAYWAY METHODS OF MUSIC TEACHING) (MONTESORI) அமைப்பிலும் ஏறகப்பட்டுக் கற்பிக்கப்படுகிறது. இவற்றுடன் இசைக்கோலம், கும்மி, கோலாட்டம், பின்னல் கோலாட்டம் போன்றவையும் இவற்றுள் அடங்கும்.

### மனநல வளர்ச்சியில் இசை

மனவிருத்திக்கு இசை ஆற்றும் பங்கை நோக்கும் போது இசை இங்கு ஒரு மருந்தாகவே எண்ணப்படுகிறது. ஒருவர் இசையைக் கற்கும்போது ஐம்புலனறிவு விரிவடைகிறது. இதனால் அவரின் முழு ஆழுமையும் வளர்கிறது. மேலும் உற்றுநோக்கும் தன்மையும், ஆழ்ந்து சிந்திக்கும் திறனும் பெருகுகிறது. கற்பனா சக்தி வளர்கிறது. பொறுமையைக் கடைப்பிடிக்கும் பயிற்சி ஏற்படுகின்றது. புத்தகப் படிப்பினால் ஏற்படும் மனச்சோர்வு நீங்கி மேலும் புத்துணர்ச்சியுடன் பாடங்களைப் பயில வழிவகுக்கின்றது. இதனால் தன்னம்பிக்கை உண்டாகிறது. மேலும் அறிவியல் பாடங்களைக் கற்றுத் தேறுவதற்கும் இசை ஓர் உந்து சக்தியாக விளங்குகின்றது எனலாம். நியூற்றன், ஆர்க்கிமிடிஸ் போன்ற விஞ்ஞானிகள் இசைக்கலைஞர்களாக விளங்கியமையும் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

மேலும் இசையின் மூலம் மனவளர்ச்சி குன்றியவர்களையும் மேம்படுத்தலாம். தற்காலத்தே மனவளர்ச்சி குன்றியவர்களுக்காக நடத்தப்பெறும் பள்ளிகளில் தனிப்பாடல், குழுப்பாடல்,

வண்ணம் தீட்டுதல், சித்திரம் வரைதல் போன்றவையும் கற்பிக்கப் படுகின்றன. மேலும் முதியோர் இல்லங்களிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலமும் அவர்களுக்கு மன அமைதியையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தலாம்.

இன்றைய வேகமான உலகில் மாணவர்களை வேகமாகச் சீரழிக்கப் பலவிதமான சாதனங்கள் பல்கிப் பெருகியுள்ளன. இவற்றுள் போதைப் பொருள் முதன்மை வகிக்கின்றது. இதனால் பாதிக்கப் பட்டவர்கள் மனநிலை சரியில்லாதவர்கள் ஆகவும், சோம்பேறிகள் ஆகவும் சமூகத்திற்கு ஒரு சுமையாகக் காணப்படுகிறார்கள். இவ்வாறு தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையானவர்களும் மன நிலை சரியில்லாதவர்களும் இசை மருத்தவ முறையில் (MUSIC THERAPY) சிகிச்சை அளித்தல் நலம் கொடுக்கும். நம் நாட்டில் இம்முறை நன்கு வளர்ச்சி அடையவில்லை. இதுபற்றிய ஆய்வுகள் பெருகினால் இதன் மூலம் மக்கள் பயன் பெற வாய்ப்புகள் ஏற்படும்.

இசை மருத்துவத்திற்குச் சான்றுகள் நம் நாயன்மார்கள் பாடிய அருட் பாடல்களிலேயே உள்ளன. இசையின்மூலம் நோய்கள் குணமடைந்தமையும், வேண்டியன கிடைக்கப் பெற்றமையும் அவர்கள் பாடிய பாடல்கள் மூலம் நாம் அறியக் காணலாம்.

சங்க இலக்கியங்களிலும் இசையின் மூலம் மதங்கொண்ட யானையை அடக்கியமையும், வழிப்பறிக் கள்வர்களை மயக்கியமையும் குறிப்பிடப் பட்டுள்ளன. இசையோடு பக்தியையும் குழைத்துச் சாதனையுடன் செயற்பட்டால் இன்றும் இது சாத்தியமேயாகும். எனவே எமது இசையானது மனிதனது அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துவதுடன் நிறைவாக ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுக்கின்றது எனலாம்.

# ஐம்புலன்கள்

சிருங்கேரி ஜகத்குரு
ஸ்ரீஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த சுவாமிகள்

மெய், வாய், கண், மூக்கு, செவி மூலம்தான் அதாவது தொடுதல், சுவைத்தல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் ஆகிய செயல்கள் மூலம்தான் ஆசைகள் பல தோன்றி, அவையே பேராசையாக மாறி, மனிதனின் வாழ்க்கையை அழித்து விடுகின்றன. இதை விளக்குவதற்காக ஆதிசங்கரர் சில உதாரணங்களைக் கூறியுள்ளார்.

இவை எல்லாம் மனித வாழ்வோடு சம்பந்தமுடையவை. மனித வாழ்வுக்கு தேவைப்படும் உதாரணங்கள். எல்லோரும் மனதிற் கொள்ள வேண்டியவை. படித்துப் பயன் பெறுங்கள்.

**மெய்**

காட்டில் புதிதாகப் பிடிக்கப்படும் யானை அதற்கென வெட்டப்பட்ட குழியில் விழுந்துவிடும். அது மனிதனின் வசத்திற்கு வரவேண்டுமென்றால் ஏற்கெனவே பழக்கப்பட்ட ஒரு யானையைத் தேர்ந்தெடுப்பார்கள். குழியில் ஓர் ஆண் யானை விழுந்து விட்டால் பழகிய பெண் யானையொன்றினை ஆண் யானையின் அருகில் செல்லுமாறு யானைப் பாகன் கட்டளையிடுவான்.

அந்தப் பெண் யானை, ஆண் யானைக்கு அருகில் போனால் ஆண் யானை ஒன்றும் செய்யாது. பழக்கப்பட்ட பெண் யானையின் பாகன் தனது யானையிடம் ஒரு சங்கிலியை எடுத்துக் கொடுத்து 'ஆண் யானையின் காலில் போடு' என்று ஆணை பிறப்பிப்பான். பெண் யானையும் அவ்வாறே செய்யும். அப்பொழுது ஆண் யானை கட்டுப்பட்டுவிடும். பிடிபட்ட யானையைப் பழக்கி எடுத்துவிடுவார்கள்.

யானையானது தன் உடலால் உண்டாகும் ஸ்பரிச சுகத்தில் (தொடும் இன்பத்தில்) பற்று வைத்து, ஒரு மனிதனுக்கு அடிமையாகிவிடுகிறது.

**வாய்**

மீனவன் எவ்வாறு மீன் பிடிக்கிறான்? ஒரு மண் புழுவைத் தூண்டிலில் உள்ள முள்ளின் மீது வைத்துத் தண்ணீரில் போடுகிறான். தண்ணீரிலுள்ள மீன், புழுவை விழுங்கிவிட முயற்சி செய்யும் போது தூண்டிலில் உள்ள முள்ளில் சிக்கிக் கொண்டுவிடும்.

கடைசியில் அந்த மீன் தனது வாயில் உண்டாகும் சுவைக்கு ஆசைப்பட்டு மீனவனின் தூண்டிலில் விழுந்து தன் உயிரையே மாய்த்துக்கொண்டு விடுகிறது.

**கண்**

விட்டில் பூச்சி என்ற ஒரு பூச்சியை நாம் பார்த்திருக்கின்றோம். எங்கேயாவது தீப ஒளியைக் கண்டால் அந்தப் பூச்சியானது 'இந்தத் தீபம் நல்ல அழகாய் இருக்கிறதே' என்று நினைத்துக் கொண்டு அந்தத் தீபத்தையே சுற்றிச் சுற்றி பறந்து முடிவில் அந்தத் தீபத்திலேயே விழுந்து மடிந்துவிடுகிறது.

கண் என்னும் புலனால் பார்க்கின்ற பொருள்களில் எல்லாம் ஆசை ஏற்படும் பொழுது அது அழிவை உண்டாக்குகிறது.

**மூக்கு**

தேனீ பூக்களில் உள்ள ரசத்தை நுகர்வதற்காகப் பூக்களில் இருக்கவே ஆசைப்படும். ஒரு சமயம் தேனீ ஒன்று தாமரை மலர் ஒன்றில் உட்கார்ந்து அதன் ரசத்தை நுகர்வதிலேயே மிகவும் கவனத்துடன் இருந்தது. இரவு வருவது கூடத் தேனீக்குத் தெரியவில்லை. தாமரை மலர் மூடிக்கொண்டது. மறுநாள் காலையில் நீருக்காக வந்த யானைக் கூட்டம் நீர் அருந்தியதுடன் நின்றுவிடாது தடாகத்தையே சின்னாபின்னமாக்கிவிட்டன. பூக்களும் அழிந்தன. தேனீயும் சேர்ந்து அழிந்து விட்டது.

மூக்கினால் நுகரும் ஆசை தேனீயை அழித்துவிட்டது.

**செவி**

காட்டில் தோல் வாத்தியங்களைத் தட்டிச் சத்தம் எழுப்புவார்கள். அந்த இடத்தில் வலை ஒன்றை விரித்திருப்பான் வேடன். சத்தத்தைக் கேட்டு ஆசையுடன் வரும் மான்களுக்கு கீழே விரித்திருக்கும் வலை கண்ணுக்குத் தெரிவதில்லை. அவை நேராக அந்த வலையில் விழுந்து அகப்பட்டுக் கொள்ளும்.

செவி என்ற புலனுக்கு உண்டான சத்தம் என்ற ஆசையினால் மான்கள் வேடன் கையில் அகப்பட்டுவிடுகின்றன.

ஒவ்வொரு புலனிலும் பற்றுதல் வைத்துக்கொள்வதால் பிராணிகளுக்கு ஏற்பட்ட அழிவை, மேற்கண்ட உதாரணங்களால் அறிந்து கொண்டோம்.

ஆனால் மனிதனோ ஒரு புலனில் மட்டும் பற்றுதல் இல்லாமல் ஐம்புலன்களிலும் பற்றுதல் கொண்டிருக்கிறான். எண்ணில் அடங்காத ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள விரும்புகின்றான்.

அவன் கதி என்ன ஆவது?

புலன்களைப் பயன் படுத்தக்கூடாது என்று சாஸ்திரங்கள் சொல்லவில்லை.

புலன்களை அடக்கி வைக்க வேண்டும். அவற்றால் ஏற்படும் ஆசைகளுக்கு அடிமையாகி விடக்கூடாது என்றுதான் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

# கவிஞர் இரா இரவி

**இம் மலர் மலர உதவியவர்**



தமிழ், கவிதை, இலக்கியம் என்பவைகள் மூலம் உலகில் வாழும் தமிழர்களை ஒன்றிணைத்துக் கொண்டிருப்பவர் மதுரையின் ஹைக்கூ கவிஞர் இரா இரவி அவர்கள். இரவு பகலாக பல கண்டங்களுக்கூடாக இவரது www.kavimalar.com என்னும் இணையத்தளம் மூலம் தமிழர்களின் உறவு வளர்ந்து கொண்டு வருகிறது. இதுவரையில் சுமார் இரண்டு இலட்சம் தமிழர்கள் இந்த இணையத் தளத்துடன் உறவு கொண்டுள்ளனர். இது ஒரு சாதனையாகும் என்கிறார் இரவி.

மதுரை திருமலைநாயக்கர் மஹாலில் கடமையாற்றும் கவிஞர் இரவி சுறுசுறுப்பாகச் செயற்படுபவர். அதுமட்டுமல்ல மற்றவர்களையும் சுறுசுறுப்பாகச் செயற்பட வைப்பதிலும் கெட்டிக்காரர். 'மதுரைக்கு வருகிறோம்' என எவராவது குரல் கொடுத்தால் மட்டும் போதும், பொன்னாடையுடனும், பூமாலையுடனும் வரவேற்கத் தயாராகிவிடுவார். தமிழர்களாகிய உடன்பிறப்புக்களைக் கௌரவிப்பதில் அவ்வளவு ஆர்வம்.

இம்மலரை ஒரு சிறந்த மலராகப் படைக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் தமிழ்நாட்டு அறிஞர்களிடம் இருந்து சிறப்புக் கட்டுரைகளைப் பெற்று எமக்கு அனுப்பிவைத்து ஆதரவு தந்த பெருமைக்குரியவர் கவிஞர் இரவி அவர்கள். திக்கரை முருகன்பால் சமீபத்தில் அமரத்துவம் அடைந்த சிறந்த மரபுக் கவிஞர் அதலை இராமன் அவர்களைப் பாடவைத்தவர். கவிஞர் இரவி அவர்களின் கடல் கடந்த தமிழ்ப் பற்றுக்கு இது ஓர் உதாரணம்.

தமிழகத்திலுள்ள ஹைக்கூ கவிஞர்களில் முன்னிலைக் கவிஞராக விளங்கும் இவர் இதுவரையில் எட்டு ஹைக்கூ கவிதைப் புத்தகங்களை வெளியிட்டுள்ளார். சமுதாய விழிப்புணர்வுக் கவிதைகள் மூலம் இவர் தமிழ் நாட்டில் பிரபல்யம் பெற்றுள்ளார்.

அருள்மிகு திக்கரை முருகன் கும்பாபிஷேக மலர் சிறப்பாக வெளிவர உதவிய கவிஞர் இரவி அவர்களுக்கு எமது நன்றிகள்.



*Wiht Best Compliments from*

# S. V. MURUGESU

*Distributors For*

**Fonterra Brands Lanka (Pvt) Ltd**

**Lanka Milk Foods (CWE) Ltd**

**Nestle Lanka Ltd****

**Unilever Sri Lanka Ltd**

**Shell Gas Lanka Ltd****

**Energizer Lanka Ltd**

**Maliban Biscuits Manufactories Ltd**

**154, Hospital Road,**
**Jaffna.**

**Tel: 021 2222911**
**Fax: 021-2222202**

# திக்கரை முருகனின் பெருஞ்சாந்தி விழாவினொடு பெருஞ்சாந்தி காணட்டும்

ஆதிகாலத்திலே மக்களின் வழிபாடு இருவகையாக இருந்துள்ளது.

1. அன்பு நெறி வழிபாடு
2. ஆகம நெறி வழிபாடு .



ஆனால் அன்பு நெறிப்பட்ட, பக்தி நெறிப்பட்ட வழிபாடே மக்களிடையே பெருவழக்காக இருந்து வந்துள்ளது. அதிலும் முருகவழிபாடு பெரும்பாலும் பக்தி நெறி வழிபாடாகவே இருந்துள்ளது. இறைவன் கையில் சூலம் உண்டு. இறைவி கையிலும் சூலம் உண்டு. ஆனால் வணக்கத்திற்கு என்று இத் தனிப்படையாகிய சூலத்தை வைத்தால் அங்கே யாரும் இறைவன், இறைவியைக் காண்பதில்லை. அங்கே வைரவரையே காண்கின்றார்கள். ஆனால் முருகன் கைப்படையாகிய வேல் ஒன்றே படைவீடாய் அமைந்தாலும் வேறு தெய்வ நிறைவில்லாது முருகனையே சுட்டி நிற்கும். ***இது தான் வேற்படையின் தனிச்சிறப்பு.***

அப்படிப்பட்ட வேலின் வடிவில் படைவீடாய் உருவாக்கப்பட்டவன் தான் ***திக்கரை முருகன்.*** அன்பு நெறி வழிபாட்டில் ஈடுபடும் மக்கள் வேலன் விரும்பும் படையலிட்டுக் குரவைக் கூத்தாடிப்பாடி வழிபட்டது போல் திக்கரை வாழ் மக்களும் இப்படைவீட்டின் முன் பொங்கிப் படைத்து, பஜனை செய்து, ***புராணம் படித்துக்*** கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

படைவீட்டை அமைத்த அடியார் கண்பார்வை இழந்து பாதம் பணிந்து நிற்று கதறியபோது, கோளும், கடனும், மிடியும், வினையுங் குறைந்து இங்கு எங்களை ஆள வந்த வேலன் அவருக்குப் பார்வை தந்து தன் ***அருளிருக்கையை வெளிப்படுத்தினான்.*** இவ்வாறு செல்வச்சந்நிதி, நல்லூர் முருகன் போல பக்தி நெறி வழிபாட்டில் மகிழ்ந்திருந்து மலமாய மூன்றையும் மாற்றித் தன் அன்பரை வாழ வைக்க வந்த திக்கரை முருகனை பிற்கால வழக்காக வந்த ஆகம நெறி வழிபாட்டில் தரிசிக்க விழைந்தனர். திக்கரை வாழ் அன்பர்களின் அன்பின் வெளிப்பாடே இன்று இரட்டைக் கோபுரங்களுடன் வானளாவ எழுந்து நின்று கும்பாபிஷேகம் கண்ட ***திக்கரைப்பதித் திருமுருகன் ஆலயமாகும்.***

தில்லைக் கூத்தனின் திருமருவிய விகாச மூர்த்தங்களில் முருக மூர்த்தமே கலியுகத்தில் வரமருள வந்த மூர்த்தம். அதனாலேயே கந்தனை ***கலியுக வரதன்*** என்பர். இன்னொரு விசேடம் ஐந்தொழிலைப் புரிகின்ற சிவனின் ஐந்து முகங்களை விட முருகனின் ஆறாவது முகமான ***"அதோ"*** முகம் கீழ்நோக்கிய படியே இருப்பதனால் பூவுலகத்துள்ளோர்கள் அருள் பெற இந்த முகத்தை விட, இந்த மூர்த்தத்தை விடச் சிறந்த மூர்த்தம் வேறில்லை என்பது முடிந்த முடிவாகும். அதுவும் திருச்சீரலைவாய் என்று சொல்லப்படுகின்ற

திருச்செந்தூர் முருகனைப் போல, கடலலை தாலாட்டும் திக்கரைப் பதியில் தில்லைக் கூத்தனின் திருமூர்த்தங்களான பதினொரு உருத்திரர்களை தன் வலப்புறக் கரத்தில் சரம், வாள், தண்டு, மழு, சேவற்கொடி என்ற படைக்கலங்களாகவும் இடம்புறக்கரம் ஆறிலும் வில், பரிசை, ஈட்டி, குந்தம், குலிசம், அங்குசம் என்ற படைக்கலங்களாகவும் வலப்புற முதுலாவது கரத்தில் ***ஞானசக்தியையே*** வேலாகவும் தனக்கு வலப்புறத்தில் ***இச்சாசக்தியாகிய*** வள்ளியையும் இடப்புறத்தில் ***கிரியாசக்தியாகிய*** தெய்வயானையையும் கொண்டு விளங்கும் சண்முகனின் ***பேரழகை பேரருளை*** வர்ணிக்க வார்த்தைகளே இல்லை எனலாம். இதிலும் ஓர் தத்துவத்தை முருகன் எங்களுக்கு உணர்த்தி நிற்பதாக ஆன்றோர் கூறுவர்.

தத்தமது கலாச்சார பண்பாட்டு விழுமியங்களுக்கு ஏற்ப (உ-ம் சந்நிதி) பொங்கிப் படைத்து, பறையடித்து கூத்தாடி, பாடிப், பஜனை செய்து ***பக்தி நெறி*** வழிபாட்டில் ஈடுபட்டு மகிழ்கின்ற மக்களது, அதாவது அன்பு நிலைப்பட்ட ஆன்மாக்களது பூசை முறையை ஏற்று அவர்களின் ***ஆசையை, இச்சையை*** நிறைவேற்றி வைப்பவன் முருகனே. அதைவிடுத்து வேலனின் பாதத்தில் வேண்டுதலை வைத்து அவன் திருவருளை எதிர்பார்த்து வேதவிதிப்படி ***கிரியை*** வழி நின்று யாகம், ஓமம், வேள்வி முதலியவற்றை நடாத்தும் ***அந்தணர்களுக்கும் மக்களுக்கும்*** அக்கிரியைகளை ஏற்றுத் தன் ***சக்தி*** மூலம் அருளை வளங்குபவனும் முருகனே.

இவர்களுக்கு மேலாகத் தம் சித்தத்துள் சிவத்தைக் காணும் யோகியர், ஞானிகள், சித்தர்கள் போன்றோரின் தவமேன்மையை ஞானத்தை விதந்து, மெஞ்ஞான சொரூபியாக, ***ஞான சக்தியாக நின்று அருள் புரிபவனும்*** முருகனே. அதாவது உங்களுக்கு ***இச்சையான*** வழிநின்று வழிபட்டாலும் கிரியை வழி சென்று வழிபட்டாலும், ஞான வழி நின்று தொழுதாலும் எந்த வழி நின்று வழிபட்டாலும் அருள் கொடுக்கும் ஒரே தெய்வம் முருகனே என்பதாகும். தவிரவும்,

ஞானசக்தியாகிய வேல்வடிவில் படைவீடாய் தனித்து நிற்கும் போது தன்னுள் ***இச்சாசக்தி, கிரியாசக்தியோடு முருகனும்*** இணைந்து நின்று பேரருள் பொழிவான்.

இப்பேர்ப்பட்ட முருகனுக்கு ***கிரியை வழிநின்று*** பெருஞ்சாந்திக் குடமுழுக்கு விழா, ***பக்திவழி நின்று*** அடியார் அரோகரா முருகா என்று ஆர்ப்பரிக்க, குருமகா சந்நிதானங்கள், மடாதிபதிகள் ***ஞானவழி*** நின்று தொழுதிட நிறைவாக நடந்துள்ளது. இதைக் கண்டவர்கள் பாக்கியசாலிகளே. இப்பெரும்சாந்தி விழாவில் இன்னொரு சிறப்பம்சம், ஆண்டவன் ***தனதுரையாகக்*** குறிப்பிடும் ***பன்னிரு திருமுறைகளும்*** இத்தினத்தில் இருந்து முழுமையாக ஓதப்பட்டுக் கொண்டிருப்பதாகும். ஓங்காரமே உலகின் தொடக்கம், அவ் ஓங்காரமே ***பிரணவ*** வடிவம். அப்பிரணவ வடிவமே சீவன்கள் சிவனைச் சேர அமைக்கப் பட்ட பாதையான திருமுறை என்பதை நாம் உணரவேண்டும். திருமுறையின் முதற்பாடல்

***“தோடுடைய செவியன்”*** இறுதிப் பாடலில் இறுதி வரி ***“நிலவி உலகெலாம்” (தோ+த் ஓ)*** தோவில் வரும் ***‘ஓ’*** என்ற எழுத்துடன் இறுதி வரி இறுதி எழுத்தான ***‘ம்’*** சேர்ந்து ***ஓம்*** என்று நிறைவாகின்றது. இத்தகைய திருமுறைகள் பன்னிரண்டும் ஓதப்பட்டுக் கொண்டிருப்பது ***சீவனுக்கு*** மட்டுமல்ல ***நாட்டுக்கும் பெரும்சாந்தி*** கிடைப்பதற்கு அறிகுறியாகும்.

இப்பெருஞ்சாந்தி விழாவில் அடியேனும் ஒரு சிறு தொண்டனாகத் தொண்டாற்றக் கிடைத்தது பெரும்பாக்கியமே. கும்பாபிஷேக தினம் பிந்திப்போவது கண்டு மனம்பொருமி “எத்துக்கிருந்தீர் எம்பெருமானே” என்று விம்மியதுண்டு. அவன் விளையாடலை யாரறிவார்? இறுதியில் அடியேனே இந்தியா சென்று கிரியை வழி குறிப்பிட்ட திரவியங்கள் சுமந்து வந்து, கும்பாபிஷேகம் முடியும் வரை கூட இருந்து பணியாற்றக் கிடைத்தது. சாந்திவிழா முடிந்து கற்பூரஜோதி நடுவில் கந்தா உன்காட்சியைக் காட்டு என்று உளமாரக் கதறும் கருத்தை ஏற்று ***ஆறு கருடவடிவில்*** வானத்தில் வட்டமிட்டுக் காட்டிய ***சண்முகனின் அருட்பெருங் கருணையை*** எண்ணி எண்ணி வியக்கின்றேன். அத்துடன் இப்பணி சிறக்க பலவழிகளிலும் உதவியவர்களுக்கும் அன்பர் மனோகரனுக்கும் அவர் செய்த தொண்டுகளுக்கும் இத்தருணத்தில் நன்றியுடன் கூறத்தக்கது.

இவ்வாறு இருளை அகற்றும் பகலவனைப் போல் அஞ்ஞானத்தை அகற்றும் ஞானமூர்த்தியாகி, பாதத்தை நாளெல்லாம் போற்றி வழிபடுபவருக்குப் புகழும், செல்வமும் அள்ளி வழங்கும் இத் திக்கரை முருக மூர்த்தியை எத்திக்கும் வாழ்பவர்களும் வந்து வந்திப்பின், அவர்களுக்கு ***இம்மையில்*** வேண்டியவற்றையும், ***மறுமையில்*** வீடு பேற்றையும் ***நல்குவான்*** என்பது திண்ணம்.

***இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க***
***வாழ்க வளமுடன்***

*களபூமி*
*காரைநகர்*

***க. சிவபாலன்***
*பொருளாளர்*
*மணிவாசகர் சபை*

# திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

* * *

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதனாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்தசூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசைமேவிய பெருமாளே.

# திருவருட்பா

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்க வேண்டும் உன்னை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வுநான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

திக்கரை முருகனின்

பெருஞ்சாந்தி விழா

சிறப்புற நடைபெற்றதையிட்டு

மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்

அனைத்து மக்களுக்கும் திக்கரை முருகனின்

அருள் வேண்டி நிற்கும்

# BE. ES. EN. Traders

EG - 1, Central Road,
Colombo - 12.

Phone : 234 8418, 2348419
2387924, 2330397
Fax : 2449809

திக்கரை முருகன் திருவருளைப்பெற
உங்களை அன்புடன் அழைக்கிறோம்

# GLOBE EXCHANGE LTD

SMART Money

## Money Transfer To Sri Lanka
## Send Now Collect Within 24 Hours

Via Commercial bank branches islandwide

We also offer instant cash service worldwide

No bank a/c needed, collect your cash with ID & PIN No.

No remittance charges over 125 to Sri Lanka

No handling charges or hidden charges in Sri Lanka

We credit to all banks in Sri Lanka

Excellent Rates, Excellent Service

Why not try us
Global Exchange Ltd
Part of S.V.M Group of Companies
More than 60 years in business
Pioneers of worldwide money transfer

Do yourself a favour by sending money through this most trusted reliable and efficient way

**Tel: 0208902 3366**
**Fax: 020 8902 9922**

Global Exchange Ltd
54 Ealing Road,
Wembley,
Middlesex HA0 4TQ

Global Exchange Ltd
1081, Garrat Lane, Tooting
London SW17 0LN
020 8696 1022